# வல்லமையின் கொள்கைகள்

**சர்வதேச அறுவடைநேர நிறுவனம்**

இப்பாடமானது **சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின்** செயல்திட்டங்களில் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்திட்டம் விசுவாசிகள் தாக்கமுள்ள ஆவிக்குரிய அறுவடையை செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் போன்றோருக்கு இயேசு கற்பித்து, அவர்களை மீள உருவாக்கும் கிறிஸ்தவர்களாக்கி, அவர்கள் வாழ்ந்த உலகத்தை சுவிஷேசத்தை ஆளுமையின் வல்லமையால் மாற்றியமைத்ததைப்போன்று உங்களுக்கும் கற்பிப்பதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

பாடத்திட்டத்திலுள்ள பல பாடங்களில் இக்கையேடும் ஒன்றாகும். சுவிஷேச மயமாகுக்கும் இலக்கை நிறைவேற்ற, விசுவாசிகள் பெருக, பிரதிநிதிகளாக செயல்பட, ஆயத்தம் செய்யப்படவும் இப்பாடம் உதவும்.

மேலதிக விபரங்களுக்கும், பாடத்திட்டங்களும் எழுதவேண்டிய முகவரி:

Harvestime International Institute
14431 Tierra Dr.
Colorado Springs, CO 80921
U.S.A.

© Harvestime International Institute

# பொருளடக்கம்


இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு . . . . . . . . I

குழுவாக கற்றலுக்கான ஆலோசனைகள் . . . . . . II

அறிமுகம் . . . . . . . . . . 1

பாடத்தின் குறிக்கோள்கள் . . . . . . . . 3

1. வாழ்க்கைக்கு பின்னரான மதம் . . . . . . . 4

2. வல்லமைக்கான மூலாதாரம் . . . . . . . 18

3. போலித்தனமான சவால்கள் . . . . . . . 30

4. “அவர் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருபோதும் பேசினதில்லை” . . . 44

5. அதிகாரத்தை ஒப்படைத்தல் . . . . . . . 52

6. வல்லமைக்கான நோக்கங்கள் . . . . . . . 61

7. வல்லமையின் கொள்கை ஒன்று: சுவிசேஷத்தின் வல்லமை. . . 76

8. வல்லமையின் கொள்கை இரண்டு: பரிசுத்த ஆவியானவரின் வல்லமை . 84

9. வல்லமையின் கொள்கை மூன்று: அன்பின் வல்லமை . . . 95

10. வல்லமையின் கொள்கை நான்கு: வல்லமையின் அபிஷேகம் . . 104

11. வல்லமையின் கொள்கை ஐந்து: வல்லமை, கிரியை, விசுவாசம் . . 117

12. வல்லமையின் கொள்கை ஆறு: இயேசுவின் நாமத்திலுள்ள வல்லமை . 125

13. வல்லமையின் கொள்கை ஏழு: ஜெபத்தின் வல்லமை . . . 144

14. வல்லமையின் கொள்கை எட்டு: வசனத்தின் வல்லமை . . . 166

15. வல்லமையின் கொள்கை ஒன்பது: அதிகாரத்தின் வல்லமை . . . 176

16. வல்லமையின் கொள்கை பத்து: அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை. . 188

17. வல்லமையின் கொள்கை பதினொன்று: பாடுகளின் வல்லமை . . . 196

18. தேவனுடைய வல்லமையை அனுபவமாக்கிக் கொள்வது எவ்வாறு? . . . 215

19. வல்லமையின் தோல்வி . . . . . . . . 222

20. எதிர்ப்புக்கு முகங் கொடுத்தல் . . . . . . . 231

சுய பரீட்சைக்கான விடைகள் . . . . . . . . 239

# இக்கையேட்டை பாவிப்பது எவ்வாறு?

## கையேட்டின் வடிவமைப்பு

ஒவ்வொரு பாடத்திலும் அடங்குபவை:

**குறிக்கோள்கள்:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இலக்கை நிறைவேற்ற முற்படுவீர்கள். பாடத்தை ஆரம்பிக்க முன்னர் அவைகளை வாசியுங்கள்.

**திறவுகோல் வசனம்:** அதிகாரத்தின் முக்கிய விடயத்தை இவ்வசனம் பிரபலிக்கும். மனனம் செய்யுங்கள்.

**அதிகாரத்தின் பொருளடக்கம்:** ஒவ்வொரு பகுதியையும் கற்கவும். வேதாகமத்தை பாவித்து கையேட்டில் இல்லாத வசனங்களையும் கவனிக்கவும்.

**சுயபரீட்சை:** அதிகாரத்தை கற்று முடித்ததும் இப்பரீட்சையை செய்யவும். வேதாகமத்தையும் கையேட்டையும் பாராமல் வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள். விடையளித்து முடிந்ததும் இப்புத்தகத்தின் கடைசி பக்கத்திலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

**மேலதிக படிப்பினைக்கு:** தேவனுடைய வசனத்தை தொடந்தேர்ச்சியாக கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அபிவிருத்தி செய்யவும், உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும், கற்றதை பிரயோகிக்கவும் இப்பகுதி உதவும்.

**இறுதி பரீட்சை:** நீங்கள் மதிப்பெண்களை பெறும்படியாக இப்பாடத்தை பதிவு செய்து கற்பீர்கள் என்றால் இப்பாடத்தின் இறுதியில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சையை செய்து முடித்த பின்னர் மதிப்பெண்ணை பெற பரிசோதனைக்காக விடைத்தாளை திருப்பி அனுப்பி வைக்கவும்.

## மேலதிகமாக தேவைப்படுபவை

King James வேதாகமம் மேலதிகமாக தேவைப்படும்.

# குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள்

## முதல் கூடுகையில்

**ஆரம்பம்:** ஜெபத்தோடும் அறிமுகத்தோடும் ஆரம்பியுங்கள். நன்கு அறிமுகமாகி மாணவர்களை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தொடர்ந்து செயலாற்றகூடிய குழுவை நியமியுங்கள்:** கூட்டத்தை வழிநடத்துவது யார், நேரம், இடம், திகதி என்பற்றை முடிவு செய்யுங்கள்.

**துதியும் ஆராதனையும்:** உங்கள் பயிற்சியின் வேளையில் பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாயிருக்க அவரை அழையுங்கள்.

**கையேடுகளை மாணவருக்கு பகிர்ந்தளித்தல்:** கையேட்டின் தலைப்பையும், முதல் நான்கைந்து பக்கங்களிலுள்ள குறிக்கோள்களையும், அறிமுகப்படுத்துங்கள்.

**முதலாவது ஒப்படை:** மாணவர்கள் இப்பாடத்தை ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட முறையில் வாசிக்கவும், அடுத்த கூடுகைக்கு முன்னால் சுயமாக பரீட்சை செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழு கூடுகையின் போது அதிகாரங்களை முடிக்கும் எண்ணிக்கையானது அதிகாரத்தின் நீளத்திலும், உள்ளடக்கத்திலும், குழுவின் இயலுமையிலும் தங்கியிருக்கும்.

## இரண்டாவதும் தொடரும் கூட்டங்களும்

**ஆரம்பம்:** ஜெபியுங்கள். வரவேற்ற பின்னர் புதிதாக வந்த மாணவர்களை பதிவு செய்த பின் கையேட்டை வழங்குங்கள். வரவை பதிவு செய்யுங்கள். துதி ஆராதனையை நடத்துங்கள்.

**மீட்டல்:** கடந்த வகுப்பில் கற்றவற்றை சுருக்கமாக முன் வையுங்கள்.

**பாடம்:** அதிகாரத்திலுள்ள **தடித்த எழுத்துகளிலுள்ள தலைப்புகளின்** சகல பகுதிகளையும் கலந்துரையாடுங்கள். மாணவருக்கு தாங்கள் கற்றுக்கொண்ட பகுதிகளில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் இருப்பின் கூறச் சொல்லவும். ஜீவியத்திலும், ஊழியத்திலும் கற்றவற்றை பிரயோகிக்கும்படி மாணவரை கேட்டுக் கொள்ளுங்கள்.

**சுயபரீட்சை:** சுய பரீட்சையை செய்திருப்பின் மீட்டல் செய்யுங்கள். (சுய பரீட்சைக்கான பதில்கள் கையேட்டில் இருக்க வேண்டியதில்லை என நீங்கள் தீர்மானித்தால் கடைசி பக்கங்களிலுள்ள அவற்றை அகற்றிவிடலாம்.

**மேலதிக படிப்பினைக்கு:** இத்திட்டத்தை குழுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ செய்யலாம்.

**இறுதிப்பரீட்சை:** உங்கள் குழுவினர் மதிப்பெண்களை பெறுவதற்காக கற்பார்களாயின், இப்பாடத்திற்கான கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். அதை பிரதிபண்ணி, மாணவரிடம் பரீட்சை எழுத கொடுத்து கண்காணிக்கவும்.

**அலகு: பெருகுதல்**
**பாடம் : வல்லமையின் கொள்கைகள்**

# அறிமுகம்

புதிய ஏற்பாட்டுக்கால மதத்தலைவர்களுக்கு இயேசு கூறினார்....

> **நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். (மத்தேயு 22:49)**

நற்செய்தியின் சத்தியம் இரு பரிமாணங்களைக் கொண்டது. முதலாவது, பரிசுத்த வேதாகமமானது தேவனுடைய வார்த்தையை வெளிப்படுத்துகின்றது. வேதவசனங்களை கற்று, விளங்கிக் கொண்டு, ஜீவியத்தில் பிரயோகித்தல்.

ஆனால் நற்செய்தியின் சத்தியம் வேதவாக்கியங்களிலும் பார்க்க அதிகமாக உள்ளது. தேவனுடைய வல்லமையும் அதிலுண்டு. தேவனுடைய வல்லமையை அறிந்து கொள்வதானால், வல்லமையின் கொள்கைகளை பிரயோகிப்பது குறித்து விளங்கிக் கொள்ள வேண்டும். தேவனுடைய வல்லமையை அனுபவங்களின் மூலம் உங்கள் வாழ்வில் அறிந்துக்கொள்ள வேண்டும்.

ஆதிசபை தேவனுடைய வல்லமையினால் பிறந்தது, அது பெரிய பேச்சாளரினாலோ அல்லது இறையியல் விவாதங்களினாலோ பிறக்கவில்லை. பவுல் எழுதுவதாவது:

> **உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**
>
> **என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. (1 கொரிந்தியர் 2:4-5)**

பவுல் அதை அங்கீகரிக்கிறார்....

> **தேவனுடைய ராஜ்யம் பேச்சிலேஅல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது.**

இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும் என்ற சிறந்த குறிக்கோளை விசுவாசிகளிடம் இயேசு விட்டுச் சென்றார். இப்பணியை வார்த்தையினால் மாத்திரம் செய்து முடிக்க முடியாது. ஆதிசபையில் இருந்ததுபோலவே, தேவனுடைய வல்லமையினால் நிரூபித்துக் காட்டப்பட வேண்டும்.

அநேகருக்கு தேவனுடைய வார்த்தைகளை தெரியும் ஆனால் தேவனுடைய வல்லமையின் அனுபவம் அவர்களிடமில்லை. அவர்கள் மெய்யான சுவிசேஷத்தின் வல்லமையை விளங்கிக் கொள்ளாதிருக்கின்றனர். இன்று அநேக ஊழியர்கள் நன்றாக கற்றவர்களாயிருக்கின்றனர். அவர்கள் மனிதனுடைய ஞானத்தால் பிரசங்கிக்கிறார்கள், ஆனால் பரிசுத்தாவியானவரின் வல்லமையினால் அவைகள் நிரூபிக்கப்படவில்லை.

சில சபைகளில் அற்புதங்கள் மனித பகுத்தறிவாக மாற்றப்பட்டு, நடப்பவை யாவற்றிற்கும் தர்க்க ரீதியான விளக்கம் கொடுக்கப்படுகிறது. வல்லமை இறையியல் விவாதமாக மாற்றப்பட்டு, அற்புதங்கள்

ஆதிசபைக்குரியது எனப் பேசப்படுகிறது.  அற்புதங்கள் எப்போது விவாதமாக மாற்றப்பட்டதோ, அப்போது தேவனின் ஜீவனுக்கு பதிலாக மனிதனால் உருவாக்கப்பட்ட மதம் அவ்விடத்தை பிடித்துவிட்டது. தேவனுடைய வல்லமைக்கு சாட்சியாக சடங்குகள்  தேவைப்படுகிறது.

உங்களுடைய விசுவாசம் தேவனுடைய வல்லமையிலா அல்லது மனித ஞானத்திலா நிலைத்திருக்கிறது. நீங்கள் ஆதிசபை விசுவாசிகளைப்போல தேவவல்லமையை அனுபவிக்க வேண்டும். ஆரம்பசபை விசுவாசிகள்....

> **அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். (மாற்கு 16:20)**

நாம் தேவனுடைய கிரியைககள் பற்றி பேசிவிட்டோம்.  நாம் எமது ஊழியத்தை திட்டமிடுவதோடு தேவன் அதை ஆசீர்வதிக்க வேண்டும் என்று ஜெபிக்கிறோம்.  ஆனால் வேதாகமத்தின் முறையிலான பயனுள்ள ஊழியமானது எமக்குள் தேவன் கிரியை செய்வதும், அற்புத அடையாளங்களுடன் அவரது வார்த்தையை உறுதிப்படுத்துவதேயாகும்.

நீங்கள் தேவனுக்காக என்ன செய்துள்ளீர்கள் என்பதையிட்டு உலகம் அக்கறை கொள்ளாது. உலகமானது உங்களது வாழ்க்கையில் சுவிசேஷத்தின் வல்லமையால் ஏற்படும் மாற்றத்தை காணும் போது உலகமானது இயேசுவின்பால் ஈர்க்கப்படும். அற்புத அடையாளங்கள் மூலம் தேவனுடைய ஆவியின் கிரியைகள் உங்களில் நடைபெறும் நிரூபணமானது உலகை கவருகின்றது.

வேதாகமம் கற்றுத்தருகின்ற வல்லமையின் கொள்கைகளை இப்பாடத்தில் கற்பதன் மூலம் உங்களால் அதை அனுபவிக்க முடியும். இருதயத்தின் வேண்டுதல்களுக்கான விடையை இப்பாடம் தருகின்றமையால் மதம் என்பதற்கு மேலாக ஆசையுடன் இதை கற்க வேண்டும். தேவனுடைய பார்வையாளராக இராமல் செயற்படுத்துகின்றவராக இது உங்களை மாற்றும்.

## பாடத்தின் குறிக்கோள்கள்

இப்பாடத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால்:

- உண்மையான ஆவிக்குரிய ஆற்றலை அடையாளம் காணவும்,
- எதிரியின் போலியான வல்லமைகளை இனம் காணவும்,
- இயேசு கிறிஸ்துவுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட அதிகாரங்களை சுருக்கமாக தரவும்,
- விசுவாசிகளுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை பெற்றுக் கொள்ளவும்,
- ஆவிக்குரிய வல்லமைக்கான வேதாகம கொள்கைகளை அடையாளம் காணவும்,
- பின்வரும் வல்லமையின் கொள்கைகளை விளக்கவும் செயல்படுத்தவும்:
    - சுவிசேஷத்தின் வல்லமை
    - பரிசுத்த ஆவியின் வல்லமை
    - அன்பின் வல்லமை
    - வல்லமையின் அபிஷேகம்
    - வல்லமை, விசுவாசம், கிரியைகள்
    - இயேசுவின் பெயர்
    - ஜெபத்தின் வல்லமை
    - வசனத்தின் வல்லமை
    - அதிகாரத்திற்கு கீழான அதிகாரம்
    - அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை
    - அவரது பாடுகளின் ஐக்கியம்
- தேவனுடைய வல்லமையை உங்களுடைய வாழ்விலும், ஊழியத்திலும் செயல்படும் விதத்தை விபரிக்கவும்,
- வல்லமையை இழப்பதற்கான காரணங்களை கண்டறியவும்,
- எதிர்ப்புகளுக்கு முகங்கொடுத்தலும், சாத்தானின் சவால்களை உங்கள் ஆவிக்குரிய அதிகாரத்தால் மேற்கொள்ளவும் முடியும்.

அதிகாரம் ஒன்று

# வாழ்க்கைக்கு பின்னரான மதம்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ மதத்திற்கும் உண்மையான தேவனுடைய வல்லமைக்கும் இடையிலான வேறுபாட்டை விளங்கப்படுத்தவும்,
- ☐ உலகத்தின் வல்லமையின் கட்டமைப்பை அடையாளம் காணவும்,
- ☐ உலகம் மற்றும் வேதாகம வல்லமைகளுக்கிடையிலான வேறுபாட்டை விபரிக்கும் வேத வாக்கியங்களை அடையாளம் காணவும்,
- ☐ வேதாகமத்தின் வல்லமையை விபரிக்கவும்,
- ☐ வேதாகமத்தின் அதிகாரத்தை விபரிக்கவும்,
- ☐ ஆவிக்குரிய வல்லமைக்கு ஆதாரமாகவுள்ள இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினை அடையாளம் காணவும்,
- ☐ சகல வேதாகம வாக்குத்தத்தங்களினதும் இரு பகுதிகளையும் அடையாளம் காணவும்,
- ☐ தேவனுடைய வாக்குத்தத்தங்களின் செயன்முறையினை பட்டியல் படுத்தவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**தேவனே, நீர் என்னுடைய தேவன்: அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்: வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.**

**இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். (சங்கீதம் 63:1-2)**

## அறிமுகம்

ஏமாற்றி தூங்கும் ஓர் மனிதனிடம் வெப்பம் இருக்கும், எனினும் இவன் மரிக்கும்போது குளிரினால் உறைந்து போவான், இது ஆவிக்குரிய உலகிலும் உண்டு. மக்கள் ஆவிக்குரிய விதத்தில் மரிக்கும் போது சுய அறிவற்ற மயக்கமும், மனக்கவலையும் கொண்ட அணுகு முறையுடன் இருப்பார்கள்.

தேவனை அறிந்துக் கொள்ள மதம் மனிதனால் தத்தெடுக்கப்பட்டுள்ளது. அது சடங்காச்சாரம், கட்டுப்பாடுகள், கிரியைகள் மற்றும் வாக்கியங்கள் என்பனவற்றை கொண்டிருக்கின்றபோதும் அதற்குள் வல்லமையில்லை. மதம் ஆவிக்குரிய மரணத்தைக் கொண்டு வருகின்றது.

தேவனுடைய வல்லமையானது தம்முடைய விருப்பமானவர்களுக்கு செய்முறை காட்சிப்படுத்துவதோடு மனிதனுக்கு தம்மைத்தாமே வெளிப்படுத்துகின்றது. தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆவிக்குரிய வல்லமை நடைமுறையிலுள்ளது. அது ஆவிக்குரிய வாழ்வை கொண்டு வரும்.

பலருக்கு மதம் சம்பந்தமான அனுபவமுண்டு. அவர்கள் பல்வேறுப்பட்ட சமய சடங்குகளிலும், நிறுவனங்களுடனும் தம்மை இணைத்துக் கொள்கின்றனர். இந்நிறுவனங்கள் அவர்களை சாந்தப்படுத்தும் விதத்தில் பல அணுகுமுறைகளை கையாளுகின்றன. தம்முடைய வாழ்வை மாற்றியமைக்கின்ற வல்லமையின் நற்செய்தியைக் குறித்தான அனுபவம் இவர்களுக்கில்லை. அவர்கள் தோல்வியும், அதைரியமும், காயங்களும், நோய்களும் கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஆவிக்குரிய மரணமடைகின்றனர். ஆனாலும் தாவீது எழுதியுள்ளதைப்போன்றே அவர்களது இருதயம் அழுகின்றது....

> **தேவனே, நீர் என்னுடைய தேவன்: அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்: வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது.**
>
> **இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். (சங்கீதம் 63:1-2)**

இந்த மக்களுக்கு ஆவிக்குரிய அனுபவமும் அவசியம்.

## வல்லமையின் வகைகள்

இன்றைய உலகில் பலவிதமான வல்லமைகள் இருக்கின்றன:

**அரசியல் வல்லமையானது** நிறுவனங்கள், பழங்குடியினர், கிராமங்கள், நகரங்கள், மாவட்டங்கள், மாகாணங்கள் மட்டுமல்ல முழு தேசத்தையும் தம்முடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறது.

**அறிவாற்றலின் வல்லமையானது** புதிய கண்டுபிடிப்புக்களையும், இலக்கிய மற்றும் இசை படைப்புகளையும், கல்வி நிறுவனங்களையும் கொண்டிருக்கிறது.

**உடல் வலிமையின் வல்லமையானது** பெலசாலிகளை கொண்டிருப்பதோடு தொழில் முறையான விளையாட்டு வீரர்களையும் கொண்டிருக்கின்றது.

**நிதி வல்லமையானது** பல வங்கியாளர்களையும், வர்த்தக நிறுவனங்களையும், நிதிப்பேரரசுகளை நிர்வகிக்கும் தலைவர்களையும் கொண்டிருக்கிறது.

**இராணுவ வல்லமையானது** பெரும் படை நகர்வுகளை மேற்கொண்டு புதிய பிரதேசங்களை பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

**மின்சார சக்தியானது** முழு நகரங்களுக்கும் சேவை செய்யும்படியாக பல வழிகளில் மனிதருக்கு உதவுகிறது.

**சமயம்சார் வல்லமையின்** பலனாக பெரிதான கட்டமைப்புகளும் சமய கலாச்சாரங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

இவ்விதமான பெரும் வல்லமைகள் இன்றைய நம் உலகில் கிரியை செய்கின்றன. ஆனால் இயேசு கிறிஸ்துவின் அழைப்பானது உலக வல்லமையை கொண்டதல்ல. இது ஆவிக்குரிய வல்லமை. “நான் எவ்வாறு எஜமானாகலாம்?” என்று கேட்காமல் “நான் எவ்வாறு ஊழியம் செய்யலாம்?” என்று கேட்கும் வல்லமையிது.

## கட்டமைப்பிலுள்ள வேறுபாடு

இயேசு கிறிஸ்து உலக கட்டமைப்பின் வல்லமைக்கும், தேவ ராஜ்ஜியத்தின் கட்டமைப்பின் வல்லமைக்கும் உள்ள வித்தியாசத்தை விபரித்துள்ளார். அவர் கூறினதாவது:

> **புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.**
>
> **உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது. உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.**
>
> **உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.**
>
> **அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார். (மத்தேயு 20:25-28)**

இயேசு கிறிஸ்துவின் அழைப்பானது உலக வல்லமையின் திட்டங்களை ஆவிக்குரிய வல்லமைக்காக விட்டுவிட்டு இழந்துபோனவர்களுக்கும், வேதனைப்படுவோருக்கும், மரிக்கும் உலகிற்கும் சேவை செய்வதை அடிப்படை நோக்காக கொண்டது.

## ஆவிக்குரிய வல்லமை

நாம் இப்பாடத்தில் வல்லமை என்பதைக்குறித்து பேசுகின்றபோது மனிதரால் உருவாக்கப்பட்ட மதத்தை, கட்டமைப்பை அல்லது மதம் சார் நிறுவனங்களைக்குறித்துப் பேசவில்லை. பெரும்பான்மையினரின் வாக்குகளின் மூலம் பெறப்படும் வல்லமையைக் குறித்தும் பேசவில்லை. அலுவலகத்தில் கொடுக்கப்பட்ட பதவி அல்லது அதிகாரத்தைக் குறித்தும் பேசவில்லை. இவ்வதிகாரம் கல்வியை அல்லது திறமையை அடிப்படையாகக் கொண்டதுமல்ல.

நாம் இப்பாடத்தில், வேதாகமம் குறிப்பிடும் ஆவிக்குரிய வல்லமையைக் குறித்தே பேசுகின்றோம். "வல்லமை" என்ற சொல்லுக்கு ஆவிக்குரிய வலிமை, திறமை, ஆற்றல், பெலன் என்ற வேதாகம அர்த்தங்களுண்டு. இது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆளுகையின் விளைவாக நடைபெறும் அற்புத அடையாளங்களாக இருக்கின்றது.

இதைப்போன்றே "அதிகாரம்" என்ற சொல்லையும் இப்பாடத்தில் உபயோகிக்கின்றோம். வேதாகமத்தில் வல்லமை என்ற சொல்லுடன் மிகவும் நெருக்கமாக பாவிக்கப்படுகின்ற சொல்லாக இது இருக்கிறது. மற்றவர் சார்பாக சட்டரீதியாக செயல்பட அல்லது நடவடிக்கை எடுக்க இது விளக்குகின்றது. செயலில் நிரூபித்துக் காட்டுவதற்கு இவ்வதிகாரம் பயன்படும். இது வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் நியமிக்கப்பட்ட வேலை செய்யும் அதிகாரத்தை கொண்டது.

## ஆவிக்குரிய வல்லமையின் சேனைகள்

ஆவிக்குரிய வல்லமையில் பல மானுட வல்லமைகள் கிரியை செய்கின்றன. வேதாகமத்தின் மூல ஆதாரமாயுள்ள ஆவிக்குரிய வல்லமை வேதாகமம் வெளிப்படுத்தும் மெய்யான ஜீவனுள்ள ஒரே தேவனின் வல்லமையாக இருக்கிறது. தேவன் திரித்துவ தேவனாக அதாவது பிதாவாகிய தேவன், தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து, பரிசுத்தாவியாகிய தேவன் என்று மூன்றில் ஒன்றானவராக இருக்கிறார். பிதாவாகிய தேவன் வல்லமையின் மூலாதாரமாக இருக்கின்றார்:

> **எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 13:1)**

தேவன் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிடம் அதிகாரத்தை ஒப்படைத்துள்ளார்:

> **அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 28:18)**

இயேசு கிறிஸ்து ஆவிக்குரிய வல்லமையை விசுவாசிகளிடம் கையளித்துள்ளார். இவ்வல்லமையை பரிசுத்தாவியானவருக்கூடாக அவர்கள் அனுபவமாக்கிக் கொள்கின்றனர்:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

இன்னுமொரு ஆவிக்குரிய வல்லமையுண்டு, அது இதற்கெதிரான சேனையாக இருக்கிறது. இது தீய ஆவிக்குரிய வல்லமையாக இருப்பதோடு, இது பில்லிசூனியம், மந்திரங்கள் மற்றும் தீய செயல்களுக்கு பொறுப்பாக இருக்கிறது. இத்தீயவல்லமை சாத்தானாகும். சாத்தானின் வல்லமை ஆவிக்குரியதாக இருக்கின்றபோதும், அது தீய வல்லமையாக இருக்கிறது:

> **ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)**

இதைக்குறித்து இப்பாடத்தின் மூன்றாம் அதிகாரத்தில் ''தேவவல்லமையில் போலியான சவால்கள்'' என்ற தலைப்பில் மேலதிகமாக கற்பீர்கள்.

## வல்லமையின் செயல் விளக்கம்

இயேசு கிறிஸ்து தனது ஊழியத்தை ஆரம்பித்த போது, அது அற்புதங்களின் ஊழியமாகவே இருந்தது. பெரிய நிறுவனத்தின் வெற்றியைப் போன்று அவரது ஊழியம் வெற்றி பெறவில்லை. பன்னிரண்டு சீஷரோடு ஆரம்பமான அவரது ஊழியம் பதினொரு சீஷரோடு முடிவடைந்தது. பொது மக்களின் நல்மதிப்பையும் அது பெறவில்லை. அவரை பின்பற்றியோர் உட்பட அனைவரும் அவருக்கு

எதிரானவர்களாக மாறினார்கள். ஆனாலும் வல்லமையின் ஆளுகை அநேக மக்களை அவரது ஊழியத்தில் தொடுவதாக இருந்தது.

**அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தபடியால் அவருடைய போதகத்தைக்குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். (லூக்கா 4:32)**

**எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். (லூக்கா 4:36)**

**நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

இந்த வல்லமையின் ஆளுகையினாலேயே சபை உருவானது. அவர்களை பற்றி வேதாகமம் கூறுகிறது.....

**உலகத்தைக் கலக்குகிறவர்கள் இங்கேயும் வந்திருக்கிறார்கள். (அப்போஸ்தலர் 17:6)**

ஆதிச்சபையின் செயற்பாடுகளால் முழு நகரங்களிலும் தாக்கம் ஏற்பட்டது, எனினும் அவர்கள் பிரசங்கத்தை மாத்திரம் தனியே செய்யவில்லை. வசனத்தை கேட்ட மக்களின் வாழ்க்கை முறையும் மாறியது ஏனெனில் அவர்கள் சாட்சியுடன் தேவனது கிரியைகளின் வல்லமைகளையும் கண்டனர்:

**பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் கேள்விப்பட்டுக் கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒருமனப்பட்டுக் கவனித்தார்கள்.**

**அநேகரிலிருந்து அசுத்தஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள்.**

**அந்தப் பட்டணத்திலே மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. (அப்போஸ்தலர் 8:6-8)**

பேதுரு லித்தா பட்டணத்திற்கு வந்தபோது, எட்டு வருடமாய் படுக்கையிலிருந்த ஐனேயா என்ற மனிதனைக் கண்டார்....

**பேதுரு அவனைப் பார்த்து: ஐனேயாவே, இயேசுகிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார். நீ எழுந்து, உன் படுக்கையை நீயே போட்டுக்கொள் என்றான். உடனே அவன் எழுந்திருந்தான்.**

**லித்தாவிலும் சாரோனிலும் குடியிருந்தவர்களெல்லாரும் அவனைக் கண்டு, கர்த்தரிடத்தில் திரும்பினார்கள். (அப்போஸ்தலர் 9:34-35)**

யோப்பா பட்டணத்தில் பேதுரு, தொற்காள் என்ற பெயரைக் கொண்ட பெண்ணை மரணத்திலிருந்து

உயிரடையச் செய்தார். இவ்வற்புதத்தை கண்டவர்கள்.....

> **இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள். (அப்போஸ்தலர் 9:42)**

தேவனுடைய வல்லமையால் செய்யப்பட்ட ஒவ்வொரு அற்புதமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மையமாக வைத்து செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு வல்லமையின் தாக்குதல்களும் சபையின் பெருக்கத்திற்கு உதவுகின்றன.

நற்செய்தியால் உலகை ஆதாயப்படுத்த அரசியல் செல்வாக்கு அவசியமில்லை. பேதுரு சிறையிலடைக்கப்பட்டபோது போதுமான அரசியல் செல்வாக்கு இருக்கவில்லை, எனினும் அவர்களது ஜெபத்தின் வல்லமை அவர்களை வெளியே கொண்டுவர போதுமானதாக இருந்தது.

அதிகமான பிரசங்கம் உலகை ஆதாயப்படுத்தாது. ஆதிசபை பத்து நாட்களாக ஜெபித்து சில நிமிடங்களே பிரசங்கித்தது எனினும் 3000 பேர் அவ்வேளையில் இரட்சிக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 1-2). இன்று நாம் பத்து நிமிடம் ஜெபம் செய்கிறோம், எழுப்புதலுக்காக பத்து நாட்கள் பிரசங்கிக்கிறோம், 30 பேர் மாத்திரமே இரட்சிக்கப்படுவதை காண்கிறோம்.

முழு உலகையும் சுவிசேஷ செய்தியால் ஆதாயப்படுத்தப்படுவதற்காக அதிக பணத்தை செலவிடுவதும் பாதுகாப்பானதாக இல்லை. ஊழியத்திற்கு பணம் அவசியம்தான், ஆனாலும் மிகவும் அத்தியாவசியம் அது அல்ல.

பேதுருவும், யோவானும் எருசலேமின் தேவாலயத்தை கடந்து செல்லுகிறபோது, பிச்சைக்காரன் ஒருவன் சில சில்லறைகளைக் கேட்டான். பேதுருவும் யோவானும் அவன் கேட்ட சிறு நிதியுதவியை செய்யவில்லை. ஆனாலும் தங்களிடமுள்ளதை அவனுக்கு கொடுத்தார்கள்:

> **அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி,**
>
> **வலதுகையினால் அவனைப் பிடித்துத்தூக்கிவிட்டான். உடனே அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன்கொண்டது.**
>
> **அவன் குதித்தெழுந்து நின்று நடந்தான். நடந்து, குதித்து, தேவனைத் துதித்துக்கொண்டு, அவர்களுடனேகூடத் தேவாலயத்திற்குள் பிரவேசித்தான். (அப்போஸ்தலர் 3:6-8)**

இயேசுவின் நாமத்தின் வல்லமையும் அதிகாரமும் அவர்களிடமிருந்தது. எருசலேம் நகரத்தை சந்திப்பதற்கான வரவு செலவு திட்டமும், விளம்பரங்களும் அவர்களிடம் இருக்கவில்லை. அவர்களின் அச்சிடப்பட்ட துண்டு பிரதிகளோ அல்லது வேதாகமமோ, தொலைக்காட்சி வலைப்பின்னலோ இருக்கவில்லை. தேவனுடைய வல்லமையின் நிமித்தம் முழு நகரமும் சுவிசேஷ செய்தியால் தாக்கப்பட்டது (அப்போஸ்தலர் 3-4).

ஆதித்திருச்சபையானது தேவ ராஜ்ஜியத்தின் செய்தியை மட்டும் கொண்டிராமல், வல்லமையையும் கொண்டிருந்தது:

**தேவனுடைய ராஜ்யம் பேச்சிலேஅல்ல, பெலத்திலே உண்டாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 4:20)**

## தேர்ந்தெடுத்தலின் வல்லமை

தேவன் உலகத்தை சிருஷ்டித்தபோது பலவகையான உயிரினங்களை படைத்தார். அவர் விலங்குகள், மீன்கள், பூச்சிகள், பறவைகள் என்பவற்றையும் படைத்தார் (ஆதியாகமம் 1).

ஆனால் தேவன் மனிதனை சிருஷ்டித்தபோது தனது சாயலாக சிருஷ்டித்தார். சகல சிருஷ்டிகளின் மத்தியிலும் மனிதன் மாத்திரமே ஆவி, ஆத்துமா, சரீரம் கொண்ட தனித்தன்மையுடன் சிருஷ்டிக்கப்பட்டான். அவன் மெய்யான தேவனை ஆராதிக்கக்கூடியவனாகவும், அவருடன் ஐக்கியம் வைக்கக்கூடியவனாகவும் சிருஷ்டிக்கப்பட்டான் (ஆதியாகமம் 2-3)

மனிதன், மெய்யாகவே ஜீவிக்கின்ற தேவனுடன், தகப்பனைப்போன்ற நட்புறவை பேணக்கூடியவளாக சிருஷ்டிக்கப்பட்டான். தேவன் மனிதனை தனது சாயலாக சிருஷ்டித்து அவனுக்குள் தனது சுவாசத்தை ஊதினார், அவன் வெறெந்த சிருஷ்டியைப்பார்க்கிலும் புரிந்து கொள்ளும் ஆற்றலை பெற்றவனாக இருந்தான். அற்புதங்களைச் செய்யும் ராஜ்ஜியமானது, மனிதனின் இயற்கை ராஜ்ஜியமானது.

தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட யாவற்றைப் பார்க்கிலும் மனிதன் வல்லமையும், புத்திசாதுரியம் கொண்டவனாக இருந்தான். மனிதனுக்கு தேர்ந்தெடுக்கும் வல்லமையுண்டு. அவனால் நல்லதை அல்லது கெட்டதை தேர்ந்தெடுக்க முடியும். அவனால் தேவனுக்கு அல்லது சாத்தானுக்கு கீழ்ப்படிய முடியும். ஏதென் தோட்டத்தில் மனிதனுக்கு சாத்தானால் கொண்டு வரப்பட்ட முதலாவது சோதனை தேர்ந்தெடுத்தலை சார்ந்ததாக இருந்தது (ஆதியாகமம் 3). ஆதாமும் ஏவாளும் தவறானதை தேர்ந்தெடுத்தமையால் பாவமானது அவர்களினால் சகல மனிதனுக்குள்ளும் பிரவேசித்தது.

## ஆவிக்குரிய வல்லமையின் அடிப்படை

ஒரு மனிதன் மெய்யான ஆவிக்குரிய வல்லமையை அனுபவிப்பானேயாகில், அவன் தேவனுக்கு சேவை செய்வதை தேர்ந்தெடுப்பான். யாவரும் பாவிகளே யாவருக்கும் பாவமன்னிப்பு அவசியமாக இருக்கின்றது:

**எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, (ரோமர் 3:23)**

பாவமன்னிப்பானது மனந்திரும்புவதிலும், இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதினாலுமே வருகின்றது:

**நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.**

**நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1:8-9)**

ஆவிக்குரிய வல்லமைக்கு மனந்திரும்புதலே அடிப்படையாக உள்ளது. நீங்கள் பாவத்தினால்

ஆவிக்குரிய மரணத்தில் இருப்பீர்களாயின் உங்களால் தேவனுடைய வல்லமையை அனுபவிக்க முடியாது.

சீடர்கள் ஒரு நகரத்தில் பிரசங்கித்துக் கொண்டிருந்த போது, சீமோன் என்ற பேருள்ள ஒருவன் தேவனது கிரியைப் போன்றதொரு கிரியை செய்து சாட்சியிட்டு வந்தான். அவன் பேதுருவிடம் பணத்தை கொடுத்து:

> **நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். (அப்போஸ்தலர் 8:19)**

பேதுரு மறுமொழியாக:

> **தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது.**
>
> **உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை.**
>
> **ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள். ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்.**
>
> **நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். (1 பேதுரு 8:20-23)**

உண்மையான ஆவிக்குரிய வல்லமைக்கு மனந்திரும்புதலே அடிப்படையாக இருக்கின்றது. மனந்திரும்புதலின் அனுபவமின்றி உங்களால் தேவனுடைய வல்லமையை ஒருபோதும் அனுபவிக்க முடியாது. பாவத்திலிருந்து இரட்சிப்பை பெறுவது தேவனுடைய வல்லமையின் மகத்துவமான வெளிப்படுத்தலாக இருக்கிறது.

தேவன், அவருடைய வல்லமையை பாவமுள்ள பாத்திரத்தில் ஊற்றமாட்டார். சுய முயற்சியுடன் தம் வாழ்வை மேம்படுத்த காரியமாற்றும் மக்களிடமும் அவர் கிரியை செய்யமாட்டார் (மத்தேயு 9:16-17). மனந்திரும்பி, அவரை சேவிக்கின்றவர்களின் தூய்மையான பாத்திரத்திலேயே அவர் தனது வல்லமையை வெளிப்படுத்துவார்.

## வாக்குத்தத்தங்களை சொந்தமாக்கி கொள்ளுதல்

விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய வல்லமை வாக்களிக்கப்பட்டு உள்ளது, ஆனால் தேவனது சகல வாக்குத்தத்தங்களும் இரு பகுதிகளைக் கொண்டது:

**வாக்குத்தத்தம்:** வாக்குத்தத்தத்தின் உண்மையான அர்த்தமும் அதன் வார்த்தைகளும்.

**வாக்குத்தத்தத்தை சொந்தமாக்குதல்:** சொந்தமாக்கிக் கொள்ளாவிட்டால் அதை உபயோகிக்க முடியாது. தேவனுடைய வாக்குத்தத்தத்தை நீங்கள் சுவீகரித்துக் கொள்வதோடு, அது உங்கள் வாழ்வில் நிஜமாக வேண்டும் என்று கட்டளையிடுங்கள்.

தேவனது வாக்குத்தத்தங்களை சுவீகரிப்பது எப்படி? சில படிமுறைகள் இங்கே உள்ளன:

### 1. நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்:

தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க அல்லது புறக்கணிக்க உங்களுக்கு உரிமை உண்டு. அநேக மக்கள் ஆவிக்குரிய வல்லமைக்கான வாக்குத்தத்தத்தை நிராகரித்து விடுகின்றனர். அது ஆதிசபைக்குரியது என்று விசுவாசிக்கிறார்கள். சிலர் அதை புறக்கணித்து விடுகின்றனர். அவர்கள் வேதாகமத்திலே அந்த வாக்குத்தத்தங்களை வாசிக்கிறார்கள், ஆனால் அவைகள் அவர்களில் கிரியை செய்வதில்லை. இந்த மக்கள் தங்களுடைய வாழ்வில் தேவனது வல்லமையின் செயற்பாட்டை அனுபவியாமல் தமது சொந்த அதிகாரத்தை பயன்படுத்தி செயல்படுவதினால், வாக்குத்தத்தத்தை சுதந்தரித்துக் கொள்வதை தவறவிட்டுவிடுகின்றனர்.

தேவனுடைய வார்த்தையிலுள்ள வாக்குத்தத்தம் உங்கள் வாழ்வில் நிறைவேறவில்லை என்றால் அது உண்மையானதல்ல அல்லது அது உங்களுக்குரியது அல்ல என்று அர்த்தமாகாது. உங்களது சொந்த அனுபவத்தைக் கொண்டு வேதாகமத்தை வியாக்கியானம் செய்ய முற்பட வேண்டாம். தேவனுடைய வாக்குத்தத்தம் உங்கள் வாழ்வில் அனுபவமாக்கப்படாதிருந்தால் அது உண்மையானது அல்லது பெறுமதி வாய்ந்த வாக்குத்தத்தம் அல்ல என்றும் அர்த்தமாகாது. வாக்குத்தத்தத்தின் வல்லமை தேவனிடமிருந்து வருகின்ற வெகுமதியாக இருக்கின்றமையால் அதை ஏற்றுக்கொள்வதும், புறக்கணிப்பதும் உங்களது தேர்ந்தெடுப்பில் தங்கியுள்ளது.

### 2. நீங்கள் அதன் கொள்கைகளை புரிந்து கொள்ள வேண்டும்:

வேதாகம வாக்குத்தத்தங்களை பெற்றுக்கொள்ள, அது எந்த கொள்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யாவும், எப்போதும் சில அடிப்படை கொள்கைகளை கொண்டதாயும், அதற்கு மனிதன் பிரதியுத்தரம் செய்ய வேண்டியவனாகவும் இருக்கிறது.

உதாரணமாக தேவனுடைய அநேக வாக்குத்தத்தங்கள் 'செய்வீர்களாயின் அல்லது செய்தால்' என்ற கொள்கையினடிப்படையில் உள்ளது. தேவன் "நீ இதை செய்தாயானால், வாக்குத்தத்தத்தின் ஆசீர் வாதத்தை பெறுவாய்" என்கிறார். (உபாகமம் 28ஐ இக்கொள்கைக்கான உதாரணமாக வாசிக்கவும்).

ஆவிக்குரிய வல்லமையின் வாக்குத்தத்தத்தை அனுபவமாக்கிக்கொள்ள, வேதாகமத்தின் வல்லமையின் கொள்கைகளை புரிந்து கொள்ள வேண்டும். ஒன்றை இயக்குவதற்கு அல்லது ஓர் உணவை தயாரிப்பதற்கு பௌதீக உலகில் நாம் சில விதிமுறைகளை வாசித்து கற்றுக் கொள்வதைப் போன்றே இதுவும் இருக்கிறது.

### 3. இக்கொள்கைகளை நீங்கள் பிரயோகிக்க வேண்டும்:

பௌதீக உலகில் யாராவது ஒருவர் உங்களுக்கு வெகுமதியை கொடுக்கக்கூடும். ஏற்றுக்கொள்வதை பற்றி நீங்களே தீர்மானிக்க வேண்டும். அது சில அறிவுறுத்தல்களோடு வருகின்றது. அவ்வறிவுறுத்தல்களை நீங்கள் முழுமையாக வாசித்து விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்விதமாக அறிவுறுத்தலை வாசிக்காது அவ்வெகுமதியை பாவிப்பீர்களாயின் அந்த உற்பத்தி பொருளால் உங்களுக்கு ஒரு பிரயோசனமுமில்லை.

இப்பாடத்தில் கற்றுக் கொடுக்கப்படுகின்ற வேதாகம வல்லமையின் கொள்கைகளை விளங்கிக் கொள்வது மட்டும் போதாது. அதை நீங்கள் உங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் பிரயோகிக்க வேண்டும்.

## வல்லமையின் ஆசீர்வாதத்திற்கு அப்பால்

அநேக விசுவாசிகள் வல்லமையை அனுபவிக்காதிருக்கிறார்கள் காரணம் ஆவிக்குரிய அசீர்வாதத்தை பெறும்படிக்கு குறிப்பிட்ட எல்லை கடக்க அவர்கள் ஒரு போதும் விரும்புவதில்லை. பரிசுத்த ஆவியானவர் அவர்களில் அசைவாடும் போது பெரிதான சந்தோஷத்தை உணருகின்றனர். அதை அவர்கள் பாடுவதன் மூலம், சத்தமிடுதலின் மூலம், நடனமாடுதலின் மூலம், அழுவதின் மூலம் வெளிக்காட்டுகிறார்கள். அவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவதை உணர்வுபூர்வமாக வெளிப்படுத்துகிறார்கள்.

இதில் எவ்விதமான தவறும் கிடையாது. வேதாகமம் இதுபோன்ற ஆவிக்குரிய அனுபவங்கள் நிறையவே கொண்டதாக இருக்கிறது. ஆனால் தேவன் தமது பிள்ளைகள் ஆவிக்குரிய வல்லமைக்குள் செல்ல வேண்டும் என்றும் உணர்ச்சிக்கு அப்பால் அவரது ஆசீர்வாதங்களை பெற வேண்டும் என்றும் விரும்புகிறார்.

இச்சத்தியத்தை விளங்கப்படுத்தும் கதையொன்று பழைய ஏற்பாட்டில் உள்ளது. உவமைகளுக்கும் வாக்குத்தத்தங்களுக்குமிடையே ஓர் இணைப்புண்டு. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வாக்குபண்ணிய தேசத்திற்கு, வனாந்திரத்தினூடாக பல மாதங்கள் பிரயாணம் பண்ணி கடந்து சென்றனர். இந்த வாக்குத்தத்த நாட்டுக்கு செல்லும் முன்னதாக மோசே அத்தேசத்தை வேவுபார்க்க ஒற்றர்களை அனுப்பினான். பத்துபேர் எதிர்மறையான அறிக்கைகளைக் கொண்டு வந்தனர். அந்த நாட்டில் இராட்சதர்கள் வசிக்கிறார்கள் என்றும், இஸ்ரவேலுக்கு செல்ல சரியான வழியில்லை என்றும் கூறினர். இரண்டு ஒற்றர்கள் மாத்திரம் தேவன் வாக்குபண்ணின அத்தேசத்திற்குள் பிரவேசித்தனர்.

இஸ்ரவேலர் எதிர்மறையான அறிக்கையை கேட்க நேர்ந்தது, அதையே கவனித்தனர். அவர்கள் முகாமிட்டிருந்த இடத்திலிருந்து வாக்கு பண்ணப்பட்ட தேசத்திற்கு செல்வதற்கு 11 நாள் பிரயாணத்தூரமே இருந்தது, எனினும் அத்தேசத்திற்கு செல்ல அவர்களுக்கு 40 வருடங்கள் சென்றது (உபாகமம் 1:2).

தேவன் இஸ்ரவேலரை ஆசீர்வாத நிலைக்கு கொண்டு வந்தார். அவர்கள் ஆசீர்வாத தேசத்தின் எல்லையில் இருந்தனர். தேவனுடைய வல்லமை எதிரியை வெற்றி கொள்ள போதுமானது. ஆனால் இஸ்ரவேலர் தேவனுடைய வல்லமைக்குள் முன்னோக்கி நகர மறுத்து விட்டனர். வாக்குத்தத்தத்தில் எந்தவிதமான பிழையுமிருக்கவில்லை. இஸ்ரவேலர் அதை கைப்பற்ற மறுத்ததே பிரச்சனையாக இருந்தது.

உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதம் பெறும் நிலையை நிறுத்த வேண்டாம். ஆவிக்குரிய வல்லமையின் மூலமாக அக்கட்டை உடைத்தெறியுங்கள். இதை நீங்கள் செய்யவில்லையென்றால் ஆவிக்குரிய வனாந்திரத்தில் காய்ந்து, வல்லமையற்று அலைய நேரிடும்.

நீங்கள் வல்லமையுள்ள ஆசீர்வாதத்தின் நிலைக்கு அப்பாலும் செல்ல வேண்டும். நீங்கள் கேட்கின்றவராக, பார்வையாளராக மாத்திரமல்ல, செயற்படுகின்றவராக இருக்க வேண்டும். இதை

நீங்கள் செய்யும் போது, தேவனின் வல்லமையில் மெய்யான ஊற்றை அனுபவிப்பீர்கள். நீங்கள் வாழ்க்கையின் அபிஷேகத்தை அனுபவிப்பீர்கள், அது முன்னர் ஒரு போதும் நீங்கள் அறியாததாய் இருக்கும். மதத்திற்கும் அப்பாலான வாழ்வை அனுபவிப்பீர்கள்.

## சாதாரண மக்கள்

கல்வியறிவு இல்லாதபடியால், இவ்வல்லமையை அனுபவிக்க முடியாது என்று எண்ண வேண்டாம். ஊழிய அனுமதிப்பத்திரத்தை ஏதாவது ஒரு சபைசார் நிறுவனத்திலிருந்து பெறாதவராக நீங்கள் இருக்கலாம். கிறிஸ்தவ கல்லூரி நீங்கள் வாழும் கிராமத்திலிருந்து தூரவிடத்திலிருக்கலாம் அல்லது வேதாகம பாடசாலை கல்வியை தொடர முடியாதவராக இருக்கலாம். ஆவிக்குரிய வல்லமையை பெறுவதற்கு இவைகள் யாவும் அவசியமில்லை. தேவன் சாதாரணமான ஆண்களையும், பெண்களையும் வலிமைமிக்க வழிகளில் பாவித்துள்ளார் என்பது தேவனுடைய வசனத்தில் அதிகமாக கூறப்பட்டுள்ளது.

**ஆபிரகாம்...** பயத்தினிமித்தமாக அதன் தனது மனைவியாகிய சாராளை மனைவியல்ல என்றான், எனினும் தேவன் அவளைக்கொண்டு இஸ்ரவேல் என்னும் பெரிய தேசம் உருவாக பயன்படுத்தினார்.

**மோசே...** நல்ல பேச்சாளன் அல்ல, கோபத்தினால் ஓர் எகிப்தியனை கொன்றவன், எனினும் இரண்டு மில்லியன் மக்**களை,** வாக்குத்தத்த தேசத்திற்கு **வழிநடத்தி** செல்**வதற்கு** தேவன் **அவனை** பயன்படுத்தினார்.

**பேதுரு...** தண்ணீரின் மேல் நடக்கிறபோது மூழ்கினான், எப்போதும் பிழையானவற்றை பிழையான நேரத்தில் பேசுபவன், கடைசியாக இயேசுவை தெரியாது என்று மறுதலித்தான்... சாதாரண மீனவனாக இருந்த இவன், பெந்தேகொஸ்தே நாளில் வல்லமை**யாக** சாட்சியிட்டமையால் 3,000 ஆத்துமாக்கள் இரட்சிப்படைந்தனர்.

**கிதியோன்...** ஒடுக்கப்பட்டவர்களை விடுவிக்கும்படி அழைக்கப்பட்டபோது வாலிபனாகிய இவன் பயத்தினால் அறுவடை செய்யப்பட்ட தானியத்தண்டை ஒளிந்திருந்தான். ஆனால் அவர்கள் அவனைக்கொண்டே விடுதலை பெற்றனர்.

**தாவீது ராஜா...** விபச்சாரம் செய்தான், இன்னொருவனின் மனைவியை தனதாக்கிக் கொண்டதோடு, அவனது கணவனை கொன்றான், எனினும் இஸ்ரவேலின் மிகப்பெரிய அரசனாக இருந்ததோடு தேவனுடைய இருதயத்திற்கு பிரியமானவன் எனவும் அழைக்கப்பட்டான்.

**பேதுருவும் யோவானும்...** இருவரும் ஏழை மீனவர்கள்... இவர்களிடம் பணமும், கல்வியறிவும் இருக்கவில்லை, அவர்களுக்கூடாக தேவனது குணமாக்கும் வல்லமை பாய்ந்தமையால் முழு நகரமும் பரப்பரப்படைந்தது.

**அப்போஸ்தலனாகிய பவுல்...** அவனுடைய எழுத்தாக்கங்கள் வல்லமையுள்ளதாக இருக்கின்றபோதும் அவர் சரீரம் பலவீனமானதாகவும், பேச்சில் வல்லவராகவும் இருக்கவில்லை (2 கொரிந்தியர் 10:10).

**யாக்கோபு...** ஏமாற்றுக்காரன், பொய்யன், சதிகாரன். ஆனாலும் தேவன் அவனை தொட்டபோது ‘தேவனுக்கும் மனிதனுக்கும் வல்லமைகொண்ட இளவரசனானான்.’

இப்படியான ஆண்களுக்கு தேவனால் ஆவிக்குரிய வல்லமையை கொடுக்க முடியுமானால் மனித

பெலவீனங்கள் கொண்ட உங்களுக்கும் அவரால் தர முடியும். தேவன் இன்னும் சாதாரணமான ஆண்களையும், பெண்களையும் அழைத்து அசாதாரணமானவர்களாக்குகிறார். உங்களை நீங்கள் பார்க்கின்றவண்ணமாக அவர் உங்களை பார்ப்பதில்லை. மற்றவர்கள் உங்களை பார்க்கின்றபடியும் அவர் உங்களை பார்ப்பதில்லை. ஆவிக்குரிய வல்லமையை பெற்றபின் நீங்கள் எவ்விதமிருப்பீர்கள் என்று பார்க்கிறார். **இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று.... (2 கொரிந்தியர் 4:7)** அதனால்..... தேவன் சாதாரண மக்களையே பாவிக்கிறார், தேவன் அவர்களை ‘பூமிக்குரிய பாத்திரங்கள்’ என்று அழைக்கின்றார்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. தேவனுடைய வல்லமையின் செயற்பாடுகளுக்கும், மதத்திற்குமிடையிலான வித்தியாசம் என்ன?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இப்பாடத்தில் கவனித்தப்படி உலக வல்லமைகளின் பட்டியலை தருக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. உலக, வேதாகம வல்லமைகளுக்கிடையிலான வித்தியாசத்தை விளக்கும் வேத வசனம் எது?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. வேதாகம வல்லமை மற்றும் அதிகாரத்திற்கான வேதாகம வரைவிலக்கணத்தை தருக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமைக்கு ஆதாரமாக இருக்கின்ற ஆவிக்குரிய வல்லமையை கண்டறியவும்.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

7. வேதாகம வாக்குத்தத்தங்களிலுள்ள இரண்டு பகுதிகளும் எவை?

------------------------------------------------------------------------ மற்றும் ------------------------------------------------------------------

8. தேவனுடைய வாக்குத்தத்தங்களை சுதந்தரித்துக் கொள்வதற்கு இப்பாடத்தில் கொடுக்கப்பட்ட 3 படிமுறைகளையும் பட்டியலிடவும்.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

9. ஆவிக்குரிய வல்லமையின் அடிப்படை---------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. முதன் முதலாக ஆவிக்குரிய வல்லமையை பெற்ற மனிதனாக யாக்கோபை வேதாகமம் பதிவு செய்து வைத்துள்ளது. அவன் தேவனிடத்திலும் மனிதனிடத்திலும் வல்லமையை கொண்டிருப்பான் எனக் கூறுகிறது. இவ்வனுபவத்தை ஆதியாகமம் 32லும், ஓசியா 12:3-4லும் வாசிக்கவும். இதில் கற்றுக் கொண்டவற்றை சுருக்கமாக எழுதவும்:

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. இயேசு உலக வல்லமைகளை நிராகரித்தார். லூக்கா 4:1-13, யோவான் 7:2-6. இப்பகுதிகளில் கற்றவற்றை சுருக்கமாக எழுதவும்:

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

அதிகாரம் இரண்டு

# வல்லமைக்கான மூலாதாரம்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ வல்லமையின் மூலாதாரத்தை அடையாளம் காணவும்,
- ☐ தேவன் தனது வல்லமையை பூமியில் வெளிப்படுத்தும் எட்டு வழிகளை பட்டியலிடவும்,
- ☐ பூமியில் அவர் தனது வல்லமையை ஏன் வெளிப்படுத்துகிறார் என்பதற்கான வேத வாக்கியங்களை கொடுக்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன். வல்லமை தேவனுடையது என்பதே. (சங்கீதம் 62:11)**

## அறிமுகம்

வல்லமையின் கொள்கைகளை விளங்கிக் கொள்ள ஆரம்பத்திலிருந்தே நாம் தொடங்க வேண்டும். வல்லமையின் மூலாதாரத்தை கண்டு பிடிக்க வேண்டும். மூலாதாரத்தின் பிறப்பிடம் ஆரம்பத்திலிருந்ததா அல்லது இடத்திலிருந்ததா? இவ்வதிகாரம், மெய்யான ஜீவிக்கின்ற தேவன் வேதாகமத்தில் வெளிப்படுத்தியுள்ள வல்லமையின் ஆதாரத்தை முன்வைக்கும். தாவீது எழுதியுள்ளார்:

**தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன். வல்லமை தேவனுடையது என்பதே. (சங்கீதம் 62:11)**

இது மிக முக்கியமானது என்பதினாலேயே தேவன் இதை திரும்பவும் கூறுகின்றார்.

## வல்லமையின் மூலாதாரம்

முன்னர் ஒன்றுமில்லாதிருந்த வேளையிலும் தேவன் இருந்தார். ஆதியாகமம் 1-2 அதிகாரங்களும் உலகத்தினதும், அதன் ஜீவராசிகளின் ஆரம்பத்தையும் பற்றி கூறுகின்றது. தேவன் பூமியை தனது வல்லமையினாலே சிருஷ்டித்தார்:

**அவரே பூமியைத் தம்முடைய வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய ஞானத்தினால் படைத்து, வானத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார். (எரேமியா 10:12)**

**நான் பூமியையும் மனுஷனையும் பூமியின்மேலுள்ள மிருகஜீவன்களையும் என் மகா பலத்தினாலும் ஓங்கிய என் புயத்தினாலும் உண்டாக்கினேன். எனக்கு இஷ்டமானவனுக்கு அதைக் கொடுக்கிறேன். (எரேமியா 27:5)**

**ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங்களா-னாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. (கொலோசெயர் 1:16)**

தேவன் சகலவற்றையும் சிருஷ்டித்தார், அவரது வல்லமைக்கு புறம்பானதாக ஒன்றுமிருக்கவில்லை:

**ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையம் பூமியையும் உண்டாக்கினீர். உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை. (எரேமியா 32:17)**

தற்போதுள்ள சகல காரியங்களுக்கு பின்னாலும் தேவனே மூலாதாரமாக இருக்கின்றார்:

**கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர். நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்ட வைகளுமாயிருக்கிறது என்றார்கள். (வெளிப்படுத்தல் 4:11)**

**சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது. அவருக்கே என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென். (ரோமர் 11:36)**

**இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும்தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய்.. (எபிரெயர் 1:3)**

தேவனுக்கு அவரது வல்லமையின் நேரங்களும், காலங்களும் உண்டு:

**அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல. (அப்போஸ்தலர் 1:7)**

பூமியும் அதிலுள்ள யாவும் தேவனுக்கு சொந்தமானவை:

**பூமியும் அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது. (சங்கீதம் 24:1)**

ஆதியாகமம் 14:22ல் தேவன் வானத்தையும், பூமியையும் உடைய உன்னதமான தேவனாகிய கர்த்தர் என்று அழைக்கப்படுகின்றார். சொந்தமாக பெற்றிருந்தால் அதை ஆளம் வல்லமையும் அவருக்கு இருக்கும்.

இவ்வுலகிலே பல ராஜ்ஜியங்களும் அரசாங்கங்களும் இருக்கின்றன. தேவனுடைய ராஜ்ஜியமானது இறையாண்மைமிக்கது. அவர் சகலவற்றையும் ஆளுகிறார் என்பதே இதன் அர்த்தம்:

**கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார். அவருடைய ராஜரீகம் சர்வத்தையும் ஆளுகிறது. (சங்கீதம் 103:19)**

**கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள். வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள். கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது. தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.**

**ஐசுவரியமும் கனமும் உம்மாலே வருகிறது. தேவரீர் எல்லாவற்றையும் ஆளகிறவர். உம்முடைய கரத்திலே சத்துவமும் வல்லமையும் உண்டு. எவரையும் மேன்மைப்படுத்தவும் பலப்படுத்தவும் உம்முடைய கரத்தினால் ஆகும். (1 நாளாகமம் 29:11-12)**

தேவன் மனிதனை படைத்ததிலிருந்து, அவருக்குமட்டுமே மனித ஆவியில் மேல் வல்லமை இருக்கின்றது:

**ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை. மரணநாளின்மேலும் அவனுக்கு அதிகாரமில்லை. அந்தப் போருக்கு நீங்கிப்போவதுமில்லை. துன்மார்க்கரைத் துன்மார்க்கம் விடுவிக்கவுமாட்டாது. (பிரசங்கி 8:8)**

கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை பாதுகாக்க தேவன் வல்லமையுள்ளவர்:

**கட்டுண்டவனுடைய பெருமூச்சு உமக்கு முன்பாக வரட்டும். கொலைக்கு நியமிக்கப்பட்டவர்களை உமது புயபலத்தினால் உயிரோடே காத்தருளும். (சங்கீதம் 79:11)**

சோர்ந்து போகின்றவனுக்கு அவர் மாத்திரமே வல்லமை கொடுக்கிறவர்:

**சோர்ந்துபோகிறவனுக்கு அவர்பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். (ஏசாயா 40:29)**

**இஸ்ரவேலின் தேவன் தம்முடைய ஜனங்களுக்குப் பெலனையும் சத்துவத்தையும் அருளுகிறவர்.... (சங்கீதம் 68:35)**

தேவனுடைய வல்லமை, எவ்வல்லமையினாலும் அல்லது குறைவுள்ள மனிதனின் வல்லமையாலும் தாக்கப்படமாட்டாது:

**கர்த்தாவே, பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவிசெய்கிறது உமக்கு லேசான காரியம்... (2 நாளாகமம் 14:11)**

தேவன் விடுவிக்கும் வல்லமையைக் கொண்டிருக்கிறார். மக்களுக்கு அவசியமான வேளையில், இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் மக்களை தேவன் எவ்விதம் மீட்டுக்கொண்டார் என்பதற்கான பதிவுகளை வேதாகமம் அதிகமாக கொண்டுள்ளது. தானியேலின் புத்தகத்தில் 2 சிறப்பான உதாரணங்களை நாம் காணலாம். பயங்கரமான சூளையிலிருந்து தனது ஊழியர்களை தேவன் விடுதலை செய்ததை தானியேல் 3 லும், சிங்கத்திலிருந்து காப்பாற்றியதை தானியேல் 6 லும் வாசித்துப் பாருங்கள்.

அவரது வல்லமை எல்லையற்றது:

**கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர். (நாகூம் 1:3)**

அவரது வல்லமை சிறந்தது:

**சர்வவல்லவரை நாம் கண்டு பிடிக்கக்கூடாது. அவர் வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர்ளூ அவர் மகாநீதிபரர். அவர் ஒடுக்கமாட்டார். (யோவு 37:23)**

தேவனது வல்லமை நித்தியமானது. பவுல் எழுதுவதாவது....

**ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர். அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. (1 தீமோத்தேயு 6:16)**

வேதாகமத்தின் கடைசி புத்தகத்திலே பரலோகின் இறுதி நிகழ்வுகளை பற்றி வாசிக்கிறோம்.....

**அப்பொழுது, தேவனுடைய மகிமையினாலும் அவருடைய வல்லமையினாலும் உண்டான புகையினாலே தேவாலயம் நிறைந்தது.... (வெளிப்படுத்தல் 15:8)**

**ஆமென், எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக... ஆமென், என்றார்கள். (வெளிப்படுத்தல் 7:12)**

**இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா. இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது.... (வெளிப்படுத்தல் 19:1)**

வேதாகமம் ஆரம்பம் முதல் இறுதி வரைக்கும், தேவனது வல்லமையின் ஆதாரத்தைப் பற்றியே மீண்டும் மீண்டுமாக பேசுகிறது.

## தேவன் எவ்விதமாக தமது வல்லமையை வெளிப்படுத்துகிறார்

தேவன் எவ்விதமாக தமது வல்லமையை வெளிப்படுத்துகிறார் என்ற பதிவை வேதாகமம் கொண்டிருக்கிறது. தேவன் தனது வல்லமையை வெளிப்படுத்தும் பல்வேறு வழிகள் இங்கே தரப்படுகின்றன:

### இயற்கைக்கூடாக:

தேவன் தன்னை இயற்கையில் வெளிப்படுத்துகிறார். தாவரங்கள் மற்றும் விலங்குகள், பள்ளத்தாக்குகளும் மலைகளும், சமுத்திரமும் பாலைவனமும், வானமும் மற்றும் கண்ணுக்கு புலப்படும் யாவும் அவரது சிருஷ்டிப்பின் வல்லமையை காண்பிக்கிறது:

**அல்லேலூயா, தேவனை அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் துதியுங்கள். அவருடைய வல்லமை விளங்கும் ஆகாய விரிவைப்பார்த்து அவரைத் துதியுங்கள். (சங்கீதம் 150:1)**

**வல்லமையை இடைகட்டிக்கொண்டு, உம்முடைய பலத்தினால் பர்வதங்களை உறுதிப்படுத்தி,**

**சமுத்திரங்களின் மும்முரத்தையும் அவைகளுடைய அலைகளின் இரைச்சலையும், ஜனங்களின் அமளியையும் அமர்த்துகிறீர். (சங்கீதம் 65:6-7)**

தேவன் காற்றிலும், கடலிலும், மலைகளிலும் இருக்கிறார்:

**ஆகாசத்திலே கீழ்காற்றை வரப்பண்ணி, தம்முடைய வல்லமையினால் தென்றலையும் வீசச்செய்து.. (சங்கீதம் 78:26)**

**கர்த்தருடைய வழி சுழல் காற்றிலும் பெருங்காற்றிலும் இருக்கிறது. மேகங்கள் அவருடைய பாதத்தூளாயிருக்கிறது.**

**அவர் சமுத்திரத்தை அதட்டி, அதை வற்றிப்போகப்பண்ணி, சகல ஆறுகளையும் வறட்சியாக்குகிறார். பாசானும் கர்மேலும் சோர்ந்து, லீபனோனின் செழிப்பு வாடிப்போகும்.**

**அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிர்ந்து மலைகள் கரைந்துபோகும். அவர் பிரசன்னத்தினால் பூமியும் பூச்சக்கரமும் அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போம்... (நாகூம் 1:3-5)**

அவர் இயற்கையின் அனைத்து கூறுகளையும் கட்டுப்படுத்துகிறார்:

**அவர் சத்தமிடுகையில் வானத்திலே திரளான தண்ணீர் உண்டாகிறது. அவர் பூமியின் கடையாந்தரத்திலிருந்து மேகங்களை எழும்பப்பண்ணி, மழையுடனே மின்னல்களை உண்டாக்கி, காற்றைத் தமது பண்டகசாலைகளிலிருந்து புறப்படப் பண்ணுகிறார். (எரேமியா 10:13)**

யோபு 38-40 அதிகாரங்கள் உலகின் இயற்கையில் தேவன் எவ்விதம் வெளிப்படுகின்றார் என்பதை பதிவு செய்துள்ளதோடு, விபரங்களையும் எமக்குத் தருகிறது. தேவன் மிகத்தெளிவாக தனது வல்லமையை இயற்கையில் வெளிப்படுத்துகின்றமையால், அவரை விசுவாசிக்க முடியாது என்று எந்தவொரு மனிதனாலும் கூற முடியாது.

**எப்படியென்றால், காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானதுமுதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும். ஆதலால் அவர்கள் போக்குச்சொல்ல இடமில்லை. (ரோமர் 1:20)**

## அவரது எழுதப்பட்ட வார்த்தை:

ஆரம்பம் முதல் இறுதி வரை தேவனுடைய வல்லமையை அவரது எழுதப்பட்ட வார்த்தை வெளிப்படுத்துகிறது. அது சிருஷ்டிப்பில் அவரது வல்லமையை ஆரம்பிக்கிறது. முடியும் போது அழிவும், நியாயத்தீர்ப்பும் மீள் சிருஷ்டிப்போடும் முடிகிறது. ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தல் வரையும், தேவன் உலகிலும் அதில் ஜீவிக்கிற மானிடரோடும் தொடர்ந்தேர்ச்சியாக எவ்விதம் தனது வல்லமையால் கிரியைச் செய்தார் என்பதை தேவனுடைய வார்த்தை பதிவு செய்து வைத்துள்ளது.

தேவனுடைய வார்த்தையில் பதிவு செய்யப்பட்டுள்ள கதைகள் தேவனுடைய வல்லமையை பிரதிபலிக்கின்றனவாய், வல்லமையை அறிவிக்கின்றனவாய் இருக்கின்றன:

**தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கனுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரெயர் 4:12)**

## நியாயத்தீர்ப்பு:

தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் அவரது வல்லமையை வெளிப்படுத்துகின்றன. ஆதாமும் ஏவாளும் பாவம் செய்த பின்னர்தான் அவரது நியாயத்தீர்ப்பு உலகில் ஆரம்பமானது (ஆதியாகமம் 3).

நோவாவின் காலத்தில் முழு உலகையும் வெள்ளத்தால் அழித்தமை அவரது நியாயத்தீர்ப்பை பெரிதான அளவில் வெளிக்காட்டுகிறது (ஆதியாகமம் 6-9).

தேவ வல்லமையின் பாவத்திற்கான நியாயத்தீர்பை வேதாகமம் தொடர்ந்தேர்ச்சியாக பதிவு செய்து வைத்துள்ளது. அவருடைய ஜனங்கள் பாவம் செய்தபோது நியாயத்தீர்ப்பை அவர்கள் மேல் தேவன் அனுப்பினார். பாவம் நிறைந்த ஜாதிகளின் மேலும் நியாயத்தீர்ப்பை அனுப்பினார். இவைகளைக் குறித்து நியாயாதிபதிகளின் புத்தகத்திலும், தீர்க்கதரிசிகளினால் எழுதப்பட்ட புத்தகங்களிலும் நீங்கள் வாசிக்கலாம்.

தேவன் நியாயத்தீர்ப்பை அனுப்பும் ஒவ்வொரு வேளையிலும் மக்கள் அதன் நோக்கத்தையும், அவரது வல்லமையை அறிந்து கொள்ளும்படியாக தெளிவாக சுட்டிக்காட்டினார் (உதாரணத்திற்கு யாத்திராகமம் 7:17ஐ பார்வையிடவும்).

## மீட்பு:

சரித்திரத்தில், தேவன் தமது வல்லமையினால் அற்புதவிதமாக மீட்டுக்கொண்டுள்ளார் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்.

ஆதாமையும், ஏவாளையும் அவர் நியாயந்தீர்த்த போதும், அவர்கள் மீட்கப்படும் வழியையும் அவர்களுக்கு கொடுத்தார் (ஆதியாகமம் 3:15). வெள்ளத்தினால் துன்மார்க்கம் நிறைந்த பூமியை அழித்தபோதும் பேழையை பாதுகாக்கும்படிக்கு கொடுத்தார் (ஆதியாகமம் 6-9).

தேவன் இஸ்ரவேலரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தனது வல்லமையினால் மீட்டார்:

**அவர் உன் பிதாக்களில் அன்புகூர்ந்தபடியால், அவர்களுடைய பின்சந்ததியைத் தெரிந்துகொண்டு.... உன்னைத் தமது முகத்துக்குமுன் தமது மிகுந்த வல்லமையினால் எகிப்திலிருந்து புறப்படப்பண்ணினார். (உபாகமம் 4:37-38)**

சத்துருக்களின் கைகளிலிருந்து தன் ஜனங்களை மீட்கும் படியாக, தேவன் நியாயாதிபதிகளையும், ராஜாக்களையும், தீர்க்கதரிசிகளையும் பாவித்தார். நெகேமியா இஸ்ரவேல் மக்களிடம் கூறினதாவது:

**தேவரீர் உமது மகா வல்லமையினாலும், உமது பலத்த கரத்தினாலும், மீட்டுக்கொண்ட உமது அடியாரும் உமது ஜனங்களும் இவர்கள்தானே. (நெகேமியா 1:10)**

ஒரு நோக்கத்துடன், ஒவ்வொரு முறையும் தேவன் தமது ஜனத்தை மீட்டிருக்கிறார். அந்நோக்கங்கள் அவரது வல்லமையை வெளிப்படுத்துகின்றது:

> **ஆனாலும் அவர் தமது வல்லமையை வெளிப்படுத்தும்படி, தம்முடைய நாமத்தினிமித்தம் அவர்களை இரட்சித்தார். (சங்கீதம் 106:8)**

## இயேசு கிறிஸ்து:

தேவன் தனது பெரிதான மீட்பின் திட்டத்தை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வெளிப்படுத்தினார். பாவத்திலிருந்து சகல மனிதரும் அவரால் மீட்கப்படுவார்கள். அனைவருக்காக அவர் ஒருவரே மீட்பரானார்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை பற்றிய தீர்க்கதரிசனங்கலுக்கு ஊடாக தேவன் தனது வல்லமையை வெளிப்படுத்தியுள்ளார். மட்டுமின்றி அவரது பிறப்பும் அதிசயமானதாகும். அவரது வாழ்க்கை, போதனை, ஊழியம், மரணம், உயிர்த்தெழுதல் என்பன இதற்கு சான்றாக இருக்கிறது.

தேவ வல்லமையின் பெரிதான வெளிப்பாடு இயேசு கிறிஸ்துவிலேயே இருக்கின்றது:

> **அப்பொழுது வானத்திலே ஒரு பெரிய சத்தமுண்டாகி: இப்பொழுது இரட்சிப்பும் வல்லமையும் நமது தேவனுடைய ராஜ்யமும், அவருடைய கிறிஸ்துவின் அதிகாரமும் உண்டாயிருக்கிறது. இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் தாழத்தள்ளப்பட்டுப்போனான். (வெளிப்படுத்தல் 12:10)**

தேவனுடைய வல்லமை எவ்வாறு இயேசுகிறிஸ்துவில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை இப்பாடத்தின் நான்காம் அதிகாரத்தில் தெளிவாகக் கற்பீர்கள்.

## பரிசுத்த ஆவியானவர்:

இயேசு தன்னை பின்பற்றியோருக்கு வாக்குபண்ணினார்:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

அப்போஸ்தலர் 2ம் அதிகாரம் இயேசு வாக்குபண்ணிய பரிசுத்த ஆவியானவர் பிதாவினால் அனுப்பப்பட்டதை பதிவு செய்து வைத்துள்ளது. பரிசுத்த ஆவியானவருக்கூடாக தேவன் தன்னுடைய வல்லமையை தொடர்ந்தும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பற்றி பின்னர் இப்பாடத்தில் கற்றுக் கொள்வீர்கள்.

## இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்கள்:

தமது பிள்ளைகளிடத்தில் தேவன் தமது வல்லமையை நியாயத்தீர்ப்பு, மீட்பு என்பனவற்றிற்கூடாக வெளிப்படுத்துகிறார் என்று முன்னர் கற்றீர்கள். ஆனாலும் தேவன் தமது வல்லமையை இயற்கைக்கு அப்பாற்பட்ட முறைகளில் வெளிப்படுத்துகிறார். 'இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை' என்பதன்

அர்த்தம், பௌதீக உலகிலுள்ள வல்லமைகளுக்கும் அப்பால் என்று காணப்படுகிறது. அதாவது மனிதரால் அவ்விதமான காரியங்களை செய்ய முடியாது என்பதே இதன் முடிவு.

தேவனுடைய வல்லமையானது அற்புதமாக குணமாகுதல், பிசாசின் வல்லமையிலிருந்து விடுதலை, மரணத்திலிருந்து ஜீவனடைதல், பரலோகிலிருந்து அக்கினி இறங்குதல் என்பவற்றினாலும் வெளிப்படுகிறது. தேவன் தமது வல்லமையினால் இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்களை வெளிப்படுத்துகிறார் என்பதை முழு வேதாகமமும் வெளிப்படுத்துகிறது. தேவனுடைய வல்லமையானது இன்றைக்கு இதே காரியங்களை வெளிப்படுத்துகிறது.

### விசுவாசிகள்:

இயேசு கிறிஸ்து வல்லமையான அடையாளங்கள் தேவன், விசுவாசிகளுக்கூடாகவும் செய்வார் என்று கூறியுள்ளார்:

> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.**
>
> **சர்ப்பங்களை எடுப்பார்கள். சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு 16:17-18)**

தேவன் உலகில் தமது வேலையை மனிதன், மனுஷிகளின் மூலமே செய்துள்ளார் என்பதை எழுதப்பட்ட வார்த்தையானது ஆரம்பமுதலே காண்பிக்கின்றது. மற்ற சிருஷ்டிகளில் இல்லாத ஒரு அறிவாற்றலை மனிதன் கொண்டுள்ளான். தேவனுடைய நியாயத்தீர்ப்பு துன்மார்க்கருக்கூடாக வந்தது. மீட்பானது தேவ பயமுள்ள நியாயாதிபதிகள், தீர்க்கதரிசிகள், இராஜாக்கள், கடைசியாக இயேசு கிறிஸ்துவுக்கூடாகவும் வந்துள்ளது.

தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும்படியாக இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்தபோது அவர் மனித ரூபத்தில் ஓர் பெண்ணிடம் பிறந்தார். மனித வடிவத்திலே எப்போதும் பெரிதான மீட்பும், பாவத்திலிருந்து விடுதலையும் வந்துள்ளது.

இயேசு பரலோகத்திற்கு திரும்பிய பின்னர், தேவன் தனது வல்லமையை ஆண்கள், பெண்களுக்கூடாக நிரூபித்துள்ளார். விசுவாசிகளுக்கூடாக தேவனுடைய வல்லமை கிரியை செய்தமை அப்போஸ்தலரின் நடபடிக்கை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

> **அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென். (மாற்கு 16:20)**

தேவனுடைய வல்லமை, சுவிசேஷத்தின் வல்லமைக்கூடாக சென்றமையால் அது அநேக ஆண்களினதும், பெண்களினதும் வாழ்க்கையை மாற்றியுள்ளது. அது அற்புதங்கள், குணமாக்குதல், மீட்பை கொடுத்தல் என்பனவற்றில் காண்பிக்கப்பட்டுள்ளது. அவருடைய வல்லமை உபத்திரவத்தின் போதும், அடக்குமுறையின் போதும் காண்பிக்கப்பட்டது.

தேவன் தனது வல்லமையை காண்பிக்கும் நோக்கத்திற்காக அவர் மனிதர்களை அல்லது ஊழியர்களை எழுப்பிக் கொண்டே இருக்கிறார். தேவன் மோசேயிடம் கூறினதாவது:

**என்னுடைய வல்லமையை உன்னிடத்தில் காண்பிக்கும்படியாகவும், என் நாமம் பூமியிலெங்கும் பிரஸ்தாபமாகும்படியாகவும் உன்னை நிலைநிறுத்தினேன். (யாத்திராகமம் 9:16)**

மெய்யான சபையில் அங்கம் வகிக்கின்ற விசுவாசிகளுக்கூடாக தேவன் தனது வல்லமையை இன்றும் வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். அவர் தனது வல்லமையினால் விஷேடமான ஊழியர்களை சபையில் ஏற்படுத்துகிறார், ஆவிக்குரிய வரம் பெற்ற விசுவாசிகளுக்கூடாகவும் வெளிப்படுத்துகிறார். 'அதிகாரத்தை ஒப்படைத்தல்' என்ற தலைப்பின் கீழ் இதைக் குறித்து ஐந்தாம் அதிகாரத்தில் மேலதிகமாக கற்றுக் கொள்வீர்கள்.

## தேவன் ஏன் அவரது வல்லமையை வெளிப்படுத்துகிறார்

தேவன் ஏன் பூமியில் தனது வல்லமையை வெளிப்படுத்துகின்றார்? மனுக்குலத்திற்கு அற்புத அடையாங்களை காண்பிப்பது ஏன்? தேவனுடைய வல்லமை உலகில் கிரியைச் செய்வதற்கு பலவிதமான நோக்கங்களுண்டு. 'வல்லமைக்கான நோக்கங்கள்' என்ற தலைப்பில் இதைக்குறித்து ஆறாம் அதிகாரத்தில் கற்பீர்கள்.

தேவனுடைய வல்லமையின் சகல நோக்கங்களும் ஒரு பிரதான நோக்கத்திலேயே அடங்கியுள்ளது. அது ஆரம்ப முதலே பாவம் நிறைந்த மனுக்குலத்தை இயேசு கிறிஸ்துவுக்கூடாக மீட்பதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் மூலமாய் தேவன் தமது நோக்கத்தை வெளிப்படுத்தியதின் காரணம், அனைத்து மானிடமும் மீட்படைவதாக இருக்கிறது:

**காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்படவேண்டுமென்று,**

**தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். (எபேசியர் 1:9-10)**

**இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (எபேசியர் 3:11)**

## அதிகாரத்தின் ஏனைய நிலைகள்

சகல வல்லமையினதும் மூலாதாரம் தேவனே. அவரே இப்பிரபஞ்சத்தில் ஒப்புயர்வற்றவராகவும், மேலான அதிகாரம் கொண்டவராகவும் இருக்கிறார்.

தேவன் உலகத்தில் வேறு பல அதிகாரத்தையும் ஸ்தாபித்து உள்ளார். அவர் தனது அதிகாரத்தை குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிடம் கொடுத்துள்ளார். பரிசுத்தாவியானவருக்கு ஊடாக விசுவாசிகளுக்கு

அதிகாரத்தை கொடுத்துள்ளார். தேவன் சமுதாயத்திலும், அரசாங்கத்திலும், தொழிலிலும், வீட்டிலும், சபையிலும் பலவிதமான அதிகாரங்களை ஸ்தாபித்துள்ளார். இந்த அதிகாரங்கள் யாவும் முக்கிய மானவைகளாகும். ஆவிக்குரிய கொள்கைகளை சரியாக விளங்கிக் கொள்ள தேவனால் ஸ்தாபிக்கப்பட்ட அதிகார கட்டமைப்புகளை அங்கீகரிக்க வேண்டும். இப்பாடத்தின் பின்னர் இதைக்குறித்து கற்பீர்கள்.

முதலாவதாக நீங்கள் வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள முக்கியமான சத்தியத்தில் உங்கள் அவதானத்தை செலுத்த வேண்டும். தேவன் வல்லமையின் மூலமாக இருக்கின்றபோதும், அவரது அதிகாரம் மாற்றமடையப்போவதில்லை. அவர் உலகில் நிறுவியுள்ள அதிகார மட்டங்களும் மாறிப் போகவில்லை. தீய சக்திகள் தேவனுடைய வல்லமைக்கு சவால் விடுகின்றன. அவைகளின் பயமுறுத்தல்கள் அவரது அதிகாரத்திற்கு அச்சுறுத்தலாக இல்லாத போதும் அவைகள் அவருக்கெதிரான போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றன. நீங்கள் வேதாகம வல்லமையின் கொள்கைகளுடன் இணைந்து கொள்வீர்களாயின், உங்கள் வாழ்விற்கும் அதே தீய சக்திகள் சவாலிடும். தொடர்ந்துவரும் அதிகாரம் ‘‘போலியான சவால்களை’’ பற்றி ஆராய்வோம்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. ஏதாவதொன்றின் 'மூலாதாரம்' என்பது என்ன?

--------------------------------------------------------------------------------

3. சகல வல்லமையினதும் மூலம் யார்?

--------------------------------------------------------------------------------

4. தேவன் தனது வல்லமையை வெளிப்படுத்தும் வழிகள் எட்டையும் பட்டியலிடுக.

------------------------------------ ------------------------------------

------------------------------------ ------------------------------------

------------------------------------ ------------------------------------

------------------------------------ ------------------------------------

5. இக்கூற்று சரியானதா? பிழையானதா? 'பிரபஞ்சத்தில் தேவன் மாத்திரமே வல்லமையுள்ளவர். வேறு வல்லமையின் நிலைகள் கிடையாது'. இக்கூற்று..........................................

6. தேவன் தம்முடைய வல்லமையை பூமியில் வெளிப்படுத்துவதற்கான நோக்கத்தை விபரிக்கும் வேத வசனத்தை தருக.

--------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. தாவீது இஸ்ரவேல் ஜனங்களை ஆளகை செய்த மிகப் பெரிய அரசன். அவர் சகல வல்லமைக்குமான மூலதாரமாக தேவன் இருக்கிறார் என அடையாளங்கண்டு கொண்டார்:

   2 சாமுவேல் 22:33; சங்கீதம் 59:11,16; 62:11; 63:2; 65:6; 68:35; 78:26; 79:11; 90:11; 106:8; 110:3; 111:6; 145:11; 150:1

   இவ்வசனங்களில் கற்றுக்கொண்டவற்றை சுருக்கமாக தருக:

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. தாவீது தேவனுடைய வல்லமைக்குரிய தனிப்பட்ட வாஞ்சையை வெளிப்படுத்தினார். சங்கீதம் 71:18ல் அவர் வெளிப்படுத்தும் வாஞ்சை என்ன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. வேதாகமத்தை நீங்கள் வாசிக்கின்ற போது தேவன் தம்முடைய வல்லமையை பின்வருவனவற்றிற்கூடாக வெளிப்படுத்துவதை பதிவு செய்து வைத்துக் கொள்ளவும்:

| | |
|---|---|
| இயற்கை | இயேசுகிறிஸ்து |
| நியாயத்தீர்ப்பு | பரிசுத்த ஆவியானவர் |
| மீட்பு | இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை |
| எழுதப்பட்ட வார்த்தை | விசுவாசிகள் |

அதிகாரம் மூன்று

# போலித்தனமான சவால்கள்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ மெய்யான தேவ வல்லமைக்கு சவாலான சாத்தானின் போலியான சவால்களை அடையாளம் காணவும்,
- ☐ ‘உன்னதங்களில் இருக்கின்ற ஆவிக்குரிய துன்மார்க்கம்’ என்பது எதைக் குறிக்கிறது என்பதை விளக்கவும்,
- ☐ சாத்தான் உன்னதங்களில் இருக்கிற ஆவிக்குரிய துன்மார்க்கத்தை தேவனுடைய வல்லமைக்கு சமமாக போலியாக காண்பிக்கிறது என்பதை விளக்கவும் முடியும்.

**திறவுகோல் வசனம்:**

**அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.**

**ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே.. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும். (2 கொரிந்தியர் 11:14-15)**

## அறிமுகம்

தேவனே வல்லமையின் மூலாதாரம் என்றும், அவர் தனது வல்லமையை உலகிற்கு பலவழிகளில் வெளிப்படுத்துகின்றார் எனவும் கடந்த அதிகாரத்தில் கற்றீர்கள். ஆனால் தேவனுடைய பெரிதான வல்லமை மாற்றமடைந்து போவதில்லை. இன்றைய உலகில் ஒரு வல்லமையும் போராடிக் கொண்டிருக்கின்றது. அது மாம்சத்தோடும் இரத்தத்தோடும் உள்ள போராட்டம் அல்ல. அப்போராட்டம் தேவனுக்கு எதிராக கலகத்தை ஏற்படுத்தும் போலியானதும் சவாலானதுமானதாகும்.

## போலியான சவால்

சாத்தான் தொடர்ந்தும் இப்பிரபஞ்சத்தின் தேவனுடைய வல்லமையோடு சவாலிட்டுக் கொண்டிருக்கிறான். அவன் போலியாக சவால்விட்டாலும் கூட அது தேவனுக்கு அச்சுறுத்தலாக அமையாது. இது எப்போதும் இருக்கவில்லை. சாத்தான் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட போது அழகான தேவதூதனாக, லூசிபர் என்ற பேரோடு உருவாக்கப்பட்டிருந்தான். அவனது நிலையை பற்றி எசேக்கியேல் 28:12-17ல் வாசிக்கவும்.

ஆனால் சாத்தான் தேவனது அதிகாரத்திற்கும், வல்லமைக்கும் எதிராக கலகம் செய்தான். அவன் தேவனைப் போலாக வேண்டும் என்று விரும்பினான். அவனது கலகம் சம்பந்தமானதை எசேக்கியேல் 28:17லும், ஏசாயா 14:12-15லும் வாசிக்கலாம். தேவன் அவனை கீழே தள்ளினார். கலகத்தின் நிமித்தம் அவனை கொல்லவில்லை. இவ்விதமாகவே முதல் எதிரியை கீழே தள்ளினார். இன்னுமொரு கலகம் பரலோகின் சரித்திரத்தில் இடம்பெறும் சாத்தியத்தை இல்லாதொழித்ததோடு, பேரழிவு கொண்ட

மேகம் மீண்டும் பரலோகை மூடாதிருக்க பார்த்துக் கொண்டார்.

இதனால் தேவன் சாத்தானை பரலோகிலிருந்து துரத்தினார், பூமியில் தனது வல்லமையை பாவிப்பதற்கு முழு அதிகாரத்தையும் எடுத்துக் கொண்டு அவன் வந்தான். சாத்தானுடன் சேர்ந்து கலகம் விளைவித்த மற்ற தேவதூதர்களையும் தேவன் துரத்தினார். நாம் தற்போது அறிந்துள்ளபடி அந்த தீய தூதர்கள் 'பிசாசுகள்' அல்லது 'தீய ஆவிகள்' என அழைக்கப்படுவதோடு அவைகள் இன்றும் உலகில் கிரியை செய்கின்றன.

தேவன் இதன் பின்னர் முதல் மனிதனையும் மனுஷியையும் சிருஷ்டித்தார், பின்னர் பூமியில் போராட்டம் ஆரம்பமானது. முதலாவது சவாலை ஆதியாகமம் 3ம் அதிகாரத்தில் நீங்கள் வாசிக்கலாம். ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்தார்கள், தேவனுடைய வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் எதிரான போராட்டம் வேரூன்றி இருந்தது. ஆதாமும் ஏவாளும் தேவனுக்கு சமமான அறிவை பெற விரும்பினர். இவ்விதமான அறிவால் வல்லமை வரும் என எண்ணினர்.

இந்நேரத்திலிருந்தே சாத்தான் பூமியில் தேவனுடைய அதிகாரத்திற்கு சவால் விட்டான். மனிதனையும் மனுஷியையும் பாவத்தில் விழவைக்க தருணம் பார்த்ததோடு, தேவனுக்கு பதிலாக தன்னை அவர்கள் நம்ப வேண்டும் என விரும்பினான். 'ஆவிக்குரிய போர்கலைகள்: ஆவிக்குரிய போராட்டத்திற்கான கையேடு' என்ற சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடத்திட்டத்தில் சாத்தானைப் பற்றி விபரமாக கற்கலாம். இந்நிறுவனத்தின் பாடத்திட்டத்தை அவர்களின் ஆலோசனையின்படி நீங்கள் கற்றிருந்தால் இப்பாடத்தை ஏற்கனவே கற்றிருப்பீர்கள். இல்லையெனில், எதிரியை புரிந்து கொள்ளவும் ஆவிக்குரிய போராட்டத்தையும், அவனது வல்லமையை மேற்கொள்ளவும் இப்பாடத்தை கற்கும்படி நாம் பரிந்துரை செய்கிறோம்.

தேவனுடைய வல்லமைக்கு சவாலாக, சாத்தான் போலியான முறைகளை கையாளுகின்றான். அவனது போலித்தனம் ஏமாற்றும் தன்மையுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, கள்ள நோட்டுகள் உண்மையான பணத்தைப் போன்றே உருவாக்கப்பட்டிருக்கும். குற்றவாளிகள் அதை உண்மையான பணம் போன்று மற்றவர்களுக்கு ஏமாற்றி கடத்த முற்படுவார்கள்.

தேவனது வல்லமையைப்போன்று சாத்தானும் போலியான வல்லமையை கொண்டுள்ளான். அவன் அதை தேவனது வல்லமையைப் போன்று காண்பித்து மக்களை ஏமாற்றுகிறான். இவ் இலக்கை நிறைவேற்ற தூதர்களை (பிசாசுகளை) பயன்படுத்துகின்றான். சாத்தானும் அவனது பிசாசுகளும் சில வேளைகளில் நன்மையைப் போன்று தீமையை செய்வர். அதனால் நாம் எச்சரிக்கப்படுகிறோம்:

> **அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.**
>
> **ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக் குத்தக்கதாயிருக்கும். (2 கொரிந்தியர் 11:14-15)**

பூமியின் கடைசி நாட்களில், தேவனுடைய வல்லமையைப்போன்று சாத்தான் பிரதிபலித்து தனது வல்லமையை அதிகரிப்பான். அடையாளங்களாலும், அற்புதங்களாலும் அநேகரை வஞ்சிப்பான்:

> **அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்,**

**கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்.**

**ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு,**

**அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். (2 தெசலோனிக்கேயர் 2:9-11)**

சாத்தான் எவ்விதம் செயல்படுகின்றான் என இந்த வேத வசனம் வெளிப்படுத்துகிறது. அவன் தேவனுடைய வல்லமையைப் போல, தனது போலியான வல்லமைமூலம் 'பொய்யான அற்புதங்களை' செய்கின்றான். நீங்கள் தேவனுடைய வசனத்தின் சத்தியத்தை அறிந்து கொள்வதின் மூலம் மட்டுமே அவனது ஏமாற்றுதல்களை கண்டறிய முடியும்.

## துரைத்தனங்களும் அதிகாரங்களும்

**ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)**

தேவனுடைய வல்லமைக்கு எதிராக சாத்தான் மேற்கொண்ட கலகத்தை மனிதன் பிடித்து வைத்துள்ளான். நாம் கண்ணுக்கு புலப்படாத வல்லமைகளுடன் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் தேவனுடைய வல்லமை "சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், அதிகாரங்கள்" அனைத்தையும் விட மேலானதாக இருக்கிறது (எபேசியர் 6:12). தேவனுடைய வல்லமையை போன்று, போலியாக காண்பிக்கப்படும் சாத்தானின் ஏமாற்று வல்லமையிட்டு நீங்கள் கவனமாயிருக்க வேண்டும். எச்சரிக்கையாயிருக்க வேண்டியவைகளாவன.....

## உயர் இடங்களிலுள்ள ஆன்மீக துன்மார்க்கத்திற்கு

பவுல் "ஆவிக்குரிய உயர் இடங்களிலுள்ள துன்மார்க்கத்தை" பற்றி பேசுகிறார், துன்மார்க்கமான ஆவிகள் உலகிலுள்ள மதகட்டமைப்புகளில் ஊடுருவி இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். மெய்யான தேவனுடைய சபையின் அமைப்பை சாத்தான் தனது தீய சக்திகளுடன் இணைந்து ஸ்தாபித்து பின்பற்றுகிறான். 'சாத்தானின் சபை' அல்லது 'ஆவியுலக கோட்பாட்டாளர்கள்' என்ற ஒருங்கமைக்கப்பட்ட அமைப்பு யாவராலும் அறியப்பட்டுள்ளது. 'உயர் இடங்களில்' மத கட்டமைப்புகளை உருவாக்கி தீய ஆவிக்குரிய ஆராதனைகளை ஸ்தாபித்துள்ளான்.

சாத்தானும் தீய மக்களின் மூலமாக மெய்யான சபையைப் போல ஓர் அமைப்பை நிறுவியுள்ளான். யூதா 4 'பக்கவழியாய் நுழைந்தவர்கள்' என கூறுகிறது. சாத்தானிடம் தேவனுடைய வல்லமை கிடையாது, சபைகளில் சாத்தான் தனது சக்தியை நிரூபிக்க போலியாக செயல்படுகிறான்.

சாத்தானால் நிறுவப்பட்ட அமைப்புகள் அதிகமாக மத அமைப்பைப் போன்று பிரதிபலிக்கின்றபோதும் அவை மோசடிகளை அடிப்படையாகக் கொண்டவை.

### சாத்தானும் தனக்கென திரித்துவத்தை கொண்டுள்ளான்:

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பது தேவனின் திரித்துவம். சாத்தானும், மிருகமும், கள்ளத்தீர்க்கதரிசிகளும் சாத்தானிய திரித்துவமாக இருக்கின்றன.

### சாத்தானும் தனக்கென சபையை கொண்டுள்ளான்:

தேவன் மெய்யான திருச்சபையை ஸ்தாபித்துள்ளார். அது 'கிறிஸ்துவின் சரீரம்' எனப்படுகிறது, அதற்கு இயேசுவே தலையாக இருக்கிறார்:

> **நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். (1 கொரிந்தியர் 12:27)**

சாத்தான் கொண்டுள்ள சபையானது 'சாத்தானின் ஜெபாலயம்' என அழைக்கப்படுகிறது:

> **உன் கிரியைகளையும், உன் உபத்திரவத்தையும், நீ ஐசுவரியமுள்ளவனாயிருந்தும் உனக்கிருக்கிற தரித்திரத்தையும், தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் சாத்தானுடைய கூட்டமாயிருக்கிறவர்கள் செய்யும் தூஷணத்தையும் அறிந்திருக்கிறேன். (வெளிப்படுத்தல் 2:9)**

'சாத்தானிய ஜெபாலயம்' என்று வெளிப்படையாக அவர்கள் பயன்படுத்தாத போது, இந்த ஜெபாலயம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மெய்யான சுவிசேஷத்தை போதிக்காத எந்த இடத்திலும் இது நிறுவப்பட்டுள்ளது.

### சாத்தானுக்கும் உபதேச கோட்பாடுகள் உண்டு:

தேவனுக்கு உபதேச கோட்பாடுகளுண்டு, அவைகள் வேதாகமமாகிய அவரது பரிசுத்த வார்த்தையில் வெளிப்படுத்துகிறது:

> **வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக..... (2 தீமோத்தேயு 3:16)**

சாத்தானின் கோட்பாடுகள் 'பிசாசுகளின் கோட்பாடுகள்' என அழைக்கப்படுகிறது:

> **ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். (1 தீமோத்தேயு 4:1)**

எழுதப்பட்டுள்ள வேத வசனத்துடன் ஒத்துப்போகாத எவ்விதமான படிப்பினைகளும் பிசாசின் கோட்பாடுகளாகவே காணப்படுகிறது.

### சாத்தானிடம் பலியிடும் முறைகள் உண்டு:

ரோமர் 12:1ல் உள்ளபடி, நாம் தேவனுக்கு எம்மை ஜீவனுள்ள பலி ஒப்புக்கொடுக்க வேண்டும் என கூறுவோம். நாம் முற்றுலுமாக தேவனிடம் சரணடைய வேண்டும் என்பதே இதன் அர்த்தம். சாத்தானும் பலியிட வேண்டும் என கட்டாயப்படுத்துகிறான்:

> **அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்லுகிறேன்: நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. (1 கொரிந்தியர் 10:20)**

சாத்தான் எமது ஆவி, ஆன்மா, சரீரம் யாவற்றையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க விரும்புகின்றான். மெய்யாகவே ஆண்களும், பெண்களும் சாத்தானுக்கு அர்ப்பணித்திருப்பதோடு அவனது ஊழியத்திற்கும் ஒப்புக்கொடுத்துள்ளனர். அவர் மனிதன், மிருகங்கள், பலியிட்டு இரத்த பலி செலுத்துகின்றனர்.

### சாத்தானிடம் நற்கருணை பக்தியுண்டு:

உலக மக்களின் பாவத்தை போக்க இயேசு சிலுவையில் தன்னை பலியிட்டதை ஞாபகப்படுத்தும்படி அவர் ராப்போசனத்தை ஆரம்பித்து வைத்தார் (1 கொரிந்தியர் 11:23-34). சாத்தானும் போலியாக தனது ராப்போசனத்தை நடத்துகிறான்:

> **நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம் பண்ணக்கூடாதே. நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே. (1 கொரிந்தியர் 10:21)**

### சாத்தானுக்கும் ஊழியக்காரர் இருக்கின்றார்கள்:

தேவன் தனது நற்செய்தியை அறிவிக்கும்படியாக சபையிலே இருக்கும் விசுவாசிளையும் போதகர்களையும், ஊழியக்காரர்களாகவும் அழைத்திருக்கிறார் (1 கொரிந்தியர் 12:28). சாத்தானும் ஊழியர்களை கொண்டுள்ளான்:

> **அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.**
>
> **ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே, அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும். (2கொரிந்தியர் 11:14-15)**

சாத்தானின் ஊழியர் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நற்செய்திக்கு எதிர்மறையாக இருக்கும் அவனது 'செய்தியை' பிரசங்கிக்கின்றனர்:

> **வேறொரு சுவிசேஷம் இல்லையே, சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல.**
>
> **நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். (கலாத்தியர் 1:7-8)**

அவைகளின் செய்திகள் வல்லமையைக் கொண்ட பாணியில் வழங்கப்படுகின்றது என்பதினால் அது மெய்யான நற்செய்தி என்று அர்த்தமாகாது.

## சாத்தானுக்கு சிம்மாசனம் உண்டு:

தேவனுடைய சிங்காசனம் பரலோகில் இருக்கிறது. சாத்தானுக்கும் சிங்காசனம் இருக்கிறது எனினும் அது இருக்கும் இடத்தை எம்மால் சரியாக கூறிவிட முடியாது:

> **நான் கண்ட மிருகம் சிறுத்தையைப்போலிருந்தது, அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவும் இருந்தன. வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது. (வெளிப்படுத்தல் 13:2)**

## சாத்தான் ஆராதிப்போரை கொண்டுள்ளான்:

தேவனை ஆராதிப்போர் அநேகராக இருக்கிறார்கள். சாத்தானை ஆராதிப்போருமுண்டு:

> **மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்.... (வெளிப்படுத்தல் 13:4)**

சாத்தானை ஆராதிக்கின்ற சிலர் இயேசுவை பின்பற்றுபவர்களைப்போன்று பாசாங்கு செய்கின்றனர்:

> **நிலம் உலகம், நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர், களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்.**
>
> **அவைகளை விதைக்கிற சத்துரு பிசாசு. அறுப்பு உலகத்தின் முடிவு. அறுக்கிறவர்கள் தேவதூதர்கள். (மத்தேயு 13:38-39)**

சாத்தான் “களையை”, “நல்ல விதைகளுடன்” கலந்துள்ளான். சாத்தான் தீர்க்கதரிசிகளையும் கொண்டுள்ளான்.

## சாத்தான் தீர்க்கதரிசிகளைக் கொண்டுள்ளான்:

தேவன் சபையில் தீர்க்கதரிசிகளை ஏற்படுத்தியுள்ளார், அவர்கள் விஷேட அபிஷேகத்தை பெற்று, தேவனது செய்தியை சபைக்கு கொண்டு வருவார்கள் (1 கொரிந்தியர் 12:28). சாத்தானும் கள்ளத் தீர்க்கதரிசிகளை கொண்டுள்ளான்:

> **அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள். (மத்தேயு 24:11)**

## சாத்தான் ஆசிரியர்களையும் கொண்டுள்ளான்:

மற்றவர்களுக்கு வசனத்தை விபரித்துச் சொல்லுவதற்காக தேவன் சில ஆசிரியர்களை அபிஷேகித்து வைத்துள்ளார் (1 கொரிந்தியர் 12:28). ஆனால் சகல ஆசிரியர்களும் தேவனிடமிருந்து வந்தவர்கள் அல்ல. சாத்தான் தனது பிழையான கோட்பாடுகளை பரப்பும்படியாக, தவறான ஆசிரியர்களை கொண்டுள்ளான்:

> **கள்ளத்தீர்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத்**

**தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்.**

**அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்.**

**பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுவார்கள்.... (2 பேதுரு 2:1-3)**

சாத்தானின் ஆசிரியர்கள் 'நரகத்திற்குரியவர்களாகும் பிழையான கோட்பாடுகளை' கொண்டு வருவதோடு, அவைகளால் பிரச்சினைகள் ஏற்படும். அவர்கள் பொய்களை பேசி, சாதுரியமாக சத்தியத்திற்குள் அதை கலந்து, வழிதவறச் செய்கின்றனர்.

## சாத்தான் அப்போஸ்தலர்களை கொண்டுள்ளான்:

ஒரு அப்போஸ்தலன் சுவிசேஷத்தை பரவச்செய்து சபைகளை ஸ்தாபிப்பான் (1 கொரிந்தியர் 12:28). சாத்தானும் உலகில் தனது அப்போஸ்தலர்கள் மூலம் தனது வேலையை செய்கின்றான். அவர்கள் தம்மை மெய்யான அப்போஸ்தலர்களைப்போல தம்மை பின்பற்றுவோருக்கு காண்பிக்கிறார்கள்:

**அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக் கிறார்கள். ( 2 கொரிந்தியர் 11:13)**

சாத்தானின் அப்போஸ்தலர்கள் பிழையான உபதேசக் குழுக்களில் தலைவர்களாக மாறுவதோடு, சபைகளில் ஊடுருவி, அதன் தலைவர்களாகவும் மாறுகின்றனர்.

## சாத்தான் கள்ளக் கிறிஸ்துக்களையும் எழும்பப்பண்ணுகிறான்:

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் போல சாத்தான் கள்ளக்கிறிஸ்துக்களை எழும்பப்பண்ணி, போலியாக கிரியை செய்கிறான். இயேசு எச்சரித்தார்:

**ஒருவனும் உங்களை வஞ்சியாத படிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.**

**ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். (மத்தேயு 24:4-5)**

இக்கள்ள கிறிஸ்துக்கள் இயேசுவின் பெயரையும் பாவிக்கக்கூடும். அவர்கள் பல அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்தாலும், அவைகள் தேவனுடைய வல்லமைக்கு மாறான போலியானவைகள்.

## சாத்தான் தொடர்பாடல் அமைப்பை கொண்டுள்ளான்:

கடந்த காலங்கள் தேவன் எவ்வாறு மனிதனோடு பேசினார் என்பதை வேதாகமம் பதிவு செய்து வைத்துள்ளது. தேவன் இன்றும் மனிதரோடு பேசுகிறார். சாத்தானும் மனிதனுடன் பேசினான். அவனது முதல் வார்த்தையே அவன் பாவத்தில் விழ காரணமாயிற்று (ஆதியாகமம் 3ம் அதிகாரம்).

விசுவாசிகள் தமது தேவைகளையிட்டு தேவனிடம் ஜெபிக்கின்றனர். தேவன் நீதிமான்களின் ஜெபத்திற்கு

பதில் கொடுக்கிறார் (யாக்கோபு 5:16). சாத்தானை பின்பற்றுவோர், தீய ஆவிகளின் உதவியோடு அவனிடம் தொடர்புகொண்டு பிராத்திக்கின்றனர். சாத்தானும் தனது அமானுஷ்ய நிகழ்வுகளினால், சத்தங்களுடன், பொருட்களின் அசைவுகள் போன்றவற்றினால் பதில் கொடுக்கிறான். சாத்தானிடம் மெய்யான வல்லமை இல்லாதபோதும் உலகில் பல போலியான காரியங்களை செய்து நிருபிக்க முயற்சிக்கிறான்.

தேவன் மனிதரோடு தமது எழுதப்பட்ட வார்த்தையின் மூலமாக தொடர்பு கொள்கின்றார். சாத்தானும் கூட எழுதப்பட்ட தீய சஞ்சிகைகள், புத்தகங்கள், உணர்வுகளை கிளரும் சித்திரங்கள், இசைகள் என்பவற்றிற்கூடாக தொடர்பு கொள்கின்றான். தேவன் எழுதப்பட்ட வார்த்தைகளுக்கூடாக தொடர்பு கொள்ளும் போது, பேசப்பட்ட அவ்வார்த்தைகள் மனிதனுக்கு ஜீவனையும், வழிநடத்தலையும் கொடுக்கிறது.

சாத்தான் தவறாக வழிகாட்டும் முறைகளின் மூலம் ஓர் அமைப்பைக் கொண்டுள்ளான்:

**சோதிடம் மற்றும் ஜாதகம்:** நட்சத்திரங்களை பயன்படுத்தி தவறான வழிகாட்டல்களை கணித்து கொடுக்கப்படுகிறது.

**இலைகளை வாசித்தல், படங்கள், தலையிலுள்ள புடைப்புகள், கைகளில் உள்ள ரேகைகள், படிக பந்துகள்:** தேயிலை இலை, கைரேகைகள், படிக பந்துகள், படங்கள் என்பவற்றின் மூலம் வழிகாட்டல்கள் உருவாக்கி கொடுக்கின்றது.

**மாந்திரீகம்:** மந்திரவாசகங்கள், விஷமருந்துக்கள், வசியங்கள், சடங்குகள், ஆவிகளோடு பேசுதல், குறி சொல்லல், அதிஷ்ட முறைகள், தரிசனங்கள், வரைபடங்கள் போன்றவற்றின் மூலம் வழிநடத்தலை கொடுக்கின்றான்.

## சாத்தானுக்கு அமானுட சக்தியுண்டு:

பரிசுத்த ஆவியை விசுவாசிகள் பெறும் போது இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை பெறுவர் என இயேசு தமது சீடருக்கு வாக்குப்பண்ணி இருந்தார் (அப்போஸ்தலர் 1:8). சாத்தானும் அமானுட சக்தியையும் அதிகாரத்தையும் கொடுக்கிறான் (வெளிப்படுத்தல் 13:2). அவனது பிசாசுகள் அமானுட வலிமையையும், ஆற்றலையும் உருவாக்குகின்றன (வெளிப்படுத்தல் 13:2), இயேசு கொடுத்தது போன்று சாத்தானும் சக்தியையும் அதிகாரத்தையும் கொடுக்கின்றான். சாத்தானாலும் அநேக அற்புத அடையாளங்களைச் செய்ய முடியும்:

> **அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள். (வெளிப்படுத்தல் 16:14)**

இயேசு கூறினார்:

> **அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.**
>
> **அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (மத்தேயு 7:22-23)**

இயேசு "உங்களை எனக்கு தெரியாது" எனக் கூறியதை கவனியுங்கள். இம்மக்கள் உள்ளக்கிளர்ச்சியை ஏற்படுத்தி தமது வலிமையை காண்பிக்கின்றபோதும் அவைகள் தேவனிடம் இருந்து வந்தவையல்ல. அவர்களது ஆற்றல் போலியானது, ஏமாற்றும் தன்மை கொண்டது.

## பெரிதான வல்லமை

சாத்தான் உண்மையிலேயே சவாலான நடிகன் தான். அவனுக்கு சக்தியான அமைப்புண்டு. அவனை பின்பற்றுவோரால் வல்லமையான கிரியைகள் நடைபெறுகின்றன. அவனது வல்லமையைக் குறித்து இயேசு எச்சரித்துள்ளார்:

> **நீங்கள் இன்னாருக்குப் பயப்படவேண்டுமென்று உங்களுக்குக் காண்பிக்கிறேன்: கொலைசெய்தபின்பு நரகத்திலேதள்ள வல்லமையுள்ளவருக்குப் பயப்படுங்கள். ஆம், அவருக்கே பயப்படுங்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (லூக்கா 12:5)**

ஆனால் தேவனுக்கு சர்வ வல்லமையுண்டு. இயேசு சொன்னார்:

> **ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் (சாத்தான்) உங்களிலிருக்கிறவர் (இயேசு) பெரியவர். (1 யோவான் 4:4)**

சாத்தானுடைய தீமையான கிரியைகளை அழிக்கும்படியாக, இயேசு கிறிஸ்து சர்வ வல்லமையோடும், அதிகாரத்தோடும் வந்ததைப்பற்றி நீங்கள் அடுத்த அதிகாரத்தில் கற்பீர்கள். பின்னர் வரும் அதிகாரங்களிலும் சத்துருவின் வல்லமையை விசுவாசிகள் மேற்கொள்ளுவதற்கான வல்லமை அவர் கொடுத்ததை கற்பீர்கள்.

## போலியான சவால்களுக்கு முகங்கொடுத்தல்

போலியான சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கான வேதாகம வழிகாட்டல்கள் சில:

### சாத்தான் ஒரு போலியான நடிகன் என்பதை அடையாளம் காணுதல்:

சாத்தானின் சக்தியை மேற்கொள்ள முதலாவதாக அவன் தேவனின் வல்லமை தன்னிடம் இருப்பதைப் போன்று நடிப்பதை அடையாளம் காணுங்கள்.

### பகுத்தறியுங்கள்:

ஆவிகளை பகுத்தறிதல் என்று அழைக்கப்படுவது பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படுகின்ற விசேட வரமாகும். இத்திறமை தேவனால், இன்னுமொரு மனிதனின் ஆவி நல்லதா, தீயதா என்பதை பகுத்தறிய உடனடியாக கொடுக்கப்படுகிறது. இந்த ஆவிக்குரிய வரம் உங்களுக்கு இருக்குமாயின், மனிதருடைய ஆவி தேவனுடையதா? சாத்தானுடையதா? என்பதை பகுத்தறிய பயன்படுத்துங்கள்.

இவ்வரம் உங்களுக்கு இல்லாதிருந்தால், இதைக்கண்டறிய வேறு முறைகளை கொடுத்திருப்பார். 2 பேதுரு 2ம் அதிகாரமும், யூதாவின் புத்தகமும் தீய நெறியுள்ள ஆவியைக் கொண்டுள்ளோரின் பண்புகளைப்பற்றி பட்டியலிட்டு காண்பிக்கிறது, அது இவர்களை அடையாளம் காண உங்களுக்கு உதவி செய்யும். தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் ஒரு மனிதனின் ஆன்மீகம் அல்லது வல்லமையைக் குறித்து மதிப்பீடு செய்யுங்கள்.

## கனியினால் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை மதிப்பீடு செய்யுங்கள்:

தேவனின் வல்லமையைப் போன்று சாத்தான் அற்புத அடையாளம் செய்து பாசாங்கு செய்கின்ற போதும், ஊழியர்களை மதிப்பீடு செய்வதற்கும் ஒரு வழியை தந்துள்ளார். இயேசு கனிதரும் மரத்துக்கு மனிதனை ஒப்பிட்டார்:

> **நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது.**
>
> **ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள். (மத்தேயு 7:18,20)**

தேவனது வல்லமையைப்போன்றும், ஆவிக்குரிய வரங்களைப் போன்றும் சாத்தானால் பாசாங்கு செய்ய முடியும், ஆனால் பரிசுத்த வாழ்வையும், பரிசுத்த ஆவியின் கனியையும் அவனால் பாசாங்கு செய்து காண்பிக்க முடியாது. ஆவியின் கனியிலிருப்பவை....

> **...அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்... (கலாத்தியர் 5:22-23)**

ஊழியங்களை அமானுட வெளிப்பாடுகளினாலல்ல, ஆவிக்குரிய கனியால் மதிப்பீடு செய்யுங்கள்.

## தேவனுடைய வார்த்தையை படியுங்கள்:

சாத்தானுடைய பிழையான போதனைகளையும், ஆசிரியர்கள், அப்போஸ்தலர்கள், ஊழியர்கள் என்பவர்களையும் அடையாளம் காணும் பொருட்டு, தேவனுடைய வார்த்தைகளை நீங்கள் கற்று, தெரிந்து கொள்ள வேண்டும். பவுல் தீமோத்திக்கு கூறினார்:

> **நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு. (2 தீமோத்தேயு 2:15)**

ஆதிச்சபையில் பவுல் மிகப்பெரிதான ஆவிக்குரிய தலைவராக இருந்தாலும், பெரேயா பட்டணத்திலிருந்த விசுவாசிகள் தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து கற்றார்கள் என கூறுகின்றார்:

> **அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். (அப்போஸ்தலர் 17:11)**

சாத்தானின் ஏமாற்றும் வல்லமையின் சக்திகளை தவிர்த்துக் கொள்வதற்காக, வேதவசனத்தின் வெளிச்சத்தில் நாம் யாவற்றையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அடையாள அற்புதங்களை நிகழ்த்துபவர்களினதும், வல்லமையாக உபதேச கோட்பாடுகளை கற்பிப்பவர்களினதும் வாழ்வை மதிப்பீடு செய்து பாருங்கள்.

தேவனுடைய வசனங்களுடன் இணங்காத படிப்பினைகளையும், உபதேச கோட்பாடுகளையும், வெளிப்பாடுகளையும், அற்புதங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டாம். சாத்தானது வல்லமையான

“புதிய சத்தியத்தில் விசேட வெளிப்பாடுகள்” என்று அழைக்கப்படும் காரியங்களால் விசுவாசிகளை கவருகின்றான். மக்கள் சிறப்பு கனவுகள், தூதர்களால் தரப்படும் தோற்றங்கள், தரிசனங்கள், சத்தங்கள் அல்லது வேறு அமானுட காரியங்களால் மக்களை கவருகின்றான். ஆனால் பவுல் எச்சரிக்கிறார்:

> **சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல...**
>
> **நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். (கலாத்தியர் 1:7-8)**

சரியான விசுவாசத்திற்கு ஒத்துவராதவற்றை தீர்க்கதரிசனம் என்று அழைக்கப்பட்டாலும் ஏற்றுக்கொள்ள வேண்டாம் (ரோமர் 12:6) நிறைவேறாத தீர்க்கதரிசனங்களையும் கூட (உபாகமம் 18:22). தேவனையும் அவரது வார்த்தையையும் விட்டு உங்களை பிரிக்கும் எந்த வெளிப்பாட்டையும் ஏற்க வேண்டாம் (உபாகமம் 13:1-5):

> **பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்போலிருக்கும். (நீதிமொழிகள் 21:16)**

## சாத்தானின் செல்வாக்கு செலுத்தும் சகலவற்றையும் தவிர்க்கவும்:

சாத்தான் செல்வாக்கு செலுத்தும் சகலவற்றையும் தவிர்க்கும்படியாக தேவன் இஸ்ரவேலை எச்சரித்தார்:

> **அத்தேசத்துக் குடிகளையெல்லாம் உங்களுக்கு முன்பாகத் துரத்திவிட்டு, அவர்களுடைய எல்லாச் சிலைகளையும் வார்ப்பிக்கப்பட்ட அவர்களுடைய எல்லா விக்கிரகங்களையும் அழித்து, அவர்கள் மேடைகளையெல்லாம் நிர்மூலமாக்கி... (எண்ணாகமம் 33:52)**

தேவன் கொடுத்துள்ள மேலதிகமான விபரங்களை உபாகமம் 18:9-14ல் வாசிக்கவும். இஸ்ரவேலர் எந்த வடிவத்திலும் சாத்தானின் கிரியைகளோடு தொடர்பு கொள்ள கூடாது.

சாத்தானது கிரியை சார்ந்தவை அல்லது மாந்திரீகம் சம்பந்தமானவை எதேனும் உங்களிடமிருந்தால் அழித்து விடுங்கள். விக்கிரகங்கள், அதிஷ்ட தாயத்துக்கள், விஷம், தாயத்துக்கள், படிக பந்துகள், விளையாட்டு கலைப்பொருட்கள் இவைசார்ந்த பொருட்களும் இவற்றில் அடங்கும். தீய இலக்கியங்கள் தேவனை பிரியப்படுத்தாத இசைகள் என்பனவற்றையும் அழித்து விடுங்கள். புதிய ஏற்பாட்டு மக்கள் விசுவாசிகளான போது இதையே செய்தார்கள்:

> **மாயவித்தைக்காரராயிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்... அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள். (அப்போஸ்தலர் 19:19)**

தீயவைகள் செல்வாக்கு செலுத்தும் இடங்களில் நேரத்தை செலவிட வேண்டாம். பழைய ஏற்பாட்டில் தேவன் தன்னை விசேஷித்த இடமான தேவமாளிகையிலும், பெந்தேகொஸ்தே தினத்தன்று மேலறையிலும் வெளிப்படுத்தினார் என வேதாகமம் பதிவு செய்து வைத்துள்ளது. சாத்தானும் தனது

வல்லமையை, அவனுக்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட இடங்களில் வெளிப்படுத்துகின்றான். இவ்விடங்களில் தீய படங்கள் காட்டப்படுகின்றன, குடிகள் பாவிக்கப்படும், கலகம் விளைவிக்கக்கூடிய கட்டுக்கடங்காத நடத்தைகள் நிகழும், இறந்தவரின் ஆவியோடு தொடர்பு கொள்வர், சாத்தானை வழிபடுவர், இவ்வாறான காரியங்கள் நடைபெறும் இடங்களில் எல்லாம் பாவம் நடைமுறையில் இருக்கும். இவ்வாறான சுற்றாடலை நாம் தவிர்த்துக் கொள்ள வேண்டும், ஏனெனில் சாத்தானின் வல்லமை இவ்விடங்களில் வலுவாக காணப்படும். அவ்விதமான இடங்களில் இருந்து கொண்டு ‘‘சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாதிரும்’’ என்று உங்களால் ஜெபிக்க முடியாது:

**நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. (1 கொரிந்தியர் 10:20)**

பிழையான உபதேசக்கார தலைவர்களுடனும், ஆசிரியர்களுடனும், தீர்க்கதரிசிகளுடனும், ஊழியக்காரருடனும், அப்போஸ்தலர்களுடனும் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டாம்:

**பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள். (1 தெசலோனிக்கேயர் 5:22)**

## தேவனுடைய வல்லமை சாத்தானை விடவும் பெரியது என்பதை அங்கீகரியுங்கள்:

தேவனின் கட்டமைப்பு மெய்யான சபையில் இருக்கிறது, இது சாத்தானின் வலிமையைவிட மேலானது:

**எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி (இயேசுவிற்கு), எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை (இயேசுவை) எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபேசியர் 1:22-23)**

**உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக... (எபேசியர் 3:10)**

இயேசு சபையின் தலையாக இருக்கிறார். விசுவாசிகள் சரீரமாயிருக்கின்றனர். சகலமும் இயேசுவின் பாதத்தின் கீழே (சாத்தான் உட்பட அவனது மத அமைப்புகள்) இருக்கின்றது, அவைகள் எமக்குக் கீழே தான் இருக்கின்றது, ஏனென்றால் நாமே அவரது சரீரம். ‘‘பாதங்களுக்கு கீழ்’’ என்பதன் அர்த்தம், தேவன் எமக்கு கொடுத்துள்ள வல்லமை, அதிகாரம் என்பவற்றின் கீழ் என்பதாகும்.

‘‘சாத்தானின் சகல வல்லமையையும் மேற்கொள்ளும்’’ (லூக்கா 10:19) வல்லமை எம்மிடம் இருப்பதாக இயேசு கூறியுள்ளார். உயர் இடங்களிலுள்ள ஆவிக்குரிய துன்மார்க்கமும் இதற்குள் அடங்குகிறது. சாத்தானும் அவனது சேனையும் தேவனுடைய வல்லமைக்கு சவாலிடலாம், ஆனால் அவனால் அவரையும் அவரது பிள்ளைகளையும் அச்சுறுத்த முடியாது. தீய துரைத்தனங்களினதும், வல்லமைகளிடமும் சபையானது தேவனுடைய வல்லமையை நிரூபிக்க வேண்டும்!

## வேதாகம வல்லமையின் கொள்கைகளை கற்கவும்:

இப்பாடத்திட்டத்தில் வேதாக கொள்கைகளை கற்பீர்கள். நீங்கள் தேவனது வல்லமையின் கொள்கைகளை விளங்கிக் கொண்டு, சாத்தானின் போலியான கிரியைகளினால் ஏமாந்து விட வேண்டாம்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. “உயர் ஸ்தானங்களில் ஆவிக்குரிய துன்மார்க்கம்” என்பதன் அர்த்தம் என்ன?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. ஆவிக்குரிய உயர்ஸ்தானங்களுக்கூடாக சாத்தானினால் தேவனுடைய வல்லமைப்போன்று பாசாங்கு செய்யப்பட்டு, ஏமாற்றுக்காரியங்கள் உங்களுக்கு ஞாபகமிருப்பின் சுருக்கமாக தருக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. பாசாங்கு செய்யும் வல்லமையின் சவால்களை மேற்கொள்ளும்படி இவ்வதிகாரத்தில் கொடுக்கப்பட்ட எட்டு வேதாக வியூகங்களை பட்டியலிடுக.

------------------------------------------------------------ ------------------------------------------------------------

------------------------------------------------------------ ------------------------------------------------------------

------------------------------------------------------------ ------------------------------------------------------------

------------------------------------------------------------ ------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. 2 பேதுரு 2ம் அதிகாரத்தையும், யூதாவின் புத்தகங்களையும் வாசிக்கவும். சபையில் சாத்தானின் பாசாங்குகளை கண்டறிய இவ்வதிகாரங்கள் உங்களுக்கு உதவும்.

2. ''ஆவிக்குரிய வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்டத்தின் கையேடு'' என்னும் சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடத்தை பெற்றுக் கொள்ளுங்கள். இச்சவால்களைப் பற்றி மேலும் அறிய உதவுவதோடு, போலியான மற்றும் அவனது வல்லமையை மேற்கொள்ளும் விதத்தைப் பற்றியும் அறிய அது உதவும்.

3. சாத்தான் இன்றைய உலகில் தேவனுடைய வல்லமையைப் போன்று பாசாங்கு செய்து ஏமாற்ற முற்படுகின்றான். ''ஏமாற்றுதல்'' என்பது, ஏதாவது நம்பும் காரியத்தை திசைதிருப்பி அதை உண்மையில்லாதது போன்று காண்பித்தலாகும்.

-சாத்தான் தனிநபர்களை மட்டுமல்ல, தேசங்களையே ஏமாற்றுகின்றான்: வெளிப்படுத்தல் 20:8-10
-''அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும்'' சாத்தான் கிரியை செய்வான்: 2 தெசலோனிக்கேயர் 2:10
-மோசம்போகிறவர்கள் மேன்மேலும் அதிகரிக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளோம்: 2 தீமோத்தேயு 3:13
-மோசம் போக்குவது அதிகரிக்கும், எனென்றால் கிறிஸ்துவின் வருகைவரைக்கும் இவ்விதமாயிருக்கும் என எமக்கு எச்சரிக்கை கொடுக்கப்பட்டுள்ளது: மத்தேயு 24; மாற்கு 13; 2 தெசலோனிக்கேயர் 2:3
-சாத்தான் எம்மை ஏமாற்ற அவைகளை பயன்படுத்துவான் எனவும் நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம்: 2 கொரிந்தியர் 11:13; தீத்து 1:10; 2 பேதுரு 2:13; 2 யோவான் 7
-மனிதருடைய இருதயம் திருக்குள்ளது: எரேமியா 17:9
-இரட்சிக்கப்படாத சகலரும் ஏமாற்றுக்காரர்கள்: 2 கொரிந்தியர் 4:4; எபிரெயர் 3:13
-வேதவசனம் ஏற்றுக்கொள்ளாத ''நயவசனிப்புக்களை'' ஏற்றுக்கொள்ள வேண்டாம்: ரோமர் 16:18; 2 கொரிந்தியர் 4:2

**நீங்கள் ஏமாற்றப்படலாம்......**

-வீணான தத்துவங்களை கேட்கும் போது: கொலோசெயர் 2:8
-ஐசுவரியத்தை நம்பி, மாமிச இச்சைகளுக்கு இடம் கொடுக்கிற போது: மத்தேயு 13:22; மாற்கு 4:19; எபேசியர் 4:22
-வசனத்தை கேட்டும் செய்யாதவர்களாக இருக்கும் போது: யாக்கோபு 1:22
-பாவம் இல்லை என்று சொல்லும் போது: 1 யோவான் 1:8
-தீய மக்களுக்கு செவிகொடுக்கும் போது: 2 தீமோத்தேயு 3:13
-ஒன்றுமில்லாதிருக்கும் போதே நான் முக்கியமானவன் என்று எண்ணும்போது: கலாத்தியர் 6:3
-நான் விதைப்பதை அறுக்கமாட்டேன் என்று எண்ணும்போது: கலாத்தியர் 6:7
-தேவனுடைய இராஜ்ஜியம் அநியாயக்காரர்களுக்கும் சுதந்திரமானது என எண்ணும்போது: 1 கொரிந்தியர் 6:9
-இவ்வுலகத்தின் அறிவு உங்களில் இருப்பதால் ஞானி என்று நீங்கள் எண்ணும்போது: 1 கொரிந்தியர் 3:18
-நீங்களே ஆவிக்குரியவர் என்று எண்ணுகிற போதும் ஜெயம் கொள்ளமுடியாத உங்களது நாவு உங்களது நிலையை வெளிப்படுத்துகிறது: யாக்கோபு 1:26
-மாம்சத்தில் வந்த இயேசுவை விசுவாசியாத போது: 2 யோவான் 7
-பாவத்துடன் தொடர்பு வைத்திருப்பதால் எவ்வித பாதிப்பும் எனக்கு ஏற்படாது என்று நீங்கள் எண்ணும் போது: 1 கொரிந்தியர் 15:33

# “அவர் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருபோதும் பேசினதில்லை”

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ இயேசுவின் வல்லமைக்கான ஆதாரத்தை அடையாளம் காணவும்,
- ☐ இயேசு கிறிஸ்துவின் வல்லமையையும், அதிகாரத்தையும் குறித்து வேதாகமம் கற்பிப்பவற்றை சுருக்கமாக தரவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

> **இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 28:18)**

## அறிமுகம்

தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகிய மூன்று ஆள்தத்துவங்களை கொண்டவராக இருக்கின்றார். பிதாவாகிய தேவனே வல்லமையின் மூலாதாரமாக இருக்கிறார். தேவன் தனது வல்லமையை குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்படைத்தார். பின்னர் பரிசுத்த ஆவியானவர் குமாரனால் ஒப்படைக்கப்பட்ட வல்லமையை விசுவாசிகளுடன் பகிர்ந்து கொண்டார்.

இவ்வதிகாரத்தில் இயேசுவின் வல்லமை மற்றும் அதிகாரத்தைப்பற்றி கற்பீர்கள். அவர் காலத்தில் வாழ்ந்த சமயத்தலைவர்கள் அவரைப்பற்றி, ‘அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை’ என்றார்கள் (யோவான் 7:46).

## வல்லமையால் பிறந்தவர்

இயேசு கிறிஸ்துவானவர் பரிசுத்த ஆவியின் வல்லமையால் பிறந்தார்:

> **தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். (லூக்கா 1:35)**

தேவனது வல்லமைக்கு வெளிப்படையான தோற்றம் இயேசுவே:

> **ஆகிலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ..... அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார். (1 கொரிந்தியர் 1:24)**

## வல்லமையால் ஞானஸ்நானம் பெற்றார்

இயேசுவினுடைய வல்லமையை யோவான் இனங்கண்டான். அவன் கூறினான்:

> **என்னிலும் வல்லவர் ஒருவர் எனக்குப்பின் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல.**
>
> **நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன், அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று பிரசங்கித்தான். (மாற்கு 1:7-8)**

யோர்தான் ஆற்றங்கரையில் யோவானால் இயேசு ஞானஸ்நானம் பெற்ற போது ஆவியானவர் புறாவைப்போன்று அவர் மீது இறங்கினார்:

> **பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன். (யோவான் 1:32)**

தேவன் யோவானிடம் கூறினதாவது.....

> **ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். (யோவான் 1:33)**

புறாவடிவில் பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் அமர்ந்தது வல்லமை பெற்றமையை உறுதிப்படுத்தியது. இயேசு பரிசுத்த ஆவியின் வல்லமையால் மாத்திரம் நிரப்பப்படாமல், வல்லமையினாலும் ஞானஸ்நானம் பெற்றார்.

## நிருபிக்கப்பட்ட வல்லமை

ஞானஸ்நானம் பெற்ற உடனடியாகவே, சாத்தானால் சோதிக்கப்படும்படிக்கு இயேசு வனாந்தரத்திற்கு சென்றார்:

> **இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு.... (லூக்கா 4:1)**

இவ்வனுபவத்தை நீங்கள் லூக்கா 4:1-13ல் வாசிக்கலாம்.

சோதனையின் மூலம் வல்லமை நீருபிக்கப்பட்டது. ஒவ்வொரு சோதனையின் போதும் இயேசுவின் வல்லமை மற்றும் அதிகாரத்தை குறித்தே சாத்தான் சவால்விட்டான். இயேசு ஒவ்வொன்றையும் வெற்றிகரமாக மேற்கொண்டார்.....

> **பின்பு இயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று. (லூக்கா 4:14)**

## அவரது வல்லமையின் ஆதாரம்

இயேசுவின் வல்லமைக்கும் அதிகாரத்திற்கும் பிதாவாகிய தேவனே மூலாதாரமாக இருக்கிறார். இயேசு கூறினதாவது:

**கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார். (லூக்கா 4:18-19)**

பிதாவாகிய தேவனது வல்லமையை இயேசு சுயாதீனமாக பாவிக்கவில்லை. அவரது இவ்வுலக ஊழியத்தில், அவரது வல்லமைக்கான காரணம் தேவன் என்பதை காண்பித்தார்:

**இயேசு அவர்களை நோக்கி: நான் என் பிதாவினாலே அநேக நற்கிரியைகளை உங்களுக்குக் காண்பித்தேன், அவைகளில் எந்தக் கிரியையினிமித்தம் என்மேல் கல்லெறிகிறீர்கள் என்றார். (யோவான் 10:32)**

## எல்லையற்ற வல்லமை

கிறிஸ்துவின் வல்லமைக்கு எல்லை கிடையாது. வானத்திலும் பூமியிலும் சகல வல்லமையும் அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தது:

**அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 28:18)**

இயேசு வல்லமையை கொண்டிருந்தார்....

**அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து, எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி,**

**எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபேசியர் 1:21-23)**

சகல வல்லமைக்கும் இயேசுவே தலையானவர்:

**மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள். (கொலோசெயர் 2:10)**

இயேசுவுக்கு வரம்பற்ற அதிகாரம் இருந்தது. அவை கொடுக்கப்பட்டதிற்கான காரணம்:

### அதிகாரத்துடன் பேசும் வல்லமை:

பழைய ஏற்பாட்டு வேத வசனங்களின் அடிப்படையிலேயே வேதபாரகர் அதிகாரத்தை கொண்டவர்களாயிருந்தனர். இயேசு தேவனால் அவருக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்தை அடிப்படையாக கொண்டிருந்தார்:

**அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.**

**(மாற்கு 1:22)**

**அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தபடியால் அவருடைய போதகத்தைக்குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். (லூக்கா 4:32)**

## பாவத்திற்கு மேலான வல்லமை:

பாவத்தை மன்னிக்கும் அதிகாரத்தை இயேசு கொண்டிருந்தார்:

**பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும். (மத்தேயு 9:6)**

## வியாதிக்கு மேலான வல்லமை:

**அஸ்தமனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். (மத்தேயு 8:16)**

## இயற்கைக்கு மேலான வல்லமை:

**அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. (மாற்கு 4:39)**

## மாம்சமான யாவற்றிற்கும் மேலான வல்லமை:

**பிதாவே, வேளை வந்தது, நீர் உம்முடைய குமாரனுக்குத் தந்தருளின யாவருக்கும் அவர் நித்தியஜீவனைக் கொடுக்கும்பொருட்டு மாம்சமான யாவர்மேலும் நீர் அவருக்கு அதிகாரங்கொடுத்தபடியே... (யோவான் 17:2)**

## சத்துருவுக்கு மேலான வல்லமை:

**அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான். இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது.... (யோவான் 19:10-11)**

## மரணத்திற்கு மேலான வல்லமை:

இயேசு சொன்னார்:

**இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். (யோவான் 11:25)**

தனது மரணம் உயிர்த்தெழுதல் மூலமாக இயேசு......

**துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார். (கொலோசெயர் 2:15)**

## சொந்த வாழ்க்கையில் வல்லமை:

இயேசு தனது வாழ்வைப்பற்றி விளக்கி கூறினதாவது:

**ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு... (யோவான் 10:18)**

## நியாயத்தீர்ப்பு வழங்கும் வல்லமை:

நியாயத்தீர்ப்பு வழங்கும் வல்லமையை பிதா இயேசுவுக்கு கொடுத்துள்ளார்:

**அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். (யோவான் 5:27)**

## பிசாசுகளுக்கு மேலான வல்லமை:

பிசாசுகளுக்கு மேலான வல்லமையும், அதிகாரமும் இயேசு கொண்டிருந்தார்:

**எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். (லூக்கா 4:36)**

**எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். (மாற்கு 1:27)**

**நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

## எதிராளியின் சகல கிரியைகளுக்கும் மேலான வல்லமை:

பிசாசின் சகல கிரியைகளையும் அழிக்கும்படியாகவே இயேசு உலகிற்கு வந்தார்:

**பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார். (1 யோவான் 3:8)**

## தற்போதைய வல்லமை

இயேசு மரணமடைந்து உயிர்த்த பின்னர் பரலோகத்திற்கு சென்றார். பிதாவின் வலது பாரிசத்திலிருந்து தொடர்ந்தும் தனது அதிகாரத்தையும் வல்லமையையும் பயன்படுத்துகிறார்:

> **இதுமுதல் மனுஷகுமாரன் சர்வவல்லமையுள்ள தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருப்பார் என்றார். (லூக்கா 22:69)**

> **அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன் என்றான். (அப்போஸ்தலர் 7:56)**

இயேசு கிறிஸ்து விசுவாசிகளுக்கு வல்லமையை ஒப்படைத்ததின் விளைவாக தனது ஊழியத்தை தொடர்ந்தும் நிறைவேற்றுகிறார். இயேசு பரலோகத்திற்கு செல்லுமுன்னதாகவே தனது அதிகாரத்தையும், வல்லமையையும் தனது சீடர்களிடம் கையளித்தார். அவர் செய்த காரியங்களையும், அதற்கு மேலான காரியங்களையும் அவர்களால் செய்ய முடிந்தது (யோவான் 14:12). ஒப்படைக்கப்பட்ட இந்த வல்லமையைக் குறித்து அடுத்த அதிகாரத்தில் கற்பீர்கள்.

## எதிர்கால வல்லமை

ஒரு நாளில் இயேசு திரும்பவும் வல்லமையோடும், மகிமையோடும் பூமிக்கு வருவார்:

> **அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும் மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள்மேல் வருகிறதைப் பூமியிலுள்ள சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள். (மத்தேயு 24:30)**

அவ்வேளையில் பரலோக, பூலோகத்திய சகல வல்லமைகளும் இயேசுவிடம் வழங்கப்படும்:

> **அதன்பின்பு முடிவு உண்டாகும்.. அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். (1 கொரிந்தியர் 15:24)**

பிரபஞ்சத்தின் சகல அதிகாரமும் நாமறிந்திருக்கிறபடி பிதாவாகிய தேவனிடமும், குமாரனாகிய கிறிஸ்துவிடமும் இருக்கும்:

> **அவர்களும் மகா சத்தமிட்டு: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார் என்று சொன்னார்கள்.**

> **அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள்யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள்யாவும்: சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக என்று சொல்லக்கேட்டேன். (வெளிப்படுத்தல் 5:12-13)**

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. இயேசுவின் வல்லமைக்கான வரம்பு என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இயேசுவின் அதிகாரத்திற்கும் வல்லமைக்குமான மூல ஆதாரம் யார்?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. இயேசுவின் வல்லமை மற்றும் அதிகாரம் பற்றி இவ்வதிகாரத்தில் கற்றவற்றை சுருக்கமாக எழுதவும்.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

இயேசுவின் வாழ்க்கை மற்றும் ஊழியத்தை பற்றி குறிப்பிடப்பட்டுள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்தகத்தில் அவரது வல்லமை மற்றும் அதிகாரம் குறித்து தொடர்ந்தேர்ச்சியாக கற்றுக் கொள்ளுங்கள்.

இயேசுவின் வல்லமைக்கு பிதாவாகிய தேவனே காரணம் என அவர் கூறியமை எத்தனை தடவை பதிவு செய்யப்பட்டுள்ளது? மொத்த எண்ணிக்கை என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

அவரது வல்லமை போதனையிலும், சுகமாக்குதலிலும், பிசாசுகளை துரத்துவதிலும், அற்புதங்களிலும், இயற்கையை கட்டுப்படுத்துவதிலும் வெளிப்படுத்தப்பட்டதை பட்டியலிடவும்:

**வேத வசனம் எவ்விதமான வல்லமை வெளிப்பட்டமை பலன்**

அதிகாரம் ஐந்து

# அதிகாரத்தை ஒப்படைத்தல்

### குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ ஆவிக்குரிய அதிகாரத்தை நாம் பெறுவதற்கு யாரிடம் மூல ஆதாரம் இருக்கின்றது என்பதை அடையாளம் காணவும்,
- ☐ உத்தரவாதத்திற்கும், அதிகாரத்திற்குமிடையிலான உறவை விபரிக்கவும்,
- ☐ இயேசு கிறிஸ்து உத்தரவாதத்தை தனது சீடர்களுக்கு ஒப்படைத்ததை விளக்கவும்,
- ☐ வல்லமைக்கான இரண்டு கிரேக்க சொற்களை குறிப்பிடவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

> **இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. (லூக்கா 10:19)**

## அறிமுகம்

தேவனே வல்லமையின் மூலாதாரம். அவர் 'சகல வல்லமையையும்' தனது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவிடம் ஒப்படைத்து விட்டார். இயேசு ஆவிக்குரிய வல்லமையை தனது சீடர்களிடம் ஒப்படைத்துவிட்டார். அந்த வல்லமையினிமித்தம் பெரிதான அவ்வுத்தரவாதத்தை நிறைவேற்ற அவர்களால் முடியும்.

## உத்தரவாதமும் அதிகாரமும்

இயேசு கிறிஸ்து இப்பூவுலக ஊழியத்தை முடித்து விட்டு பரலோகம் சென்றபோது, அவ்வுத்தரவாதத்தை தனது சீடர்களிடமே விட்டுச் சென்றார். அவர் சொன்னார்:

> **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**
>
> **நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19-20)**

தேவராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தால் முழு உலகையும் ஆதாயப்படுத்த வேண்டும் என்பதே இயேசுவால், சீடர்களுக்கு கொடுக்கப்பட்ட உத்தரவாதமாக இருக்கிறது.

உத்தரவாதத்திற்கும், அதிகாரத்திற்குமிடையே ஒரு நிலையான அல்லது உறுதியான உறவுண்டு. யாராவதொருவர் எதாவதொரு காரியத்தை செய்யும்படிக்கு பொறுப்பு கொடுப்பாரேயானால், அதை செய்யும்படியான அதிகாரமும் அவராலேயே வழங்கப்படுகிறது. அவ்வதிகாரம் பெரிய காரியத்தை செய்ய அவரிலும் பெரியவர் ஒருவரால் ஒப்படைக்கப்படுகிறது.

உதாரணமாக ஒரு பொலிஸ்காரருக்கு ஒரு கிராமத்தின் அல்லது நகரத்தின் ஒழுங்கை பராமரிப்பதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அப்பொறுப்பை நிறைவேற்றும் அதிகாரமும் அவருக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டுள்ளது. அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை ஒரு ஆயுதமாக எடுத்துச் சென்று தனது பணியை நிறைவேற்ற வேண்டும். பொலிஸ்காரனுக்கு தன்னில் தானே அதிகாரம் கிடையாது. அவ்வதிகாரம் அவரது மேலதிகாரியினாலேயே அவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அம்மனிதன் தனது உயர் அதிகாரியினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டே பணிபுரிவார். அவர் அரசின் பிரதிநிதியாக இருப்பார்.

இயேசு கிறிஸ்து அவரது சீடர்களுக்கு சுவிசேஷத்தால் உலகை ஆதாயப்படுத்தும் உத்தரவாதத்தை கொடுத்துள்ளார். அப்பணியை நிறைவேற்ற அவர் அதிகாரத்தையும் கொடுத்துள்ளார். உங்களால் யாராவது ஒருவருக்கு, அதிகாரம் வழங்காமல் பொறுப்பை கொடுக்க முடியாது. பொறுப்பு நிறைவேற்றப்பட அதிகாரம் வழங்கப்படல் வேண்டும். இந்த அதிகாரம் எத்தகையது? இது ஆவிக்குரிய அதிகாரம். இயேசு கூறினார்:

> **வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 28:18)**

மறுபடியும் அவர் கூறினார்,

> **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**
>
> **நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19-20)**

## பகிர்ந்து கொள்ளும் அதிகாரம்

இயேசு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தபோது, வல்லமையும் அதிகாரமும் கொண்டவராகவே வந்தார். இயேசு கிறிஸ்துவுக்கு “சகல வல்லமையும்” தேவனால் கொடுக்கப்பட்டிருந்தது. அதனாலேயே அவர் (இயேசு) தனது சீடர்களுக்கு வல்லமையையும், உத்தரவாதத்தையும் பகிர்ந்து கொடுக்கக்கூடியதாக இருந்தது:

> **அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (மத்தேயு 10:1)**

அதனாலேயே அவர் அவரோடிருக்கவும், பிரசங்கிக்கும்படி அனுப்பவும் பன்னிருவரை நியமித்தார்,

**வியாதிகளைக் குணமாக்கிப் பிசாசுகளைத் துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும்.. (மாற்கு 3:15)**

**அவர் பன்னிருவரையும் அழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்த அவர்களுக்கு அதிகாரங்கொடுத்து, (மாற்கு 6:7)**

**அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரையும் வரவழைத்து, சகல பிசாசுகளையும் துரத்தவும், வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து.. (லூக்கா 9:1)**

இயேசு எவ்விதமான உணர்வு பூர்வமான அல்லது பொருளாதார ஆசீர்வாதங்களை அவரது சீடர்களுக்கு ஒப்படைக்கவில்லை. இதை செயற்படுத்தும் படியாக அவர் ஓர் கட்டமைப்பை எருசலேமில் நிறுவவுமில்லை. இவற்றினால் தனது பணியை நிறைவேற்ற முடியாது என்பதையும் அவர் அறிந்திருந்தார். அவர் வல்லமையைக் கொடுத்தார்.

மூன்றாம் அதிகாரத்தில் சாத்தானின் வல்லமையைப்பற்றி கற்றீர்கள். இயேசுவால் அவரது சீடர்களுக்கு கொடுக்கப்பட்ட வல்லமை எதிரியின் வல்லமையைவிடவும் பெரியது:

**இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. (லூக்கா 10:19)**

சாத்தான் உங்களுக்கு பயப்படமாட்டான், அவன் உங்களை கனப்படுத்தவும் மாட்டான், ஆனால் தேவனால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரத்திற்கு பயப்படுவான்.

அதிகாரம் உறவை அடிப்படையாகக் கொண்டது. உதாரணமாக, பொலிஸ்காரனுக்கு, அவன் அரசாங்கத்துடன் கொண்டுள்ள உறவினடிப்படையில் அதிகாரம் கிடைக்கிறது, உங்களுடைய அதிகாரமும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் நீங்கள் கொண்டுள்ள உறவின் அடிப்படையிலேயே இருக்கிறது. உங்களுக்கு பின்னால் இயேசு ''சகல அதிகாரத்துடனும்'' நிற்கிறார். இச்சத்தியத்தை நீங்கள் உணரும் போது, உங்கள் வாழ்க்கை மாறும். இயேசு சீடர்களிடம் கூறினார்:

**என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:49)**

இவ்வல்லமையின் பண்பினால், சீடர்கள் மனித பயத்திலிருந்து, அவிவிசுவாசத்திலிருந்தும், சந்தோஷத்திலிருந்தும் மாற்றப்பட்டார்கள்:

**அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். (மாற்கு 16:20)**

அப்போஸ்தலரின் நடவடிக்கைகளின் புத்தகம், விசுவாசிகளின் வாழ்க்கையில் ஆவிக்குரிய

வல்லமைக்கான வாக்குத்தத்தம் நிறைவேறியதை பதிவு செய்துவைத்துள்ளது. அற்புதங்கள், அடையாளங்கள், அதிசயங்கள் என்பனவற்றை இப்புத்தகம் விபரிக்கிறது. தேவனுடைய வல்லமையின் ஒவ்வொரு வெளிப்பாடும் சுவிசேஷத்தால் உலகம் ஆதாயப்படுத்தப்படும் உத்தரவாதம் நிறைவேற்றப்படுவதற்கு பங்களிப்பதை காண்பிக்கிறது.

## வல்லமைக்கான இரண்டு சொற்கள்

வல்லமை என்ற ஒரு வார்த்தைக்கு, கிரேக்க பாஷையில் இரண்டு வித்தியாசமான வார்த்தைகள் புதிய ஏற்பாட்டில் மொழிபெயர்க்கப்பட்டு இருக்கிறது. இவ்வசனத்தின் இரண்டு அர்த்தங்கள் சித்தரிக்கப்பட்டு இருக்கிறது.

> **இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் (dunamis) மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன் (exousia). (லூக்கா 10:19)**

“exousia” என்ற கிரேக்க சொல்லின் அர்த்தம் வல்லமையை அல்லது அதிகாரத்தை ஒப்படைத்தல் என்பதாகும். “dunamis” என்ற வார்த்தை இயல்பான, உள்ளார்ந்த அதிகாரத்தைக் குறிக்கிறது. இயல்பான உள்ளார்ந்த வல்லமை மனதினாலும் சுயத்தினாலும் பெறப்படுகின்றது. இயல்பான அமையப்பெற்ற இவ்வல்லமை (dunamis) சாத்தானின் வல்லமையை விபரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் ஒப்படைக்கப்படுகின்ற வல்லமைப்பற்றி பாவிக்கப்படுகிற என்ற சொல் தேவனால் இயேசுவுக்கு ஒப்படைக்கப்பட்ட, இயேசுவுடைய வல்லமையை குறிக்கிறது. இவ்வல்லமை தேவனால் கொடுக்கப்பட்டது, எதிராளியின் வல்லமையிலும் பார்க்க பெரியது. இந்த ஒப்புக்கொடுக்கப்பட்ட வல்லமை விசுவாசிகளுக்கும் கடந்து செல்கிறது. இவ்வல்லமையுடன் நீங்கள் பிறக்கவில்லை. இது உங்களது பெற்றோரினாலும் உங்களுக்கு கிடைக்கவில்லை. இது இயேசு கிறிஸ்துவினாலேயே உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

## உத்தரவாதத்திற்கான வல்லமை

இயேசு தமது சீடருக்கு இவ்வல்லமையை விஷேட உத்தரவாதத்தை எடுத்துச் செல்வதற்காக கொடுத்தார். அது உலக நாடுகளுக்கு சுவிசேஷத்தை பரப்ப பாவிக்கப்படுகிறது:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

உலக நாடுகளுக்கு சுவிசேஷத்தை பரப்புவதே இவ்வல்லமையின் நோக்கமாக இருக்கிறது. மாற்கு 13ம் அதிகாரத்தில் இச்சத்தியத்தை விளக்கும்படி இயேசு உவமையொன்றை கூறினார்:

> **ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தனிக்கும்போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங்கொடுத்து, அவனவனுக்குத் தன் தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும்படிக்குக் காவல்காக்கிறவனுக்குக் கற்பிப்பான். (மாற்கு 13:34)**

ஒரு வேலையை செய்து முடிக்கும்படியாக அதிகாரம் வழங்கப்பட்டது. உலக நாடுகளுக்கு சுவிசேஷத்தை பரப்புவதே அவ்வேலைகள்.

## இது கடந்த காலத்திற்குரியதா?

இப்பெரிதான ஆவிக்குரிய வல்லமை ஆதிசபைக்குரியது மட்டுமே என்று சிலர் கூறுகின்றனர். அவர்கள் இது சீடர்களுக்கு மட்டுமே உரியது என்பார்கள். அற்புதங்களையும் கடந்த காலத்திற்குரியது என்பார்கள்.

ஆனால் இக்கேள்வியை அவதானியுங்கள். முழு உலகமும் சுவிசேஷத்தால் ஆதாயம் பண்ணப்பட்டு விட்டதா? இயேசுவால் சீடர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலை இன்னும் முடியவில்லை. இப்போதும் தேவ ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை அறிவித்து உலகை ஆதாயப்படுத்துவது எமது உத்தரவாதமாகவும் இருக்கின்றது. இவ்வுத்தரவாதம் நிறைவேற்றப்படாதிருக்கையில் இயேசு இவ்வதிகாரத்தை திரும்ப பெற்றுக் கொள்ளமாட்டார்.

யோவான் 11ல் உள்ள லாசருவை மரணத்திலிருந்து உயிர்ப்பித்த கதையை வாசியுங்கள். இயேசு அங்கு வந்தபோது லாசரு ஏற்கனவே மரித்திருந்தான், மார்த்தாள் அவரிடம் கூறினாள்:

> **ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்... (யோவான் 11:21)**

இயேசு அவளிடம் கூறினார்....

> **உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். (யோவான் 11:23)**

மார்த்தாள் கூறினாள்:

> **உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன் என்றாள். (யோவான் 11:24)**

பின் இயேசு அவளிடம் கூறினாள்:

> **நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். (யோவான் 11:25)**

கடந்த காலத்தில் இயேசுவால் லாசருவை உயிர்ப்பித்திருக்க கூடும் என்று மார்த்தாள் விசுவாசித்தாள் ('நீர் இங்கேயிருந்திரானால்'). எதிர்காலத்திலும் இயேசுவால் அவன் உயிர்ப்பிக்கப்படுவான் என்றும் விசுவாசித்தாள் ('கடைசிநாளிலே'). ஆனால் இயேசு மிகவும் முக்கியமான சத்தியத்தை அவளுடன் பகிர்ந்து கொண்டார். அவர் சொன்னார் 'நானே' உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்றார். 'நானே' என்பது நிகழ்காலத்தில் சொல்லப்பட்டுள்ளது. பின்னர் அவர் லாசருவை மரணத்திலிருந்து உயிர்ப்பித்தார்.

அற்புதங்கள் கடந்த காலத்துக்கு மட்டுமுரிய விடயமல்ல. அற்புதங்கள் எதிர்காலத்திற்கு மட்டுமுரிய விடயமல்ல. வல்லமையான அற்புதங்கள் எக்காலத்தை சேர்ந்த மனிதர்களின் தேவைகளையும் சந்திக்க போதுமானதான இருக்கின்றது. ஒவ்வொரு நாளிலும், யுகத்திலும் தேவன் தனது வல்லமையை

வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார். ‘நான்’ என நிகழ்காலத்திலும், உங்களுக்கும் சொல்கின்றார்.

## திராட்சை செடியிலிருந்து ஜீவன்

**நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. (யோவான் 15:5)**

பௌதீக உலகில் செடியிலிருந்தே கிளைகளுக்கு ஜீவன் வருகிறது. செடியானது கிளைகளுக்கு ஜீவனை அனுப்பகின்றமையால் அது கனிகளை உற்பத்தி செய்கிறது. கிளையானது வெறுமனே தன்னில் தானே கனி தர முடியாது. கிளையானது செடியிலிருந்து பிரிந்திருந்தால் கனி கொடுக்க முடியாது, மட்டுமல்ல இறுதியில் வாடிவிடும்.

ஆவிக்குரிய உலகில் தேவனின் வல்லமை ஊற்றப்படுவதற்கு, இவ்வுவமையையே இயேசு உதாரணமாக பாவித்தார். நாம் கனிகொடுக்கும் கிளைகளாக இருக்கின்றோம். இயேசுவே திராட்சை செடி. நீங்கள் இணைந்திராவிட்டால் கனியை உற்பத்தி செய்ய மாட்டீர்கள் (யோவான் 15ஐ பார்க்கவும்).

புதிய ஏற்பாட்டு காலத்தில் வல்லமையான அற்புதங்கள் பேதுருவின் அற்புதங்களல்ல. பவுலின் கரத்தினாலும் அற்புதங்கள் நடைபெறவில்லை. ஆவிக்குரிய கனி, ஆவிக்குரிய கிளைகளால் கொடுக்கப்படும் என்பதற்கிணங்க, தேவனால் ஜீவன் அவர்களுக்குள் பாய்ந்தபடியால் அற்புதங்கள் நடைபெற்றது.

இம்மனிதர்கள் தேவன் கட்டளையிட்டதை செய்தார்கள். அவர்கள் வேதவசனத்தை போதித்தார்கள். வியாதியஸ்தர்மேல் கரங்களை வைத்தார்கள். பிசாசின் பிடியில் கட்டப்பட்டிருந்த ஆண்களையும், பெண்களையும் விடுவிக்கும்படி அவனுக்கு கட்டளையிட்டார்கள். தேவனுக்கு கீழ்ப்படிந்து முடிவை அவரிடம் விட்டுவிட்டார்கள்.

தேவனுக்கு கீழ்ப்படிந்து, அவரது கரத்தில் முடிவை விட்டுவிடுங்கள். நீங்கள் அற்புதம் செய்பவர் அல்ல. தேவனே வல்லமைக்கான மூலாதாரம். நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்து அவரது வார்த்தையின்படி கிரியை செய்து அவரை உயர்த்துங்கள். அவர் உங்களுக்கூடாக வல்லமையான காரியங்களைச் செய்வார்.

சீடர்கள் அவரிடம் ‘தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்’ என்று கேட்டார்கள்..... அதற்கு இயேசு பதிலளித்தார்....

**அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது. (யோவான் 6:29)**

இயேசு உங்களுக்கூடாக கிரியை செய்கின்றவர். அவர் ஒருவராலேயே அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது. உணர்வுபூர்வமான வல்லமையால் உங்களால் கிரியை செய்ய முடியாது. ‘ஜெபமின்மையும்’ உங்களால் ஒன்றும் செய்ய முடியாது. தேவனுடைய வல்லமை உங்களிலும் உங்களுக்கூடாகவும் கிரியை செய்யும்:

**அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக்**

> **கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். (மாற்கு 16:20)**

பெரும்பாலான ஊழியங்கள் இவ்விதமாக இயங்காமல் இருக்கின்றன. பலர் தேவனுக்காக வேலை செய்ய முயற்சிக்கின்றனர். ஆனால் "தேவன் அவர்களோடிருந்து கிரியை நடப்பிப்பதே" சிறந்த வல்லமைக்கான முறையாக இருக்கின்றது.

இயேசு சீடர்களிடம் கூறினார்:

> **என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:49)**

ஆவிக்குரிய வல்லமையை பெறுவதற்கு முன்னதாகவே, அநேக ஊழியங்கள் முன்னோக்கி செல்லுகின்றமையால் தோல்வியை சந்திக்கின்றன. இயேசு எமக்கு கொடுத்த மிகப்பெரிய உத்தரவாதத்தை நிறைவேற்றும்போதும் நாம் அநேக சவால்களை சந்திக்க நேரிடும், எனவே நாம் தேவனுடைய அதிகாரத்தையும் வல்லமையையும் கொண்டு செயல்பட வேண்டும்.

## நோக்கங்கள்

எதாவது ஒரு காரணம் இருந்தாலேயொழிய மற்றப்படி மக்கள் தமது அதிகாரத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள மாட்டார்கள். அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுகின்றபோது எப்போதும் ஒரு நோக்கமிருக்கும்.

நீங்கள் இப்பாடத்தில், ஆவிக்குரிய வல்லமைக்கான காரணம் சுவிசேஷத்தை விரிவாக்கம் செய்வதே என்பதைக் கற்றுள்ளீர்கள். ஆனால் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கு இன்னும் அநேக முக்கியமான நோக்கங்களுண்டு. தொடரும் அதிகாரத்தில் வல்லமைக்கான நோக்கங்களைக் குறித்து கற்றுக்கொள்வீர்கள்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. ஆவிக்குரிய அதிகாரத்தை விசுவாசி யாரிடமிருந்து பெறுவார்?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. உத்தரவாதத்திற்கும் அதிகாரத்திற்குமிடையிலான உறவு என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. இயேசு தமது சீடர்களுக்கு ஒப்படைத்த பெரிதான உத்தரவாதம் என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. வல்லமை என்ற சொல்லுக்கு 2 கிரேக்க சொற்கள் பாவிக்கப்படுகின்றன.

'Dunamis' என்பதன் அர்த்தம் என்ன?.......................................................

'exousia' என்பதன் அர்த்தம் என்ன?.......................................................

6. இக்கூற்று உண்மையானதா அல்லது பொய்யானதா?

"அற்புதங்கள் கடந்த காலத்திற்குரியது. சீடர்கள் அனுபவித்த வல்லமையின் வெளிபாடுகளுக்காக நாம் காத்திருக்க வேண்டியதில்லை."

இக்கூற்று ....................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

அப்போஸ்தலர் நடபடிக்கைகளின் புத்தகத்தை வாசித்து இயேசு கிறிஸ்துவினால் ஒப்படைக்கப்பட்ட உத்தரவாதத்தை சீடர்கள் எவ்வாறு நிறைவேற்றினார்கள் என்பதையும் கவனிக்கவும்.

தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையினால் செய்யப்பட்டவற்றிற்கான வேத வசனத்தை முதலாம் பந்தியில் குறிப்பிடவும். இரண்டாம் பந்தியில் நடைபெற்ற காரியத்தை சுருக்கமாக விபரிக்கவும். மூன்றாம் பந்தியில் தேவனுடைய வல்லமையின் பிரதிபலனை விபரிக்கவும். கீழே உதாரணம் கொடுக்கப்பட்டுள்ளது.

சீடர்கள் சுவிசேஷத்தை உலகிற்கு அறிவித்து, உலகை ஆதாயப்படுத்தும் உத்தரவாதத்தை இயேசுவிடம் இருந்து பெற்றுக் கொண்ட வல்லமையால் எவ்வாறு நிறைவேற்றினர் என்பதை நீங்கள் காண்பீர்கள்.

**அப்போஸ்தல நடபடிக்கையின் புத்தகம்**

| **வேதவசனம்** | **தேவனுடைய வல்லமை செயலாற்றிய விதம்** | **விளைவு** |
|---|---|---|
| அப்போஸ்தலர் 2 | பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார் | பேதுரு சாதாரணமாகவே பயந்த சுபாவமுள்ளவர். ஆனால் அவர் வல்லமை யுடன் சாட்சியிட்டபோது 3,000 பேர் இரட்சிக்கப் பட்டார்கள். |

அதிகாரம் ஆறு

# வல்லமைக்கான நோக்கங்கள்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ ஆவிக்குரிய வல்லமையானது உலகின் வல்லமையினின்றும் வேறுபட்டது என்பதை விளக்கவும்,
- ☐ உலகின் கொள்கைகள் தேவ ராஜ்ஜியத்திற்கு எதிரானவை என்பதை உறுதிப்படுத்தும் வேதாகம வசனங்களை தரவும்,
- ☐ ஆவிக்குரிய வல்லமைக்கான நோக்கங்களை அடையாளம் காணவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். (மாற்கு 16:20)**

## அறிமுகம்

தவறான வழிகாட்டும் வல்லமை மிகவும் ஆபத்தானது. மாபெரும் நதியானது, நல்ல நோக்கங்களுக்காக வாய்கால்களில் செலுத்தப்படுகிறது. அவை விவசாயிகளுக்கு தண்ணீரை கொண்டு வரும். அதன் மேல் பெரிய கப்பல்கள் பிரயாணம் செய்யலாம். சில சமுதாயத்தவர்கள் ‘‘மின்சாரம்’’ என்று அழைக்கப்படுகின்ற பாரிய சக்திவாய்ந்த ஆற்றலை உற்பத்தி செய்யவும் பயன்படுத்துகிறார்கள்.

ஆனால் அதே நதியானது தவறான வழிகாட்டலில் செலுத்தப்பட்டால் வெள்ளப்பெருக்கையும் பாரிய அழிவையும் கொண்டுவரும். பயிர்களையும், அறுவடையையும், வீடுகளையும், உயிர்பலியையும் கொண்டு வரலாம். இது ஒரே வல்லமைதான். ஆற்றை சரியான நோக்கங்களுக்காக இயக்கியபோது அழிவை அது தரவில்லை.

ஆவிக்குரிய வல்லமையும் தவறான நோக்கங்களுக்காக பயன்படுத்தினால், வெள்ளம் கட்டுப்பாடின்றி அழிவைக் கொண்டு வந்ததை போன்றே ஆபத்தானதாக அமையும். இதன் காரணமாகவே நாம் ஆவிக்குரிய வல்லமை வேதாக நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படல் வேண்டும் என்பதை விளங்கிக் கொள்வது முக்கியமாகும்.

## உலக நோக்கங்கள்

இப்பாடத்தின் அறிமுகத்தில் இவ்வுலகத்தில் இன்று பலவிதமான வல்லமைகள் இருக்கின்றன என கற்றீர்கள். மக்கள் இவ்வல்லமைகளை பல்வேறுபட்ட நோக்கங்களுக்காக பாவிக்கின்றனர்:

**அரசியல் வல்லமையானது** நிறுவனங்கள், பழங்குடியினர், கிராமங்கள், நகரங்கள், மாகாணங்கள், மாவட்டங்கள் மற்றும் முழு நாட்டையும் தலைமை தாங்கி நடத்த பாவிக்கப்படுகிறது.

**அறிவுசார் வல்லமையானது** மகத்தான கண்டுபிடிப்புக்கள், இலக்கியம் மற்றும் இசைப்படைப்புகள், கல்வி நிறுவனங்கள் நிறுவுவதற்கும் பாவிக்கப்படுகிறது.

**சரீரம்சார் வல்லமையின்** பயனாக உலகின் பெரும் புகழ்மிக்க தடகள விளையாட்டு போட்டிகள் நடைபெறுகின்றது.

**பொருளாதார வல்லமையானது** லாபகரமான வர்த்தகங்களையும், கூட்டுத்தாபனங்களையும், நிதி பேரரசுகளையும் உருவாக்கியுள்ளது.

**இராணுவ வல்லமையானது** பிரதேசங்களை பாதுகாக்கவும், தாக்குதலை எதிர்க்கவும் பயன்படுகின்றது.

**மின் ஆற்றலானது** தீ விபத்துக்களிலிருந்து மக்களை பல வகைகளில் பாதுகாப்பதோடு, முழு நகரத்திற்கும் மின்சாரம் வழங்கி மின்சாதனங்களை பயன்படுத்த மனிதனுக்கு உதவுகின்றது.

**சமயம்சார் வல்லமையானது** பெரிதான மதப்பிரிவுகளையும், பிழையான உபதேசங்களையும் உருவாக்கியுள்ளது.

ஆனால் இவற்றில் எதுவுமே வேதாகம வல்லமைக்கான நோக்கங்களைக் கொண்டவையல்ல.

## புறஜாதிக்குரியதல்ல!

ஒரு முறை இயேசு, தலைமைத்துவத்தைப்பற்றி சீடர்களுக்கு கற்றுக்கொடுக்கின்ற வேளையில் அவர் கூறியதாவது:

> **புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரஞ் செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.**
>
> **உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது: உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.**
>
> **உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். (மத்தேயு 20:25-27)**

தலைமைத்துவத்தை தவிர்ந்த வாழ்க்கையின் மற்ற பகுதிகளிலும் பிரயோகிக்கக்கூடிய வாழ்க்கையின் முக்கியமான கொள்கைகளையும் இயேசு தனது சீடர்களுக்கு கற்றுக்கொடுத்தார். “புறஜாதியார்” என்ற சொல் தேவனைவிட்டு தூரமாக உள்ள ஜாதிகளையும், நாடுகளையும் அடையாளப்படுத்துகிறது. தேவனுடைய ராஜ்ஜியத்தின் கொள்கைகள் முற்றிலுமாய் வேறுப்பட்ட உலகில் செயல்படுத்தப்படுவதை இயேசு விளக்கினார்.

இக்கொள்கை, வல்லமை தொடர்பான பாடத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. உலகத்தின் வல்லமைக்கான நோக்கங்கள் தேவனுடைய ராஜ்ஜியத்திற்கான நோக்கங்களை போன்றதல்ல. உலகத்தின் வல்லமை சுயநலத்திற்காக பயன்படுத்தப்படுகின்றது. தேவனுடைய ராஜ்ஜியத்திற்கான நோக்கங்கள், தன்நலமற்ற நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

சிலர் ஆவிக்குரிய வல்லமையை துஷ்பிரயோகம் செய்து பெரிதான மதம் மற்றும் சமய நிறுவனங்களையும் நிறுவ பயன்படுத்துகின்றனர். அவர்கள் பொதுமக்களின் தனிப்பட்ட ஆதரவை பெறவும், நிதிராஜ்ஜியங்களை உருவாக்கவும், இதை பயன்படுத்துகின்றனர். ஆனால் இவைகள் ஆவிக்குரிய வல்லமைக்கான வேதாகம நோக்கங்கள் அல்ல. அவர்கள் இயேசு விசுவாசிகளிடத்தில் ஒப்படைத்த அதிகாரத்தையும், உண்மையான நோக்கங்களையும் மீறி துஷ்பிரயோகம் செய்கின்றனர். புதிய ஏற்பாட்டு கால வேதபாரகரும். பரிசேயரும் ஆவிக்குரிய வல்லமையை துஷ்பிரயோகம் செய்தமைக்கான உதாரணமாக இருக்கின்றனர். இயேசு கூறினார்:

> **பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள்.**
>
> **மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, மறைந்திருக்கிற பிரேதக்குழிகளைப்போலிருக்கிறீர்கள், அவைகள்மேல் நடக்கிற மனுஷருக்கு அவைகள் தெரியாதிருக்கிறது என்றார். (லூக்கா 11:43-44)**

வேதபாரகரும், பரிசேயரும் சக்திவாய்ந்த மதத்தலைவர்களாக இருந்தனர். அவர்கள் தமது தனிப்பட்ட ஆதாயத்திற்காக இவ்வல்லமையை பயன்படுத்தினர். ஜெபாலயங்களிலே சிறந்த இடங்களை பிடித்திருந்தனர். அவர்கள் சந்தைவெளிகளில் விஷேட வாழ்த்துக்களை கட்டளையிட்டனர். மக்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதற்காக தமது வல்லமையை பாவித்தனர்:

> **மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்கப் போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை. (மத்தேயு 23:13)**
>
> **மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள், அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். (மத்தேயு 23:15)**

பரிசேயர்களும் வெளியரங்கமான சமய வல்லமைகளை காண்பிக்க பலவித காரியங்களை தனிப்பட்ட இலாபத்திற்காக செய்தனர்:

> **மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்காக நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப்போடுகிறீர்கள்: இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள். (மத்தேயு 23:14)**

அவர்களிடம் சமய வல்லமை இருந்தது, ஆனால் மெய்யான ஆவிக்குரிய வல்லமை அவர்களிடம் இருக்கவில்லை. இயேசு அவர்கள் செதுக்கப்பட்ட கல்லறைகள் என்றும், மக்கள் அதன் மேல் உணர்வற்று நடந்து செல்வார்கள் என்றும் கூறினார்.

## வல்லமைக்கான வேதாகம கொள்கைகள்

ஆவிக்குரிய வல்லமைக்கான வேதாகம நோக்கங்கள் இதோ:

**இரட்சிப்பு:**

ஆவிக்குரிய வல்லமையின் முதன்மையான நோக்கம் இரட்சிப்பேயாகும்:

> **அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12)**
>
> **சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 1:18)**

தேவனுடைய வல்லமையின் செயல்முறையின் பலனே இரட்சிப்பு. லித்தா மற்றும் சாரோன் கிராமத்தவர்கள், எட்டு வருடமாக திமிர்வாதமாய் படுக்கையிலிருந்த ஐனேயா சுகமானபடியால் இரட்சிக்கப்பட்டனர் (அப்போஸ்தலர் 9)

**சாட்சி:**

ஆவிக்குரிய வல்லமையின் மிகமுக்கிய நோக்கமான இது, இயேசுவால் முதல் வாக்குத்தத்தமாக கொடுக்கப்பட்டு, விசுவாசிகளிடம் வல்லமை ஒப்படைக்கப்பட்டது:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையைக் குறித்து, பின்னர் இப்பாடத்தில் கற்பீர்கள்.

இவ்வல்லமையை இயேசு தமது சீடர்களுக்கு ஒப்படைத்த பின்னரே பரிசுத்த ஆவியானவர் வரவிருந்தது. சுவிசேஷத்திற்கு வல்லமையான சாட்சியாக இருக்கவும், எருசலேம் தொடங்கி உலகின் முடிவுபரியந்தமும் சுவிசேஷம் பரவவும் நோக்கத்தை இவ்வல்லமை கொண்டிருக்கிறது.

முதலாவதாக அப்போஸ்தலனாகிய பேதுருவிடம், இவ்வாவிக்குரிய வல்லமை செயல்முறையாக காணப்படுகிறது. அவர் பரிசுத்த ஆவியை பெற்றபின்னர், சுவிசேஷத்திற்கு வல்லமையுடன் சாட்சியிட்டபடியால் 3000 பேர் இரட்சிக்கப்பட்டனர். இயேசுவை கைது செய்தபோது இதே பேதுருதான் தப்பி ஓடினான். இதே பேதுருதான் அறிந்திருந்த தேவனை மறுதலித்தான். என்ன நடந்தது?

பேதுருவுக்குரிய வல்லமையின் பண்பை கண்டவனாவான். “எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்” என்று இயேசு ஆரம்பித்த ஆவிக்குரிய வல்லமையின் நோக்கத்தை நினைவு கூர்ந்தான். அவன் வல்லமையை பெற்றுக்கொண்ட பின்னர், சரியானபடி அந்நோக்கத்தை பயன்படுத்த ஆரம்பித்தான், இரட்சிக்கப்படாத ஆண்களிடமும், பெண்களிடமும் சுவிசேஷத்தை விரிவாக்கம் செய்தான்.

நீதிமன்ற சட்டத்தில் இரண்டு விதமான “சாட்சிகள்” ஒப்புக்கொள்ளப்படும், ஒன்று வாய்மொழி சாட்சி மற்றது உறுதிப்படுத்தும் சான்று. இவ்வுண்மை ஆவிக்குரிய உலகிற்கும் பொருந்தும். சுவிசேஷத்திற்கான எமது சாட்சி சான்றையும், வாய்மொழியான சாட்சியையும் கொண்டது. ஆதாரம் தேவனுடைய வல்லமையின் செயற்பாடாக இருக்கிறது.

**கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிகொடுத்தார்கள்: அவர்களெல்லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. (அப்போஸ்தலர் 4:33)**

பவுல் எழுதியுள்ளார்:

**எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடு... வந்தது. (1 தெசலோனிக்கேயர் 1:5)**

உலகிலுள்ள சகல சிருஷ்டியிடமும் சென்று அவருடைய கட்டளையை நிறைவேற்றும்படி வேலை செய்வோருக்கு இயேசு வாக்குபண்ணினார், சிலர் தம்முடைய ஊழியத்தில் வல்லமையுள்ள அடையாளங்களை தேடுகிறார்கள், ஆனால் கட்டளையை நிறைவேற்ற விரும்பாதிருக்கிறார்கள். கட்டளையை நிறைவேற்றுபவர்களுக்காக இவ்வல்லமையை இயேசு வாக்குபண்ணினார்.

## தைரியம்:

**தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2 தீமோத்தேயு 1:7)**

ஆதிசபை காலத்தில், சுவிசேஷத்தை தைரியமாக அறிவிக்க சென்றனர், ஏனெனில் அவர்கள் ஆவிக்குரிய வல்லமையை கொண்டிருந்தார்கள்:

**அவர்கள் ஜெபம்பண்ணினபோது, அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது, அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரியமாய்ச் சொன்னார்கள். (அப்போஸ்தலர் 4:31)**

**அப்பொழுது பர்னபா என்பவன் அவனைச் சேர்த்துக்கொண்டு, அப்போஸ்தலரிடத்தில் அழைத்துக்கொண்டுபோய், வழியிலே அவன் கர்த்தரைக் கண்டவிதத்தையும், அவர் அவனுடனே பேசினதையும், தமஸ்குவில் அவன் இயேசுவின் நாமத்தினாலே தைரியமாய்ப் பிரசங்கித்ததையும் அவர்களுக்கு விவரித்துச் சொன்னான். (அப்போஸ்தலர் 9:27)**

**அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது.... (அப்போஸ்தலர் 18:26)**

**பின்பு பவுல் ஜெபஆலயத்தில் பிரவேசித்து, தைரியமாய்ப் பிரசங்கித்து, மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக்குறித்துச் சம்பாஷணைபண்ணி, புத்திசொல்லிக்கொண்டு வந்தான். (அப்போஸ்தலர் 19:8)**

**தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும்படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங்கொண்டிருந்தோம். (1 தெசலோனிக்கேயர் 2:2)**

## தேவனுடைய கிரியைகள்:

சீடர்கள் இயேசுவின் வல்லமையான கிரியையைக் கண்டு வியந்தனர்:

**அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார்ளூ அவருடைய சீஷரும் அவரோடேகூட வந்தார்கள்.**

**ஓய்வுநாளானபோது, ஜெபஆலயத்தில் உபதேசம்பண்ணத் தொடய்கினார். அநேகர் கேட்டு, ஆச்சரியப்பட்டு, இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது? இவன் கைகளினால் இப்படிப்பட்ட பலத்த செய்கைகள் நடக்கும்படி இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது? (மாற்கு 6:1-2)**

இயேசு சொன்னார்:

**பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளைச் செய்யவேண்டும். ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது. (யோவான் 9:4)**

இயேசுவுக்கு உறுதியான நோக்கமிருந்தது. அவர் தேவனுடைய வேலைகளையே செய்தார். இதுவே அவருடைய குறிக்கோளாக இருந்தது. சாட்சிக்குரிய கிரியைகளை கண்ட பின்னர், சீடர்கள் ஒரு கேள்வியுடன் இயேசுவிடம் வந்தனர்:

**தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்னசெய்ய வேண்டும் என்றார்கள். (யோவான் 6:28)**

இயேசு பதிலளித்தார்:

**அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிறது என்றார். (யோவான் 6:29)**

தேவனுடைய மகத்தான கிரியை இயேசுவில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. இக்காரணத்திற்காகவே தேவன் தனது அவதானத்தை சீடர்கள் மேல் வைத்து அற்புதங்கள், அடையாளங்களை வெளியரங்கமாக செய்தார். உண்மையான அற்புதங்கள் எப்போதும் இயேசுவை உயர்த்தும். இதுவே தேவனுடைய கிரியை.

இயேசு தமது சீடர்களுக்கு பின்னர் கூறினார்:

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். (யோவான் 14:12)**

அவருடைய சீடர்கள் அவர் செய்த கிரியையே செய்தார்கள். கடந்த காலங்களின், வல்லமையின் சாத்தியக்கூறுகள் இன்று வெறுமையாக்கப்படவில்லை. அவர்கள் அதிகமான காரியங்களைச் செய்தனர். இயேசு பரலோகம் சென்றவிட்டபோதும், அவ்வேலைகளின் அளவு அதிகமாகவே இருந்தது, ஆனால் தரமற்றதாக இருக்கவில்லை.

அவருடைய வாக்குத்தத்தம் உண்மையானது. அப்போஸ்தலர் நடவடிக்கை புத்தகத்தில், விசுவாசிகள் தேவனுடைய கிரியைகளைச் செய்தமைக்கு நாம் சாட்சிகளாயிருக்கிறோம். வியாதியஸ்தர்

குணமாகினர், பிசாசுகள் துரத்தப்பட்டன, சிறைச்சாலை கதவுகள் திறந்தன, மரித்தோர் உயிரோடு எழும்பினர்.

## தேவனை வெளிப்படுத்தல்:

தேவன் பூமியில் தமது வல்லமையை நிரூபிக்கக் காரணம் தன்னை மனிதர்களுக்கு வெளிப்படுத்தவே என்று நீங்கள் கற்றுள்ளீர்கள். இதே காரணத்திற்காகவே ஆவிக்குரிய வல்லமை விசுவாசிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது:

> **ஜனங்கள் அதைக்கண்டு ஆச்சரியப்பட்டு, மனுஷருக்கு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள். (மத்தேயு 9:8)**

வல்லமையுள்ள சபைக்கூடாக, முழு உலகிற்கும் தன்னை வெளிப்படுத்த தேவன் வாஞ்சையுள்ளவராக இருக்கின்றார்:

> **உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின்மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக... (எபேசியர் 3:10)**

வல்லமைக்கூடாக இந்நோக்கத்தை வெளிப்படுத்தும் நோக்கமானது:

> **அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப் பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களிடத்திற்கு அனுப்புகிறேன் என்றார். (அப்போஸ்தலர் 26:18)**

## தேவனுடைய இராஜ்ஜியத்தை வெளிப்படுத்த:

தேவனுடைய இராஜ்ஜியமும், அதன் செயற்பாடும், இயேசுவின் பிரகடனத்தில் இணைந்தே காணப்படுகிறது. “வருகிறவர் நீர் தானா?” என இயேசுவிடம் ஒரு சந்தர்ப்பத்தில் கேள்வி கேட்டனர் (லூக்கா 7:19) ஆனால் அவர் வாதம் அல்லது தர்க்கம் மூலம் பதிலளிக்கவில்லை. அவர் கூறினார்:

> **நீங்கள் போய், கண்டவைகளையும் கேட்டவைகளையும் யோவானுக்கு அறிவியுங்கள்.. குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுகிறது. (லூக்கா 7:22)**

தேவ ராஜ்ஜியத்தின் வல்லமையை கிரியைகள் நிரூபிக்கின்றது. இயேசு அற்புதங்களை செய்து தேவனுடைய ராஜ்ஜியம் அவர் கையிலிருக்கின்றது என்பதை நிரூபித்தார். புதிய வானமும், புதிய பூமியும் உருவாக்கப்படுவதை போன்று தேவ ராஜ்ஜியமும் காணக்கூடியதாக இருக்கும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

- பிசாசுகளை துரத்தியது, தேவனது ராஜ்ஜியத்தின் போது சாத்தானினதும், அவனது இராஜ்ஜியமும் அழிக்கப்படும் என்பதற்கு அடையாளமாயிருக்கின்றது: மத்தேயு 21:29; மாற்கு 3:27; லூக்கா 11:21;

யோவான் 12:31; வெளிப்படுத்தல் 20:1

- வியாதியஸ்தர்களை குணமாக்கியது சகல வேதனைகளுக்கும் முடிவுண்டு என்பதை காண்பிப்பதற்காகும்: வெளிப்படுத்தல் 21:4

- அற்புதமாக உணவளித்தது மனித தேவைகள் யாவும் முடிவுக்கு வரும் என்பதை நமக்கு காண்பிக்கிறது: வெளிப்படுத்தல் 7:1

- புயல் அடங்கியது, பூமியின் இயற்கைக்கு மேலான அவரது வெற்றியை தெரிவிக்கிறது: வெளிப்படுத்தல் 21:1

- மரித்தோர் உயிர்த்தெழுந்தமை, மரணம் நித்தியமாய் சங்கரிக்கப்படும் என்பதை அறிவிக்கிறது: 1 கொரிந்தியர் 15:26

## வார்த்தையை உறுதிப்படுத்தல்:

தேவனுடைய வல்லமை இயேசுவின் மேலிருந்து, அவருடைய ஊழியத்தை செய்ய உதவியது:

> **அவர்கள் அங்கே அநேகநாள் சஞ்சரித்துக் கர்த்தரை முன்னிட்டுத் தைரியமுள்ளவர்களாய்ப் போதகம்பண்ணினார்கள்: அவர் தமது கிருபையுள்ள வசனத்திற்குச் சாட்சியாக அடையாளங்களும் அற்புதங்களும் அவர்கள் கைகளால் செய்யப்படும்படி அநுக்கிரகம்பண்ணினார். (அப்போஸ்தலர் 14:3)**
>
> **இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனித்து,**
>
> **உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள். (அப்போஸ்தலர் 4:29-30)**
>
> **அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென். (மாற்கு 16:20)**

## மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய:

தேவனுடைய வல்லமை இயேசுவின் மேலிருந்து, அவருடைய ஊழியத்தை செய்ய உதவியது:

> **ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார். (ஏசாயா 11:2)**
>
> **கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம்**

**நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், (ஏசாயா 61:1)**

**நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

**அவர் வேதபாரகரைப்போலப் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால், அவருடைய போதகத்தைக்குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். (மாற்கு 1:22)**

ஆதிச்சபையிலும் இதே வல்லமையே விசுவாசிகளின் ஊழியத்திற்கும் ஆதாரமாக இருந்தது. பவுல் கூறினார்:

**தேவனுடைய பலத்த சத்துவத்தால் எனக்கு அளிக்கப்பட்ட வரமாகிய அவருடைய கிருபையினாலே இந்தச் சுவிசேஷத்திற்கு ஊழியக்காரனானேன். (எபேசியர் 3:7)**

தேவனுடைய வல்லமையின் இக்கிரியையானது உங்கள் ஊழியத்திலும் நற்பலனை ஏற்படுத்தும். தேவ வல்லமை உங்களில் வரும்போது உங்களது ஊழியத்தில் வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் அவருடைய வல்லமையால் உருவாக்கப்படும். பவுல் கூறுவதாவது:

**உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**

**என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. (1 கொரிந்தியர் 2:4-5)**

ஆதித்திருச்சபையானது தேவனுடைய வல்லமையினாலே உருவானது, சிறந்த பேச்சாளர்களினாலும், இறையியல் விவாதங்களினாலும் அது உருவாக்கப்படவில்லை. தங்கள் விசுவாசத்தை தேவனில் வைத்தார்களேயொழிய, திறமைமிக்க பேச்சாளர்களில் வைக்கவில்லை.

தேவனுடைய வல்லமை ஆவிக்குரிய ஊழியங்களில் சகல பகுதிகளிலும் செயல்படும். சுவிசேஷம் பரவ, வியாதியஸ்தர் குணமாக, பிசாசின் கட்டுகளினால் ஒடுக்கப்பட்டிருப்போரையும் விடுவிக்கவும் உதவும்:

**வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, (மத்தேயு 28:18-19)**

**விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.**

**சர்ப்பங்களை எடுப்பார்கள். சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு 16:17-18)**

**அப்பொழுது, அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களையும் தம்மிடத்தில் வரவழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்தவும், சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கவும் அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். (மத்தேயு 10:1)**

தேவனுடைய வல்லமையால், நீங்கள் தேவனுடைய ஊழியக்காரர் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளீர்கள்:

**எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்... சத்தியவசனத்திலும், திவ்விய பலத்திலும்... (2 கொரிந்தியர் 6:3,7)**

## ஆவிக்குரிய போராட்டத்திற்கு:

வல்லமையின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, நீங்கள் சுவிசேஷத்தை பரப்பும் போது, சாத்தானது எதிர்ப்பை எதிர்நோக்குவீர்கள். ஆவிக்குரிய போராட்டத்திற்கான வல்லமையையும், இயேசு உங்களுக்கு ஒப்படைத்துள்ளார். அவர் எதிரியின் வல்லமைக்கும் மேலான வல்லமையை உங்களுக்கு கொடுத்துள்ளார்:

**இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது. (லூக்கா 10:19)**

**கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ள வர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்.**

**ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்க ளோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:10-12)**

## ஆவிக்குரிய தவறுகளை தவிர்க்க:

மக்கள் இரண்டு காரணங்களால் ஆவிக்குரிய தவறுகளை இழைக்கின்றனர்:

**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். (மத்தேயு 22:29)**

வேத வசனத்தை அறியாதிருக்கின்றமையால் ஆவிக்குரிய தவறுகள் ஏற்படுவதோடு, பிழையான போதனைகளும் எதிர்மறையான உபதேச கோட்பாடுகளும் ஏற்பட வழிசமைக்கின்றனது. தேவனது வல்லமையை அறியாதிருக்கிறபடியாலும், ஆவிக்குரிய தவறுகள் ஏற்படுகின்றன. இதனால் சத்துருவின் வல்லமையான தாக்குதலுக்கு வழி திறந்து விடுகிறீர்கள். அவனுடைய வல்லமையை எதிர்க்க ஆவிக்குரிய வல்லமை உங்களுக்கு இல்லாதிருந்தால் அவனது வல்லமை உங்களில் கிரியை செய்ய ஆரம்பித்து ஆபத்திற்குட்படுவீர்கள்.

சிலர் தேவவாக்கியங்களை அறிந்தவர்களைப்போன்று பக்திவான்களாக இருக்கின்றபோதும், தேவனுடைய வல்லமையில் குறைவுபட்டிருக்கின்றனர். இம்மக்களை வேதாகமம் எச்சரிக்கின்றது...

> **தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு. (2 தீமோத்தேயு 3:5)**

## பாவத்தை ஜெயிக்க:

ஆவிக்குரிய வல்லமை பாவத்தை மேற்கொள்ளும்:

> **நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. (ரோமர் 6:14)**

## தெளிவுப்படுத்த:

கொரிந்தியருக்கு பவுல் எழுதினார்:

> **மேலும், உங்களை நிர்மூலமாக்குகிறதற்கல்ல, உங்களை ஊன்றக் கட்டுகிறதற்குக் கர்த்தர் எங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தைக்குறித்து, நான் இன்னும் சற்றே அதிகமாய் மேன்மைபாராட்டினாலும் நான் வெட்கப்படுவதில்லை. (2 கொரிந்தியர் 10:8)**

> **ஆனதால் இடித்துப்போடவல்ல, ஊன்றக் கட்டவே கர்த்தர் எனக்குக் கொடுத்த அதிகாரத்தின் படி, நான் உங்களிடத்தில் வந்திருக்கும்போது, கண்டிதம் பண்ணாதபடிக்கு, நான் தூரமாயிருந்து இவைகளை எழுதுகிறேன். (2 கொரிந்தியர் 13:10)**

பவுல் தனது அதிகாரத்தை பயன்படுத்தி மக்களை கட்டுப்படுத்த முடியாது அல்லது விருப்பப்படி அழித்து விடவோ முடியாது என்பதை அறிந்திருந்தார். அவர் வெளிப்படையாகவும், தீவிரமாகவும் பேசும் சுபாவம் கொண்டவரானபடியால், கொரிந்தியருக்கு கடினமான விடயங்களை அவர் எழுதினார். தேவன் அவருக்கு கொடுத்திருந்த ஆவிக்குரிய வல்லமையை துஷ்பிரயோகம் செய்ய விரும்பவில்லை. தேவனிடமிருந்து வந்த வல்லமையை அவர் மற்றவர்களை தெளிவுப்படுத்துவதற்காக பாவித்தாரேயன்றி, அழிக்க உபயோகிக்கவில்லை. “தெளிவுபடுத்தல்” என்பதின் அர்த்தம் மற்றவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சியை ஊக்குவித்து கட்டமைப்பதாகும்.

சபையில் உள்ள ஒழுங்கு முறையில் வல்லமையில்லை என்பது இதன் அர்த்தமாகாது. தலைவர்களுக்கு ஆவிக்குரிய அதிகாரம் கொடுக்கப்பட்டமைக்கு காரணம் வேத வசனத்திற்கு ஏற்றபடி கட்டுப்பாடுடன் இருப்பதற்கேயாகும். வல்லமையற்ற சபையில் ஒழுக்கக்குறைபாடுகள் காணப்படும்.

## சித்தத்தை உருவாக்க:

ஒவ்வொரு மனிதருக்குள்ளும் சுயசித்தமுண்டு. அந்த விருப்பம் தேர்ந்தெடுக்கும் வல்லமையாக உள்ளது. செயல்முறை வல்லமையானது தேவனுடைய விருப்பத்தை செய்ய அல்லது அவருக்கு திறந்து கொடுக்க தூண்டுகிறது:

> **உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்.. (சங்கீதம் 110:3)**

## தேவனது வேலையை செயற்படுத்த:

தேவனது வேலையை செய்வதற்கு அவரது வல்லமை உங்களுக்குள் கிரியை செய்கிறது:

> **நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு... (எபேசியர் 3:20)**

ஆவிக்குரிய சத்தியங்களை சிந்திக்கவும், தேவனுடைய வல்லமை உங்களில் கிரியை செய்ய வேண்டும் எனவும் தேவனிடம் கேளுங்கள்.

## ஆவிக்குரிய பெலன்:

தேவனுடைய வல்லமை உங்களுக்குள் கிரியை செய்யும் வல்லமையாக மாத்திரமிராமல், அது உங்களை பெலப்படுத்துவதாகவும் இருக்கிறது. பவுல் கூறியுள்ளதாவது: நாம்

> **சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டுதல் செய்கிறோம். (கொலோசெயர் 1:11)**

தேவனுடைய வல்லமையானது, உங்களது கஷ்டமான நேரங்களிலும், வேதனைகளை சகிக்க பொறுமை தேவைப்படும் வேளைகளிலும் உங்களை பெலப்படுத்துகிறது. தேவனுடைய மகிமையான வல்லமை உங்களுக்குள் கிரியை செய்வதால், கஷ்டமான சூழ்நிலையை சந்தோஷமாய் எதிர்கொள்ள முடியும். இது (வரையறுக்கப்பட்ட) அளவிடப்பட்ட பெலனில்லை. அவசியமான வேளையில் எல்லா வல்லமையாலும் நீங்கள் பெலப்படுத்தப்படுவீர்கள், சகல வல்லமையும், பெலனும் தேவனிடமிருந்து ஊற்றப்படுகிறது. அவரது வல்லமை உங்கள் கிரியை செய்வதற்கு இதுவே முக்கிய காரணமாக உள்ளது.

> **அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும், பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். (2 கொரிந்தியர் 12:9)**

## பாதுகாக்க:

நீங்கள் கடைசி நேரம் வரையும் தேவனுடைய வல்லமையால் பாதுகாக்கப்படுவீர்கள்:

> **கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. (1 பேதுரு 1:5)**

## உயிர்த்தெழுதல்:

அவர் திரும்ப வரும் வரை நீங்கள் பூமியில் மரிக்கும் சரீரத்துடன் வாழுகிறீர்கள். சிலவேளை அவர் திரும்ப வரும்வரை வாழுவீர்கள். ஆவிக்குரிய வல்லமையால் மரித்த சரீரமானது உயிர்த்தெழும்:

**கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும். பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். (1 கொரிந்தியர் 15:43)**

**தேவன் கர்த்தரை எழுப்பினாரே, நம்மையும் தமது வல்லமையினாலே எழுப்புவார். (1 கொரிந்தியர் 6:14)**

## நித்திய ஜீவன்:

தேவனுடைய வல்லமையில் முடிவற்ற ஜீவனுண்டு:

**அவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல்... அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார். (எபிரெயர் 7:16-17)**

## சகல விடயங்களுக்காகவும்:

ஜீவனும், தெய்வீக பக்தியும் சகலமும் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய வல்லமையை சார்ந்ததாகவே இருக்கிறது:

**தம்முடைய மகிமையினாலும் காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி... (2 பேதுரு 1:3)**

வாழ்க்கையில் பல விடயங்கள் தொடர்புடையதாகவே இருக்கிறது என எண்ணிக்கொள்ளுங்கள். இதில் பல தெய்வ பக்தியையும், நல்லொழுக்கத்தையும் சார்ந்தது. இவை அனைத்தையும் அவரது தெய்வீக வல்லமையின் நோக்கம் உங்களுக்கு கொடுக்கிறது.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

2. ஆவிக்குரிய வல்லமை உலக வல்லமையிலிருந்து எவ்வாறு வேறுப்படுகின்றது?

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

3. உலகத்தின் கொள்கைகள் தேவனுடைய ராஜ்ஜியத்தின் கொள்கைகளுக்கு எதிரானது என்பதற்கான வேதாகம வசனத்தை தருக.

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

4. இப்பாடத்தில் ஆவிக்குரிய வல்லமை நோக்கங்கள் பலவற்றை கற்றீர்கள். அதில் மூன்று நோக்கங்களைப்பற்றி சுருக்கமாக எழுதவும்.

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. தான் செய்த அதே வேளைகளை விசுவாசிகளும் செய்வார்கள் என இயேசு கூறினார். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்தகங்களிலே இதைப்பற்றி வாசியுங்கள். இயேசு செய்த சகல காரியங்களையும் பட்டியலிடவும். அதே கிரியைகள் தேவனது வல்லமைக்கூடாக நீங்களும் செய்யலாம்.

2. இவ்வதிகாரத்தில் பேசப்பட்ட வல்லமையின் நோக்கங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. உங்கள் ஆன்மீக நிலையைக் குறித்து மதிப்பீடு செய்யுங்கள். இதில் எவ்விதமான நோக்கங்கள் உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும் வெளிப்படுகிறது? உங்கள் வாழ்வில் வெளிப்படுபவற்றிற்கு சக (+) அடையாளத்தையிடவும். உங்கள் வாழ்வில் வெளிப்பட வேண்டியவற்றிற்கு சய (-) அடையாளத்தையிடவும்.

   இரட்சிப்பு
   சாட்சியிடுதல்
   தைரியம்
   தேவனுடைய கிரியைகளை செய்தல்
   தேவனை வெளிப்படுத்தல்
   தேவனுடைய வார்த்தையை உறுதிப்படுத்தல்
   மற்றவர்களுக்கு ஊழியம் செய்தல்
   ஆவிக்குரிய போராட்டம்
   ஆவிக்குரிய தவறுகளை தவிர்த்தல்
   பாவத்தின் மேல் வெற்றி
   தெளிவுபடுத்தல்
   சித்தத்தை உருவாக்குதல்
   தேவனது கிரியையை செயல்முறைப்படுத்தல்
   ஆவிக்குரிய பெலன்
   பாதுகாத்தல்
   உயிர்த்தெழுதல்
   வாழ்வோடு தொடர்புடைய சகல விடயம்

3. சங்கீதப் புத்தகத்தில் தாவீது தேவனது கிரியைகளைப்பற்றி அடிக்கடி பேசுகிறார். பின்வரும் வேத வசனங்களை படிக்கவும்:

   8:6; 9:1; 14:1; 26:7; 28:5; 33:4,15; 40:5; 46:8; 66:3,5; 71:17; 73:28; 75:1; 77:11; 78:4,7,11,32; 86:8; 92:4,5; 103:22; 104:13,24,31; 105:2,5; 106:13,22,35,39; 107:8,15,21,22,24,31; 111:2,4,6,7; 118:17; 119:27; 138:8; 139:14; 141:4; 143:5; 145:4,5,9,10,17

   இப்பகுதிகளில் கற்றவற்றை சுருக்கமாக எழுதவும்:

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

அதிகாரம் ஏழு

# வல்லமையின் கொள்கை ஒன்று: சுவிசேஷத்தின் வல்லமை

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
☐ “சுவிசேஷம்” என்பதை வரையறுக்கவும்,
☐ சுவிசேஷத்தின் அடிப்படை கூறுகளை வேத வசனங்களுடன் சுருக்கமாக அடையாளம் காணவும்,
☐ சுவிசேஷம் ஏன் வல்லமையுள்ளது என விளங்கப்படுத்தவும்,
☐ இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திலிருக்கும் நன்மைகளை அடையாளம் காணவும்,
☐ சுவிசேஷத்தின் வல்லமையை உரிமையாக்கிக்கொள்ள தேவையானவற்றை அடையாளம் காணவும்,
☐ சுவிசேஷத்தின் வல்லமையை அனுபவிக்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. (ரோமர் 1:16)**

## அறிமுகம்

உங்கள் வாழ்க்கையில் வல்லமை எவ்வளவு முக்கியத்துவம் என்பதை கற்றீர்கள். தேவனிடம் வல்லமையின் ஆதாரம் உண்டென்பதையும், இயேசு கிறிஸ்துவிடம் வல்லமை ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதையும் கற்றீர்கள். கடைசி ஆதிகாரத்தில் விசுவாசிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வல்லமைபற்றியும் கற்றீர்கள். எனினும் இவ்வல்லமையை நீங்கள் எவ்வாறு பெறலாம்? உங்கள் வாழ்க்கைக்கும், ஊழியத்திற்குமாக அதை எவ்வாறு சொந்தமாக்கிக் கொள்ளலாம்? அதை செயற்படுத்தும் ஆவிக்குரிய கொள்கைகள் எவை? இந்த பாடவிதானம் “வல்லமையின் கொள்கைகள்” என்ற தலைப்பின் ஆரம்பமாகிறது. ஒவ்வொரு பாடமும் வேறுப்பட்ட கொள்கைகளை ஆராய்வதோடு, நீங்கள் ஆவிக்குரிய அதிகாரத்தை பெறவும், அதை பாராமரிக்கவும் உதவும். முதலாவது கொள்கையாக “சுவிசேஷத்தின் வல்லமை” இருக்கின்றது.

## சுவிசேஷம்

சுவிசேஷம் என்பதின் உண்மையான அர்த்தம் “நற்செய்தி” என்பதாகும். நாம் இந்த நற்செய்தியை வேதாகம உணர்வுடன் பேசும்போது, தேவராஜ்ஜியத்தின் நற்செய்தியை, இயேசு கிறிஸ்து மூலம் வரும் இரட்சிப்பை மறைமுகமாக குறிப்பிடுகிறோம். அப்போஸ்தலனாகிய பவுல், நற்செய்தியின் அடிப்படை கூறுகளை சுருக்கமாக தருகிறார்:

**நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து,**

**அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து...**
**(1 கொரிந்தியர் 15:3-4)**

சுவிசேஷத்தின் அடிப்படை கூறுகள் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை ஊழியம் என்பவற்றை முக்கியத்துவப்படுத்தும். இது பாவம் நிறைந்த அனைத்து மனுக்குலத்திற்குமான அவரது மரணம், அடக்கம்பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல் என்பவற்றை அடிப்படையாக கொண்டுள்ள வேத வசனப் பதிவை உள்ளடக்கியதாக இருக்கிறது. இதுவே மிக பெரிய வல்லமையை கொண்ட சுவிசேஷ செய்தி. பவுல் கூறியதாவது:

**கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது.**

**விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவநீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது.**

**சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.**

**தேவனைக்குறித்து அறியப்படுவது அவர்களுக்குள்ளே வெளிப்பட்டிருக்கிறது. தேவனே அதை அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். (ரோமர் 1:16-19)**

இவ்வசனங்கள் சுவிசேஷம் ஏன் வல்லமை வாய்ந்தது என்பதை வெளிப்படுத்துகின்றன. இது வல்லமையானது, ஏனெனில்:

-இது தேவனுடைய வல்லமையை மனிதனுக்கு வெளிப்படுத்துகிறது.
-இனம், நிறம், சமயம் சாராமல் சகல மனிதருக்கும் இரட்சிப்பைக் கொண்டு வருகிறது.
-பாவத்திற்கு எதிரான தேவனுடைய கோபத்தையும், நியாயந்தீர்ப்பையும் வெளிப்படுத்துகிறது.
-தேவனுடைய நீதியை வெளிப்படுத்துகிறது.
-விசுவாசத்தினால் எவ்வாறு நீதிமானாகளாம் என்பதையும் காண்பிக்கிறது.
-நாம் வாழுவதற்கான அடிப்படை விசுவாசத்தை கொண்டுள்ளது.

## இரத்தத்தில் வல்லமையுண்டு

சிலுவையானது மரணத்தை விளைவிக்கும் ஆயுதம். இயேசு மரத்தினால் இணைந்து உருவாக்கப்பட்ட சிலுவையிலேயே மரித்தார். சுவிசேஷத்தின் வல்லமையானது, சிலுவையின் வல்லமையுடன் பிரிக்க முடியாததாக இருக்கிறது, ஏனெனில் இரத்தம் அங்கேயே சிந்தப்பட்டது.

சிலுவையின் வல்லமை மரத்தால் செய்யப்பட்ட சிலுவையில் இல்லை. சிலுவையைக் கொண்ட அடையாளங்களிலும் வல்லமையில்லை, அதை நாம் அணிந்தாலும் சரி அல்லது சபை கட்டிடத்தில்

வைத்தாலும் சரி. சிலுவையின் வல்லமை அதின் மேல் நடைபெற்ற சம்பவத்திலேயே உள்ளது. மனுக்குலத்தின் சகல பாவங்களுக்காகவும் இயேசு தனது இரத்தத்தை சிலுவையிலே சிந்தினார்.

மனிதனினதும், சகல மாம்சத்தினதும் உயிர் இரத்தத்திலேயே இருப்பதாக வேதாகமம் எமக்கு கற்று தருகிறது (லேவியராகமம் 17:11,14). ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23), உயிர் இரத்தத்தில் இருப்பதால், பாவ மன்னிப்பை இரத்தம் சிந்துதலினால் ஏற்படும்படிக்கு அவர் இக்கொள்கையை நிறுவினார்:

**நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும். இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது. (எபிரெயர் 9:22)**

பழைய ஏற்பாட்டிலே பாவ மன்னிப்புக்காக மிருகங்களின் இரத்தம் பலியிடப்பட்டது. மனிதன் மீண்டும் மீண்டும் பாவம் செய்யச்செய்ய இரத்தப் பலி செலுத்தப்பட்டுக் கொண்டே வந்தது. புதிய ஏற்பாட்டிலே தேவன், இயேசுவை யாவருக்காகவும் ஒரேதரம் பலியிட அனுப்பினார். எனவே மிருகங்களின் இரத்தம் பாவங்களுக்காக செலுத்தப்பட வேண்டியது அவசியமற்று போயிற்று:

**வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார். (எபிரெயர் 9:12)**

இயேசுவின் இரத்தத்தினாலே சிலுவைக்கு வல்லமையுண்டு. இரத்தத்தில் எவ்விதமான ஆவிக்குரிய வல்லமையுண்டு? இரத்தமானது:

-அநேகருடைய பாவங்களுக்காக (பாவமன்னிப்புக்காக) இரத்தம் சிந்தப்பட்டது: மத்தேயு 26:28
-பாவத்திலிருந்து மீட்பைக் கொண்டு வருகிறது: எபேசியர் 1:7; 2:13; 1பேதுரு 1:2; 18-19; வெளிப்படுத்தல் 5:6-9
-அது விலையேறப்பட்டது, எம்மை மீட்கிறது: 1 பேதுரு 1:18-19
-பாவத்திலிருந்து எம்மை சுத்திகரிக்கிறது: 1 யோவான் 1:7
-மனச்சாட்சியை சுத்திகரிக்கின்றது: எபிரெயர் 9:14
-எமக்காக பேசுகிறது: இயேசு எமக்காக பரிந்து பேசுகிறார். அவரது இரத்தம் எமக்காக கதறுகிறது அல்லது பேசுகிறது: எபிரெயர் 12:24
-நாம் தேவனிடம் கிட்டிச்சேர தைரியத்தை கொடுக்கின்றது: எபிரெயர் 9:12; 10:19-22; எபிரெயர் 2:13
-தேவனுக்கும், மனிதனுக்குமிடையிலான மத்தியஸ்தராக இயேசுவை மாற்றுகிறது: எபிரெயர் 12:24
-நம்மை சுத்திகரிக்கின்றது: எபிரெயர் 13:12-13
-நீதிமான்களாக்குகின்றது: ரோமர் 3:24-25
-ஆவிக்குரிய ஆசீர்வாதத்தின் பாத்திரகமாக உள்ளது: 1 கொரிந்தியர் 10:16
-வியாதியிலிருந்தும், பாவத்திலிருந்தும் விடுவிக்கிறது: ஏசாயா 53:4
-கிறிஸ்துவின் வாக்குறுதிகளை நினைவுபடுத்துகிறது: இயேசு திராட்சை ரசத்தை எடுத்து “இது எனது இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கை” என்றார். சகல வாக்குத்தத்தங்களும் இந்த உடன்படிக்கையின் ஒரு பகுதியாக இருக்கிறது, என் சொந்த இரத்தமே அதன் கிரயமாக இருக்கிறது” லூக்கா 22:20
-இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கு வல்லமை கொடுக்கிறது: எபிரெயர் 13:20
-ஜீவனை கொண்டு வருகிறது: யோவான் 6:53-57
-தேவனுடைய சித்தத்தை செய்ய அனுமதியளிக்கின்றது: எபிரெயர் 13:20-21

-சத்துருவினுடைய சகல வல்லமைகளையும் மேற்கொள்ள அதிகாரம் கொடுக்கிறது: வெளிப்படுத்தல் 12:11

-பாதுகாப்பளிக்கிறது: பஸ்கா ஆட்டின் இரத்தமானது, எகிப்திலிருந்த இஸ்ரவேலின் நிலைகளில் பூசப்பட்ட போது, சத்துருவால் உள்ளே பிரவேசிக்க முடியாது போயிற்று. யாத்திராகமம் 12:21-23

இக்காரணங்களையே பவுல் கூறினார்:

> **சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 1:18)**

## தேர்ந்தெடுக்கும் விடயம்

இயேசு சிலுவையில் அறையப்படுகையில், அவரது எதிரிகள் அவரிலும் வல்லமை கொண்டவர்களாக இருந்திருப்பர் என்று அர்த்தமாகுமா? அவருக்கு பெரும் துன்பத்தை கொடுத்து மரணிக்க செய்யுமளவிற்கு அவர்களுக்கு வல்லமையுண்டா? வேதாகமம் பதிவு செய்து வைத்துள்ளதை வாசித்து பாருங்கள்:

> **அப்பொழுது பிலாத்து: நீ என்னோடே பேசுகிறதில்லையா? உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் உனக்குத் தெரியாதா என்றான்.**
>
> **இயேசு பிரதியுத்தரமாக: பரத்திலிருந்து உமக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உமக்கு ஒரு அதிகாரமுமிராது. ஆனபடியினாலே என்னை உம்மிடத்தில் ஒப்புக் கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார். (யோவான் 19:10-11)**
>
> **ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான். நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார். (யோவான் 10:18)**

இயேசுவின் எதிரிகளிடம் வல்லமை இருக்கவில்லை. தேவனுடைய சித்தத்தின்படியே தமது ஜீவனை மனுக்குலத்தின் பாவத்திற்காக கொடுப்பதை அவர் தெரிந்து கொண்டார். இயேசு தன் இஷ்டத்தின்படி இதை செய்யவில்லை. தன்னை சிலுவை மரணத்திலிருந்து தப்புவித்துக் கொள்ளும் அதிகாரமும் அவரிடமிருந்தது. எனினும் அவர் தனது வாழ்வை சுய விருப்புடனேயே கொடுத்தார்.

## உயிர்த்தெழுதல்

இயேசு சிலுவையில் மரணமடைந்தது கதையின் முடிவல்ல. சுவிசேஷத்தின் வல்லமையும் இங்கு முடிவடைந்து விடவில்லை. அவர் மரணமடைந்து மூன்று நாட்களுக்கு பின்னர், இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். இதைக்குறித்து லூக்கா 24:1-12 வரையிலும் வாசிக்கலாம்.

> **தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார். அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்கக்கூடாதிருந்தது. (அப்போஸ்தலர் 2:24)**

தேவனுடைய வல்லமைக்கு பெரிதான உதாரணமாக இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இருக்கிறது:

**ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார். அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம். (2 கொரிந்தியர் 13:4)**

இயேசுவின் உயிர்த்தெழுதல், சுவிசேஷத்தின் வல்லமைக்கு இன்றியமையாத ஒரு பகுதியாக இருக்கிறது, ஏனென்றால் அதற்கூடாகவே...

**மேலும் சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவராயிருக்கிற அவருக்குள் நீங்கள் பரிபூரணமுள்ளவர்களாயிருக்கிறீர்கள்.**

**துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார். (கொலோசெயர் 2:10,15)**

இயேசு தனது உயிர்த்தெழுதலுக்கூடாக, சத்துருவின் வல்லமைக்கு மேலாக வெற்றி முழக்கமிட்டார். அதனால் நாமும் சத்துருவை மேற்கொள்ளும் வல்லமையை பெற்றுள்ளோம். எமக்கும் மரணத்தின் மேல் ஜெயமுண்டு, ஏனென்றால் எமது சரீரம் உயிர்த்தெழுதலின் அனுபவத்திற்குள் கடந்து செல்லும். உயிர்த்தெழுதலில் பெரிதான வல்லமையுண்டு. பவுல் இயேசுவின் உயிர்த்தெழுதலின் வல்லமையை அறிந்தவராக பேசினார் (பிலிப்பியர் 3:10). “அவரது உயிர்த்தெழுதலின் வல்லமையை” பற்றி இன்னும் அதிகமாக பதினாறாம் அதிகாரத்தில் கற்பீர்கள்.

## விசுவாசத்தின் காரணி

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுள்ள ஆசீர்வாதங்களை அனுபவிக்க தேவையான காரணியாக இருக்கிறது. நீங்கள் இந்த இரத்தத்தில் விசுவாசம் வைக்க வேண்டும்:

**இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.**

**தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி, இக்காலத்திலே தமது நீதியைக் காண்பிக்கும் பொருட்டாகவும்,**

**கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார்.**

**ஆதலால், மனுஷன் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளில்லாமல் விசுவாசத்தினாலேயே நீதிமானாக்கப்படுகிறான் என்று தீர்க்கிறோம். (ரோமர் 3:24-26,28)**

நற்செய்தியில் மாத்திரம் வல்லமையிருந்தால் போதாது. அந்த வல்லமையை உங்கள் வாழ்க்கையில் பிரயோகிக்க வேண்டும். நீங்கள் விசுவாசத்தின் மூலம் இதைச் செய்ய வேண்டும். அடிப்படையில் விசுவாசம் என்பது நம்பிக்கையாகும். நீங்கள் நற்செய்தியின் வல்லமையில் நம்பிக்கை வைத்து அவ்வல்லமையை அனுபவிக்க வேண்டும். நீங்கள் வல்லமைக்கும், விசுவாசத்திற்கும் உள்ள தொடர்பை பற்றி பின்னர் இப்பாடத்தில் கற்றுக் கொள்வீர்கள்.

## நற்செய்தியின் வல்லமையை அனுபவித்தல்

இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல், உங்கள் பாவங்களுக்கான மன்னிப்பை பெறாதிருந்தால், இந்த நற்செய்தியின் வல்லமையை உங்களால் அனுபவிக்க முடியாது. நீங்கள் நற்செய்தியின் வல்லமையை அனுபவிக்க:

### 1. பாவி என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்:

**எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி, (ரோமர் 3:23)**

### 2. உங்கள் பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்:

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.**

**உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். (யோவான் 3:16-17)**

### 3. தேவனிடத்தில் உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள், மன்னிக்கும் படி கேளுங்கள்:

**நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1:8-9)**

### 4. மாற்றமடைந்த வாழ்க்கையை அனுபவியுங்கள்:

நற்செய்தியின் வல்லமையானது உங்களது பழைய வாழ்க்கைமுறையை மாற்றும். உங்களது பாவக்கிரியைகள், மனப்பான்மை, எண்ணங்கள் யாவும் மாறும்:

**இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (2 கொரிந்தியர் 5:17)**

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. "சுவிசேஷம்" என்பதை வரையறுக்கவும்?

--------------------------------------------------------------------------------

3. சுவிசேஷத்தின் அடிப்படை கூறுகளை சுருக்கமாக கூறும் வேத வசனம் எது?

--------------------------------------------------------------------------------

4. சுவிசேஷம் ஏன் வல்லமையுள்ளதாய் இருக்கின்றது?

--------------------------------------------------------------------------------

5. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை பற்றி நீங்கள் கற்றதை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------

6. சுவிசேஷத்தின் வல்லமையை உரிமையாக்கி கொள்ள தேவையானது என்ன?

--------------------------------------------------------------------------------

7. நீங்கள் எவ்வாறு சுவிசேஷத்தின் வல்லமையை அனுபவிக்க முடியும்?

--------------------------------------------------------------------------------

8. இபின்வரும் கூற்று சரியானதா? பிழையானதா? "இயேசுவின் எதிரிகளைவிடவும் பெரிதான வல்லமையை கொண்டிருந்தார். அதனால் அவர்களால் அவரை கொல்ல முடியாது." இவ்வறிக்கை

--------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

சுவிசேஷத்தை குறித்து மேலும் படிக்கவும். பின்வரும் வேத வாக்கியங்கள் படிப்பிப்பதை சுருக்கமாக எழுதவும்:

மத்தேயு 4:23; 9:35; 24:14

மாற்கு 1:14

அப்போஸ்தலர் 20:24

ரோமர் 1:1-3,9; 15:16,19

2 கொரிந்தியர் 4:4

எபேசியர் 1:13; 6:15

1 தெசலோனிக்கேயர் 2:2,9

2 தெசலோனிக்கேயர் 1:8

1 தீமோத்தேயு 1:11

1பேதுரு 4:17

வெளிப்படுத்தல் 14:6

அதிகாரம் எட்டு

# வல்லமையின் கொள்கை இரண்டு: பரிசுத்த ஆவியானவரின் வல்லமை

### குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ பரிசுத்த ஆவியின் வல்லமையின் உறவை வெளிப்படுத்தும் வேதாகம வாக்கியங்களைக் கொடுக்கவும்,
- ☐ பரிசுத்த ஆவியின் வல்லமையின் முக்கிய நோக்கத்தை அடையாளம் காணவும்,
- ☐ பரிசுத்த ஆவியின் வரங்களை அடையாளம் காணவும்,
- ☐ பரிசுத்த ஆவியின் கனியின் பட்டியலை வேத வாக்கியங்களுடன் குறிப்பிடவும்,
- ☐ பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெறுவதற்காக ஆவிக்குரிய வழிகாட்டலை பட்டியலிடவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

> **என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:49)**

### அறிமுகம்

ஆவிக்குரிய வரத்தைக்குறித்து முக்கியமான வாக்குத்தத்தத்தை இயேசு தன்னை பின்பற்றியோருக்கு ஏற்படுத்தினார்:

> **என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:49)**

நற்செய்தியின் வல்லமையையும், பரிசுத்த ஆவியியின் வல்லமையையும் இரண்டு முக்கியமான வேதாகம கொள்கைகளாக இருக்கின்றன, அவற்றை நாம் விளங்கிக் கொள்வது அவசியம். ஆவிக்குரிய வரத்தை பெறுவதற்கு இவையிரண்டினதும் அனுபவம் மிக முக்கியமானதாகும். நீங்கள் ஏற்கனவே நற்செய்தியின் வல்லமையின் முக்கியத்துவத்தை குறித்து கற்றுள்ளீர்கள், எனினும் இன்னுமொரு முக்கியமான ஆவிக்குரிய அனுபவத்தையும் பெற வேண்டியவர்களாக இருக்கின்றீர்கள். அது இயேசுவால் வாக்குப்பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியின் வல்லமையாக இருக்கிறது. இவ்வதிகாரம் இதன் முக்கிய கொள்கையை மாத்திரம் விவாதிக்கும். இவ்வதிகாரம் பரிசுத்த ஆவியை பற்றிய ஓர் அறிமுகத்தை மாத்திரம் தரும். இவ்விடயத்தை குறித்து ஆழமாக, சர்வதேச அறுவடை நேரத்தின் பாடத்திட்டத்தின் ஒரு பாடமான “பரிசுத்த ஆவியின் ஊழியம்” என்ற பாடத்தில் அறியலாம்.

## வல்லமைக்கான வாக்குத்தத்தம்

இயேசு தன்னை பிற்பற்றியோரிடம் கூறினார்:

> **நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**
>
> **உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். (யோவான் 14:16-17)**

இயேசு கிறிஸ்து திரித்துவத்தில் மூன்றாம் நபராகிய பரிசுத்த ஆவியை பற்றியே இப்படி பேசினார். சீடர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையை அணிதல் அல்லது எளிமையாக கூறினால், தரித்துக் கொள்ளுதல் எனவும் கூறலாம்:

> **என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:49)**

## பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் உறவு

பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றதின் பின்னர் ஆவிக்குரிய பெரிதான வல்லமையை பெற்றார்கள் என்பதை கவனியுங்கள்:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

வல்லமை ஆவியாக இருக்கின்றது:

> **தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார். (2 தீமோத்தேயு 1:7)**
>
> **ஷஇயேசு ஆவியானவருடைய பலத்தினாலே கலிலேயாவுக்குத் திரும்பிப் போனார். அவருடைய கீர்த்தி சுற்றிலும் இருக்கிற தேசமெங்கும் பரம்பிற்று. (லூக்கா 4:14)**

“வல்லமையின் ஆவி” என்பது பரிசுத்த ஆவியானவராக இருக்கின்றார்:

> **நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்: தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

## வல்லமையின் நோக்கங்கள்

விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் பலவிதமான வல்லமையான காரியங்களை செய்துள்ளார். பரிசுத்த ஆவியானவர் அவர்களில்:

**வாசம் செய்கிறார்:** (1 கொரிந்தியர் 6:19) நாம் பரிசுத்த ஆவியானவாரின் வாசம் செய்யும் அவரது தேவாலயமாக இருக்கின்றோம்.

**தேவனுடனும் மற்ற விசுவாசிகளுடனும் ஒரே ஆவியாய் இணைக்கிறார்:** (1 கொரிந்தியர் 6:17) பாபேல் கோபுரத்தின் கதையில் இப்பெரிதான வல்லமையின் ஐக்கியம் ஆளுகை செய்வதை காண்கின்றோம். (ஆதியாகமம் 11ம் அதிகாரத்தை பார்க்கவும்; முக்கியமாக வசனம் 6ஐ பார்க்கவும்)

**பரிந்து மன்றாடுகின்றார்:** (ரோமர் 8:26) வல்லமையுள்ள பரிந்து மன்றாடுகிறவராக இவர் தேவனுடைய சித்தப்படி பரிந்து பேசுகிறார்.

**வழிகாட்டுகின்றார்:** (யோவான் 16:13) பரிசுத்த ஆவியானவர் நாம் வல்லமையுடன் நடக்க உதவுகிறார், அவர் குழப்புகிறவர் அல்ல. வல்லமையுள்ள இடத்திற்கு, தேவனுடைய பரிபூரண சித்தப்படி அவர் வழிநடத்துவார்.

**கிறிஸ்துவின் அன்பை அவர்களுக்குள்ளும், அவர்களுக்கூடாகவும் கொடுக்கிறார்:** (ரோமர் 5:5) அன்பின் வல்லமையைக் குறித்து மேலதிகமாக அடுத்த அதிகாரத்தில் கற்பீர்கள்.

**வேதாகம சத்தியங்களை அவர்களுக்கு வெளிப்படுத்துகிறார்:** (1 கொரிந்தியர் 2:10) வல்லமையான ஆவிக்குரிய வெளிப்பாடுகள் பரிசுத்த ஆவியிற்கூடாக வருகின்றது.

**தேற்றுகின்றார்:** (அப்போஸ்தலர் 9:31; யோவான் 14:17,26) எமது வேதனையான காலங்களில் அவர் எம்மை தேற்றுகின்றார்.

**கிறிஸ்துவின் சாயலாக அவர்களை மாற்றுகின்றார்:** (2 கொரிந்தியர் 3:18) கிறிஸ்துவின் சாயலாக மாறுவதற்கு நாம் வல்லமையற்றவர்கள். சுயமுன்னேற்றத் திட்டங்கள் யாவும் தோல்வியிலேயே முடியும். ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கூடாக நாம் கிறிஸ்துவின் சாயலுக்கு மாற முடியும்.

**அவர்களுக்கு கற்பிக்கின்றார்:** (யோவான் 14:26) மிகப்பெரிதான ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் எமக்குள் வாசம் செய்கின்றார். ஆவிக்குரிய அறிவை பரிசுத்த ஆவியானவர் எமக்குள் வல்லமையின் ஆற்றலுடன் அளிக்கின்றார்.

**அவரை உண்மையாய் ஆராதிக்க ஊக்கப்படுத்துகிறார்:** (யோவான் 4:24) துதியும், ஆராதனையும் வல்லமையான ஆவிக்குரிய வியூகங்களை இருக்கின்றன. பழைய ஏற்பாட்டில் சில போராட்டங்களின் போது, முக்கியமான முறைகளில் இதை தேவனின் எதிரிகளுக்கு எதிராக பாவிக்கப்பட்டுள்ளது.

**அவர்களை உயிர்ப்பிப்பார்:** (ரோமர் 8:11) இயேசுவை மரணத்திலிருந்து உயிர்ப்பித்த அதே வல்லமையானது, நாம் உயிர்ப்பிக்கப்படவும் எமக்குள் கிரியை செய்கின்றது. நிலையற்ற சரீரத்துடன் ஜீவிக்கிற நாம் இவ் உயிர்ப்பித்தலில் வல்லமையால் உயிர்ப்பிக்கப்படுவோம் என்பதே இதன் அர்த்தம்.

**பரிசுத்தப்படுத்துவார்:** (2 தெசலோனிக்கேயர் 2:13-14) சுய முயற்சியின் மூலம் பரிசுத்தமாய் ஜீவிக்க எம்மால் முடியாது. பரிசுத்த ஆவியானவர் எமது சிந்தனைகளையும், கிரியைகளையும் பரிசுத்தமாக்க முடியும். அதனால் அவர்களால் பரிசுத்தமாய் ஜீவிக்க முடியும்.

**அவர்களை மாற்றுகின்றார்:** (தீத்து 3:5) சக்திகள் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றபோதும், பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் வல்லமை எதிர்மறையானதாகும்.

**தவறுகளை உணர்த்துவார்:** (யோவான் 16:8-11) பாவத்தின் விளைவினால் ஆவிக்குரிய வல்லமையை இழந்து தோல்வியடைவீர்கள் என்பதை பின்னர் கற்றுக்கொள்வீர்கள். பரிசுத்த ஆவியானவரின் தவறுகளை உணர்த்தி, மனந்திரும்புதலுக்கு வழி நடத்துவார். இதனால் தேவனுடைய வல்லமையை தொடர்ந்தும் எமக்குள் ஊற்றப்பட உதவுகிறார்.

**இரட்சிப்பின் நிச்சயத்தை கொடுக்கிறார்:** (ரோமர் 8:16) உங்கள் நிலையை அறிந்து உங்களுக்கு வல்லமையைக் கொடுக்கிறார். பரிசுத்த ஆவியானவர் உங்களது நிலையை உறுதிப்படுத்துகிறார்.

**சுதந்திரத்தை கொடுக்கிறார்:** (ரோமர் 8:2) சுதந்திரமானது மிகப்பெரிய வல்லமையின் வாய்ப்பை தருகிறது. பரிசுத்த ஆவியானவர் இயேசு கிறிஸ்துவிற்கூடாக சுதந்திரத்தை அருளுகிறார்.

**அவர்களுக்கூடாக பேசுகின்றார்:** (மாற்கு 13:11) நாம் எமது பேசும் திறமைக்கமைய மட்டும் கொண்டவர்கள் அல்ல. பரிசுத்த ஆவியானவர் எமக்கூடாக வல்லமையும், அதிகாரமும் கொண்ட தேவனுடைய வார்த்தையை பேசுகின்றார்.

**தேவ வல்லமையை நிருபிக்கிறார்:** (1 கொரிந்தியர் 2:4) தேவனுடைய வல்லமையை வாழ்வின் சகல பகுதிகளிலும் பரிசுத்த ஆவியானவர் நிருபித்து காண்பிக்கிறார்.

**பெலப்படுத்துகிறார்:** (எபேசியர் 3:16) நீங்கள் பெலவீனமாய் இருக்கையில் தேவனுடைய பெலன் வெளிப்படையாய் புலப்படும்.

## பெரிதான நோக்கம்

இவையணைத்துமே முக்கிய நோக்கங்களாக இருக்கின்றபோதும், பரிசுத்த ஆவியானவருக்கு மிகப்பெரிய நோக்கமுண்டு. பரிசுத்த ஆவியானவரின் சகல நோக்கங்களும் இந்த பெரிதான நோக்கத்தை செய்து முடிப்பதை இலக்காக கொண்டே இருக்கின்றது. பரிசுத்த ஆவியாவனரின் இப்பெரிதான நோக்கம் இயேசுவின் வாக்குத்தத்தத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

இயேசுவுக்கு வல்லமையுள்ள சாட்சியாக இருப்பதே பரிசுத்த ஆவியானவருக்கான மெய்யான ஆதாரமாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்வில் இது உடனடியாகவே செயல்பட்டது. பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளும் முன்னர், பேதுரு பயப்பட்டதினால் இயேசுவை தெரியாதென மறுதலித்தான். பேதுரு பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பெற்றுக்கொண்ட பின்னர், எழுந்து நின்று சுவிசேஷத்தை வல்லமையுடன் சாட்சியிட்டமையால் 3,000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள்.

ஆதிச்சபையினர் உலகமெங்கும் சுவிசேஷத்தை பரப்புவதற்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை காரணமாக காரணமாக அமைந்தது. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் ஆதாரமாக அப்போஸ்தலருடைய நடபடிகைகளின் புஸ்தகம் இவ்வல்லமையின் சாட்சியை பதிவுசெய்து வைத்துள்ளது.

## பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

"பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்" என்று சொல்லப்படுகின்ற இவ்வனுபவம் முடிவற்ற வல்லமைக்கூடாக வருகின்றது. இயேசு கிறிஸ்து இந்த ஞானஸ்நானத்தைக்குறித்து பேசினார்:

> **யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்: நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். (அப்போஸ்தலர் 1:4)**

பேதுருவும் இந்த ஞானஸ்நானத்தை குறித்து பேசினார்:

> **யோவான் ஜலத்தினாலே ஞாஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன். (அப்போஸ்தலர் 11:16)**

## சரீர அடையாளம்

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்திற்கான உண்மையான ஆதாரமாக ஆவிக்குரிய வல்லமை இருக்கின்றபோதும், இவ்வனுபவம் சரீர அடையாளத்தையும் கொண்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் மூன்று இடங்களில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெற்ற பின்னர், நாம் கூறுகின்ற காரியம் நடைபெற்றமை குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போஸ்தலர் 2:2-4ல் முதல் தடவை பரிசுத்த ஆவியானவர் பெற்ற போது நடைபெற்றவையும், அப்போஸ்தலர் 10:44-45ல் கொர்நெலியுவின் வீட்டில் நடைபெற்றவையும், அப்போஸ்தலர் 19:6ல் எபேசுவில் புதிதாக மனம்மாறியவர்கள் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொண்டமையையும் குறிப்பிட்டுள்ளது.

இம்மூன்று பகுதிகளையும் ஒப்பிட்டு பார்க்கையில், பொதுவான ஓர் அடையாளமே காணப்படுகிறது. பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டவர்கள் பூர்வீக மொழியை பேசாமல் வேறு பாஷைகளையே பேசியுள்ளார்கள். இவை அவர்கள் கற்றுக் கொண்ட பாஷைகள் அல்ல. அவர்கள் பேசிய பாஷைகள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் கொடுக்கப்பட்டவை. இந்த "அந்நிய பாஷை" உலகில் வேறு பாகங்களில் பயன்படுத்தும் பாஷையாகவும் இருக்கலாம்.

> **எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?**
>
> **அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? (அப்போஸ்தலர் 2:7-8)**

"அந்நிய பாஷை" மற்றவர்களால் அறியப்படாத பாஷையாகவும் இருக்கலாம், "அறியப்படாத பாஷை" எனவும் அழைக்கப்படுகிறது.

**ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான். (1 கொரிந்தியர் 14:2)**

## அந்நிய பாஷையின் நோக்கங்கள்

விசுவாசிகளின் வாழ்க்கைக்கு அந்நிய பாஷையானது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் நோக்கங்களுக்காக கொடுக்கப்படுகின்றது. 1 கொரிந்தியர் 14ல் சில நோக்கங்களை நாம் காணலாம்:

**-தேவனிடத்தில் ஜெபிக்க:** வசனம் 2

**-பக்தி விருத்தி உண்டாக்குவதற்கு:** தைரியம், முன்னேற்றம், முதிர்ச்சி என்னும் அர்த்தங்கள் உண்டு. இது சுய பக்தி விருத்தியை மாத்திரம் குறிக்காது.

**-வியாக்கியானம் செய்யப்படும் போது சபை பக்தி விருத்தியடைகிறது:** வசனம் 12

**-பரிந்து மன்றாடுதல்:** வசனம் 14. ரோமர் 8:26-27ஐ பார்க்கவும்.

**-துதித்தல்:** வசனம் 15,16

**-வாக்குத்தத்தம் நிறைவேற:** வசனம் 21, ஏசாயா 28:11,12ஐ பார்க்கவும்.

**-அவிவிசுவாசிகளுக்கான அடையாளம்:** வசனம் 22. அப்போஸ்தலர் 2ஐ பார்க்கவும்.

## பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்

உலகத்தின் முடிவுபரியந்தம் சுவிசேஷத்தை அறிவிக்கும்படியான உத்தரவாதத்தை, தன்னை பின்பற்றியோருக்கு கொடுத்து விட்டே இயேசு சென்றார்:

**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19-20)**

சீடர்களுக்கு இவ்வுத்தரவாதத்தை நிறைவேற்றுவதற்கு பரிசுத்த ஆவியின் வல்லமை வழங்கப்பட்டது (அப்போஸ்தலர் 1:8)

பரிசுத்த ஆவியானவருடைய ஆவிக்குரிய வரங்கள் என்ற இவ்வல்லமை, விசுவாசிகள் திறம்பட ஊழியத்தை செய்யும்படியாக அவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படுகின்றது. இவ்வுத்தரவாதம் பெரிதானபடியால், இயற்கையான தாலந்துகளால் இவைகளை நிறைவேற்ற முடியாது.

இந்த ஆவிக்குரிய வரங்களும், இயற்கையான தாலந்துகளும் ஒன்றல்ல. இயற்கையான தாலந்துகளும்,

திறமைகளும் பிறப்பின் போது அல்லது இயற்கையான பயிற்சியின் போது கிடைக்கிறது. இவைகளும் ஊழியத்தில் பாவிக்கப்படுகின்றன, என்றபோதும் இவை ஆவிக்குரிய வரத்திற்கு சமமானவையல்ல.

ஆவிக்குரிய வரங்கள் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படுகின்ற வல்லமையுள்ள திறமைகளாக இருக்கின்றன, இவை உத்தரவாதத்தை நிறைவேற்றும்படிக்கு கொடுக்கப்படுகின்றது. பரிசுத்த ஆவியானவரின் வரங்கள் தேவனால் கொடுக்கப்படுகின்ற வரங்களாகும்....

**பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,**

**அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.**

**நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,**

**அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். (எபேசியர் 4:12-15)**

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு கொடுக்கின்ற இவ்வரங்கள் பற்றிய பட்டியலைக் கொண்ட வேதப்பகுதிகளாவன:- ரோமர் 12:1-8; 1 கொரிந்தியர் 12:1-31; எபேசியர் 4:1-16; 1 பேதுரு 4:7-11.

ஆவிக்குரிய வரங்களின் பட்டியல் இங்கே தரப்படுகிறது. (வேதாகமம் இங்கு தரப்பட்டுள்ள பட்டியலின்படி ஒழுங்குபடுத்தி தரவில்லை. எமது வேத ஆராய்ச்சிக்காகவே தொகுக்கப்படுகிறது.)

| **விஷேட வரங்கள்** | | **பேசும் வரங்கள்** |
|---|---|---|
| அப்போஸ்தலர்கள் | | தீர்க்கதரிசனம் |
| தீர்க்கதரிசிகள் | | கற்பித்தல் |
| சுவிசேஷகர்கள் | | புத்தி சொல்லுதல் |
| மேய்ப்பர்கள் | | ஞானத்தை போதிக்கும் வசனம் |
| போதகர்கள் | | அறிவை உணர்த்தும் வசனம் |
| ஊழிய வரங்கள் | | அடையாள வரங்கள் |
| ஆவிகளை பகுத்தறிதல் | கொடுத்தல் | அற்புதங்கள் |
| தலைமைத்துவம் | உதவி செய்தல் | குணமாக்குதல் |
| நிர்வகித்தல் | ஊழியம் செய்தல் | அந்நியபாஷை பேசுதல் |
| விசுவாசம் உபசரிப்பு | இரக்கம் | வியாக்கியானம் பண்ணுதல் |

சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் “பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்” என்ற பாடம் இவ்வரங்களை பற்றி ஒவ்வொன்றாக விபரிக்கும். உங்களுடைய ஆவியானவரின் வரத்தை அடையாளம் காண இப்பாடம் உதவி செய்யும். ஆவிக்குரிய வரங்களை சரியான முறைபடி பாவிப்பதுதான் ஆவிக்குரிய வல்லமைக்கான திறவுகோலாக இருக்கின்றது. இவைகள் இல்லாமல் பயன்படுத்துவது பௌதீக கடலில் உபகரணங்கள் இன்றி வேலை செய்வதற்கு ஒப்பானதாக இருக்கும்.

## பரிசுத்த ஆவியின் கனி

கிறிஸ்துவைப் போன்ற வாழ்க்கை வாழ்வதற்கு பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படும் வல்லமையே இது. பரிசுத்த ஆவியானவர் உங்கள் வாழ்க்கையில் இக்கனியை உருவாக்குகின்றார். இக் குணாதிசயங்கள் ஆவிக்குரிய கனி என்று அழைக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவரின் இக்கனியானது ஒரு கிறிஸ்தவ விசுவாசியின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்கின்றார் என்பதற்கான ஆதாரகமாக இருக்கிறது. சகல விசுவாசிகளும் இக்கனியைக் கொடுக்க வேண்டுமென்றே தேவன் விரும்புகிறார். பரிசுத்த ஆவியினி கனியின் பட்டியல் இதோ:

> **ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்... இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலாத்தியர் 5:22-23)**

பரிசுத்த ஆவியின் கனி விரிவாக “பரிசுத்த ஆவியின் ஊழியங்கள்” என்ற பாடத்தில் விபரிக்கப்படுகிறது. இக்குணாதிசயம் கிறிஸ்துவைப்போல் வாழ்வதற்காக கொடுக்கப்படுகிற ஆவிக்குரிய வல்லமையாகும்.

## வல்லமையை பெறுதல்

பிதாவினால் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்படுவார் என்று சீடர்களுக்கு இயேசு வாக்களித்தப்படி அவர்கள் எருசலேமில் காத்திருந்தார்கள் (அப்போஸ்தலர் 2). பரிசுத்த ஆவியானவர் ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த போதும், விசுவாசிகள் அனைவரும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தால் இவ்வல்லமையை தனிப்பட்ட முறையில் பெற்று அனுபவிக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெறுவதற்காக வேதாக வழிகாட்டல் இதோ:

### மனந்திரும்பி ஞானஸ்நானத்தை பெற வேண்டும்:

பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு முதலாவதாக சுவிசேஷத்தின் வல்லமையை அனுபவமாக்கியிருக்க வேண்டும். இதன் பின்னர் தண்ணீர் ஞானஸ்நானம் பெறும்படி பரிந்துரைக்கப்படுகிறது:

> **பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப்போஸ்தலர் 2:38)**

### இது உங்களுக்கானது என விசுவாசியுங்கள்:

> **வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி... (அப்போஸ்தலர் 2:39)**

### அதை வாஞ்சியுங்கள்:

> **பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.**

**வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.**

**தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை. (யோவான் 7:37-39)**

## இது ஒரு பரிசு என்று உணருங்கள்:

பரிசுத்த ஆவியானவர் ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டார். அப்போஸ்தலர் 2ல் குறிப்பிட்டுள்ளபடி பெந்தேகொஸ்தே நாளில் சபைக்கு கொடுக்கப்பட்டு விட்டது. இது ஒரு வெகுமதியாக இருக்கின்றபடியால் இதை பெற நீங்கள் சம்பாதிக்க வேண்டியதில்லை. பரிசுத்த ஆவியானவருடைய வரத்தை பெறுவதற்கு துதித்து தேவனுக்கு நன்றி செலுத்த ஆரம்பியுங்கள்.

## தேவனுக்கு விட்டுக் கொடுங்கள்:

பரிசுத்த ஆவியானவருடைய வரத்திற்காக தேவனைத் துதியுங்கள், அப்போஸ்தலர் 2ல் பெந்தேகொஸ்தே நாளின் சம்பவம் குறிப்பிட்டுள்ளதைப்போன்று மற்றவர்களும் கேட்கும் படியாக உங்கள் துதி அமையட்டும். மற்றவர்களும் கேட்கும்படியான துதிக்கும் இம்முதல் அனுபவத்தின் போது உங்கள் பேச்சு தடுமாறும். பரிசுத்த ஆவியானவருக்கு உங்கள் உதடுகளை விட்டுக்கொடுங்கள், அப்போது அவர் அந்நிய பாஷையால் நீங்கள் புரிந்து கொள்ளும்படி உங்களுக்கூடாக பேசுவார். நீங்கள் தொடர்ந்தும் துதிக்கின்றபோது, உங்களது தடுமாறும் பேச்சுக்கள் மொழியாக உருவாகும்:

**பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். (ஏசாயா 28:11)**

**அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். (அப்போஸ்தலர் 2:4)**

## மற்ற விசுவாசிகளிடமும் உங்களுக்காக ஜெபிக்கும்படி வேண்டுங்கள்:

விசுவாசிகள் கைகளை வைத்து ஜெபிக்கின்ற வேளையிலும் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்வார்கள். அப்போஸ்தலர் 8, 9, 19 அதிகாரங்களில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தின் அனுபவத்தை பெற்ற விசுவாசிகள் உங்களுக்கு உதவக் கூடும் என்பதை காண்பிக்கின்றது.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

2. வல்லமைக்கு பரிசுத்த ஆவியானவரின் உறவை வெளிப்படுத்தும் வேதாக குறிப்புக்களை தரவும்?

3. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் நோக்கம் என்ன?

4. பரிசுத்த ஆவியானவரின் கனி பற்றிய பட்டியலின் வேதாகம வசனத்தை தருக?

5. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பெற்றுக்கொள்ள, இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட ஆறு வேதாகம வழிகாட்டல்களின் பட்டியலை எழுதுக.

6. விசுவாசிகள் பயன்படுத்துவதற்காக, பரிசுத்த ஆவியானவரின் வரங்களின் பட்டியலிடப்பட்ட பின்வரும் குறிப்புக்களை பயன்படுத்தவும்: ரோமர் 12:1-8; 1 கொரிந்தியர் 12:1-31; எபேசியர் 4:1-16; 1 பேதுரு 4:7-11.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. அப்போஸ்தலர் 8:14-17 வாசிக்கவும். சமாரியாவின் மக்கள் பிலிப்புவின் ஊழியத்தின் மூலம் இரட்சிப்பை பெற்றனர். அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பேதுரு மற்றும் யோவானின் ஊழியத்தினால் பெற்றார்கள்.

   இரட்சிப்பின் அனுபவத்திலும் பார்க்க, பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெறுவது வேறொரு அனுபவமாக இருக்கிறது. சுவிசேஷத்தின் வல்லமையும், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையும் ஊழியத்தில் ஒன்றாக செயல்படுகிறது.

   அப்போஸ்தலர் 19:1-6ஐ வாசியுங்கள்: பவுலின் கேள்வியையும் கவனியுங்கள்: "நீங்கள் விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொண்டீர்களா?"

2. சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடமான "பரிசுத்த ஆவியின் ஊழியங்கள்" என்ற பாடத்தை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். இப்பாடத்தில் விசுவாசிகளின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான ஊழியத்தைக்குறித்து விரிவாக கற்றுக்கொள்ளலாம். உங்களுக்குள் இருக்கின்ற ஆவிக்குரிய வரத்தை அடையாளம் காண்பதும், ஆவிக்குரிய கனியை அபிவிருத்தி செய்வதுமே ஆவிக்குரிய வல்லமைக்கான திறவுகோலாக இருக்கிறது. இவற்றை அறிவதற்கு இப்பாடம் உதவும்.

   நிறுவனத்தின் பாடங்களை, அதற்குரிய ஒழுங்கின்படி நீங்கள் கற்றிருப்பீர்களாயின் ஏற்கனவே "பரிசுத்த ஆவியின் ஊழியங்கள்" என்ற இப்பாடத்தை கற்று முடித்திருப்பீர்கள். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை அடையாளம் கண்டு வல்லமையுள்ள ஊழியத்தை விசுவாசிகள் செய்ய வேண்டுமென்பதால் இப்பாடத்தை மீள் பரிசீலனை செய்து பாருங்கள்.

# வல்லமையின் கொள்கை மூன்று: அன்பின் வல்லமை

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ அன்பை வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ "தர்மசிந்தை" என்னும் வார்த்தையை வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ ஆவிக்குரிய வல்லமையின் கொள்கையில் அன்பே பெரியது என்பதை அடையாளம் காணவும்,
- ☐ முதலாவது, இரண்டாவது பிரதான கட்டளைகளை அடையாளம் காணவும்,
- ☐ நாம் விசுவாசிகள் என்பதை உலகம் எவ்வாறு அறிந்து கொள்ளும் என்பதை விளக்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது. (1 கொரிந்தியர் 13:13)**

### அறிமுகம்

கடைசி அதிகாரத்தில் நீங்கள் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை குறித்து படித்தீர்கள். விசுவாசிகளுடைய வாழ்க்கையிலே ஆவிக்குரிய கனியின் ஓர் வெளிப்பாடானது பரிசுத்த ஆவியின் வல்லமையினாலேயே உற்பத்தியாக்கப்படுகின்றது என்பதை நீங்கள் கற்றீர்கள். இந்த ஆவிக்குரிய கனியில் ஒன்றே கிறிஸ்துவை போலாகும் தரமான அன்பாகும். இதுவே கலாத்தியர் 5:22-23ல் பட்டியல்படுத்தப்பட்டுள்ள முதலாவது கனியாகும்:

**ஆவியின் கனியோ, அன்பு.... (கலாத்தியர் 5:22)**

### மாபெரும் வல்லமை

இந்தப் பாடத்தை தொடங்குவதற்கு முன்னர் 1 கொரிந்தியர் 13:1-13ஐ வாசிக்கவும். இப்பகுதியில் வரும் தர்மசிந்தையுடனான இரக்கம்" என்ற வார்த்தைக்கு அர்த்தம் அன்பு என்பதாகும். இந்த அதிகாரமானது அன்பின் வல்லமை என்னும் ஆவிக்குரிய வல்லமையின் மிகப்பெரிய கொள்கைகளின் ஒன்றானதை குறித்து கவனம் செலுத்தும். அன்பின் வல்லமையானது கீழ்வருவற்றிலும் மிகப்பெரியதாகும்.

**பரிசுத்த ஆவியினால் தரப்பட்ட அந்நிய பாஷை:** அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போம். நீங்கள் அறிந்த அல்லது அறியாத பாஷைகளை மக்களிடத்தில் பேசினாலும், அன்பில்லாவிட்டால் அச்செய்திக்கு வல்லமையில்லை. (வசனம் 1,8)

**அறிவும், விளங்கிக்கொள்ளுதலும்:** அறிவானது வல்லமையுள்ளது, ஆனால் ஒரு நாளில் மனித அறிவானது அழிந்து போகும், அன்பே நிலைத்திருக்கும். (வசனம் 2,8)

தீர்க்கதரிசன வரம்: தீர்க்கதரிசன வரமானது எவ்வளவு வல்லமையுள்ளது - தேவனுடைய வார்த்தைகளை நேரடியாக பெற்று பேசுதலும், எதிர்கால நிகழ்வுகளை கூறவும் முடியும். ஆனால் தீர்க்கமதரிசனமானது ஒரு காலத்தில் ஒழிந்து போகும். (வசனம் 2, 8-12)

விசுவாசம்: மலைகளை பெயர்க்கத்தக்கதான அளவு விசுவாசம் உங்களிடத்தில் இருந்தாலும், உங்களிடத்தில் அன்பு இல்லாவிட்டால் ஒன்றுமில்லை. (வசனம் 2)

கொடுத்தல்: மற்றவர்களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் பரவாயில்லை, அது அன்பில்லாமல் கொடுக்கப்பட்டால் ஒரு பயனும் இல்லை.

இரத்தசாட்சி மரணம்: சுவிசேஷத்திற்காக நீங்கள் இறந்தாலும், அன்பில்லாமல் தியாகம் செய்யப்பட்டிருப்பின் அதில் பயனில்லை.

நம்பிக்கை: நம்பிக்கை முக்கியமானது, ஏனென்றால் நம்பிக்கை இல்லாவிட்டால் வாழ்க்கையே இழந்து விடுவான். ஆனால் நம்பிக்கையை விட அன்பே அதிகம் முக்கியமானதாகும். (வசனம் 13)

ஆவிக்குரிய வல்லமைகளை குறித்து இப்பாடத்தில் அதிகம் படித்தீர்கள், இன்னும் படிப்பீர்கள். ஆனால் இதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்:

சகல ஆவிக்குரிய வல்லமைக் கொள்கைகளும், எல்லா ஆவிக்குரிய வரங்களும், எல்லா ஊழியங்களும் அன்பின் வல்லமைக்கூடாகவே செயல்பட வேண்டும் இல்லாவிட்டால் அவை பிரயோசனமற்றது. சகல காரியங்களும் தோல்வியடைந்தாலும் அன்பின் வல்லமை வெற்றியைக் கொடுக்கும்.

## அன்பின் வரைவிலக்கணமும், குணாதிசயமும்

அன்பானது ஆழமான, உணர்வுபூர்வமான, கவனிக்கிற, உங்களுடைய வாழ்வை பரிசுத்தாவியானவருக் கூடாக வளப்படுத்தப்படுகின்ற ஒன்றாக இருக்கின்றது. இதை உங்களால் அபிவிருத்தி செய்ய முடியாது. இது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் மட்டுமே அபிவிருத்தி செய்ய முடியும், காரணம் இவ்வன்பு தெய்வீகமானது:

> **மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோமர் 5:5)**

1 கொரிந்தியர் 13ல் தரப்பட்ட தேவ அன்பின் குணாதிசயங்களின் குறிப்புகளை கவனியுங்கள்:

**வசனம் 4:**

அன்பு நீடிய சாந்தமுள்ளது.
அன்பு தயவுள்ளது.
அன்பு மற்றவர்கள் மேல் பொறாமை கொள்ளாது.
அன்பு தன்னை புகழாது, இறுமாப்பாயிராது.

**வசனம் 5:**

அன்பு அயோக்கியமானதைச் செய்யாது (மற்றவர்களை நோக்கிய கெட்ட நடத்தைகள்)
அன்பு தற்பொழிவை நாடாது (சுயநலமற்றது)
அன்பு இலகுவில் சினமடையாது (கோபப்படாது)
அன்பு மற்றவர்களுக்கு தீங்கு நினையாது அல்லது பொதுவாக தீமையை நினையாது.

**வசனம் 6:**

அன்பு அநியாயத்தில் சந்தோஷப்படாது (மற்றவர்களை குறித்த தவறான செய்திகளை கேட்கும் போது சந்தோஷமடையாது).
அன்பு உண்மையில் சந்தோஷமடையும். (பொய், வம்பு செய்யாது).

**வசனம் 7:**

அன்பு சகலத்தையும் தாங்கும் (கடினமான நேரத்திலும் கூட)
அன்பு சகலத்தையும் விசுவாசிக்கும் (மற்றவர்களை நம்பும்)
அன்பு சகலத்தையும் நம்பும் (தேவனுடைய அல்லது மற்றவர்களுடைய நம்பிக்கையில் விட்டு கொடுக்காது, எச்சூழ்நிலையாயினும்)

**வசனம் 8**

அன்பு ஒருக்காலும் ஒழியாது (சூழ்நிலைகளை பொறுத்து).

## அன்பை குறித்து வேதாகமம் போதிப்பது என்ன?

அன்பின் வல்லமையை குறித்து விளங்கிக்கொள்வதற்கு, வேதாகமம் எந்த போதனையை உபதேசிக்கின்றது என்பதைக்குறித்து நீங்கள் அறிந்திருக்க வேண்டும். ஆவியின் கனியாகிய இந்த வல்லமையுள்ள அன்பானது பாலியல் ரீதியான அல்லது உலகத்தால் சித்தரிக்கப்பட்ட சரீரரீதியான அன்பு அல்ல. இது “உண்மையான” அன்பு, அதாவது தூய அன்பு ஆகும். மற்றவர்களுக்கு நீங்கள் காட்டும் அன்பின் மாதிரியே உண்மையான அன்பு ஆகும்:

> **ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள். (1 பேதுரு 1:22)**

முதலாவதும், பெரியதுமான கட்டளை என்னவென்றால் நீங்கள் தேவனை அன்பு செலுத்த வேண்டும்:

> **உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை. (மாற்கு 12:30)**

(உபாகமம் 6:5; லூக்கா 10:27; 1 யோவான் 2:5,15; 3:11-17; 4:7-20; 5:2; 2 யோவான் 1:5-6 ஐ கவனியுங்கள்)

நீங்கள் தேவனிடம் கொண்டுள்ள அன்பானது தேவனுக்கு நீங்கள் கீழ்ப்படிவதன் மூலம் பரீட்சிக்கப்பட்டு உள்ளது:

> **இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார். நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம். (யோவான் 14:23)**

**அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும். நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம். (1 யோவான் 2:5)**

இரண்டாவது பெரிய கட்டளை என்னவென்றால், மற்றவர்களுக்கான அன்பாகும்:

**இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார். (மாற்கு 12:31)**

இயேசு உங்களை எவ்விதம் நேசித்தாரோ, அவ்விதமாகவே நீங்கள் மற்றவர்களையும் நேசிக்க வேண்டுமென கூறுகின்றார்:

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். (யோவான் 13:34)**

**பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்.**

**நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. (யோவான் 15:9,12)**

**நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன். இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார். (யோவான் 17:26)**

அன்பை கொண்டே நீங்கள் விசுவாசிகள் என அடையாளம் காணப்படுகின்றீர்கள்:

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார். (யோவான் 13:35)**

**நாம் சகோதரரிடத்தில் அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட் பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம். சகோதரனிடத்தில் அன்புகூராதவன் மரணத்திலே நிலைகொண்டிருக்கிறான். (1 யோவான் 3:14)**

நீங்கள் மற்ற விசுவாசிகளை அன்பு செலுத்தவில்லையானால், தேவனுடைய அன்பு உங்களில் இல்லை:

**ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான்.**

**தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான். அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. (1 யோவான் 2:9-10)**

(இது மிக முக்கியமான உண்மையாகும். யோவான் 13:34; 14:15,21,23,31; 15:9-1; 17:26; 21:15-17 ஆகியவற்றை மேலதிகமாக படிக்கவும்).

மற்ற விசுவாசிகளின் மேலுள்ள அன்பானது வல்லமையுள்ள சக்தியோடு ஆவிக்குரிய ஐக்கியத்தின் விளைவாகும். அவர்கள் ஐக்கியத்தோடு ஜெபம் செய்யும் போது. பெந்தேகொஸ்தே ஏற்பட்டது (அப்போஸ்தலர் 2). அவர்கள் "ஒரே இருதயமும், ஒரே மனமுள்ளவர்களாகவும்" இருந்தனர் (அப்போஸ்தலர் 4:32). அத்தோடு தொடர்ந்து சாட்சியிடுவதற்கு வல்லமையுள்ளவர்களாய் இருந்தனர் (அப்போஸ்தலர் 4:33). அவர்கள் ஐக்கியத்தில் தம்மை ஈடுபடுத்தி கொண்டார்கள் (அப்போஸ்தலர் 2:42) அநேக அற்புதங்களும், அடையாளங்களும் செய்யப்பட்டது (அப்போஸ்தலர் 2:43).

நீங்கள் உங்கள் பகைவரை நேசிக்க வேண்டும்:

**எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்.**

**உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்.**

**உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே.**

**உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள்.... (லூக்கா 6:27,28,33,35)**

**உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.**

**நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள். உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்து கிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். (மத்தேயு 4:43-44)**

உங்கள் அன்பு பெருக வேண்டும், அதாவது உங்கள் அன்பானது தொடர்ந்து அதிகரிக்க வேண்டும்:

**உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும், (பிலிப்பியர் 1:9)**

**நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து, (1 தெசலோனிக்கேயர் 3:12)**

நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாய் இருக்க வேண்டும்:

**சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து..**

**அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்க ளுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். (எபேசியர் 3:17-19)**

தேவனிலும், அவருடைய வல்லமையிலும் நீங்கள் முழுமையாக நிரப்பப்பட வேண்டுமாயின், நீங்கள் அன்பு செலுத்துதல் வேண்டும். அது வல்லமைக்கு முக்கியமானது, ஏனென்றால் அது பயத்தை நீக்கிவிடும்:

**அன்பிலே பயமில்லை. பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும். பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல. (1 யோவான் 4:18)**

நீங்கள் அன்பில் நடக்க வேண்டும்:

**கிறிஸ்து நமக்காகத் தம்மைத் தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். (எபேசியர் 5:2)**

நீங்கள் மற்றவர்களை அன்பால் சகித்துக்கொள்ள வேண்டும்:

**மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, (எபேசியர் 4:2)**

அன்பிலே உங்கள் காத்துக்கொள்ள வேண்டும்:

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள். (யூதா 21)**

**நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. (1 தீமோத்தேயு 6:11)**

விசுவாசம், வல்லமைக்கு மிக முக்கியமானது, அன்பினால் செயல்படுகின்றது:

**அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்.... (கலாத்தியர் 5:6)**

உங்களுடைய தேவனுடைய வேலையானது அன்பின் பிரயாசத்தால் உண்டாயிருக்க வேண்டும்:

**உங்கள் விசுவாசத்தின் கிரியையையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து, (1 தெசலோனிக்கேயர் 1:3)**

**ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே. (எபிரெயர் 6:10)**

நாம் இவ்வுலகத்தில் கடைசி நேரத்தில் நெருங்கியிருக்கும் போது, அநேகருடைய அன்பு நீடித்திராது. அது “தனிந்து போம்” அதாவது மக்கள் அதனை கவனிப்பற்றவர்களாக இருப்பர்:

**அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். (மத்தேயு 24:12)**

ஆனால் தேவனுடைய அன்பை விட்டு எம்மை ஒன்றும் பிரிக்க முடியாது என்னும் உத்தரவாதம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது:

**கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?**

**மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,**

**உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:36,38-39)**

## மிகப்பெரிதான அன்பு

பாவமான இவ்வுலகத்தை அன்புகூர்ந்ததே தேவனின் மிகப்பெரிய அன்பாயிருக்கிறது. அவர் இயேசுவை மரிக்க அனுப்பியதிலிருந்து தமது அன்பே வெளிப்படுத்தினார்:

**தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். (யோவான் 3:16)**

இயேசு இந்த மிகப்பெரிய அன்பை, தாம் வாழ்க்கையில் சிலுவைக்கு ஒப்புக்கொடுத்ததின் மூலம் வெளிப்படுத்திக் காண்பித்தார்:

**ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. (யோவான் 15:13)**

**நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது. நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான்.**

**நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். (ரோமர் 5:7-8)**

பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய வாழ்க்கையில் விருத்தி செய்ய தீர்மானிக்கும் - மிகப்பெரிய சக்தியுள்ள அன்பே இது - தேவனின் அன்பு:

**மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோமர் 5:5)**

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. அன்பு என்றால் என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. முதலாம், இரண்டாம் மிகப்பெரிய கட்டளைகள் என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. நாம் விசுவாசிகள் என உலகம் எவ்வாறு அறிந்து கொள்ளும்?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. இந்த வாக்கியத்தை பூர்த்தி செய்க:

> "வல்லமை கொள்கைகளும், எல்லா ஆவிக்குரிய வரங்களும் எல்லா ஊழியங்களும் -------------- -------------- வல்லமைக்கூடாகவே செயல்பட வேண்டும், இல்லாவிட்டால் அவை பிரயோஜனமற்றது."

6. ஆவிக்குரிய வல்லமையின் மிகப்பெரிய கொள்கை என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

7. 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்திலுள்ள "தர்மசிந்தையுள்ள இரக்கம்" எனும் வார்த்தையின் அர்த்தம் என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. அன்பைக்குறித்து தாவீது பல எழுதியிருக்கின்றார். சங்கீதம் 18:1; 31:23; 40:16; 97:10; 116:1; 119:97; 113, 119, 127, 132, 159, 163, 165, 167; 122:6; 145:20

2. 1 யோவான் புத்தகத்தை வாசிக்கவும். இப்புத்தகத்தின் முக்கிய நோக்கம் அன்பாகும்.

3. இங்கு 1 கொரிந்தியர் 13ம் அதிகாரம் தரப்பட்டுள்ளது:

**நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிரா விட்டால், சத்தமிடுகிற வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.**

**நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ள வனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை.**

**எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.**

**அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது,**

**அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும்.**

**சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்.**

**நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம்.**

**நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போலப் பேசினேன், குழந்தையைப்போலச் சிந்தித்தேன், குழந்தையைப்போல யோசித்தேன்ளூ நான் புருஷனானபோதோ குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்.**

**இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம். இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்.**

**இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது.**

# வல்லமையின் கொள்கை நான்கு: வல்லமையின் அபிஷேகம்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ பழைய ஏற்பாட்டில் தெய்வீக அபிஷேகத்தின் நோக்கம் பற்றி விபரிக்கவும்,
- ☐ பழைய ஏற்பாட்டில் தெய்வீக அபிஷேகம் எவ்வாறு உபயோகிக்கப்பட்டுள்ளது என்பதற்கு உதாரணம் தரவும்,
- ☐ “கிறிஸ்து” எனும் பெயருக்கான அர்த்தத்தை தரவும்,
- ☐ அபிஷேக நோக்கத்தின் குறிக்கோளை சுருக்கமாக தரவும்,
- ☐ ஊழியத்தில் உங்களுடைய விசேடமான அபிஷேகத்தினை அடையாளம் காணுவதின் முக்கியத்துவத்தை விபரிக்கவும்,
- ☐ அபிஷேகத்தில் வல்லமையை பெற்றுக்கொள்வது எவ்வாறு என்பதை விபரிக்கவும்
- ☐ ஆவிக்குரிய அபிஷேகத்தின் ஆதாரங்களை அடையாளம் காணவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

> **நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. (1 யோவான் 2:27)**

## அறிமுகம்

வல்லமையுள்ள ஊழியத்தில் ஆண்களையும், பெண்களையும் சக்தியூட்டும் தேவனுடைய அபிஷேகத்தைப்பற்றி இந்த அதிகாரம் கவனம் செலுத்தும். இந்த வல்லமையுள்ள அபிஷேகத்தை பெறுவதற்கான வழிகாட்டலை இது காட்டும்.

## அபிஷேகத்தின் செயல்முறை

“அபிஷேகம்” என்பதின் சாதாரண அர்த்தம் ஒருவர் அல்லது பொருளின் மீது எண்ணையை ஊற்றுதலாகும். பழைய ஏற்பாட்டு காலத்திலே இது ஓர் செயல்முறை ஆகும். சாதாரண, மருத்துவ மற்றும் தெய்வீகமான என அபிஷேகமானது மூன்று வகைப்படும்.

**சாதாரண அபிஷேகம்** என்பது தனிப்பட்ட வளர்ச்சிக்கு முகர்ந்து பார்ப்பதில் பங்கு கொள்கின்றது. நீங்கள் பயன்படுத்தியதைக் குறித்து ரூத் 3:3; சங்கீதம் 104:5; நீதிமொழிகள் 27:9ல் வாசிக்கலாம். விருந்தாளிகள் மரியாதையை குறிக்கும் முகமாக அபிஷேகம் பண்ணப்படுதலையும் (லூக்கா 7:46) இறந்தவர்கள் அடக்கம் பண்ணப்படுவதற்கும், அபிஷேகத்தால் ஆயத்தம் பண்ணப்படுதலையும் குறிக்கும் (மாற்கு 14:8; 16:1)

**மருத்துவ அவிஷேகமானது** சுகவீனமுற்றவர்களிற்கும், காயம்பட்டவர்களுக்கும் உதவுவதற்கு பயன்படுகின்றது. உதாரணத்திற்கு லூக்கா 10:34ஐ பார்க்கவும்.

**தெய்வீக அபிஷேகம்** என்றும் மூன்றாவது அபிஷேகமே இந்த அதிகாரத்தின் பாடமாகும். இந்த அபிஷேகமானது தெய்வீக அல்லது ஆவிக்குரிய நோக்கங்களுக்கானது. இது மனிதனை அல்லது பொருளை தேவனுக்கு அர்ப்பணிக்க பயன்படுகின்றது.

## பழைய ஏற்பாட்டு உதாரணங்கள்

பழைய ஏற்பாட்டிலே முதன்முறையாக ஆவிக்குரிய நோக்கத்திற்காக நடைபெற்ற அபிஷேகத்தின் சம்பவமானது ஆதியாகமம் 28:18ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. தேவனுடைய மாபெரும் தரிசனத்தை கண்டபின்....

> **அதிகாலையிலே யாக்கோபு எழுந்து, தன் தலையின்கீழ் வைத்திருந்த கல்லை எடுத்து, அதைத் தூணாக நிறுத்தி, அதின்மேல் எண்ணெய் வார்த்து,**
>
> **அந்த ஸ்தலத்திற்குப் பெத்தேல் என்று பேரிட்டான். அதற்கு முன்னே அவ்வூருக்கு லூஸ் என்னும் பேர் இருந்தது. (ஆதியாகமம் 28:18-19)**

தேவன் பின்னர் இச்சம்பவத்தை குறித்து பேசி, கூறியதாவது:

> **நீ தூணுக்கு அபிஷேகஞ்செய்து, எனக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணின பெத்தேலிலே உனக்குத் தரிசனமான தேவன் நானே... (ஆதியாகமம் 31:13)**

பின்னர் தேவன் ஆசாரியர்கள், ராஜாக்கள், தீர்க்கதரிசிகள் ஆகியோரை ஆவிக்குரிய நோக்கத்தோடு நியமிப்பதற்காக அபிஷேகம் பண்ணும் வழிமுறைகளை வழங்கினார். ஆசாரிய கூடார முறைமைகளும் அபிஷேகிக்கப்பட்டன. நீங்கள் இவை குறித்து மேலும் அதிகமானவற்றை இவ்வதிகாரத்தின் “மேலதிக படிப்பினையில்” எனும் பகுதியில் படிக்கலாம்.

மனிதர்களையும், பொருட்களையும் அபிஷேகம் பண்ணுவதின் நோக்கமானது அவர்களை தேவனுடைய ஊழியத்தில் விசேட அர்ப்பணிப்புடன் பங்காற்றி ஊழியம் செய்வதே ஆகும். ஆவிக்குரிய நோக்கங்களுக்காக பரிசுத்த எண்ணெய்கள் இதற்கு பயன்பட்டன.

> **அதனால், பரிமள தைலக்காரன் செய்வதுபோல, கூட்டப்பட்ட பரிமளதைலமாகிய சுத்தமான அபிஷேக தைலத்தை உண்டுபண்ணுவாயாக. அது பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்கக்கடவது.**
>
> **இஸ்ரவேல் புத்திரரோடே நீ பேசிச் சொல்லவேண்டியதாவது: உங்கள் தலைமுறைதோறும் இது எனக்குரிய பரிசுத்த அபிஷேக தைலமாயிருக்க வேண்டும். (யாத்திராகமம் 30:25,31)**

## இயேசுவினுடைய அபிஷேகம்

கீழ்வரும் கட்டமைப்பு தேவனால் மேற்கொள்ளப்பட, இயேசுவானவர் ஊழியத்திற்காக அபிஷேகம் பண்ணப்பட்டார். இயேசு கூறினார்:

**கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்,**

**கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார்.. (லூக்கா 4:18-19)**

இது ஏசாயா 61:1ல் கொடுக்கப்பட்ட தீர்க்கதரிசன நிறைவேறுதலாகும்.

இது சீடர்களால் அடையாளம் காணப்பட்டது...

**நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

## அபிஷேகத்தின் ஆதாரம்

ஆவிக்குரிய வல்லமையின் அபிஷேகமானது எண்ணெய்க்குள் அடங்குவதில்லை. அபிஷேகம் செய்வோருக்கு ஆவிக்குரிய வல்லமை தங்குவதோ அல்லது பெறுபவருக்கு கிடைக்கும் திறமைகளோ கிடைப்பதில்லை. அபிஷேகத்தின் வல்லமையானது தேவனாகிய பிதா என்னும் ஆதாரத்திலிருந்தே ஊற்றப்படுகின்றது. இயேசு கூறினதை குறித்துக் கொள்ளுங்கள் "கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார், என்னை அபிஷேகம்பண்ணினார்."

பவுல் கூறினார்:

**உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. (2 கொரிந்தியர் 1:21)**

கிறிஸ்துவின் அபிஷேகத்தின் ஆதாரம் தேவனே. அவரே அபிஷேகத்திற்கு இன்னும் ஆதாரமாக உள்ளார். எண்ணெய்யானது இந்த அபிஷேகத்தை பிரதிபலிக்க பயன்படுத்தும் இயற்கையான அடையாளம் மட்டுமே. இயேசுவும் அபிஷேகத்தின் கட்டமைப்பை உபயோகித்தார், ஆனால் எப்பொழுதும் எண்ணெய்யால் மட்டுமல்ல, இயேசுவால் குணமடைந்த குருடன் கூறினான்:

**அவன் பிரதியுத்தரமாக: இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்டாக்கி, என் கண்களின்மேல் பூசி, நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு என்றார். அப்படியே நான் போய்க் கழுவி, பார்வையடைந்தேன் என்றான். (யோவான் 9:11)**

இந்த வசனமானது பயன்படுத்தப்படும் பொருள் அல்ல, அபிஷேகத்திற்கு பின்புலத்திலுள்ள தாக்கமுள்ள வல்லமையே காரணம் என்பதை உறுதிப்படுத்துகின்றது. மனிதனும், மனுஷியும் ஏற்கனவே மனிதரால் அடையாளமான எண்ணெய்யை கொண்டு அபிஷேகம் பண்ணப்பட்டிருப்பினும், உண்மையான வல்லமையுள்ள அபிஷேகம் தேவனிடத்திலிருந்தே வருகின்றது. தாவீது ராஜாவுக்கு தேவன் கூறினார்:

**அவன என் தாசனாகிய தாவீதைக்கண்டு பிடித்தேன். என் பரிசுத்த தைலத்தினால் அவனை அபிஷேகம்பண்ணினேன். (சங்கீதம் 89:20)**

முன்னான வருடங்களில் தாவீது மனிதரால் அபிஷேகம் பண்ணப்படவில்லை, தாவீது தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டான்:

**உங்களோடேகூட எங்களையும் கிறிஸ்துவுக்குள் ஸ்திரப்படுத்தி, நம்மை அபிஷேகம் பண்ணினவர் தேவனே. (2 கொரிந்தியர் 1:21)**

## அபிஷேகத்தின் நோக்கங்கள்

விசுவாசிகளின் ஊழியத்திலும் வாழ்க்கையிலும் தேவ ஆவியின் அபிஷேகமானது மிக முக்கியமானதாகும். இங்கே அபிஷேகத்தின் சில நோக்கங்களாவன:

**ஊழியம்:**

சவுலின் மீது தேவ அபிஷேகம் வந்தபோது. அவன் இஸ்ரவேலை ராஜாவாக ஊழியம் செய்வதற்கு புது மனிதனாக மாற்றப்பட்டான்:

**அப்பொழுது சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து அவனை முத்தஞ் செய்து: கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்திரத்தின்மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா?**

**அப்பொழுது கர்த்தருடைய ஆவி உன்மேல் இறங்குவார். நீ அவர்களோடே கூடத் தீர்க்கதரிசனம் சொல்லி, வேறு மனுஷனாவாய். (1 சாமுவேல் 10:1,6)**

இயேசு ஊழியத்திற்காக தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டார்:

**கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார், (லூக்கா 4:18-19)**

**நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்: தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

இந்த வசனங்கள் ஊழியத்திற்கான அபிஷேகத்தின் நோக்கங்களின் பட்டியலை தந்துள்ளது. அபிஷேகமானது உங்களை:

- சுவிசேஷத்தை பிரசங்கிக்கவும்,
- ஏழைகளுக்கு ஊழியம் செய்யவும்,
- உடைந்த இருதயங்களை குணமாக்கவும்,

- சரீர சுகவீனமுற்றவர்களை குணப்படுத்தவும், (யாக்கோபு 5:14-15, மாற்கு 6:13ஐ பார்க்கவும்)
- ஆவியின் கட்டுள்ளோருக்கு விடுதலையை அறிவிக்கவும்,
- ஆவியின் குருட்டாட்டமுள்ளவர்களின் கண்களை திறக்கவும்,
- எதிரிகளால் காயம்பட்டவனை விடுதலை பண்ணவும்,
- தேவனால் ஏற்று கொள்ளப்பட்ட வருடங்களை பிரசங்கிக்கவும், (2கொரிந்தியர் 6:2ஐ பார்க்கவும்)
- நல்லவற்றை செய்யும் படியாகவும்,
- சாத்தானால் கட்டுண்டோரை குணப்படுத்தவும் அனுமதிக்கின்றது.

## உத்தரவாதம்:

தேவன் விசுவாசிகளை ஆவிக்குரிய உத்தரவாதத்திற்காக அபிஷேகிக்கிறார். அவர் எதை உங்களுக்கு ஒப்படைத்தாலும், அது பெரிதாயினும் அல்லது சிறிதாயினும், அது உங்களுடைய சொந்த திறமையால் அல்ல, அது உங்களுடைய கல்வி, தனிப்பட்ட, சமூக அந்தஸ்து ஆகியவற்றினால் அல்ல. நீங்கள் ஆவிக்குரிய பொறுப்புக்களை அபிஷேகத்தின் மூலம் பெற்றுக் கொள்வீர்கள்:

> **பின்னும் கர்த்தர் ஆரோனை நோக்கி: இஸ்ரவேல் புத்திரர் பரிசுத்தப்படுத்துகிறவைகளிலெல் லாம் எனக்கு ஏறெடுத்துப் படைக்கப்படும் படைப்புகளைக் காத்துக்கொண்டிருக்கிறீர்களே, அவைகளை உனக்குக் கொடுத்தேன். அபிஷேகத்தினிமித்தம் அவைகளை உனக்கும் உன் குமாரருக்கும் நித்திய கட்டளையாகக் கொடுத்தேன். (எண்ணாகமம் 18:8)**

## அறிவுறுத்தல்கள்:

அபிஷேகம் உங்களுக்கு போரிக்கின்றது:

> **நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லைலூ அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. (1 யோவான் 2:27)**

இது நீங்கள் மற்றவர்கலிலிருந்து ஆவிக்குரிய போதனைகளை பெறுவதில்லை என்பதை குறிப்பதல்ல. தேவன் சபையிலே போதிப்பவர்களை இந்த நோக்கத்திற்காக வைத்துள்ளார் (எபேசியர் 4:11) பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய வார்த்தையை போதிப்பதற்கு அவர்களை அபிஷேகித்துள்ளார். ஆனால் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட மனிதருடைய ஊழியத்திலிருந்து நீங்கள் எதுவும் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும், பரிசுத்த ஆவியனாவரின் அபிஷேகமானது இன்னும் உங்களை போதிக்கும்.

இந்த அபிஷேகமானது, நீங்கள் மற்றவர்களிடமிருந்து கேட்கும் போதனைகளின் உண்மையை மதிப்பிட உதவுகின்றது. தேவனால் எழுதப்பட்ட வார்த்தைகளின் வெளிப்படுத்தல்களை தெளிவாக திறப்பதற்கும், உங்களால் விளங்கிக் கொள்ள முடியாத உண்மைகளை வெளிப்படுத்துவதற்கும் உதவும். இந்த அபிஷேகமானது “அனைத்து காரியங்களையும்” போதிக்கும் என்பதை கவனிக்கவும். உங்களுடைய வாழ்வின் அனைத்து பகுதிகளிலும், ஊழியத்திலும் அபிஷேகத்தின் வல்லமையானது உங்களுக்கு போதிக்கும்.

## நிலைத்திருத்தல்:

தேவனுடைய அபிஷேகமானது இயேசுகிறிஸ்துவிற்குள் நிலைத்திருக்க வழியமைக்கின்றது. இப்போது

படித்த வசனத்தின் பாகத்தை கவனிக்கவும்:

> **நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது... அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. (1 யோவான் 2:27)**

இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்வதே ஒரே ஒரு காரியமாகும். அவருடைய சித்தத்திற்கும், அவருடைய வார்த்தைக்கும் கீழ்ப்படிந்து நடப்பதும், அவருக்குள் எவ்வாறு நிலைத்திருக்க வேண்டும் என்பதே அடுத்த படிப்பாயிருக்கின்றது. அபிஷேகமானது இதை எவ்வாறு செய்ய வேண்டும் என போதிக்கின்றது.

## விடுதலை:

கட்டுக்களின் அடிமைத்தனத்தை அபிஷேகம் அழித்து விடும். தமது நிலங்களில் வேலை செய்யும் பொருட்டு, புராதன காலங்களில் மிருகங்களை நுகத்துடன் சேர்த்து பயன்பட்டன. இன்று அநேக நாடுகளில் இதே நோக்கத்திற்காக அவைகள் இன்னும் பயன்படுகின்றன. இயேசு நுகத்தை பற்றி பேசும் போது கூறினார்:

> **வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.**
>
> **நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன். என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.**
>
> **என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:28-30)**

நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒன்றுக்கு அடிமையாக இருக்கின்றோம். நீங்கள் சாத்தானுக்கு அல்லது தேவனுக்கு அடிமையாயிருக்கின்றீர்கள். சாத்தானுடைய அடிமை கட்டுக்களின் மூன்று பகுதிகளாவன:

**1. பாவத்தின் அடிமைத்தனம்:**

> **நீங்கள் எகிப்தியருக்கு அடிமைகளாயிராதபடிக்கு, நான் அவர்கள் தேசத்திலிருந்து உங்களைப் புறப்படப்பண்ணி, உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணின உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவியராகமம் 26:13)**

“எகிப்தின் அடிமை” என்பது பாவத்தின் அடிமையே. இயேசுவினுடைய அடிமைத்தனத்திற்குள் வந்தால் மட்டுமே நீங்கள் இந்த அடிமைத்தனத்தை உடைக்க முடியும்.

**2. சுயத்தின் அடிமைத்தனம்:**

பவுல் சுயத்தின் அடிமைத்தனத்தோடு போராடினார்:

> **எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை. நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன். (ரோமர் 7:15)**

**3. மனித அடிமைத்தனம்:**

மனித அடிமைத்தனம் என்பது மற்றவர்களால் உங்கள் மேல் போடப்படும் கட்டுகளாகும்:

> **சுமப்பதற்கரிய பாரமான சுமைகளைக்கட்டி மனுஷர் தோள்களின்மேல் சுமத்துகிறார்கள். தாங்களோ ஒரு விரலினாலும் அவைகளைத் தொடமாட்டார்கள். (மத்தேயு 23:4)**

மனித அடிமைத்தனம் என்பது குற்றங்களின், பாரம்பரியங்களின், ஜாதிகளின் அல்லது மற்றவர்களால் உங்கள் மீது திணிக்கப்படும் தவறான மதிப்பீடுகள் ஆகியவற்றை உள்ளடக்கும். இவ்விதமான கட்டுக்கள் உங்கள் வாழ்க்கையிலும், நீங்கள் உழியம் செய்து வாழ்க்கை நடத்தும் இடங்களிலும் எவ்வாறு உடைக்க முடியும்? அவைகள் அபிஷேகத்தின் மூலமே உடைக்க முடியும்:

> **அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும், உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும். அபிஷேகத்தின் நுகம் முறிந்துபோம். (ஏசாயா 10:27)**

சாத்தானுடைய அளையாளத்தை உங்களுடைய சொந்த வல்லமையினால் உடைக்க முடியாது. உங்களுடைய சொந்த ஞானத்தின் வசனங்களினால் நீங்கள் அதை செய்ய முடியாது. ஒவ்வொரு அடிமைத்தனமும், ஒவ்வொரு மனித அடிமைத்தனமும் அபிஷேகத்தின் மூலமே உடைக்க முடியும்.

**சந்தோஷம்:**

இயேசுவானவர் ஆனந்த தைலத்தால் அபிஷேகம் பண்ணப்பட்டார்:

> **குமாரனை நோக்கி: நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர், ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தி னால் அபிஷேகம்பண்ணினார் என்றும்... (எபிரெயர் 1:8-9)**

நீதியை நேசித்து, அநீதியை பெறுப்பவர்கள் யாரோ அவர்கள் இந்த ஆனந்த தைலத்தால் அபிஷேகம் பண்ணப்படுகின்றார்கள். தேவனுடைய அபிஷேகமானது உங்கள் வாழ்க்கையில் மாபெரும் ஆனந்தத்தை கொண்டு வரும். தேவனுடைய ஆனந்தத்தின் வல்லமையானது உங்கள் தேவனுடைய ஊழியத்தை வல்லமையூட்டும்.

## விஷேச அபிஷேகம்

நீங்கள் படித்த அபிஷேகத்தின் நோக்கமானது அனைத்து விசுவாசிகளுக்குடையதாகும். ஆனால் தேவனும் சில மக்களை விஷேச ஊழியத்திற்கும், விஷேச குறிக்கோளுக்கும் அபிஷேகம் செய்கின்றார். சிலரை போதகர்களாகவும், சிலரை தீர்க்கதரிசிகளாகவும், தேவன் விசுவாசிகளுக்கு அதே விதமான அபிஷேகத்தை கொடுக்கின்றார்

மக்களுடைய பாவத்திற்கு மரிக்கும்படியாக இயேசு விஷேச அபிஷேகத்தை தேவனிடமிருந்து பெற்றிருந்தார். "கிறிஸ்து" எனும் பெயருக்கு அர்த்தம் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்பதாகும். இயேசு என்னும் பெயருக்கான அர்த்தம் "இரட்சகர்". "இயேசு கிறிஸ்து" எனும் பெயர்களை இணைந்து உபயோகிக்கும்பொழுது, அவரே உலகத்தின் இரட்சகராக தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர் என அர்த்தம் கொடுக்கின்றது. அவருடைய மரணத்திற்கு முன்னர், ஒரு பெண் இயேசுவை விலையுயர்ந்த எண்ணெய்யை கொண்டு அபிஷேகித்தாள். இயேசு கூறினார்:

**இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது. (மத்தேயு 26:12)**

இயேசு மக்களின் பாவங்களுக்கு மரிப்பதற்காக தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்டிருந்தார் என்பதை அறிந்திருந்தார். இந்த விஷேச அபிஷேகத்தை வேறு யாரும் எப்பொழுதும் பெற்றிருக்கவில்லை.

வேதாகமத்தின் பதிவுகளுக்கூடாக, தேவன் மக்களை விஷேச ஊழியத்திற்காக அபிஷேகம் செய்திருந்தார் (2 நாளாகமம் 22:7ஐ பார்க்கவும்). மக்கள் எப்போது தேவனுடைய அபிஷேகம் இல்லாமல் குறித்த ஊழியத்தை செய்ய தொடங்கினார்களோ, விளைவுகள் பிரச்சினைகளே. எண்ணாகமம் 12ல் ஆரோன் மற்றும் மிரியாமின் கதைகளை இதற்கு உதாரணமாக வாசிக்கவும். மிரியாமும், ஆரோனும் மோசேயின் அளவிற்கு அதே அபிஷேகத்தை பெற்று, இஸ்ரவேலை அதேயளவிற்கு வழிநடத்தினர். அவர்கள் வித்தியாசத்தை உணர்ந்தார்கள். இன்னொரு உதாரணம் எண்ணாகமம் 16ல் கோராவின் கதை யில் காணப்படுகின்றது, இங்கு அவன் மோசேயின் அதேயளவு அபிஷேகத்தை பெற முயற்சித்தான்.

கிறிஸ்துவின் சரீரத்திலிருந்து வரும் ஒவ்வாமையானது மக்கள் தாம் அபிஷேகம் பெறப்படாத பகுதிகளில் ஊழியத்திற்கு செல்ல முயற்சிப்பதாகும். ஒரு நபர் தேவனுடைய அபிஷேகத்தை விஷேச வழியில் பெறப்பட்டிருப்பின், சீக்கிரம் அனைவரும் அவனுடைய ஊழியத்தை பின்பற்றுபவராகுவர். ஆனால் இந்த பின்பற்றுதலானது அதேயளவு வல்லமையான விளைவுகளை கொண்டிருப்பதில்லை. அவர்கள் எது பிழை என ஆச்சரியப்படுவார்கள். அவர்கள் மற்ற ஒருவரைபோல் தாங்கள் எல்லாவற்றையும் செய்வார்கள், ஆனால் அதே விளைவுகளை கொண்டதல்ல. அபிஷேக வல்லமையிலேயே இதற்கான பதில் உள்ளது. தேவனுடைய அபிஷேகமானது ஒரு மனிதர் மேல் விஷேச நோக்கத்திற்காக கொடுக்கப்பட்டுள்ளது, ஆனால் மற்றவர்களிற்கு அல்ல. இதனால் ஒருவர் வெற்றிப்பெற மற்றவர் தோல்வியடைகின்றனர்.

கலாத்தியர் 5:20ல் மாம்சத்தின் பாவங்கள் பட்டியலிடப்படும் போது அதில் ஒரு பாவம் "விரோதங்கள்" என்று அழைக்கப்படுகிறது. விரோதம் என்பது மற்றவர்களின் வெற்றியைக்கண்டு பழித்து காட்டுவதாகும். விரோதிகளை தேவன் ஆசீர்வதிக்க மாட்டார். வல்லமையால் அபிஷேகிக்க தேவன் விரோதிக்கும் பாவத்திலிருந்து விடுபடுகின்றவர்களை தேடிக்கொண்டிருக்கின்றார்.

## அபிஷேகத்தை பெற்றுக்கொள்வது எவ்வாறு?

இந்த வல்லமையுள்ள அபிஷேகத்தை நீங்கள் எவ்வாறு பெற்றுக்கொள்வீர்கள்?

### ஆதாரத்தை அடையாளம் காணுங்கள்:

இந்த அதிகாரத்தை கற்றபிரகாரமாய், ஆவிக்குரிய வல்லமையின் அபிஷேகத்தின் ஆதாரம் தேவன் ஆவார். நீங்கள் உங்கள் கல்வி, சுயமதிப்பு அல்லது சமூக அந்தஸ்தை நம்ப இயலாது. நீங்கள் வேறு யாரிடமாவது அபிஷேகத்தை பெற்றுக்கொள்ள முடியாது.

அபிஷேகத்தை பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் ஒன்றும் செய்ய வேண்டியதில்லை. நீங்கள் உணர்ச்சி மூலம் அக்காரியத்தை செய்ய முடியாது. தேவன் மாத்திரமே ஆவிக்குரிய அபிஷேகத்திற்கு ஆதாரமாக இருக்கின்றார். இந்த அபிஷேகத்தை பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் முதலில் அது கிடைக்கும் ஆதாரங்களை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்.

## மறுபிறப்பை அனுபவியுங்கள்:

தேவனுடைய ஆகாரத்திலிருந்து கிடைக்கும் ஆவிக்குரிய வல்லமை இதுவானதால், நீங்கள் இதை பெறுவதற்கு ஆவியில் மறுப்பிறப்படைய வேண்டும். இதற்கான காரணம் என்னவெனில்:

> **ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்..... (1 கொரிந்தியர் 2:14)**

அபிஷேகத்தின் வல்லமையானது தேவனுடைய ஆவியிலிலுருந்து கிடைக்கப்பெறுகின்றது. பாவமுள்ள மனிதன் அதை பெறமாட்டான். நீங்கள் ஆவிக்குரிய மனிதனாகும் வரை அதை பெற்றுக்கொள்ள முடியாது.

## தேவனுடைய வார்த்தையை வாசித்து ஜெபம் பண்ணுங்கள்:

அபிஷேகத்தின் ஆதாரம் தேவனாயிருந்தாலும், நீங்கள் ஜெபத்தினூடாகவும் (நீங்கள் அவரோடு பேசுவதினூடாக), தேவ வசனத்தினூடாகவும் (அவர் உங்களோடு பேசுவதினூடாக) தொடர்ந்து அவ-ரோடு தொடர்பிலிருக்க வேண்டும். அவருடைய வார்த்தையின் நீங்கள் அதிகம் ஒன்றாகும் போது, அவ்வ-சனம் உங்களில் ஒன்றாகும் போது, உங்களுடைய வாழ்க்கையில் அதிகமான அபிஷேகம் கிடைக்கும்.

## அடிமைத்தன நுகத்தை உடையுங்கள்:

இந்த பாடத்தில் அபிஷேகத்தின் ஓர் குறிக்கோளானது அடிமையின் கட்டுக்களை உடைத்தல் என நீங்கள் கற்றீர்கள். பாவத்தின் மற்றும் சுயத்தின் எல்லா அடிமைக்கட்டுக்களை உடைக்கும்படியாக தேவனிடத்தில் கேளுங்கள். நீங்கள் உங்களுடைய சொந்த வாழ்க்கையில் அடிமைத்தனத்தை உடைக்கும் அபிஷேகத்தை கண்டிப்பாக அனுபவித்தல் வேண்டும், இவை உங்கள் மூலம் மற்றவர்களுக்கு கிடைக்கலாம்.

## பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளுங்கள்:

> **நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்... (அப்போஸ்தலர் 10:38)**

இந்த வசனம் குறிப்பிடுகின்றதாவது தேவனுடைய அபிஷேகமானது எவ்வாறு உங்களுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியில் வல்லமையுள்ள கிரியைகளுக்கு சம்பந்தமாயிருப்பது என்பதையாகும். வல்லமையுள்ள அபிஷேகத்தை அனுபவிப்பதற்கு, நீங்கள் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொண்டிருக்க வேண்டும். நீங்கள் ஏற்கனவே இதை குறித்து எட்டாம் அதிகாரமாகிய “பரிசுத்த ஆவியின் வல்லமை”யில் கற்றீர்கள்”.

## உங்களுடைய இயலாமையில் கவனம் செலுத்த வேண்டாம்:

அநேக மக்கள் தங்களுக்கு அபிஷேகத்தின் வல்லமையில் கிடைக்கப்பெறும் இயலுமைகளை விட்டுவிடாமல்,

இயலாமையிலேயே தங்கியிருக்கின்றனர். தாவீது ராஜா கூறியதாவது:

**நான் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டவனாயிருந்தபோதிலும், நான் இன்னும் பலவீனன். (2 சாமுவேல் 3:39)**

தாவீது தான் ராஜாவாக இருந்தாலும், தான் ஓர் பலவீனன் என தனக்குள் அடையாளம் கண்டிருந்தார். அபிஷேகத்தின் மூலமே அவன் வல்லமையை அனுபவித்தான். அது அவனுடைய பலவீனத்தை பலமுள்ளதாக மாற்றியது. அவன் தனது இயலாமையின் மீது கவனம் கொள்ளவில்லை, மாறாக அவனுடைய வல்லமையின் அபிஷேகத்தினூடாக இயலுமைக்கூடாகவே கவனம் செலுத்தினான். இதனிமித்தமாகவே அவனால் கூற முடிந்தது:

**உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன். என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன். (சங்கீதம் 18:29)**

சீஷர்கள் உண்மையாகவே பயமுள்ளவர்களாகவும். அவிசுவாசமுள்ள மனிதராகவும் இருந்தனர். அவர்கள் எல்லோரும் இயேசுவை அடுத்த தேவையான நேரத்தில் கைவிட்டனர். ஒருவர் அவரை மறுதலித்தும் விட்டார். அந்த குறிப்பிட்ட அதே குழுவையே இயேசு உலகத்தின் சுவிசேஷ ஊழிய இலக்குகளை அடைய ஒப்படைத்தார். இயேசு அவர்களுடைய இயலாமையில் கவனம் செலுத்தவில்லை. அவர் அவர்களுடைய கல்வியறிவு இன்மை குறித்தோ அல்லது அவர்களின் சமூக அந்தஸ்து குறித்தோ கவனம் செலுத்தவில்லை. அவர் அவர்களுடைய கடந்தகால தோல்விகளை பார்க்கவில்லை. அவர் அவர்களுடைய வாழ்க்கையை மற்றும் அபிஷேகத்தின் வல்லமையை அனுமதிக்கும் போது, அவர்கள் எவ்விதமான மாறுவர் என்பதை பார்த்தார். அவர் அவர்களை பரிசுத்த ஆவியானவரை பெற்றவர்களாகவே பார்த்தார்.

உங்களையே கவனிப்பதை நிறுத்துங்கள். தேவ ஆவியானவர் உங்களில் உள்ளார் என அடையாளம் கண்டு கொள்ளுங்கள். இது அவருடைய வேலை, அவருடைய ஊழியம், அவருடைய அற்புதம், அவருடைய அபிஷேகம். அபிஷேகத்தின் வல்லமை உங்களுக்கூடாக ஊற்றும்படியாக அவரிடம் கேளுங்கள். மற்றவர்களுடைய ஊழியத்தில் நீங்கள் அடைவதற்கு முன்பதாக, அபிஷேகத்தின் வல்லமையானது உங்களில் ஊற்றப்படுவதை நீங்கள் உணர்வீர்கள்.

நீங்கள் சபையின் பின் வரிசையில் சுறுசுறுப்பற்று உட்கார்ந்திருப்பதற்கு தேவன் உங்களை அபிஷேகிக்கவில்லை. அபிஷேகத்தின் வல்லமையானது ஒரு குறித்த நோக்கத்திற்கு தரப்பட்டுள்ளது என்பதை நீங்கள் அதிகாரம் ஆறில் கற்றீர்கள். உங்களுடைய சக்திகளை இந்த நோக்கத்திற்காக நீங்கள் திசைதிருப்பி விடும் போது, அபிஷேகத்தின் வல்லமையானது உங்களுக்கூடாக அதிகம் ஊற்றப்படும்.

## உங்களுடைய விசேஷ அபிஷேகத்தை கண்டு கொள்ளுங்கள்:

ஊழியத்தில் உங்களுடைய விசேஷ அபிஷேகத்தை அறிந்து கொள்வதற்கு, தேவன் உங்களுக்க தந்த ஆவிக்குரிய வரங்களை நீங்கள் அடையாளம் காண வேண்டும். இந்த பகுதியில் வழிகாட்டுவதற்கு “பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்” என்னும் அறுவடைநேர நிறுவனத்தின் பாடத்தினை அணுகுங்கள்.

## அபிஷேகத்தின் நிலை

தேவனுடைய அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளும் இடமானது, நீங்கள் ஆவிக்குரிய யுத்தத்தில்

முன்வரிசையில் உள்ள இடமாகும். வேதாகமமானது, யார் தேவ வல்லமையினால் அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கின்றார்களோ, அவர்கள் சத்துருவினுடைய எதிர்ப்பை உணர்வார்கள் என்பதை வெளிப்படுத்தி உள்ளது:

**கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி:**

**அவர்கள் கட்டுகளை அறுத்து, அவர்கள் கயிறுகளை நம்மைவிட்டு எறிந்துபோடுவோம் என்கிறார்கள். (சங்கீதம் 2:4-5)**

தாவீது கூறினான்:

**கர்த்தாவே, உமது அடியார் சுமக்கும் நிந்தையையும், வலுமையான ஜனங்களெல்லாராலும் நான் என் மடியில் சுமக்கும் என் நிந்தையையும் நினைத்தருளும். (சங்கீதம் 89:51)**

அவருடைய அபிஷேகத்தை எதிர்ப்போர் பற்றி கூறியதாவது:

**பரலோகத்தில் வீற்றிருக்கிறவர் நகைப்பார். ஆண்டவர் அவர்களை இகழுவார்.**

**அப்பொழுது அவர் தமது கோபத்திலே அவர்களோடே பேசி, தமது உக்கிரத்திலே அவர்களைக் கலங்கப்பண்ணுவார். (சங்கீதம் 2:4-5)**

தேவன் இவ்வித எதிர்ப்புக்களின் மத்தியில் உங்களுக்கு பலனாக இருப்பார்:

**கர்த்தர் அவர்களுடைய பெலன். அவரே தாம் அபிஷேகம்பண்ணினவனுக்கு அரணான அடைக்கலமானவர். (சங்கீதம் 28:8)**

**கர்த்தர் தாம் அபிஷேகம்பண்ணினவரை இரட்சிக்கிறார் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன். தமது வலதுகரம் செய்யும் இரட்சிப்பின் வல்லமைகளைக் காண்பித்து, தமது பரிசுத்த வானத்திலிருந்து அவருடைய ஜெபத்தைக் கேட்பார். (சங்கீதம் 20:6)**

மற்ற அபிஷேகம் பண்ணப்பட்ட விசுவாசிகளைகுறித்து நீங்கள் என்ன கூறுகின்றீர்கள் என்பதில் கவனமாயிருங்கள். உங்களோடு அபிஷேகம் பண்ணப்பட்டவர்களை மரியாதையோடு உபசரியுங்கள். தேவன் கண்டிப்பாக அபிஷேகத்தின் வல்லமையை எடுத்து விடுவார். அவர் எச்சரிக்கின்றார்:

**நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்குசெய்யாமலும் இருங்கள் என்றார். (1 நாளாகமம் 16:22)**

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. பழைய ஏற்பாட்டில் தெய்வீக அபிஷேகத்தின் நோக்கம் என்ன?

--------------------------------------------------------------------------------

3. பழைய ஏற்பாட்டில் தெய்வீக அபிஷேகமானது எவ்விதம் பயன்பட்டது என்பதற்கு சில உதாரணங்களை தருக?

--------------------------------------------------------------------------------

4. "கிறிஸ்து" எனும் பெயரின் அர்த்தம் என்ன?

--------------------------------------------------------------------------------

5. அபிஷேகத்தின் வல்லமை நோக்கங்களை நீங்கள் கற்றதிலிருந்து சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

6. ஊழியத்தில் உங்களது விசேட அபிஷேகத்தின் அடையாளம் காணுவது ஏன் முக்கியமானது?

--------------------------------------------------------------------------------

7. அபிஷேகத்தின் வல்லமையை நீங்கள் எவ்வாறு பெற்றுக்கொள்வீர்கள்?

--------------------------------------------------------------------------------

8. ஆவிக்குரிய அபிஷேகத்தின் ஆதாரம் என்ன?

--------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. பழைய ஏற்பாட்டில் அபிஷேகத்திற்கான ஆவிக்குரிய நோக்கங்களை மேலதிகமாக படியுங்கள்:

   -ஆசாரியர்களின் அபிஷேகம்: லேவியராகமம் 8:12,30; யாத்திராகமம் 28:41; 29:7; 30:30
   -ஆசாரிப்புக்கூடாரத்தினதும். அதன் தளபாடங்களினதும் அபிஷேகம்: யாத்திராகமம் 30:22-29; 40:9-11
   -ராஜாக்களின் அபிஷேகம்: இதற்கு அதிகமான பதிவுகள் உண்டு. உதாரணத்திற்கு 1 சாமுவேல் 9:16; 10:1; 16:1,12,13; 2 சாமுவேல் 2:7; 1 ராஜாக்கள் 1:33-34
   -தீர்க்கதரிசிகளின் அபிஷேகம்: 1 ராஜாக்கள் 19:16; 1 நாளாகமம் 16:22

2. சாத்தானும் தேவனால் ஒரு தடவை அபிஷேகம் பண்ணப்பட்டவன். இதுகுறித்து எசேக்கியேல் 28:14ஐ வாசிக்கவும்.

3. நீங்கள் தேவானால் அபிஷேகம் பண்ணப்பட்டதால், நீங்கள் பாவத்தின் தண்டனையிலிருந்து தப்பிவிட்டதாக அர்த்தமாகாது. சங்கீதம் 89:38ஐ பார்க்கவும்.

4. தேவன் அவருடைய அபிஷேகம் பண்ணினவரின் முகத்தை பார்க்கிறவரும், அவர்கள் மேல் சிந்தை வைக்கின்றவரும் (சங்கீதம் 84:9), அவர் அவர்களுக்கு கிருபையையும் காட்டுகின்றார் (சங்கீதம் 18:50).

5. தாவீது ராஜா தேவன் அபிஷேகம் பண்ணினவர்களை கெடுதல் செய்ய கூடாது என முக்கியமாய் விளங்கியிருந்தார். 1 சாமுவேல் 24,26, 2 சாமுவேல் 1:16,21ஐ பார்க்கவும்.

6. இந்த அதிகாரம் ஊழியத்திற்கா வல்லமையாக்கப்பட்ட விசுவாசிகளுக்கான அபிஷேகத்தின் நோக்கங்களை பட்டியலிட்டுள்ளது. இந்த நோக்கங்களுக்கான உங்களது சொந்த ஊழியத்தின் தொடர்பை மதிப்பிடுங்கள். உங்கள் ஊழியத்தில் சாட்சியாக இருப்பவர்கள் எத்தனை பேர்?

   -சுவிசேஷத்தை பிரசங்கித்தல்.
   -ஏழைகளுக்கு ஊழியம் செய்தல்.
   -சரீர நோயாளர்களை குணமாக்குதல்.
   -உடைந்த உள்ளங்களை குணமாக்குதல்.
   -ஆவிக்குரிய கட்டுக்களை உடையோருக்கு விடுதலையை பிரசங்கித்தல்.
   -ஆவிக்குரிய குருட்டாட்ட கண்களையுடையோரின் கண்களை திறத்தல்.
   -எதிரிகளால் காயப்பட்டு, அடிமைப்படுத்தப்பட்டோரை விடுதலை செய்தல்.
   -தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலங்களை பிரசங்கித்தல்.
   (2 கொரிந்தியர் 6:2ஐ பார்க்கவும். இப்பகுதி இரட்சிப்பின் செய்தியை கூறும்)
   -நல்லவை செய்ய புறப்படுதல்.
   -பிசாசினால் ஆட்கொள்ளப்பட்டோரை குணமாக்குதல்

# வல்லமையின் கொள்கை ஐந்து: வல்லமை, விசுவாசம், கிரியை

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ விசுவாசத்தை வரைவிலக்கணப்படுத்தவும்,
- ☐ விசுவாசத்தின் மட்டங்களை அடையாளம் காணவும்,
- ☐ விசுவாசத்தின் வகைகளை அடையாளம் காணவும்,
- ☐ விசுவாசத்தை எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பதை விபரிக்கவும்,
- ☐ வல்லமை, விசுவாசம், கிரியை என்பவற்றிற்கான தொடர்புகளை சுருக்கமாக தரவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

> **ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். (அப்போஸ்தலர் 6:8)**

## அறிமுகம்

மத்தேயு 17ம் அதிகாரத்தில், ஓர் பிசாசு பிடித்த இளைஞனை சீஷர்கள் துரத்த முற்பட்ட போதும் அது தோல்வியடைந்தது. அவனை இயேசுவிடம் கொண்டு வந்த போது, அவனை அவரால் குணப்படுத்த முடிந்தது.

சீஷர்கள் இயேசுவிடம் “எங்களால் துரத்திவிட ஏன் கூடாமற் போயிற்று” என்று கேட்க, இயேசு பதிலளித்தார்...

> **அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலேதான். கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம்.. உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 17:20)**

இந்த சம்பவத்தில் இயேசு ஆவிக்குரிய வல்லமையின் முக்கிய கொள்கை ஒன்றை பகிர்ந்து கொண்டார்: தேவனுடைய வேலைகளை செய்வதற்கு வல்லமையானது விசுவாசத்தினூடாக செயல்பட வேண்டும் என்பதாகும். விசுவாசம் என்பது தேவனுடைய வல்லமைக்கான மனிதனின் பிரதிபலிப்பாகும்:

> **விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார்... (மாற்கு 9:23)**

இந்த அதிகாரமானது வல்லமை, விசுவாசம், கிரியைகள் என்பவற்றிற்கிடையான தொடர்பை வலியுறுத்தும்.

## வரைவிலக்கணம்

விசுவாசம் என்பது ஒன்றை குறித்து நம்பி, அதில் நிச்சயித்திருத்தல் ஆகும். விசுவாசித்தல் என்றால் நம்பிக்கை வைத்திருத்தல் ஆகும். "விசுவாசம், நம்பிக்கை, நம்புதல்" ஆகிய அனைத்தும் ஒன்றையே வேதப்பகுதியில் குறிப்பிடுகின்றது.

வேதாகமம் விசுவாசத்தை இவ்வாறு வரையறுக்கின்றது:

> **விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரெயர் 11:1)**

விசுவாசமானது எதிர்காலத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவை உண்மை எனவும், காணப்படாதவைகள் உண்மை எனவும் நிச்சயத்தைத் தரும்.

விசுவாசம் என்பது மற்ற சமயங்களில் போதிக்கும் "மூளைக்க மேற்பட்ட காரியங்கள்" என்பவற்றிற்கு சமமானவைகள் அல்ல. "மூளைக்கு மேற்பட்ட காரியமானது" மனிதனானவன் இந்நிஜ உலகில் (உலக காரியங்களில்) அவனுடைய மனதையும், காரணத்தையும், சிந்தத்தையும் கொண்டு அனைத்து பிரச்சினைகளையும் மேற்கொள்ள முடியும் என போதிக்கின்றது. இப்போதனைகள் மனிதனை மையப்படுத்தியவையாகும். அவைகள் தேவனை கொண்டுள்ளாது சுயத்தை கொண்டவை. "மூளைக்கு மேற்பட்ட காரியமானது" தேவனுடைய வார்த்தைக்கு அடிப்படையாகக் கொண்டவை அல்ல. விசுவாசமானது தேவனை மையப்படுத்தியது, மனிதனை மையப்படுத்தியதல்ல. விசுவாசமானது மனிதன் தன்னுடைய சொந்த மனதின் முயற்சியால் உருவாக்கப்பட்டதல்ல.

வேதாகமம் பேசும் விசுவாசமானது இயற்கையான உலகில் நீங்கள் நம்பிக்கை கொண்ட அனுபவத்தை சார்ந்து படித்த காரியங்களான இயற்கையான விசுவாசம் அல்ல. உதாரணத்திற்கு, நீங்கள் உட்கார்ந்திருக்கும் நாற்காலியானது உங்களை தாங்குகின்றது என்பதான விசுவாசம்.

## வேதாக விசுவாச வகைகள்

வேதப்பகுதியில் வித்தியாசமான விசுவாசத்தின் வகைகள் குறிப்பிடப்படுகின்றது:

### இரட்சிக்கும் விசுவாசம்:

> **இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1)**

விசுவாசமானது பாவத்திலிருந்து உண்மையாய் மனந்திரும்புதலோடு சம்பந்தப்பட்டுள்ளது. நீங்கள் கேட்டு, விசுவாசித்து தனிப்பட்ட முறையில் தேவனிடமிந்து செய்திகளை பெற வேண்டும். இரட்சிக்கும் விசுவாசமானது தேவனுக்கான தனிப்பட்ட பிரதிபலிப்பை கொண்டிருக்கும்.

விசுவாசமானது மனிதர்கள் தம்மை காத்துக்கொள்ளும் பொருட்டு தேவனால் தரப்பட்ட வரமாயிருக்கின்றது:

> **கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்ூ இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.. (எபேசியர் 2:8)**

நீங்கள் விசுவாசமில்லாமல் இரட்சிக்கப்பட முடியாது:

> **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற்கு 16:16)**

> **விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம். ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும். (எபிரெயர் 11:6)**

## பரிசுத்தப்படுத்தும் விசுவாசம்:

> **கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன். ஆயினும், பிழைத்திருக்கிறேன்ஞ் இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார். நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன். (கலாத்தியர் 2:20)**

புதிதாக்கும் விசுவாசமானது இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின் உங்கள் வாழ்க்கை தூயதாக வாழ உதவும். நீங்கள் பரிசுத்தப்படுத்தும் விசுவாசத்தை அடைய வேண்டுமாயின் இரட்சிக்கும் விசுவாசத்தை அனுபவித்தல் வேண்டும்.

## தற்காப்பிற்கான விசுவாசம்:

உங்கள் ஆவிக்குரிய எதிரியான சாத்தானுக்கு எதிராக தற்பாதுகாப்பிற்கான ஒரு ஆயுதமே விசுவாசமாகும்:

> **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். (மாற்கு 16:16)**

சாத்தானானவன் உங்களுடைய விசுவாசத்தை தாக்கும் பொருட்டு, பலவிதமான அவிவிசுவாசத்தை உங்கள் மனதிற்குள்ளே அனுப்புவான். தேவனிலுள்ள விசுவாசமானது இவ்விதமான தாக்குதல்களுக்கு ஆவிக்குரிய தற்பாதுகாப்பை கொடுக்கின்றது.

## விசுவாச வரம்:

பரிசுத்த ஆவியினால் தரப்பட்ட ஆவிக்குரிய விசுவாசத்தின் வரம் ஒன்றுள்ளது:

> **எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே விசுவாசமும்... (1 கொரிந்தியர் 12:8-9)**

ஆவிக்குரிய வரமாகிய விசுவாசத்தை கொண்ட ஒருவர் தேவனை விசுவாசிக்கும் விசேட இயலுமையை கொண்டிருப்பர். தேவன் இயலாத காரியத்தை செய்வார் என அறிந்திருப்பார். தன்னை சுற்றியுள்ள மற்றவர்கள் விசுவாசியாவிட்டாலும் இந்த விசுவாசத்தை அவர் உணர்ந்திருப்பார்.

## விசுவாசத்தின் கனி:

விசுவாசம் நீங்களாகவே அபிவிருத்தி செய்யக்கூடியதொன்றல்ல. அது பரிசுத்த ஆவியினால் உங்கள் வாழ்க்கையில் அபிவிருத்தி செய்யக்கூடிய ஆவியின் கனியாகும்:

**ஆவியின் கனியோ... விசுவாசம், (கலாத்தியர் 5:22)**

விசுவாசத்தின் கனி என்பது ஒழுக்கமாகும். அது தேவனுடைய நேராக நோக்கப்பட்ட விசுவாசமாகும். அது உங்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சியை கொண்டுவரும் பொருட்டு உங்கள் வாழ்க்கையில் அவருக்கூடாக அபிவிருத்தி செய்யப்படகூடிய ஓர் செயற்பாடாகும்.

அனைவருக்கும் ஆவிக்குரிய வரமாகிய விசுவாசம் இருப்பதில்லை, அனைத்து விசுவாசிகளின் வாழ்க்கைக்கும் ஆவிக்குரிய வரமானது சாட்சியாக காணப்பட வேண்டும். ஆவிக்குரிய வல்லமையை அனுபவிப்பதற்காக இது அவசியமாகும்.

## விசுவாத்தின் மட்டங்கள்

வேதாகமமானது விசுவாசத்திற்கு அநேக மட்டங்கள் உள்ளதென விபரிக்கின்றது. இயேசு அவிவிசுவாசிகளாய் நமக்கு தரப்பட்ட வரத்தை பாவிக்காதவர்களை குறித்து பேசினார் (மத்தேயு 17:17). அவர் கொஞ்சம் விசுவாசமுள்ளோர்களை பற்றியும் பேசினார் (மத்தேயு 6:30; 8:26; 14:31; லூக்கா 12:28) அதிக விசுவாசமுள்ளோர்களை பற்றியும் பேசினார் (மத்தேயு 8:10; 15:28; லூக்கா 7:9).

வேதாகமமானது ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு குறிப்பிட்டளவு விசுவாசமானது தேவனால் வரமாக கொடுக்கப்பட்டுள்ளதென போதிக்கின்றது:

**அவனவனுக்குத்தேவன் பகிர்ந்தவிசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ணவேண்டும். (ரோமர் 12:3)**

தேவனுடைய வல்லமையை பொழியும்படியாக இந்த விசுவாச மட்ட அளவுகளை நீங்கள் எவ்வாறு அதிகரித்துக் கொள்ளலாம்?

## விசுவாசத்தை அதிகரித்துக் கொள்வது எவ்வாறு?

விசுவாசத்தை எவ்வாறு அதிகரித்து கொள்ள வேண்டும் என வேதாகமம் கூறுகின்றது:

**ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர் 10:17)**

தேவனுடைய வசனத்தை கேட்பதனூடாக உங்களது விசுவாசத்தை அதிகரித்துக் கொள்ளலாம். அதிகமான விசுவாசம் தேவனுடைய வார்த்தையை கேட்பதனூடாக வரும். இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று, பாவத்திலிருந்து மனம் திரும்புவதற்கு தேவனுடைய வசனத்தை நீங்கள் கேட்க வேண்டும். நீங்கள் அதிகமான விசுவாசத்தை அனுபவிக்காமல் ஆவிக்குரிய வல்லமையை அனுபவிக்க முடியாது.

நீங்கள் காக்கப்பட்ட பின், வேதாகம போதனையும், உபதேசங்களும் உங்களது விசுவாசத்தை தொடர்ந்து அதிகரிக்கச் செய்யும்.

எவ்வளவுக்கதிகமாக தேவனுடைய வார்த்தைகளை கேட்கின்றீர்களோ, அவ்வளவுக்கதிகமான விசுவாசம் உங்களில் வளரும். இந்த விசுவாசமானது பரிசுத்தப்படுதலின் செயலுக்கூடாக தேவனுடைய தன்மையை குறித்து நிச்சயத்தை அதிகரிக்கும்.

பரிசுத்தப்படுத்தல் என்பது தூய வாழ்க்கை வாழ்வதாகும். ஆவிக்குரிய வல்லமையை அதிகரிப்பதற்கு

நீங்கள் நீதிமானாய் வாழ வேண்டும். உங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து பாவங்களை அறிந்து கொண்டால் தேவனுடைய வல்லமை ஊற்றப்பட உதவும்.

அதிகமாக விசுவாசம் வளரும் போது, தூய வாழ்க்வை வாழ இலகுவாகவும், ஆவிக்குரிய எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தப்பவும் முடியும். வல்லமையில்லாத கிறிஸ்தவர்கள் தோற்கடிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள்.

கடுகளவான விசுவாசம் மிகுந்த வல்லமையுள்ளது:

**அதற்கு இயேசு: உங்கள் அவிசுவாசத்தினாலேதான். கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து, இவ்விடம் விட்டு அப்புறம்போ என்று சொல்ல அது அப்புறம் போம். உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். (மத்தேயு 17:20)**

## விசுவாசம், கிரியை மற்றும் வல்லமை

உங்களது வாழ்க்கையிலுள்ள தேவ வல்லமையின் ஊற்றானதை விசுவாசம் எந்தளவு தாக்கம் செலுத்தும் என்பதை காணுவது இலகுவானது. விசுவாசம் இல்லாவிட்டால், தேவனுடைய வார்த்தையின் வல்லமையை அனுபவிக்காமல் நீங்கள் ஆபத்தில் இருக்கின்றீர்கள்:

**ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது. கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை. (எபிரெயர் 4:2)**

ஆனால் விசுவாசம், கிரியை, வல்லமை ஆகியவற்றிற்கு முக்கிய தொடர்புள்ளது. வல்லமையை அனுபவிப்பதற்கு உங்களுக்கு விசுவாசம் இருத்தல் வேண்டும். வல்லமையை மெய்ப்பித்து காட்டுவதற்கு உங்களுக்கு விசுவாசம் இருத்தல் வேண்டும். சுவிசேஷத்தை பரப்புவதற்கு விசுவாசமும், வல்லமையும் தாக்கமுள்ளதாக இருப்பதோடு, அவற்றை மெய்ப்பித்து காட்டுவது கிரியைகளேயாகும். யாக்கோபு எழுதியுள்ளார்:

**என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாத வனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?**

**அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.**

**ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு. கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக் காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே.**

**அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது. (யாக்கோபு 2:14,17-18,26)**

ஆவிக்குரிய சரீரத்திற்கும் எவ்வளவு தொடர்புள்ளதோ, அதேயளவு விசுவாசத்திற்கும் கிரியைக்கும் தொடர்புண்டு.

ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்ததால் அநேக காரியங்களை அவனால் செய்ய முடிந்தது:

> **ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். (அப்போஸ்தலர் 6:8)**

விசுவாசத்தின் கிரியையானது வல்லமையினால் செய்யப்படும்:

> **நம்முடைய தேவன் உங்களைத் தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம். (1 தெசலோனிக்கேயர் 1:11)**

தேவன் உங்களிலும், நமக்கூடாகவும் விசுவாசத்தின் வல்லமையை செய்ய வேண்டுகிறார். நீங்கள் விசுவாத்தை செயற்படுத்தும் போது, அது உங்கள் கிரியையில் தேவனுடைய வல்லமையை தொடர்புபடுத்துகின்றது. “அவரில் விசுவாசம் வைத்தால்” இயேசு கூறினார் “அனைத்து காரியங்களும் கூடும்!”

**சுய பரீட்சை:**

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. விசுவாசத்தின் வேதாகம வரைவிலக்கணத்தை தரவும்.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. தேவன் பேசிய விசுவாசத்தின் மட்டங்களை அடையாளம் காணவும்.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. இந்த பாடத்தில் சம்பாஷிக்கப்பட்ட வேதாகம விசுவாச வகைகளை பட்டியலிடவும்.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. விசுவாசம் எவ்விதமாய் அதிகரிக்கும்?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. இப்பாடத்தில் படித்த நீங்கள் வல்லமை, விசுவாசம், கிரியை ஆகியவற்றின் தொடர்பை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. வேதாகமத்தில் "விசுவாசத்தின் அதிகாரம்" என அழைக்கப்படும் எபிரெயர் 11ம் அதிகாரத்தை வாசித்து விசுவாசத்தின் வல்லமையை மேலதிகமாக கற்கவும். இந்த உதாரணங்களிலிருந்து நீங்கள் படித்த விசுவாசத்தின் வல்லமை குறித்து சுருக்கமாக தரவும்:

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. வேதாகமத்தில் விசுவாசத்திற்கான ஒரு மிகச்சிறந்த உதாரணம் ஆபிரகாம்.

- ஆபிரகாம் விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்பட்டான்: யாக்கோபு 2:23
- அவனுடைய விசுவாசமானது தேவனுடைய வாக்குத்தத்தத்தின் முழு நிச்சயத்தையும் கொடுத்தது: ரோமர் 4:18-21
- தேவன் ஆபிரகாமின் விசுவாசமுள்ள இருதயத்தை கண்டறிந்தார்: நெகேமியா 9:8
- அவருடைய உதாரணத்தை பின்பற்றும் விசுவாசிகளும் விசுவாசத்தின் மக்கள் ஆவர்: ரோமர் 4:11-12

இவ்வசனத்தில் ஆபிரகாமை குறித்து கற்றவற்றை சுருக்கமாக தருக:

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

அதிகாரம் பன்னிரெண்டு

# வல்லமையின் கொள்கை ஆறு: இயேசுவின் நாமத்திலுள்ள வல்லமை

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ வேதாகம காலத்திலுள்ள பெயர்களின் முக்கியத்துவத்தை விளக்கவும்,
- ☐ மற்ற அனைத்து பெயர்களிலும் மகிமையான பெயரை அடையாளம் காணவும்,
- ☐ “இயேசு”வின் பெயரிலுள்ள அர்த்தத்தை அடையாளம் காணவும்,
- ☐ “இயேசு” தம்முடைய பெயரை எவ்வாறு பெற்றார் என்பதை விபரிக்கவும்,
- ☐ இயேசுவின் நாமத்தை உபயோகப்படுத்தும் வேதாக குறிப்புகளை அடையாளம் காணவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,**

**இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,**

**பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 2:9-11)**

## அறிமுகம்

தேவனால் இயேசு கிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்ட அதிகாரங்களையும், வல்லமையையும் குறித்தும், இயேசு எவ்வாறு விசுவாசிகளுக்கு இதே அதிகாரத்தையும், வல்லமையையும் ஒப்படைத்தார் எனவும் நீங்கள் கற்றீர்கள். இந்த வல்லமையுள்ள ஆவிக்குரிய கொள்கைகளில் ஒன்று அவருடைய சொந்த நாமத்தை உபயோகப்படுத்துவதாகும். இந்த அதிகாரமானது இயேசுவின் நாமத்திலுள்ள வல்லமையை குறித்து கவனம் செலுத்தும்.

## பெயர்களின் முக்கியத்துவம்

வேதாகம காலத்தில் பெயர்களானது முக்கியத்துவம் பெற்றது, அனால் இன்று அவ்வாறல்ல, பல நவீன கலாச்சாரங்களில் பெயரானது மனிதனை குறிக்கும் தனிப்பட்ட அடையாளமாகவே பயன்படுகிறது. வேதாகம காலங்களில் மனிதர்களுடைய பெயர்களில் மாபெரும் அடையாளங்கள் சேர்க்கப்பட்டன. பெயரானது ஒருவர் பிறக்கும் சமயங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. (ஆதியாகமம் 19:22) சிலவேளைகளில் பெயரானது நம்பிக்கையை அல்லது தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தும் (ஏசாயா 8:1-4; ஓசியா 1:4)

வேதாகம காலத்தில் பெயருகு முக்கியத்துவமிருந்த காரணத்தினால், தேவன் பல மக்களின் பெயர்களை மாற்றினார். அவர் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றிக்காட்டும் பொருட்டு, ஆபிராம் என்னும் பெயரை ஆபிரகாமாக மாற்றினார்:

> **இனி உன் பேர் ஆபிராம் என்னப்படாமல், நான் உன்னைத் திரளான ஜாதிகளுக்குத் தகப்பனாக ஏற்படுத்தினபடியால், உன் பேர் ஆபிரகாம் என்னப்படும். (ஆதியாகமம் 17:5)**

ஆபிரகாம் என்னும் பெயரின் அர்த்தம் "அநேக ஜாதிகளுக்கு தகப்பன்" என்பதாகும். தேவன் சாராய் என்னும் பெயரை சாராள் என்றும், யாக்கோபு என்னும் பெயரை இஸ்ரவேல் என்றும் அதே காரணங்களுக்காக மாற்றினார். புதிய ஏற்பாட்டிலும் இந்த படிமுறை தொடர்ந்தது. சீமோன் "பேதுரு" என்றும், சவுல் "பவுல்" என்றும் அழைக்கப்பட்டனர். அவர்களுடைய பெயர்கள் தேவனுடைய நோக்கத்தை பிரதிபலித்தது.

பெயர் அர்த்தத்தின் முக்கியத்தினால் தேவன் தமது ஒரே பேறான குமாரனுக்கு மிகவும் விஷேடமான பெயரை தெரிந்தெடுத்தார்.

## இயேசுவின் பெயர்

தேவகுமாரன் இவ்வுலகத்திற்கு மனுஉருவில் வந்தபோது இயேசு என்னும் பெயர் அவருக்கு கொடுக்கப் பட்டது. தேவதூதனின் கட்டளைக்கு கீழ்ப்படிந்த யோசேப்பு, மரியாளின் கணவன், இயேசுவின் தாய்:

> **அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக. ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். (மத்தேயு 1:21)**

"இயேசு" என்னும் பெயரின் அர்த்தம் "இரட்சகர்" என்பதாகும். இயேசுவுக்கு வேறு பெயர்களும் உண்டு. அவர் பொதுவாக இயேசு கிறிஸ்து, கிறிஸ்து இயேசு, கர்த்தராகிய இயேசு, கர்த்தர் என அழைக்கப்படுகின்றார். இவைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து "கர்த்தராகிய இயேசு கிறிஸ்து" என அடையாளம் தரும். "கிறிஸ்து" என்றால் "அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர்" என்பதாகும்.

இயேசு ஒருமுறை "இம்மானுவேல்" எனவும் அழைக்கப்பட்டார், அதன் அர்த்தம் "தேவன் நம்மோடிருக்கின்றார்" என்பதாகும். இயேசு தம்மைதாமே "மனுஷகுமாரன்" என்றும் அழைக்க, அவர் "தேவகுமாரன்" என்றும் புதிய ஏற்பாட்டில் அழைக்கப்பட்டார். யோவன் அவரை "வார்த்தை" எனவும் "தேவ ஆட்டுக்குட்டி" எனவும் அழைத்தார்.

இயேசுவுக்கு "ஜீவ அப்பம்" "உலகத்தின் ஒளி" என வேறு பல பெயர்களும் கொடுக்கப்பட்டது. இவை போன்ற பல பெயர்கள் சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடமான "ஆவிக்குரிய போர்கலைகள்: ஆவிக்குரிய போராட்டத்தின் கையேட்டில்" கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு அவருடைய ஊழியத்திலும், அவருடைய பதவியிலும் மிக முக்கியமானவர் என்பதை புரிந்து கொள்வதற்காக ஒவ்வொரு பெயரும் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் எமது கர்தர் பொதுவாக புதிய ஏற்பாட்டு காலங்களில் "இயேசு" என அதிகமாக பேசப்பட்டார். இதையே நாம் இந்த அதிகாரத்தில் பெயரிலுள்ள வல்லமை என்று குறிப்பிடுகின்றோம். இந்த இயேசுவின் பெயரானது அப்போஸ்தலர் புத்தகத்திலே வேறு பெயர்களோடு ஒப்பிடப்பட்டு சில சமயம் வருகின்றது, இது விசுவாசிகளினூடாக தேவனுடைய வல்லமையானது வெளிப்படுகின்றது என்பதை குறிக்கும்.

## பெயர்கள் எவ்வாறு பெறப்படுகின்றது

மனிதர்களுடைய பெயரானது மூன்று வழிகளில் பெறப்படுகின்றது:

### பிறப்பினூடாக:

சில மனிதர்கள் பிறப்பினூடாக விசேட பெயர்களை கொண்டிருப்பார்கள். அவர்கள் இளவரசனாக, இளவரசியாக அல்லது பழங்குடி தலைவர்களுக்கு பிறந்தவர்களாக இருப்பார்கள். பெயரில் பிரபல்யமடைந்தவர்கள் அல்லது அரசியல் வல்லமை கொண்டவர்களின் குடும்பங்களில் அவர்கள் பிறந்திருக்கக்கூடும். அவர்கள் தங்கள் விசேட பெயர்களை பெற்றோருக்கூடாக பெற்றுக்கொள்வார்கள்.

### சாதனைக்கூடாக:

சில மனிதர்கள் தங்களுடைய விசேட பெயர்களை தம் தனிப்பட்ட சாதனையின் மூலம் பெற்றுக் கொள்வார்கள். அவர்கள் எழுத்தாளராகவோ, கண்டுப்பிடிப்பாளராகவோ, அரசியல்வாதியாகவோ, தலைவர்களாகவோ இருப்பார்கள்.

### சார்தலுக்கூடாக:

சில மனிதர்கள் தங்களுடைய சார்தல் மூலம் விசேட பெயர்களை பெற்றுக்கொள்வார்கள். அவர்கள் மற்ற பெரிய மனிதர் மூலம் விசேட பெயர்களை பெற்றுக்கொள்வார்கள். உதாரணமாக, ஒரு ஏழை பெண் பணக்கார அரசியல்வாதியை திருமணம் செய்வதினூடாக விசேட பெயரை பெற்றுக்கொள்வாள். ஒரு அரசன் அல்லது பழங்குடி தலைவர் தன்னுடைய ராஜ்யத்தில் அல்லது கோத்திரத்திலிருந்து முக்கியமான நபருக்கு தம் பெயர்களை கொடுத்தலின் மூலமாக பெற்றுக்கொள்வர்கள்.

## இயேசு எவ்வாறு தம்முடைய பெயரை பெற்றார்

இயேசு தம்முடைய பெயரை இவ்வுலகத்திற்கு மனிதர்கள் விசேடப் பெயர்களை பெறும் மூன்று வழிகளிலேயும் பெற்றார்:

### பிறப்பினூடாக:

இயேசு தன்னுடைய பிதாவினுடைய அதிகாரத்தின்படி அவருடைய பெயரை பிறப்பினூடாக பெற்றார்:

> **பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்,**
>
> **இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார். இவரைச் சர்வத் துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்.**
>
> **இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும்தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவ மானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார்.**

**இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார். (எபிரெயர் 1:1-4)**

இயேசுவினுடைய பெயரானது இவ்வுலகில் மற்ற எல்லோரையும் விட சிறந்தது ஆகும். அவருடைய பெயரானது எவ்வித ராஜாக்களோ, மந்திரிகளோ அல்லது பழங்குடி தலைவரை விடவோ சிறந்தது. இது பரலோகத்திலுள்ள எந்த தூதர்களின் பெயரை விடவும் சிறந்தது.

### சாதனையினூடாக:

இயேசு தம் பெயரை அவர் எதிரியினுடைய சகல வல்லமையையும் மேற்கொண்டு சாதனையினூடாக பெற்றுக்கொண்டார்:

**துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார். (கொலோசெயர் 2:15)**

### சார்தல் மூலம்:

இயேசு தம்முடைய பெயரை சார்ந்து பெறுதல் மூலமாகவும் பெற்றுக்கொண்டார்:

**ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,**

**இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும்,**

**பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 2:9-11)**

## உயர்ந்த நாமம்

இவ்வுலகத்தில் இயேசுவின் நாமமான மிக வல்லமையுள்ள நாமமாகும். மற்ற எல்லா பெயர்களிலும் அது உயர்ந்தது:

**ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி... எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்... (பிலிப்பியர் 2:9,11)**

**எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும், இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக... (எபேசியர் 1:21)**

## பெயரிலுள்ள வல்லமை

இயேசு தம்மை பின்பற்றியவர்களிடம் உலகத்தை சுவிசேஷத்தால் நிரப்பும் மாபெரும் இலக்கை அடையும்படியா விட்டுச்சென்றார். தம்முடைய இலக்கை முழுமையாக அடையும்படியாக விசேட வல்லமையையும் அவர் விட்டுச் சென்றார். அவர் தம்முடைய சொந்த பெயரை உபயோகிக்கும்

அதிகாரத்தை அவர்களிடம் விட்டுச்சென்றார்:

**அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.**

**ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**

**நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:18-20)**

ஒரு நபர் தன்னுடைய பெயரை மற்றவருக்கு கொடுக்கும் போது, அவ்விருவரும் ஒருவருக்கொருவர் மிக நெருக்கமானவர் என்பதை அறியத்தருகின்றது. உதாரணத்திற்கு தேவன் தம்முடைய பெயரை இஸ்ரவேலருக்கு கொடுக்கும் போது:

**நீ உன் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளைக் கைக்கொண்டு, அவர் வழிகளில் நடக்கும் போது, கர்த்தர் உனக்கு ஆணையிட்டபடியே, உன்னைத் தமக்குப் பரிசுத்த ஜனமாக நிலைப்படுத்துவார்.**

**அப்பொழுது கர்த்தருடைய நாமம் உனக்குத் தரிக்கப்பட்டது என்று பூமியின் ஜனங்களெல்லாம் கண்டு, உனக்குப் பயப்படுவார்கள். (உபாகமம் 28:9-10)**

ஒருவருடைய பெயரை கொண்டு அனுப்புவதற்கு அல்லது பேசுவதற்கு அவருடைய அதிகாரம் வேண்டும்:

**ஆதலால் நீ எங்கள் கையினாலே சாகாதபடிக்குக் கர்த்தருடைய நாமத்தினாலே தீர்க்கதரிசனம் சொல்லவேண்டாம் என்று சொல்லி, உன் பிராணனை வாங்கத்தேடுகிற ஆனதோத்தின் மனுஷரைக்குறித்துக் கர்த்தர் சொல்லுகிறார்: இதோ, இதினிமித்தம் உங்களை விசாரிப்பேன்... (எரேமியா 11:21-22)**

எரேமியா தேவனுடைய நாமத்தை கொண்டு தீர்க்கதரிசனம் உரைத்ததால், தீய மனிதன் அவனை கொல்லும்படியாக சத்தமிட்டான். அவர்கள் அவனுடைய தீர்க்கதரிசனத்திற்கு பின்னால் தேவனுடைய அதிகாரம் இருந்ததை அறிந்திருந்தனர்.

ஆவிக்குரிய வல்லமையின் மிகப்பெரும் திறவுகோல் ஒன்று இயேசுவின் நாமமாகும். நாம் ஒருவரை விடுதலையாக்கும் பொருட்டு எம் இயலுமையில் நாமே சார்ந்து விடுவதால் நாம் ஊழியத்தில் தோல்வியடைகின்றோம். எமது பெயரிலும், பதவியிலும், அதிகாரத்திலும் இதன் வல்லமை இருப்பதில்லை. எமது வல்லமையானது இயேசுவின் நாமத்திலேயே உள்ளது.

சாதாரணமான பெயரை திரும்பதிரும்ப கூறுதல் மந்திரம் ஓதுவதை விட சற்று அதிகமான காரியமாகும். அது வேதாக காலத்தில் பரிசேயர் மற்றும் சதுசேயர் ஆகியோரின் வீணான திரும்பதிரும்ப கூறுதலை ஒத்திருந்தது. இயேசுவினுடைய நாமம் மந்திரம் கூறும் பகுதியல்ல. நீங்கள் அப்பெயரில் விசுவாசம் வைக்க வேண்டும். சீஷர்கள் அப்போஸ்தலர் 3ல் இவ்வல்லமையான குணப்படுத்தலின் பதிவின் பின் இதை வலியுறுத்தினார்கள். பேதுரு கூறினான்:

**அவருடைய நாமத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே அவருடைய நாமமே நீங்கள் பார்த்து அறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தினது... (அப்போஸ்தலர் 3:16)**

நாம் இயேசுவினுடைய பெயரை சடங்காரமாக கூறுகின்றோம், ஆனால் அப்பெயரிலுள்ள எமது விசுவாசமானது பலவீனமாயிருக்கின்றது. இதை எவ்வாறு சரிபடுத்த முடியும். இயேசுவின் நாமத்தினால் வல்லமையை பெற்றுக்கொண்டு, விசுவாசத்தை வைப்பதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? வேதாகமம் கூறுகின்றது:

**ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர் 10:17)**

இயேசுவினுடைய நாமத்திலுள்ள உங்களுடைய விசுவாசத்தை, அந்நாமத்தை குறித்து தேவ வார்த்தை கூறுகின்றதை கேட்பதன் மூலமாக அதிகரித்துக்கொள்ளலாம். வசனத்தின் மூலமாக அந்நாமத்தின் பின்புலத்திலுள்ள அதிகாரத்தையும், அவருடைய பெயரை பயன்படுத்தும் நோக்கத்தின் வேதாக வழிகாட்டல்களை நீங்கள் விளங்கிக் கொள்ளலாம்.

## இயேசுவினுடைய பெயரில்

இயேசுவினுடைய பெயர் உபயோகிக்கப்பட்டுள்ளது...

### இரட்சிப்பிற்காக:

இயேசுவின் பெயரிலுள்ள மிகப்பெரும் வல்லமை பாவத்திலிருந்து இரட்சிக்கும் வல்லமையாகும். அவருடைய பெயரிலிருந்து மாத்திரமே இரட்சிப்பு வரும்:

**அவள் ஒரு குமாரனைப் பெறுவாள். அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக: ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் என்றான். (மத்தேயு 1:21)**

**அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை: நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளை யிடப்படவும் இல்லை என்றான். (அப்போஸ்தலர் 4:12)**

**அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று. (யோவான் 3:18)**

“இயேசுவினுடய பெயரூடாக” மட்டுமேயன்றி, வேறு எந்த வழிகளில் மூலமாகவோ பாவத்திற்கான மன்னிப்படைய முடியாது. நீங்கள் தேவனிடமிருந்து இயேசுவிற்கூடாக மட்டுமேயன்றி வேறொருவரினாலும் பெறமுடியாது:

**அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். (யோவான் 14:6)**

சுவிசேஷத்தை நாம் பிரசங்கிக்கும் போது இயேசுவினுடைய பெயரிலிருந்து மட்டுமே இரட்சிப்பு வருகின்றது என்பதை வலியுறுத்துவது முக்கியமானதாகும். இரட்சிப்பிற்கு இயேசுவினுடைய பெயரை

ஏற்றுக்கொள்ளுதல் முக்கியமானதாகும்:

**என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.**

**நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும். (ரோமர் 10:9-10)**

இயேசுவினுடைய பெயரின் மூலமாக தேவனுடைய பிள்ளையாகும் வல்லமை வருகின்றது:

**அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12)**

## பரிசுத்தமாக்கப்படுவதற்காக:

நீங்கள் இயேசுவினுடைய பெயரிற்கூடாக பாவத்திலிருந்து கழுவப்படுவதும், நீதிமானாக்கப்படுவது மாத்திரமல்ல, நீங்கள் பரிசுத்தமாக்கவும் படுகின்றீர்கள். பரிசுத்தமானது தேவனுடைய வல்லமைக்கூடாக, நீங்கள் இரட்சிப்படைந்த பின்பு உங்களை அது தொடர்ந்து கிரியை செய்வதற்காகவும், தூய வாழ்வை வாழ்வதற்காகவும் வரும். 1 கொரிந்தியர் 6ல் பவுல் பாவத்தின் தீமைகளை குறித்து பேசுகின்றார். அவர் கூறுகின்றார்...

**உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள். ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப் பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். (1 கொரிந்தியர் 6:11)**

ஆரம்பத்தில் இக்கொரிந்தியர்கள் பாவமான கிரியைகளுடாக வாழ்ந்தார்கள். இயேசுவினுடைய பெயரிலிருந்து வரும் பரிசுத்தத்திற்கூடாக இப்பொழுது அவர்கள் தூய வாழ்வில் வாழக்கூடும்.

## ஜெபத்தில்:

**இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்தினாலே ஒன்றும் கேட்கவில்லை கேளுங்கள், அப்பொழுது உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி பெற்றுக்கொள்வீர்கள். (யோவான் 16:24)**

“இதுவரைக்கும்” என்றால் “இப்பொழுது வரைக்கும்” என்னும் அர்த்தமாகும். இவ்வார்த்தைகளை இயேசு பேசும் வரைக்கும், அவருடைய சீஷர்கள் அவருடைய பெயரிலிருந்து ஒன்றையும் கேட்கவில்லை. இச்சந்தர்ப்பத்தில் அவர் புதிய உறவை அவர்களோடு வைத்துக்கொண்டார். தேவனிடத்தில் அவர் பெயர் மூலமாய் கேட்கும்படி அவர்களுக்கு கூறினார்:

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில் கேட்டுக்கொள்வதெதுவோ அதை அவர் உங்களுக்குத் தருவார். (யோவான் 16:23)**

என்ன ஒரு வல்லமையான வாக்குத்தத்தம்! அவருடைய பெயரில் நாம் எதை கேட்கின்றோமோ, அதை பெறுவோம்.

ஆனால் இந்த வாக்குத்தத்தத்தை வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ள மற்ற ஜெபத்தின் கொள்கைகளோடு எடுத்துக் கொள்ள வேண்டும். வேதாகம வசனங்களில் மற்ற வசனங்களில் சொல்லப்படும் பொருள்களை கனியாமல் ஒரு வசனத்தின் பொருளை மட்டும் தனியாக எடுக்க முடியாது. வேதாகமமானது நீங்கள் சுயநலமாக கேட்க முடியாதென போதிக்கின்றது:

> **நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்க வேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளா மலிருக்கிறீர்கள். (யாக்கோபு 4:3)**

நீங்கள் தேவனுக்கு முன்பாக நீதியாகவும் வாழவேண்டும். நீங்கள் பாவமுள்ளவர்களாயிருந்தால், நீங்கள் அறிக்கையிட்டு மன்னிப்புக்காக ஜெபிக்க வேண்டும்:

> **நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு 5:16)**

நீங்கள் பாவத்தில் தொடர்ந்து வாழ்ந்துகொண்டு, இயேசுவினுடைய பெயரால் கேட்பதால் உங்களுடைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் என நினைத்தல் முடியாது. தேவனுடையதிலிருந்து பயன்படுத்திக் கொள்ளும் நீதிமான்களான ஆண்களின், பெண்களின் ஜெபம் இதுவாகும்:

> **நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். (யோவான் 15:7)**

இதன் அர்த்தமானது நீங்கள் கிறிஸ்துவிற்குள் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ள அவை நடைபெறும். நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்தால், நீங்கள் இயேசுவினுடைய பெயரால் கேட்கலாம்.

இயேசுவினுடைய பெயரில் ஜெபித்தல் என்பதும் தேவனுடைய சித்தம் என பொருளாகும். இயேசு ஜெபித்தார்:

> **பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும். ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார். (லூக்கா 22:42)**

மனித மாம்ச பலவீனத்தில், இயேசு வேதனைபட விரும்பவில்லை. அவருக்கு அவைகளை நீக்க வேண்டியவையாக இருந்தது, ஆனாலும் அவர் அவருடைய சித்தத்தை தேவனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

தேவனுடைய சித்தத்தை நாம் அறிந்துள்ளதோடு எவ்வாறு சரியாக ஜெபிக்க வேண்டும் எனவும் வேதாகமம் சில சமயங்களில் தெளிவாக வரையறுத்து உள்ளது. மற்ற சமயங்களில் இயேசுவைப்போல், நாம் எமது சித்தத்தை வெளிப்படுத்தி, இயேசுவினுடைய பெயரால் எமது சித்தத்தை அவருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்க முடியும்.

இயேசுவினுடைய பெயரால் மேற்கொள்ளப்படும் வேண்டுதல்கள் தேவனுடைய சித்தத்தின் மேன்மையான பொருள்களாகும். நாம் மனித சுபாவத்தின் காரணமாகவே கேட்கின்றோம், அத்தோடு தேவனுடைய உயர்ந்த நோக்கங்களை எப்பொழுதும் அறிந்து கொள்ள முடியாது:

**என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்லவே; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது. (ஏசாயா 55:8-9)**

உங்களுக்கு எப்பொழுதும் தேவனுடைய சித்தத்தை எவ்வாறு சரியாக ஜெபிக்க வேண்டும் எனவும் தெரியாது. நீங்கள் தேவனுடைய சித்தத்தை அறியாதிருக்கும் வேளையில், பரிசுத்த ஆவியனவரின் பாஷையில் ஜெபித்தல் நல்ல காரியமாகும். பரிசுத்த ஆவியனாவர் எம்மத்தியில் தேவனுடைய சித்தத்தின்படி இடைபடுவார்:

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்.**

**ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார். (ரோமர் 8:26-27)**

சிலர் இந்த வேதாகம போதனைகளை மறுப்பார்கள். அவர்கள் நீங்கள் எதையும் இயேசுவின் நாமத்தினால் கேட்லாம் எனவும், அவை செய்யப்படும் எனவும் கூறுவார்கள். நீங்கள் தேவனுடைய சித்தம் இல்லாமல் கர்வத்துடன் சமர்ப்பிக்க முடியும், அவரும் அதற்கு பதிலளிக்கக் கூடும், ஆனால் அது உங்களது நற்பண்புகளால் வந்தது அல்ல. இஸ்ரவேல் தேசத்தாரும் இதைச் செய்தார்கள்.

**அப்பொழுது அவர்கள் கேட்டதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்கள் ஆத்துமாக்களிலோ இளைப்பை அனுப்பினார். (சங்கீதம் 106:15)**

நீங்கள் மற்றொரு நபரின் சார்பாக ஏதாவது ஒன்றைகக் கேட்கும்போது சந்தர்ப்பத்திற்கேற்றபடி அவர்களது சித்தமே நுழைகின்றது என்பதை நீங்கள் உணர வேண்டும். யாராவது ஒருவர் இயேசுவின் நாமத்தினால் ஜெபிக்கின்றபோது வேறொருவர் விரும்பாத காரியத்தை நுழைக்க முடியாது. மனிதனுடைய சுயாதீனத்தை தேவன் எடுத்துப்போடவில்லை. மற்றவருடைய விருப்பமும், அவிவிசுவாசமும் அவர்களுக்கான உங்கள் ஜெபத்தை பாதிக்கும்.

யோவான் 17ல் தேவனால் கொடுக்கப்பட்ட சீடர்களுக்காக பெரிததான ஓர் ஜெபத்தை இயேசு செய்கின்றார். இவர்கள் யாவரும் ஒரேவிதமான பயிற்சியையே பெற்றார்கள். ஒரே விதமான அற்புதங்களையே கண்டார்கள். ஒரேவிதமான தேவனுடைய வார்த்தையையே பெற்றார்கள். ஆனாலும் ஒருவன் இழந்துபோனான். யூதாஸ் இன்னம் தனது சித்தத்தின்படியே இருந்தான், அவன் கண்டவற்றையும்

கேட்டவற்றையும், மாத்திரமல்ல அவிவிசுவாசத்தின் காரணமாக தேவனுடைய வார்த்தையையும் நிராகரித்தான்.

இயேசு, அவரது நாமத்தினால் ஜெபிக்கின்றபோது மற்றவர்களின் ஒருமனத்தின் வல்லமையைப்பற்றியும் பேசினார்:

> **அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.**
>
> **ஏனெனில், இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். (மத்தேயு 18:19-20)**

ஜெபத்தின் ஒரு பகுதியாக நன்றிகள் இயேசுவின் நாமத்தினால் கொடுக்கப்பட வேண்டும்:

> **நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து, (எபேசியர் 5:20)**

நீங்களும் இயேசுவின் நாமத்தில் நன்றி செலுத்த வேண்டும்:

> **ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம். (எபிரெயர் 13:15)**

ஜெபத்தின் வல்லமையைப்பற்றி தொடரும் அதிகாரங்களில் அதிகமாக கற்போம்.

## ஊழியத்தின் சகல பகுதிகளிலும்:

இயேசுவின் நாமம் ஊழியத்தின் சகல பாகங்களிலும் பாவிக்கப்பட வேண்டும்:

> **அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.**
>
> **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**
>
> **நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:18-20)**
>
> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.**
>
> **சர்ப்பங்களை எடுப்பார்கள். சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு 16:17-18)**

இவ்வசனங்களின் படி, இயேசுவின் நாமத்தால் கீழ்வரும் ஊழியங்கள் நடைபெற வேண்டும்:

**அற்புதங்களும் அடையாளங்களும்:**

சகல அடையாளங்களும் அற்புதங்களும் இயேசுவின் நாமத்தினாலே செய்யப்பட வேண்டும். சீடர்கள் ஜெபித்தார்கள்:

> **இப்பொழுதும், கர்த்தாவே, அவர்கள் பயமுறுத்தல்களைத் தேவரீர் கவனித்து,**
>
> **உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழு தைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள். (அப்போஸ்தலர் 4:29-30)**

**பிரசங்கம் மற்றும் கற்பித்தல்:**

இயேசு கிறிஸ்து தமக்கு சகல அதிகாரமும், வல்லமையும் கொடுக்கப்பட்டிருப்பதாக கூறினார், இந்த வல்லமைக்கூடாக அவரது நாமத்தினால் சுவிஷேத்தை பிரசங்கிக்கவும் போதிக்கவும் நியமிக்கப்பட்டார்:

> **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து,**
>
> **நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென். (மத்தேயு 28:19-20)**
>
> **எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது,**
>
> **அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது... (லூக்கா 24:46-47)**

அவர்கள் இயேசுவின் நாமத்தில் அதிகாரமுண்டு என்று அடையாளங்கண்டு கொண்டனர், சுவிஷேச செய்தியின் எதிரிகள், சீடர்கள் அதை பேசுவதை அங்கிகரிக்கவில்லை...

> **இதுமுதல் ஒருவரோடும் இந்த நாமத்தைக்குறித்துப் பேசக்கூடாதென்று, அவர்களை அழைத்து: இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்கள். (அப்போஸ்தலர் 4:17-18)**

ஆனால் பேதுரு அவர்களுக்கு பதிலளித்தார்:

> **நாங்கள் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பேசாமலிருக்கக்கூடாதே என்றார்கள். (அப்போஸ்தலர் 4:20)**

சீஷர்கள் தேவனுடைய வல்லமையால் சாட்சிபகிர்ந்தார்கள். இயேசுவின் பெயரால் கண்டவற்றையும் கேட்டவற்றையும் குறித்து சாட்சியிட காரணம் அவர்களது ஊழியங்கள் வல்லமையால் நிறைந்திருந்தமையாகும்.

நீங்கள் மட்டும் இயேசுவின் நாமத்தை கற்று கொள்ளாமல், அவரது நாமத்தை குறித்து கற்றுக் கொடுக்கவும் வேண்டும்:

> **தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்போஸ்தலர் 8:12)**

**ஞானஸ்நானம்:**

புதிதாக இரட்சிக்கப்படுகின்றவர்கள் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே தண்ணீர் ஞானஸ்நானத்தை பெற வேண்டும்:

> **ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து... (மத்தேயு 28:19)**

> **அதைக் கேட்டபோது அவர்கள் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப்போஸ்தலர் 19:5)**

அந்த பெயரின் அடிப்படையில், விசுவாசிகள் பரிசுத்த ஆவியின் வரத்தை பெறுவார்கள்:

> **பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப்போஸ்தலர் 2:38)**

## பிசாசுகளை துரத்துதல்:

பிசாசுகள் அல்லது பேய்கள் சாத்தானின் தூதர்களாக இருக்கின்றார்கள். அவைகள் முன்னர் தேவனுடைய தூதர்களாக இருந்தன, பின்னர் அவைகள் தேவனுக்கு எதிராக கலகம்பண்ணிய சாத்தானுடன் சேர்ந்து கொண்டன. தற்போது அவைகள் சாத்தானால் இயக்கப்படும் சேனைகளாக இருந்து, பூமியில் பல தீய வழிகளில் கிரியை செய்கின்றன.

பேய்கள் அவிவிசுவாசிகளிடம் பிரவேசித்து அவர்களை ஆட்கொள்கின்றன. தீண ஆவிகளின் வல்லமைகள் விசுவாசிகளையும் ஒடுக்க முடியும். ஆனால் அவர்களை ஆட்கொள்ள முடியாது. அவர்களுடைய சாத்தானின் வல்லமைகள் இயேசுவின் நாமத்தினால் உடைக்கப்பட்டுவிட்டன.

> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்.... (மாற்கு 16:17)**

பவுல் அப்போஸ்தலன் அசுத்த ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட பெண்ணிடம் தைரியமாக அணுகி, ஆவிக்கு கட்டளையிட்டார்.

> **நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான். அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று. (அப்போஸ்தலர் 16:18)**

பிசாகளிடமிருந்து விடுதலை பெறுதல், சம்பந்தமான விரிவான கற்பித்தலை சர்வதேச அறுவடை நேர பாடவிதானமான “ஆவிக்குரிய வியூகங்கள்: ஆவிக்குரிய போராடத்திற்கான கையேடு” கற்றுக் கொள்வதின் மூலம் பெறலாம்.

## பரிசுத்த ஆவியானவரின் ஊழியங்கள்:

பரிசுத்த ஆவியானவர் இயேசு என்ற நாமத்தினால் கொடுக்கப்பட்டார்:

> **என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:26)**

பரிசுத்த ஆவியானவர் மூலம் பலவேறு ஊழியங்களில் பல உதாரணங்களில், பல வசனங்களில் புதிய பாஷைகள் பற்றி பேசப்படுகின்றது:

> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே நவமான பாஷைகளைப் பேசுவார்கள்... (மாற்கு 16:17)**

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையான வரங்கள் யாவும் இயேவின் நாமத்தினாலேயே செயல்படுகின்றன. பல பாஷை பேசும் வரம் இப்பல ஆவிக்குரிய வரங்களில் ஒன்றாக இருக்கின்றது. இது அனைத்து பரிசுத்த ஆவியின் ஊழியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் மாத்திரமன்றி பரிசுத்தாவியின் ஊழியத்தின் முதல் அனுபவமாகவும் கொடுக்கப்பட்டுள்ளது.

## குணமாகுதல்:

குணமாக்கும் ஊழியத்தில் இயேசுவின் நாமம், வியாதியாயிருப்போரிடம் பயன்படுத்தப்பட்டது:

> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே வியாதிஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள். (மாற்கு 16:17-18)**

> **உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். (யாக்கோபு 5:14)**

இயேசு சிலுவையில் உங்களது பாவத்திற்காக மாத்திரம் மரிக்காமல், உங்களது சுகத்திற்காகவும் பாடுபட்டு மரித்தார்:

> **நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்ததுஞூ அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53:5)**

**அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது. (மத்தேயு 8:17)**

**நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். (1 பேதுரு 2:24)**

அவரது பெயரினால் பாவத்திலிருந்து மீட்பு கிடைக்கின்றது என்பதை இலகுவாக ஏற்றுக் கொள்ளும் நாம், அவரது நாமத்திற்கூடாக சுகம் கிடைக்கின்றது என்பதை இலகுவாக விசுவாசிப்பதில்லை?

சீடர்கள் தேவாலய வாசலில் உட்கார்ந்திருந்த முடவனை எதிர்கொண்டபோது, பேதுரு கூறினான்:

**வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை. என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன். நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட... (அப்போஸ்தலர் 3:6)**

இயேசுவின் நாமத்தில் வல்லமை இருப்பதை பேதுரு அறிந்திருந்தார். அந்த நாமத்தில் சுகமிருப்பதையும் அறிந்திருந்திருந்தார். “என்னிடமுள்ள” அந்த நாமத்தை அதிகாரத்துடன் பயன்படுத்தலாம் என்பதையும் அவர் அறிந்திருந்தார். அப்பெயருக்கு பின்னால் அவருக்கு, அதிகாரம் வழங்கப்பட்டு உள்ளது.

ஊழியத்திற்கு பணம் அவசியம்தான், ஆனால் பயப்பற்றாக்குறை தேவனுடைய வல்லமையைக் கொண்ட உனது ஊழியத்தை நிறுத்த முடியாது. பேதுருவிடமும், யோவானிடமும் வெள்ளியும் பொன்னும் இருக்கவில்லை, ஆனாலும் அவர்கள் தொடர்ந்தும் இயேசுவின் பெயரிலுள்ள வல்லமையின் மூலமாக ஊழியத்தை செய்தார்கள்.

இம் மனிதர்களுக்கு எருசலேம் நகரில் செய்யப்போகின்ற ஊழியத்தைக் குறித்து விளம்பரம் செய்ய எவ்விதமான வரவு செலவு திடங்களும் இருக்கவில்லை. ஆனால் முழு நகரமும் தேவனுடைய வல்லமையை அறிந்து கொண்டது. இதைக் குறித்து நீங்கள் அப்போஸ்தலர் மூன்றாம், நான்காம அதிகாரங்களில் வாசிக்கலாம்.

அநேகமான நவீனகால ஊழியங்கள், வல்லமையைவிட இயேசுவின் நாமத்தினால் நிதி திரட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஊழியத்தில் நிதியின் முக்கியத்துவம் உணரப்பட்டாலும், அதிக முக்கியத்துவம் தேவனுடைய வல்லமைக்கு கொடுக்கப்படல் வேண்டும். நிதி இருப்பதோ, இல்லாதிருப்பதோ இயேசுவின் நாமத்தில் உள்ள வல்லமையை ஒருபோதும் பாதிப்படையச் செய்யாது.

## பாதுகாப்பு:

**விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே சர்ப்பங்களை எடுப்பார்கள். சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது... (மாற்கு 16:17-18)**

அப்போஸ்தலனாகிய பவுல் விஷப்பாம்பினால் கடிபட்டபோதும் அவர் அதனால் தீங்கேற்றபடவில்லை. இதைக்குறித்து நீங்கள் அப்போஸ்தலர் 28ல் வாசிக்கலாம்.

**சகலவற்றிலும்:**

இயேசுவின் நாமத்தினால் சகலவற்றையும் செய்ய முடியும் என வேதாகமம் கூறுகின்றது:

> **வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள். (கொலோசெயர் 3:17)**

இயேசுவின் நாமத்தினால் நீங்கள் சகலவற்றையும் செய்யும்போது, சிறிய சாதாரண வேலைகூட வல்லமையுள்ள ஆவிக்குரிய அனுபத்தின் திருப்புமுனையாக அமையும். உங்களால் ஆலயத்தின் தரையை இயேசுவின் நாமத்தினால் பெருக்கி ஒழுங்குபடுத்த முடியும். இயேசுவின் நாமத்தினால் உங்கள் குடும்பத்தாருக்காக உணவை தயார் செய்ய முடியும். நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பது முக்கியமானதல்ல, எப்படி செய்கின்றீர்கள் என்பதுதான முக்கியமானது. அவைகள் இயேசுவின் நாமத்தினால் செய்யப்படனவா?

## அந்நாமத்திற்காக வேதனையடைதல்

> **அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்... அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால் என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்... (யோவான் 15:20-21)**

சீடர்கள் சுவிஷேசத்தினிமித்தம் வேதனைப்பட்டனர்:

> **அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்ட படியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்,**
>
> **தினந்தோறும் தேவாலயத்திலேயும் வீடுகளிலேயும் இடைவிடாமல் உபதேசம்பண்ணி, இயேசுவே கிறிஸ்துவென்று பிரசங்கித்தார்கள். (அப்போஸ்தலர் 5:41-42)**

சீடர்கள் தேவனுடைய பெயருக்காக தங்களது உயிரையும் பணயம் வைத்தனர்:

> **நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட,**
>
> **எங்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சில மனுஷரை உங்களிடத்திற்கு அனுப்புகிறது ஒருமனப்பட்டுக் கூடின எங்களுக்கு நலமாகக் கண்டது. (அப்போஸ்தலர் 15:25-26)**

ஊழியத்தில் ஈடுபடுகின்றபோது இயேசுவின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளபோதும், சீடர்கள் வேதனைப்பட்ட மாட்டார்கள் என்பது அதன் அர்த்தமாகாது. பேதுரு, பவுல் மற்றும் சீலாவும் சிறையிலிருந்தனர். இச்சீடர்கள் கல்லெறியுண்டனர், அடிக்கப்பட்டனர், சுவிஷேசத்தினிமித்தம் எதிரிகளால் பவுல் மரணமடையும்படியாக அடிக்கப்பட்டார். அவர்களது ஊழியங்கள் முடிவடைந்தபோது, அநேகமான சீடர்கள் சுவிஷேசத்தினிமித்தம் இரத்தசாட்சிகளாக மரித்தார்கள். இவ்விதமாகவே சிறையிலிருந்த பேதுரு விடுதலை செய்யப்பட்ட பின்னர், நற்செய்தியின் நிமித்தம் மரித்தார்.

எபிரெயர் 11ம் அதிகாரம், ஆண்களும் பெண்களும் விசுவாசத்தினால் விடுவிக்கப்பட்ட கதைகளைக் கொண்டுள்ளது. அவர்களது ஊழியத்தின் முடிவில், விசுவாசத்தோடு சுவிஷேசத்தினிமித்தம் மரித்ததையும் அவை பதிவு செய்து வைத்துள்ளது. பெதுரு எமக்கு கூறுவதாவது:

**நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள்: ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார்: அவர்களாலே தூஷிக்கப்படுகிறார், உங்களாலே மகிமைப்படுகிறார். (1 பேதுரு 4:14)**

நீங்கள் மேலும் பதினேழாம் அதிகாரத்தில் வல்லமையுள்ள பாடுகளின் ஐக்கியத்தைக் குறித்து அறிந்து கொள்வீர்கள்.

## பெயரின் ஆளுமை (ஆதிக்கம்)

இயேசுவின் நாமத்தினால் நீங்கள் தேவராஜ்ஜியத்தின் பங்குதாரராக மாறுகின்றீர்கள்:

**ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும்,**

**இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (கொலோசெயர் 1:12-13)**

இயேசுவின் பேரரசின் ஒரு பகுதியாக, நீங்கள் வல்லமையின் ஆளுகையின் உரிமையை பெறுகின்றீர்கள்:

**அல்லாமலும், ஒருவனுடைய மீறுதலினாலே, அந்த ஒருவன்மூலமாய், மரணம் ஆண்டுகொண்டிருக்க, கிருபையின் பரிபூரணத்தையும் நீதியாகிய ஈவின் பரிபூரணத்தையும் பெறுகிறவர்கள் இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார்களென்பது அதிகநிச்சயமாமே. (ரோமர் 5:17)**

இயேசுவின் பெயரின் மூலமாக நீங்கள் ஆளுகை செய்யப்படுகின்றீர்கள். எதிர்மறையான சூழ்நிலைகளின்போதும் இயேசுவின் பெயரின் மூலமாக நீங்கள் ஆளுகை செய்யப்படுகின்றீர்கள். சத்துருவினால் கொண்டு வரப்படுகின்ற எதிர்மறையான சூழ்நிலைகளின்போதும் இயேசுவின் பெயரின் மூலமாக நீங்கள் ஆளுகை செய்யப்படுகின்றீர்கள்.

## இறுதி மேற்கோள்கள்

இயேசுவின் பெயரைக் குறித்த இறுதி வேதாகமக் குறிப்புகள் வெளிப்படுத்தல் புத்தகத்தில் காணப்படுகின்றது. விசுவாசிகள் தங்களுடைய இரட்சகரின் சமுகத்தில் புதிய வானத்திலும், பூமியிலும் இருப்பதைக் குறித்து பேசுகின்றது:

**இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.**

**அவருடைய ஊழியக்காரர் அவரைச் சேவித்து, அவருடைய சமுகத்தைத் தரிசிப்பார்கள். அவருடைய நாமம் அவர்களுடைய நெற்றிகளில் இருக்கும். (வெளிப்படுத்தல் 22:3-4)**

- நாம் கொடுள்ள அப்பெயர் அன்புக்கு பாத்திரமானது...
- அப்பெயர் எம்மால் ஊழித்திலும் ஜெபத்திலும் அதிகாரத்துடன் பாவிக்கப்பட்டது...
- அப்பெயர் எம் வாழ்வில் ஆளுகை செய்தது...
- இயேசுவின் பெயர்: நித்தியத்தில் எம்மை அடையாளப்பப்படுத்தும்...

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. வேதாகம காலத்திலிருந்த  பெயர்களின் முக்கியத்துவத்தை விபரிக்கவும்.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இயேசு என்ற பெயரை யோசேப்பிற்கு கட்டளையிட்டது யார்?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. அனைத்து பிரபஞ்சத்திலும் மிகப்பெரிய பெயர் யாது?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. இயேசு எவ்வாறு தனது பெயரை பெற்றார்?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. நீங்கள் எவ்வாறு உங்களது விசுவாசத்தை இயேசுவின் நாமத்திலும், அதன் வல்லமையிலும் வளர்ப்பீர்கள்?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

7. பின்வரும் வாக்கியங்களை வாசித்து, வசனத்தை பூர்த்தி செய்யவும்:

அ. இயெசுவின் பெயர் இ...................... அவசியம்.
ஆ. நீங்கள் சுகவீனத்திற்கான கு......................... ஜெபிக்கும்போது, அது இயேசுவின் நாமத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
இ. இ.......................... இயேசுவின் நாமத்தினால் வரும்.
ஈ. நாம் இயேசுவுக்காக .......................... ............................ செய்ய வேண்டும்.
உ. பி........................... துரத்துதல்  இயேசுவின் நாமத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.
ஊ. நாம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரை ந.............. வேண்டும்.

8. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரியெனவும் , பிழையாயின் பிழையெனவும் இடைவெளியில் எழுதவும்.

அ. .................. சகலவற்றிற்காகவும் நாம் இயேசுவின் நாமத்தினால் நன்றி சொல்ல வேண்டும்.
ஆ. ................. பரிசுத்த ஆவியானவரால் இயேசு என்ற பெயர் வழங்கப்பட்டது.
இ. ................. இயேசுவின் நாமத்தினால் பாதுகாப்பு இருக்கின்றது எனும்போது, அதன் அர்த்தம் நாம் ஒருபோதும் அவருக்காக வேதனை அனுபவிப்பதில்லை என்பதாகும்.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

பின்வரும் பட்டியல் புதிய ஏற்பாட்டிலுள்ள இயேசுவின் பெயர்கள் அனைத்தையும் கொண்டுள்ளது. இப்படிட்டியலிலுள்ள இயேசுவின் பெயரிலுள்ள வல்லமையை தொடர்ந்தேர்ச்சியாக ஆய்வு செய்யவும்.

**மத்தேயு:** 1:21; 1:23; 1:24,25; 10:22; 12:18,21; 18:5; 18:19,20; 19:29; 28:19

**மாற்கு:** 9:38-41; 16:17-18

**லூக்கா:** 10:17; 24:46-47

**யோவான்:** 1:12; 2:23; 3:18; 14:13-14; 14:26; 15:16; 15:20-21; 16:23,24,26; 20:31

**அப்போஸ்தலர்:** 2:21; 2:38; 3:6; 3:16; 4:7,8,10,12,17,18; 4:29-30; 5:28,40-42; 8:12; 9:14-16; 9:21,27,29; 10:43; 10:48; 15:25-26; 16:18; 19:5

**ரோமர்:** 1:5; 10:13

**1 கொரிந்தியர்:** 1:2; 1:10; 6:11

**எபேசியர்:** 5:20

**பிலிப்பியர்:** 2:9-11

**கொலோசெயர்:** 3:17

**2 தெசலோனிக்கேயர்:** 1:12

**2 தீமோத்தேயு:** 2:19

**எபிரெயர்:** 1:4; 6:10; 13:15

**யாக்கோபு:** 5:14

**1 பேதுரு:** 4:14

**1 யோவான்:** 2:12; 3:23; 5:13

**வெளிப்படுத்தல்:** 19:12,13,16; 22:3-4

அதிகாரம் பதிமூன்று

# வல்லமையின் கொள்கை ஏழு: ஜெபத்தின் வல்லமை

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ ஜெபமும், உபவாசமும் எவ்வாறு தேவ வல்லமையை வெளிப்படுத்துகிறது என்பதை விபரிக்கவும்,
- ☐ ஜெபத்தை விபரிக்கவும்,
- ☐ பல்வேறுப்பட்ட ஜெபமட்டத்தை அடையாளம் காணவும்,
- ☐ பல்வேறுப்பட்ட ஜெபத்தை அடையாளம் காணவும்,
- ☐ ஜெபத்தின் தடைகளை அடையாளம் காணவும்,
- ☐ உபவாசத்தை விபரிக்கவும்,
- ☐ இரண்டு விதமான உபவாசத்தை அடையாளம் காணவும்,
- ☐ உபவாசத்தின் நோக்கத்தை விபரிக்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு 5:16)**

## அறிமுகம்

இயேசுவின் நாமத்திலுள்ள வல்லமையை குறித்து நீங்கள் கற்றீர்கள், பிதாவிடம் விசுவாசிகள் விண்ணப்பங்களை ஜெபத்தில் செலுத்தும் போது அவரது பெயரை பாவிக்க முடியும். இயேசு என்ற பெயரில் ஜெபிக்கிற போது அதன் வல்லமையைக்குறித்து இப்பாடம் ஆராயும். உபவாசம் பற்றிய நடைமுறைகளையும் சேர்த்து ஆராய்வோம். விசுவாசிகளின் வாழ்வில் தேவனது வல்லமை வெளிப்பட ஜெபமும், உபவாசமும் வல்லமையின் கொள்கைகளாக இருக்கின்றன.

## ஜெபத்தின் வரைவிலக்கணம்

ஜெபம் தேவனுடன் தொடர்பு கொள்வதாகும். அடிப்படையில் வித்தியாசமான வடிவமாக இருக்கின்றபோதும், மனிதன் தேவனுடன் பேசுகின்றபோதும் தேவன் மனிதனுடன் பேசுகிறார். ஜெபம் வரையறுக்கப்படுகின்றதாவது:

---

“ஆவிக்குரிய போர்கலைகள்: ஆவிக்குரிய போராட்டத்தின் கையேட்டில்” ஜெபமும், உபவாசம் பற்றி கூறப்பட்டவைகளில் சில காரியங்கள் இப்பாடத்தில் நகல் செய்யப்படுகிறது. இது நடைமுறையின் ஆயுதங்கள் மட்டுமின்றி, வல்லமையின் கொள்கைகளாகவும் இருக்கின்றன. இதன் காரணமாகவே சில காரியங்கள் புதிய காரியங்களுடன் மீண்டும் இணைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| கர்த்தரின் நாமத்தை அழைத்தல்: | ஆதியாகமம் 12:8 |
| கர்த்தரை நோக்கி அழுதல்: | சங்கீதம் 27:7; 34:6 |
| தேவனண்டை நெருங்குதல்: | சங்கீதம் 73:28; எபிரெயர் 10:22 |
| நோக்குதல்: | சங்கீதம் 5:3 |
| ஆன்மாவை உயர்த்துதல்: | சங்கீதம் 25:1 |
| இருதயத்தை உயர்த்துதல்: | புலம்பல் 3:41 |
| இருதயத்தை ஊற்றிவிடல்: | சங்கீதம் 62:8 |
| ஆன்மாவை ஊற்றிவிடல்: | 1 சாமுவேல் 1:15 |
| பரலோகத்தை நோக்கி கதறுதல்: | 2 நாளாகமம் 32:20 |
| தேவனை பரிதாபம் கொள்ள செய்தல்: | யாத்திராகமம் 32:11 |
| தேவனை தேடுதல்: | யோபு 8:5 |
| தேவனது முகத்தை தேடுதல்: | சங்கீதம் 27:8 |
| இரத்து செய்யும்படி விண்ணப்பித்தல்: | யோபு 8:5; எரேமியா 36:7 |

## இயேசு கிறிஸ்துவின் ஜெப ஜீவியம்

கர்த்தராகிய இயேசுவின் வாழ்வில் ஜெபமானது வல்லமையுள்ள ஆயுதமாக இருந்தது:

### இயேசு ஜெபத்திற்கு முதன்மை செலுத்தினார்:

அவர் இரவும், பகலும் எவ்வேளையிலும் ஜெபித்தார்: லூக்கா 6:12-13
ஜெபம் உணவை பார்க்கிலும் முன்னுரிமையை பெற்றது: யோவான் 4:31-32
ஜெபம் வேலைகளைபார்க்கிலும் முன்னுரிமையை பெற்றது: யோவான் 4:31-32

### முக்கியமான சகல காரியங்களும் ஜெபத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது:

அவருடைய ஞானஸ்நானத்தின் போது: லூக்கா 3:21-22
முதலாவது ஊழிய பயணத்தின் போது: மாற்கு 1:35; லூக்கா 5:16
சீடர்களை தேர்ந்தெடுக்கும் முன்னர்: லூக்கா 6:12-13
5,000 பேர்களை போஷிக்கும் முன்னும், பின்னும்: மத்தேயு 14:19,23; மாற்கு 6:41,46; யோவான் 6:11,14-15
4,000 பேர்களை போஷிக்கும் போது: மத்தேயு 15:36; மாற்கு 8:6,7
பேதுருவின் அறிக்கையின் போது: லூக்கா 9:18
மறுரூபமாகும் முன்: லூக்கா 9:28,29
70 பேர் திரும்பி வரும்போது: மத்தேயு 11:25; லூக்கா 10:21
லாசருவின் கல்லறையண்டையில்: யோவான் 11:41-42
சிறுவர்களை ஆசீர்வதிக்கும் போது: மத்தேயு 29:13
கிரேக்கர்களின் வருகையின் போது: யோவான் 12:27-28
அவரது பெரிதான மனவேதனைக்கு முன்னர்: மத்தேயு 26:26-27; மாற்கு 14:22-23; லூக்கா 22:17-19
பேதுருவுக்காக: லூக்கா 22:32
பரிசுத்த ஆவியானவரை கொடுக்கும் போது: யோவான் 14:16
எம்மாவுவின் வீதியில்: லூக்கா 24:30-31
பரமேறுதலுக்கு முன்னதாக: லூக்கா 24:50-53
அவரை பின்பற்றியோருக்காக: யோவான் 17

## ஜெப நிலைகள்

“சகல வேண்டுதலோடும்” எப்போதும் சகல விசுவாசிகளும் ஜெபிக்க வேண்டும் என்று பவுல் அழைக்கிறார். வேறொரு மொழிபெயர்ப்பில், “சகலவிதமான வேண்டுதல்கள்” என்று வாசிக்கிறோம் (புழழனளிநநன மொழிபெயர்ப்பு). இந்த ஜெபம் பல்வேறு நிலைகளையும், வகைகளையும் குறிக்கிறது.

ஜெபத்தில் மூன்று நிலைகள் இருக்கின்றது. கேட்டல், தேடுதல் மற்றும் தட்டுதல்:

> **கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.**

**ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். (மத்தேயு 7:7-8)**

கேட்டல் ஜெபத்தின் முதல் நிலையாகும். இது சாதாரணமாக தேவனிடம் ஜெபிப்பதும், உடனடியாகவே பதிலை பெறும் நிலையாகும். பதிலைபெறுவதற்குரிய நிபந்தனைகள் கேட்பதாகும்:

**நீங்கள் விண்ணப்பம்பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. (யாக்கோபு 4:2)**

எமக்கு வல்லமையுள்ள ஆவிக்குரிய ஆயுதமாக ஜெபம் இருக்கின்றபோதும், அநேகர் இதை பயன்படுத்துவதில்லை. அவர்கள் கேட்காததினாலே பெற்றுக்கொள்ளுவதும் இல்லை.

தேடுதல் ஜெபத்தின் ஆழமான நிலையாக இருக்கிறது. இவ்ஜெபத்திற்கான பதில் உடனடியாகவே கிடைப்பதில்லை. மேலறையில் 120 பேர் காத்திருந்து ஜெபித்தது இதற்கு உதாரணமாக இருக்கிறது. இங்கு ஆண்களும், பெண்களும் பரிசுத்த ஆவியானவரின் வாக்குத்தத்தம் நிறைவேறுமளவும் தொடர்ந்து பதிலை தேடிக்கொண்டிருந்தனர் (அப்போஸ்தலர் 1-2).

தட்டுதல் ஜெபத்தின் ஆழமான நிலையாகும். ஜெபித்தன் அளவிற்கேற்ப பதில் நீண்ட காலமாகி பின் தாமதமாக கிடைக்கும். இதற்கு லூக்கா 11:5-10 வரையும் இயேசு கூறிய உவமை உதாரணமாக இருக்கின்றது. தட்டும் நிலையானது ஆவிக்குரிய போராட்ட ஜெபமாகும். இதற்கு உதாரணம் தானியேலின் ஜெபமாகும். அவன் தட்டிக்கொண்டே இருந்த போதும், புலப்படும் வகையில் பதில் கொடுக்கப்படவில்லை (தானியேல் 10).

## ஜெபத்தின் மாதிரிகள்

பல்வேறுப்பட்ட ஜெபத்தின் மாதிரிக்கு உதாரணமாக கர்த்தர் கற்றுக்கொடுத்த ஜெபம் தரப்பட்டுள்ளது (மத்தேயு 6:9-13). ஜெபத்தின் மாதிரிகளில் உள்ளடங்குபவை:

### 1. துதியும் ஆராதனையும்:

தேவனுடைய சமூகத்திற்குள் நீங்கள் துதி, ஆராதனையுடன் பிரவேசிக்க வேண்டும்:

**அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள். (சங்கீதம் 100:4)**

ஆராதனை தேவனுக்கு கனப்படுத்தலாகும். துதித்தல் என்பது நன்றிகளை செலுத்துதலாகும். இது தேவன் என்ன செய்தார் என்பதற்காக அல்ல, அவர் எப்படிப்பட்டவர் என்பதற்காகவாகும். நீங்கள் அவரை ஆவியோடும், உண்மையோடும் ஆராதிக்க வேண்டும்:

**உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்.**

**தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார். (யோவான் 4:23-24)**

துதியும், ஆராதனையும் இவ்வாறு இருக்கலாம்:

| | |
|---|---|
| பாடுதல்: | சங்கீதம் 9:2,11; 40:3; மாற்கு 14:26 |
| கேட்கக்கூடியதாக சப்தமிட்டு ஜெபித்தல்: | சங்கீதம் 103:1 |
| சப்தமிடுதல்: | சங்கீதம் 47:1 |
| கரங்களை உயர்த்தி: | சங்கீதம் 63:4; 134:2; 1 தீமோத்தேயு 2:8 |
| கரங்களை தட்டி: | சங்கீதம் 47:1 |
| இசைக்கருவிகளுடன்: | சங்கீதம் 150:3-5 |
| நின்றப்படி: | 2 நாளாகமம் 20:19 |
| குனிந்தபடி: | சங்கீதம் 95:6 |
| நடனமாடி: | சங்கீதம் 149:3 |
| முழங்காற்படியிட்டு: | சங்கீதம் 95:6 |
| சாஷ்டாங்கமாய் விழுந்தபடி: | சங்கீதம் 149:5 |

## 2. ஒப்புக்கொடுத்தல்:

இவ்விதமான ஜெபம் உங்கள் ஜீவியத்தை தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுப்பதாக அமையும். அர்ப்பணிப்பும், பிரதிஷ்டையும் கொண்ட ஜெபமாகவும் அமையலாம்.

## 3. விண்ணப்பம்:

ஜெப விண்ணப்பம் எனும்போது அது வேண்டுதலாக அமைகிறது. வேண்டுதல்கள் தேவ சித்தத்திற்கு அமைவாக, எழுதப்பட்ட வார்த்தையின் வெளிப்பாட்டின் அடிப்படையில் அமைய வேண்டும். விண்ணப்பங்களானது கேட்டல், தேடுதல் அல்லது தட்டுதல் என்ற நிலையிலும் அமையலாம். தேடுதல் இரந்து கேட்டல் என்னும் சொல் இன்னுமொரு வகையான ஜெபமாக இருக்கிறது. “இரந்து கேட்டல் என்பது தேவனிடம் தேவையைக் குறித்து உறுதியாக கேட்பதாகும்.”

## 4. பாவ அறிக்கையும், மனந்திரும்புதலும்:

பாவத்திற்காக மன்னிப்பு கேட்டு, வருந்தி மனந்திரும்பி ஜெபிக்கும் ஜெபமாகும்:

> **நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1:9)**

## 5. பரிந்து பேசுதல்:

பரிந்து பேசும் ஜெபம் மற்றவர்களுக்கானது, பரிந்து பேசுகிறவர் மற்றவர்களுக்காக தேவனிடம் கெஞ்சுதல் அல்லது மற்றவரின் இடத்தை எடுத்துக் கொள்ளுதல் என்பதாகும்.

ஒருமுறை தேவன் உலகத்தை பார்க்கின்றபோது பரிந்து பேசுகிறவன் ஒருவனுமில்லை எனக்கண்டார் என்று வேதாகமம் பதிவு செய்துள்ளது:

> **ஒருவரும் இல்லையென்று கண்டு, விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று ஆச்சரியப்பட்டார். ஆதலால் அவருடைய புயமே அவருக்கு இரட்சிப்பாகி, அவருடைய நீதியே அவரைத் தாங்குகிறது. (ஏசாயா 59:16)**

பரிந்துபேசுகிறவன் இல்லையென்று கண்டதேவன், அத்தேவையை சந்தித்தார். அவர் இயேசுவை அனுப்பினார்:

**தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. (1 தீமோத்தேயு 2:5)**

**ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர். அவரே எழுந்துமிருக்கிறவர். அவரே தேவனுடைய வலதுபாரிசத்திலும் இருக்கிறவர்ஞூ நமக்காக வேண்டுதல்செய்கிறவரும் அவரே. (ரோமர் 8:34)**

**மேலும், தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல்செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். (எபிரெயர் 7:25)**

**என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன். ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். (1 யோவான் 2:1)**

நீதிமன்றத்தில் ஒரு வக்கில் மற்றொருவருக்காக சட்டப்படி அல்லது சட்ட ஆலோசகராக செயல்படுவார். பரிந்து பேசுதல் மற்றொருவருக்காக தேவனிடம் ஜெபிக்கும் ஆவிக்குரிய போராட்டமாகும். சில வேளைகளில் இப்பரிந்து பேசுதல், புரிந்து கொள்ளுதலை ஏற்படுத்துகிறது. நீங்கள் உங்களது சொந்த மொழியில் பரிந்து பேசலாம்:

**நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்.**

**ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்....**
**(1 தீமோத்தேயு 2:1-2)**

மற்ற நேரங்களில் பரிந்து பேசுதல் பரிசுத்த ஆவியானவராலும் செய்யப்படுகின்றது. இது மிகப்பெரிய ஆவிக்குரிய சுமையாக இருக்கிறது. இது தெரியாத பாஷையாகவும் இருக்கலாம். இன்னுமொருவரால் அல்லது பரிசுத்த ஆவியானவரால் உங்களுக்காக பரிந்து பேசுதல் மேற்கொள்ளப்படலாம். இக்காரியம் நிகழும் போது பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கூடாக, அவரது நேரடியாக வழிநடத்துவார். இவ்விதமான பரிந்து பேசுதலை உங்களால் புரிந்து கொள்ள முடியாது:

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். (ரோமர் 8:26)**

மாதிரி ஜெபம்

இயேசு மண்ணுலகில் தமது ஊழியத்தை செய்தபோது, அவரது சீடர்கள் அவரிடம் வந்து சுவாரஸ்யமான வேண்டுதலை முன்வைத்தனர்:

**அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, ஜெபம்பண்ண எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான். (லூக்கா 11:1)**

சீடர்கள் பிரசங்கிக்கும்படியாகவோ அல்லது அற்புதங்களை நடப்பிக்கும்படியாகவோ கேட்கவில்லை. உறவுகளை கட்டி எழுப்புவது எவ்வாறு என்பதற்கான பாடங்களை கேட்கவில்லை. அவர்கள் அற்புதங்களைக்குறித்தும், சரீர சுகத்தைக்குறித்தும் விசாரிக்கவில்லை. எவ்வாறு ஜெபிக்க வேண்டும் என்றே கேட்டனர். இவ்விருப்பத்தை உருவாக்கியது என்ன? இது இயேசுவின் ஜெப வாழ்க்கை மற்றும் அவரது ஊழியத்தில் புலப்பட்ட தாக்கத்தினால் ஏற்பட்டது. சீடர்கள், ஆவிக்குரிய வியூகங்களின் கிரியைகளுக்கான வல்லமையான சாட்சிகளை கொண்டிருந்தனர்.

மாதிரி ஜெபத்தை அடுத்த பக்கத்தில் வாசித்து, நாம் சம்பாஷிக்கப் போகிற பல்வேறுப்பட்ட ஜெப வகைகளை அவதானிக்கவும்:

| | |
|---|---|
| பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. | துதி ஆராதனை |
| உம்முடைய ராஜ்யம் வருவதாக் உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. | ஒப்புக்கொடுத்தல் |
| எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். | விண்ணப்பம் |
| எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். | பாவ அறிக்கை பரிந்து பேசுதல |
| எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். | விண்ணப்பம் |
| ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. (மத்தேயு 6:9-13) | துதி ஆராதனை |

## எவ்வாறு ஜெபிப்பது

உங்களுடைய வேதாகமத்தில் பின்வரும் வேதவசனங்களை கவனியுங்கள். இவ்வேதவாக்கியம் எவ்வாறு ஜெபிப்பது என்பதை உங்களுக்குக் கற்றுத்தரும்:

-ஜெபம் தேவனிடத்தில் செய்யப்பட வேண்டும்: சங்கீதம் 5:2
-வெறுமையான வேண்டுதல் தள்ளப்பட்டு விடும், ஆனால் அக்கறையுடனான வேண்டுதல் தள்ளப்படமாட்டாது: மத்தேயு 6:7; தானியேல் 6:10; லூக்கா 11:5-13; 18:1-8
- மற்றவர்களுக்காக ஜெபிக்காவிட்டால் அது பாவம்: 1 சாமுவேல் 12:23
- ஜெபம் புரிந்துணர்வுடன் செய்யப்பட வேண்டும்: எபேசியர் 6:18
- ஆவியில் ஜெபிக்க வேண்டும்: ரோமர் 8:26; யூதா 20
- தேவ சித்தப்படி ஜெபிக்க வேண்டும்: 1 யோவான் 5:14-15
- இரசகியமாக ஜெபிக்க வேண்டும்: மத்தேயு 6:6
- அளவைவிட தராதரம் முக்கியம்: அதிகமாக பேசுவதனால் ஜெபம் வெற்றியடைய மாட்டாது. மத்தேயு 6:7
- எப்பொழுதும் ஜெபியுங்கள்: லூக்கா 21:36; எபேசியர் 6:18
- தொடர்ந்து ஜெபியுங்கள்: ரோமர் 12:12
- இடைவிடாமல் ஜெபியுங்கள்: 1 தெசலோனிக்கேயர் 5:17
- இயேசுவின் நாமத்தினால் பிதாவிடம் ஜெபியுங்கள்: யோவான் 15:16
- மாதிரி ஜெபத்தின்படி ஜெபியுங்கள்: மத்தேயு 6:9-13
- மன்னிக்கும் ஆவியுடன் ஜெபியுங்கள்: மாற்கு 11:25
- தாழ்மையுடன் ஜெபியுங்கள்: மத்தேயு 6:7
- சிலவேளைகளின் உபவாசத்துடன் ஜெபியுங்கள்: மத்தேயு 17:21
- உற்சாகத்துடன் ஜெபியுங்கள்: யாக்கோபு 5:16; கொலோசெயர் 4:12
- தேவனிடத்தில் ஒப்புக்கொடுத்து ஜெபியுங்கள்: லூக்கா 22:42
- ஜெபத்தில் கட்டுதல், கட்டவிழ்த்தல் போன்ற உத்திகளை பாவியுங்கள்: மத்தேய 16:19

## எதற்காக நீங்கள் ஜெபிக்க வேண்டும்

- எருசலேமின் சமாதானத்திற்காக: சங்கீதம் 122:6
- அறுவடைக்கான வேலையாட்களுக்காக: மத்தேயு 9:38
- சோதனைக்குள் பிரவேசியாமல் இருப்பதற்காக: லூக்கா 22:40-46
- உங்கள் எதிரிகள் உங்களை கேவலமாக பாவிக்கின்றபோது: லூக்கா 6:28
- அனைத்து பரிசுத்தவான்களுக்காக: எபேசியர் 6:18
- வியாதியஸ்தருக்காக: யாக்கோபு 5:14
- ஒருவருக்காக ஒருவர் (மற்றவர்களின் பாரத்தை சுமந்து): யாக்கோபு 5:16
- சகல மனுஷர், இராஜாக்கள், அதிகாரத்திலுள்ளவர்களுக்காக: 1 தீமோத்தேயு 2:1-4
- எமது அன்றாட தேவைகளுக்காக: மத்தேயு 6:11
- ஞானத்திற்காக: யாக்கோபு 1:5
- சுகத்திற்காக: யாக்கோபு 5:14-15
- மன்னிப்பிற்காக: மத்தேயு 6:12
- தேவனுடைய சித்தப்படி இராஜ்ஜியம் நிறுவப்பட: மத்தேயு 6:10
- வேதனைகளில் இருந்து விடுதலை பெறும்படியா: யாக்கோபு 5:13

## வாக்குத்தத்தத்தை பற்றிக்கொண்டு ஜெபியுங்கள்

**நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். (யாக்கோபு 4:3)**

தேவன் தமது வாக்குத்தத்தத்தின்படி ஜெபங்களுக்கு பதிலளிக்கிறார். இந்த வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் நீங்கள் ஜெபிக்கும்பட்சத்தில் உங்களது ஜெபத்திற்கு பதில் கிடைக்காது. இது ஒரு தகப்பன் தன் பிள்ளைகளிடம் தொடர்பு கொள்வதைப்போன்றது. எந்த பெற்றோரும் அவர்களது பிள்ளைகள் கேட்காத, விரும்பாத பொருட்களை கொடுக்கமட்டார்கள். சில விடயங்கள் செய்ய வேண்டும் என்று தெளிவான பின்னரே அதை செய்வார்கள். இவ்விதமான வரையறைக்குள்ளேயே தகப்பன் தன்பிள்ளைக்கு பதிலளிக்கிறார்.

தேவனுடை இப்படித்தான் ஜெபத்தை அவரது வாக்குறுதியின் அடிப்படையில் அமைக்க வேண்டும். தேவன் வாக்குத்தத்தம் செய்திருப்பதை கற்றுக்கொண்டு, அதனடிப்படையில் ஜெபிக்கவும். வேதாகமத்தின் வாக்குத்தத்தங்களை குறித்து வைத்துக்கொள்வது நல்ல வழிமுறையாகும். நீங்கள் ஜெபிக்கின்றபோது வேதாகமத்தின் வாக்குத்தத்தங்களை பாவியுங்கள்.

ஜெபத்திற்கான தடைகள்

உங்கள் ஜெபங்களை தடுக்கும் சில காரியங்கள்:

- பலவிதமான பாவங்கள்: ஏசாயா 59:1-2; சங்கீதம் 66:18; ஏசாயா 1:15; நீதிமொழிகள் 28:9
- இருதயத்திலுள்ள விக்கிரகங்கள்: எசேக்கியேல் 14:1-3
- மன்னிக்காத ஆவி: மாற்கு 11:25; மத்தேயு 5:23
- சுயநலமும், தவறான நோக்கங்களும்: நீதிமொழிகள் 21:13; யாக்கோபு 4:3
- தகாத விண்ணப்பங்கள்: யாக்கோபு 4:2-3
- திருமணம் செய்த துணையை தவறாக நடத்துதல்: 1 பேதுரு 3:7
- சுய நீதி: லூக்கா 18:10-14
- அவிவிசுவாசம்: யாக்கோபு 1:6-7
- கிறிஸ்துவையும், அவரது வார்த்தையையும் மதிக்காமை: யோவான் 15:7
- மனதுருக்கத்தின் குறைப்பாடு: நீதிமொழிகள் 21:13

- மாய்மாலம், பெருமை, அர்த்தமற்ற வார்த்தைகள்: மத்தேயு 6:5; யோபு 35:12-13
- தேவ சித்தப்படி கேளாமை: யாக்கோபு 4:3
- இயேசுவின் நாமத்தில் கேளாமை: யோவான் 16:24
- சாத்தானால் ஏற்படும் படைகள்: தானியேல் 10:10-13; எபேசியர் 6:1
- தேவ ராஜ்ஜியத்தை முதலாவதாக தேடாமை: நீங்கள் முதலாவது தேவனுடைய ராஜ்ஜியத்தை தேடுவீர்களானால் மற்றவை தரப்படும் என்று வாக்குத்தத்தத்தை பெற்றுள்ளீர்கள்: மத்தேயு 6:33
- உங்கள் விண்ணப்பங்கள் கேட்கப்படாவிட்டால், அதையிட்டு தேவனுக்கு உயர்ந்த நோக்கம் இருக்கும்: 2 கொரிந்தியர் 12:8-9
- எதற்காக ஜெபிக்கின்றோம் என்றறியாமல் ஜெபிக்கிறபோது, ஜெபத்திற்கு தடையேற்படுகின்றது. இதனாலேயே பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கூடாக ஜெபிக்க வழிநடத்துவது முக்கியமாக இருக்கின்றது: ரோமர் 8:26

## எப்போது ஜெபிக்க கூடாது

கிரியைச் செய்யும் முன்னதாக தேவனுடைய வழிநடத்தலையும், வழிகாட்டலையும் பெறுவதற்கு காத்திருந்து ஜெபிப்பது எவ்வளவு முக்கியமானது என்று கற்பது அவசியம். ஆனாலும் எவ்விதமாக ஜெபிக்கக் கூடாது என்பதும் அதற்கு சமமாக முக்கியத்துவம் பெறுகிறது. தேவன் கிரியை செய்யும்படி உங்களை அழைக்கிறபோது தொடர்ந்து ஜெபிக்காமல் கிரியை செய்ய ஆரம்பியுங்கள்.

உதாரணமாக, மாராவின் கசப்பான நீருக்காக மோசே தேவனிடம் அழுது ஜெபித்தான். மதுரமான நீரைப்பெறுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தேவன் அவனுக்கு காண்பித்தார். இவ்விடத்திலே இன்னும் கர்த்தரிடம் ஜெபித்துக் கொண்டிருப்பதால் பிரயோஜனமில்லை. தேவன் வெளிப்படுத்தினதின் படி மோசே கிரியைச் செய்ய வேண்டும். ஆயி பட்டணத்தில் இஸ்ரவேல் படுதோல்வியடைந்த போது இச்சத்தியமே யோசுவாவுக்கும் இடம் பெற்றது. தேவன் இஸ்ரவேலரிடம் பாவம் இருக்கிறது என்பதை வெளிப்படுத்தினார். அவர் யோசுவாவிடம் கூறியதாவது...

> **எழுந்திரு, நீ இப்படி முகங்குப்புற விழுந்துகிடக்கிறது என்ன? இஸ்ரவேலர் பாவஞ் செய்தார்கள்... எழுந்திரு. நீ ஜனங்களைப் பரிசுத்தம்பண்ணி.. (யோசுவா 7:10,11,13)**

அது ஜெபித்துக்கொண்டிருக்கும் நேரமல்ல. ஜெபத்தில் கிடைத்த வழிகாட்டலை கிரியை போட வேண்டிய நேரமே அது. தேவன் கூறினதை செய்யாமல் தவிர்த்துக் கொள்வதற்காக ஜெபத்தை பயன்படுத்த எண்ணுகின்றனர். இன்னும் சிலர் தேவன் ஏற்கனவே கொடுத்த பதிலில் விருப்பமற்று தொடர்ந்தும் ஜெபித்துக்கொண்டே இருக்கின்றார்கள். எண்ணாகமம் 22ம் அதிகாரத்தில் பிலேயாமின் கதையை கவனியுங்கள். தேவன் அக்காரியத்தை செய்யாதிருக் அவனை தெளிவாக தடுத்தவிட்டபோதும் அவற்காக மீண்டும் தேவனிடம் செல்வதற்கான உரிமை அவனுக்கு இல்லை (வசனம் 12).

## உபவாசத்தோடு கூடிய ஜெபம்

உபவாசத்தோடு ஜெபிக்கிறபோது ஜெபம் அதிக வல்லமையுள்ளதாக இருக்கும். உபவாசம் என்னும் போது மிக எளிமையான வரையறை உண்ணாமல் போவதாகும்.

### உபவாசத்தின் வல்லமை:

வேதாகமத்தின்படி இரண்டு வகையான உபவாசங்களுண்டு. முழுமையான உபவாசம் என்பது உண்ணா-மலும், குடிக்காமலும் இருப்பதாகும். இதற்கான உதாரணத்தை அப்போஸ்தலர் 9:9ல் காணலாம். உணவு சாப்பிட்ட போதும் குறிப்பிட்ட உணவுகளை தவிர்த்ததை தானியேல் 10:3ல் காணலாம்..

## பொதுவான மற்றும் தனிப்பட்ட உபவாசம்:

உபவாசம் என்பது தனிப்பட்ட முறையில் தேவனுக்கும் எமக்குமுள்ள காரியமாகும். எனவே இதையிட்டு பெருமையடையாமல் தனிமையாக செய்ய வேண்டும்:

> **நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள். அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது, அந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார். (மத்தேயு 6:16-18)**

சபையிலுள்ள தலைவர்கள் ஐக்கியத்திலுள்ள அனைவரையும் பொதுவாக உபவாகிக்க அழைக்கலாம்:

> **சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாசநாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். (யோவேல் 2:15)**

## உபவாசத்தின் நோக்கம்:

உபவாசத்தில் உறுதியான ஆவிக்குரிய நோக்கங்கள் இருக்கின்றன. இதை நாம் விளங்கிக் கொள்வது முக்கியமானது எனினும் தவறான காரியங்களுக்காக உபவாசிப்பது பயனற்றது. உபவாசத்தின் நோக்கங்களைக் குறித்து பின்வரும் வசனங்களில் கற்றுக்கொள்ளுங்கள். ஆவிக்குரிய போராட்டத்திற்கு மாபெரும் வல்லமையை உபவாசம் வெளிப்படுத்தும். நீங்கள் உபவாசிக்கிற போது:

- உங்களை தாழ்த்த: சங்கீதம் 35:13; 69:10
- பாவத்திலிருந்து மனந்திரும்ப: யோவேல் 2:12
- வெளிப்படுத்தலுக்காக: தானியேல் 9:2; 3:21-22
- துன்மார்க்கத்தின் கட்டுக்கள் அவிழ்க்க, பாரங்களை அகற்ற, ஒடுக்கப்படுதலின் விடுதலையை பெற, சகல கட்டுக்களும் உடைப்பட: ஏசாயா 58:6
- தரித்திரரை ஆவிக்குரிய, சரீரத்திற்குரிய விதத்தில் போஷிக்க: ஏசாயா 58:7
- தேவ சத்தத்தை கேட்க: 2 சாமுவேல் 12:16,22; யோனா 3:5,10

உபவாசம் தேவனை மாற்றாது, அது உங்களை மாற்றும். உங்களின் உறவின் அடிப்படையில் தேவன் உங்களோடு தொடர்பு கொள்வார். நீங்கள் மாற்றமடையும் போது, தேவன் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தில் உங்களோடு இடைபடுவார். தேவனை மாற்றுவதற்கு நீங்கள் உபவாசிக்கக்கூடாது, ஏனென்றால் அவர் மாறாதவர். ஆனால் உபவாசம் உங்களுடன் அவர் இடைபடுவதை மாற்றியமைக்கிறது. உதாரணத்திற்காக யோனாவின் புத்தகத்தை வாசியுங்கள்.

## உபவாசத்தின் நீளம்:

எவ்வளவு காலம் உபவாசிக்க வேண்டும் என்பதையிட்டு தேவன் உங்களது ஆவியில் பேசுவார். அவர் உங்களை குறுகிய அல்லது நீண்ட காலத்திற்கு உபவாசிக்க வழிநடத்துவார். ஏசா மற்றும் யாக்கோபுவின் கதை ஞாபகத்திலிருக்கிறதா? யாக்கோபு தனக்காக உணவை தயாரித்துக் கொண்டிருந்த போதும், பிறப்புரிமையை பெறுவதற்காக தன்னை மறந்தான். ஏசா ஒரு நேர உணவு வேளையில் உபவாசித்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. எந்த இரண்டு கொள்கைகள் தேவனுடைய வல்லமையை விசுவாசிகளின் ஜீவியத்தில் விடுதலையை கொடுக்கும்?

------------------------------------------------------------------  ------------------------------------------------------------------

3. இப்பாடத்தில் கலந்துரையாடிய மூன்று ஜெப மட்டங்கள் என்ன?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. மாதிரி ஜெபத்தில் உள்ள ஜெப உதாரணங்களை பட்டியலிடுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. இவ்வதிகாரத்தில் நாம் கற்றுக்கொண்டபடி, ஜெபத்திற்கான தடைகளை பட்டியலிடுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. ஜெபத்தின் வரைவிலக்கணத்தை தருக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

7. உபவாசத்தின் வரைவிலக்கணத்தை தருக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

8. இரண்டு வித உபவாசங்கள் என்ன?

------------------------------------------------------------------  ------------------------------------------------------------------

9. உபவாசத்தின் நோக்கங்களை சுருக்கமாக தருக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. ஜெபத்திற்கான பதில்களை வழங்கப்படும் விதமாவது:

| | |
|---|---|
| -அவ்வேளையில் உடனடியாக | ஏசாயா 65:24; தானியேல் 9:21-23 |
| -தாமதமாக | லூக்கா 18:7 |
| -அவ்வேளையில், எமது ஆசைகளிலிருந்தும் வித்தியாசமாக | 2 கொரிந்தியர் 12:8-9 |
| -எமது எதிர்ப்பார்ப்புக்களுக்கு அப்பால் | எரேமியா 33:3; எபேசியர் 3:20 |

ஞாபகத்திற்கு: இயேசு தோட்டத்தில் ஜெபித்த போதும் தேவனது சித்தம் மாற்றமடையவில்லை, ஆனாலும் தேவனுடைய சித்தம் நிறைவேறியது (எபிரெயர் 5:7-9). எமது ஜெபங்கள் பதில் பெறாதிருப்பதில்லை, ஆனால் அவைகள் நாம் எதிர்பார்க்கும் பதிலாக இருப்பதில்லை. பதிலளிக்கப்படாத ஜெபங்கள் உயர் நோக்கங்களுக்கானவை என நாம் நோக்க வேண்டும்.

2. தேவனுடைய மாதிரி ஜெபத்தினடிப்படையில் நாம் ஜெபிக்கிறபோது அது எமது அணுகுமுறையை ஊக்குவிக்கிறது:

| நாம் ஜெபிக்கிறபோது... | நாம் காண்கிறோம்... |
|---|---|
| பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே | குழந்தையின் அணுகுமுறை |
| உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக | மரியாதையான அணுகுமுறை |
| உம்முடைய ராஜ்யம் வருவதாக | எதிர்பார்க்கும் அணுகுமுறை |
| பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல-<br>பூமியிலேயும் செய்யப்படுவதாக. | தாழ்மையான அணுகுமுறை |
| எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று<br>எங்களுக்குத் தாரும். | நம்பிக்கையான அணுகுமுறை |
| எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது | பொறுத்துக்கொள்ளும் அணுகுமுறை |
| போல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். | மனம்வருந்தும் அணுகுமுறை |
| எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல்,<br>தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். | ஜெயமான அணுகுமுறை |
| ராஜ்யமும், வல்லமையும், மகிமையும்<br>என்றென்றைக்கும் உம்முடையவைகளே. | ஆராதிக்கும் அணுகுமுறை |

3. யாக்கோபு 5:17-18ஐ வாசிக்கவும். இது வல்லமையும் விசுவாசமும் கொண்ட மாதிரி ஜெபமாகும், ஏனென்றால்:
   - -இது தேவனது வாக்குத்தத்தத்தத்தை அடித்தளமாக கொண்டது: 1 இராஜாக்கள் 18:1
   - -வாக்குத்தத்தம் நிறைவேறுதலுக்கான நிபந்தனை: 1 இராஜாக்கள் 18:2
   - -அவர் பாதகமான அறிக்கையாக இருப்பினும் விடாமுயற்சியுடனிருந்தார்: 1 இராஜாக்கள் 18:43

4. வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் வல்லமையுள்ள ஜெபத்தின் உதாரணங்களை கற்றுக்கொள்ளுங்கள்:

**ஆதியாகமம்:**

ஜெபத்தின் வரலாறு ஆரம்பமாகிறது: 4:26
ஜெபம் மற்றும் ஆவிக்குரிய முன்னேற்றம்: 5:21-24

ஜெபம் மற்றும் பலிபீடம்: 12-13
ஒரு வாரிசுக்கான ஜெபம்: 15
அழுகையுடன் ஒரு ஜெயம்: 16
ஜெபமும் வெளிப்பாடும்: 17
துன்மார்க்கமான ஒரு நகரத்திற்கான ஜெபம்: 18-19
ஜெபத்திற்கு பின்னான தவறு: 20
கீழ்ப்படிதலுள்ள ஜெபம்: 22
மணப்பெண்ணின் ஜெபம்: 24
மனைவியின் ஜெபம்: 25:19-23
ஜெபம் விடயங்களை மாற்றும்: 26
ஜெபம் ஒரு வாக்குறுதியாக: 28
தவறு செய்த சகோதரனுக்கான பிராத்தனை: 32
மறைக்கப்பட்ட நெருப்புக்கான ஜெபம்: 39-41; 45:5-8; 50:20,24
கோத்திரத்தார் ஆசிர்வதிக்கப்பட ஜெபம்: 48-49

**யாத்திராகமம்:**

புலம்பலாகிய ஜெபம்: 1-2
சம்பாஷனையாகிய ஜெபம்: 3-4
மறையிடுதலாகிய ஜெபம்: 5-7
எல்லையற்ற ஜெபம்: 8-10
துதியாகிய ஜெபம்: 15
ஆபத்தான ஜெபம்: 17
அவசியமான ஜெபம்: 22:22-24
நியாயத்தீர்ப்பை தாமதப்படுத்திய ஜெபம்: 32
இஸ்ரவேலருக்கான மோசேயின் முதல் ஜெபம்: 32: 9-14
மோசேயின் இரண்டாம் ஜெபம்: 32: 30-34
மோசேயின் மூன்றாம் ஜெபம்: 32: 12-23
ஜெபமும் மறுரூபமாகுதலும்: 34

**எண்ணாகமம்:**

ஜெபம் ஆசீர்வாதமாக: 6:24-27
பாதுகாப்பு மற்றும் தீமையிலிருந்து பாதுகாப்புக்குமான ஜெபம்: 10:35-36
நியாயத்தீர்ப்பு விலகிப்போக ஜெபம்: 11:1-2
இருதயத்திற்கு ஊக்கங்கொடுக்கும் ஜெபம்: 11:10-35
ஒரு சாதுவான மனிதனின் ஜெயம்: 12
தெய்வீக கனத்தை உறுதிப்படுத்தும் ஜெபம்: 14
கலகத்திற்கு எதிராக தெய்வீக கிரியைக்கான ஜெபம்: 16
மரணத்திலிருந்து விடுதலைக்கான ஜெபம்: 21
ஜெபமும் தீர்க்கதரிசனமும்: 23-24
புதிய தலைவருக்கான ஜெபம்: 27

**உபாகமம்:**

ஒரு குறிப்பிட்ட வேலைக்கான ஜெபம்: 3:23-29
அருகிலிருந்தவனுக்கான ஜெபம்: 4:7

நியாயத்தீர்ப்பு தங்குவதற்கான ஜெபம்: 9:20,. 26-29
ஆசீர்வாதத்திற்கான ஜெபம்: 21:6-9
நன்றியறிவித்தலின் ஜெபம்: 26
பாடலாக ஒரு ஜெபம்: 32-33

**யோசுவா:**

சவாலாக ஜெபம்: 5:13-15
தேவன் பதிலளிக்காத ஜெபம்: 7
மோசமான முடிவுகளுடன் புறக்கணிக்கப்பட்ட ஜெபம்: 9:14
அற்புதங்களை ஏற்படுத்தும் ஜெபம்: 10

**நியாயாதிபதிகள்:**

வழிகாட்டலுக்கான ஜெபம்: 1
போர்காலத்தில் ஜெபம்: 4-5
அடையாளங்களுக்கான ஜெபம்: 6
பேராபத்தின்போது ஜெபம்: 10:10-16
உடன்படிக்கையோடு ஜெபம்: 11:30-40
பிறக்காத புழந்தைக்காக ஜெபம்: 13
மரணத்திற்கு முகங்கொடுக்கிறபோது ஜெபம்: 16:28-31
ஜெபத்திற்கு நேரடியான பதில்: 20:23-28
காணாமற்போன கோத்திரத்திற்கான ஜெபம்: 21:2-3

**1 சாமுவேல்:**

வார்ததைகளற்ற ஜெபம்: 1
தீர்க்கதரிசன பார்வையோடு ஜெபம்: 2:1-10
தேவாலயத்தில் ஜெபம்: 3
தேசிய பிரச்சனைக்கான ஜெபம்: 7
ராஜா ஒருவருக்காக ஜெபம்: 8
மெய்பிக்க ஒரு ஜெபம்: 12
கடும் துன்பம் அனுபவிக்கின்ற ராஜாவின் ஜெபம்: 14
கவலையுள்ள இருதயத்தின் ஜெபம்: 15:11
அமைதியான சிறுகுரலின் ஜெபம்: 16:1-12
தைரியத்தின் ரகசிய ஜெபம்: 17
விசாரணையான ஜெபம்: 23
கேட்காத காதுகளுக்கான ஜெபம்: 28:7
போரின் கெடுதியிலிருந்து மீளமைப்புக்கான ஜெபம்: 30

**2 சாமுவேல்:**

சொத்துடைமைக்கான ஜெபம்: 2:1
வெற்றிக்கான அடையாளங்களுக்கான ஜெபம்: 5:19-25
வீட்டின் மீதும் பேரரசின் மீதும் தேவாசீர்வதம் இருக்க ஜெபம்: 7:18-29
ஒரு வியாதிப்பட்ட பிள்ளைக்கான ஜெபம்: 12
ஆடம்பரமான ஜெபம்: 5:7-9

நோவை புரிந்து கொள்வதற்கான ஜெபம்: 21:1-12
ஒரு சங்கீதம் போன்ற ஜெபம்: 22
பெருமையை அறிக்கையிடும் ஜெபம்: 24:10-17

**1 இராஜாக்கள்:**

ஞானமுள்ள இருதயத்திற்கான ஜெபம்: 3
பிரதிஷ்டையான ஜெபம்: 8:12-61
முடங்கக்கூடாத கைக்காக ஜெபம்: 13:6
அடைக்கப்பட்ட வானங்களுக்கான ஜெபம்: 17
இறந்த மகன் உயிர்ப்பிக்கப்பட ஜெபம்: 17:20-24
தெய்வீக கனத்திற்கான ஜெபம்: 18:16-41
விடாமுயற்சியான ஜெபம்: 18:45
மரணத்திற்கான ஜெபம்: 19

**2 இராஜாக்கள்:**

இறந்த குழந்தைக்கான ஜெபம்: 4:2-37
தரிசனத்திற்கான ஜெபம்: 6:13-17
இணக்கமற்ற எதிரிகளிடமிருந்து விடுதலை பெற ஜெபம்: 19
நீடிய வாழ்வுக்கான ஜெபம்: 20:1-11

**1 நாளாகமம்:**

ஆவிக்குரிய செழிப்புக்கான ஜெபம்: 4:9-10
நம்பிக்கையான ஜெபம்: 5:20
பயமுள்ள ஜெபம்: 13:12
உடன்படிக்கையை உருவாக்க ஜெபம்: 17:16-27
அக்கினியால் பதிலளிக்கப்பட்ட ஜெபம்: 21
காவலுக்கான ஜெபம்: 23:30
ஜெபம் மற்றும் கொடுத்தல்: 29:10-19

**2 நாளாகமம்:**

தேசிய ஆபத்தில் ஜெபம்: 14-11
ஜெபமும் சீரமைப்பும்: 15
வரலாறுக்காக ஜெபமும் முறையிடுதலும்: 20:3-13
வேதனையான ஜெபம்: 33:13

**எஸ்ரா:**

நன்றி கூறும் ஜெபம்: 7:27-28
ஜெபமும் உபவாசமும்: 8:21-23
ஜெபமும் அறிக்கை செய்தலும்: 9:5-10:4

**நெகேமியா:**

துன்பத்தில் பிறந்த ஜெபம்: 1:4-11
இறுக்கமான மூலையில் ஜெபம்: 2:4
அவதூறிலிருந்து விடுதலை பெற ஜெபம்: 4:1-6
எதிரிகளின் கோபமதிகமானதால் ஜெபம் வெற்றிபெற: 4:7-9
ஜெபமும் இழப்பீடும்: 5
கைவேலைக்கெதிரான ஜெபம்: 6:9-14
ஜெபமும் வார்த்தையும்: 8:1-13
தேவனுடைய நற்குணத்திற்கான ஜெபம்: 9
ஞாகபமூட்டும் ஜெபம்: 13:14,22,29,31

**யோபு:**

ராஜினாமிற்கான ஜெபம்: 1:20-22
இரக்கத்திற்கான ஜெபம்: 6:8-9, 7:17-21
நியாயத்தீர்ப்புக்கான ஜெபம்: 9
அநீதிக்கெதிரான ஜெபம்: 10
அனையா ஒளி மீது ஜெபம்: 14:13-22
நன்மையடைய ஜெபம்: 21:14-34
ஜெபமும் காரணமும்: 23
பெருங்காற்றிலிருந்து ஜெபத்திற்கு பதில்: 38
அறிக்கை செய்யும் ஜெபம்: 40:3-5, 42:1-6
பரிந்து பேசுதலுக்கான ஜெபம்: 42:7-10

**சங்கீதம்:**

விரோதம் பிறந்தமையால் ஜெபம்: 3
பரிசுத்தத்திற்கான ஜெபம்: 4
காலையில் காத்திருப்பதற்கான ஜெபம்: 5
தெய்வீக நடவடிக்கைகளுக்கான ஜெபம்: 7
தெய்வீக நடவடிக்கைகளுக்கான துதி ஜெபம்: 8
தற்போதைய மற்றும் வருங்கால பாதுகாப்பிற்கான ஜெபம்: 16
சிலுவைக்கான ஜெபம்: 22
மேய்ப்பனின் கவனிப்புக்கான ஜெபம்: 23
தெய்வீக மகிமையின் வெளிப்பாட்டுக்காக ஜெபம்: 24
தேவனை உயர்த்தி ஜெபம்: 25
விசுவாசிக்கும் இருதயத்திற்கான ஜெபம்: 27
கிறிஸ்துவின் அரணுக்கான ஜெபம்: 31
துன்பமடைநத ஆன்மாவின் ஜெபம்: 32
எதிரிகளுக்கு எதிரான பாதுகாப்பு ஜெபம்: 35
தேவனது இரக்கத்தை புகழ்ந்து ஜெபம்: 36
நீண்ட பிரணாயத்திற்கான ஜெபம்: 39,90,91
ஜெபமும் அதன் சாதனையும்: 40
ஆழ்ந்த துயரத்தில் ஜெபம்: 41
விசுவாசக்கதவுக்காக ஜெபம்: 42-43

தெய்வீக உதவிக்கான ஜெபம்: 44
அடைக்கலத்திற்கான ஜெபம்: 46
உடைந்த இருதயத்தின் ஜெபம்: 51
சகல நேரத்திற்குமான ஜெபம்: 55
கடுந்துன்ப நேரத்திலும் ஜெபம்: 57
நம்பிக்கையின் ஜெபம்: 71
தனக்காக தேவனிடம் ஜெபம்: 73
தேவனுடைய மகத்துவத்திற்காக துதி ஜெபம்: 96
சோதனையிலிருந்து தப்பிக்க ஜெபம்: 102-103,105
நினைவுகூறும் ஜெபம்: 106
கடல் யாத்திரை செய்பவர்களுக்கான ஜெபம்: 107
வேதவசனங்களை பெற ஜெபம்: 19,119
இருதயத்தை ஆராய்வதற்கு ஜெபம்: 139

**நீதி மொழிகள்:**

இப்புத்தகம் ஜெபத்தை. ஞானத்தை தேடும் வாய்க்காலாக அவதானிக்கிறது.

**பிரசங்கி:**

இப்புத்தகம் ஜெபத்தையும், ஊழ்வலிக் கோட்பாட்டையும் சம்பாஷிக்கிறது.

**உன்னதப்பாட்டு:**

ஜெபத்தினுடைய இரசியங்கள்

**ஏசாயா:**

தேவன் கேட்காத ஜெபம்: 1:15, 16:12
ஜெபமும் சுத்திகரிப்பும்: 6
அடையாளத்திற்கான ஜெபம்: 7:11
தேவனை உயர்த்தும் ஜெபம்: 12
வெற்றிக்காக துதி ஜெபம்: 25
சமாதானத்திற்கான ஜெபம்: 26
ஜெபமும் நம்பிக்கையும்: 41
ஜெபமும் நடைமுறையும்: 55
அநேகரால் ஏற்கப்படாத ஜெபம்: 59
தெய்வீக வல்லமையை காட்டும் ஜெபம்: 63-64

**எரேமியா:**

இயலாமையை அறிக்கையிடும் ஜெபம்: 1
முறுமுறுப்பும் பின்மாற்றத்திற்குமான ஜெபம்: 2-3
ஜெபம் ஒரு முறைப்பாடாக: 4:10-31
புரட்சிக்கு எதிரான புலம்பலான ஜெபம்: 5

சிறையிருப்பிலிருந்து ஜெபம்: 6
தடைவிதிக்கப்பட்ட ஜெபம்: 7:16
நீதிக்கான ஜெபம்: 10:23-25
மனக்குழப்பத்தின் ஜெபம்: 12:1-4
பாவத்திலிருந்தும் பஞ்சத்திலிருந்தும் விடுதலைப்பெறுவதற்கான ஜெபம்: 14:7-22
தெய்வீக பழிவாங்கலுக்கான ஜெபம்: 15:15-21
எதிரிகளின் குழுப்பத்திற்கான ஜெபம்: 16:19-21, 17:13-18
தீய ஆலோசனைகள் அகற்றப்படுவதற்கான ஜெபம்: 18:18-23
நம்பிக்கையிழந்த இருதயத்திற்கான ஜெபம்: 20:7-13
தெய்வீக நன்மைகளுக்கான நன்றிகூறும் ஜெபம்: 32:16-25
மீதியானவர்களுக்கான ஜெபம்: 42

**புலம்பல்:**

வேதனைக்கான ஜெபம்: 1:20-22
இரக்கத்திற்கான ஜெபம்: 2:19-22
முறைபாடான ஜெபம்: 3
ஒடுக்கப்பட்டமைக்கான ஜெபம்: 5

**எசேக்கியேல்:**

எதிர்ப்பை தெரிவிக்கும் வகையிலான ஜெபம்: 4:14
எஞ்சியதை பாதுகாக்கும்படியான ஜெபம்: 9:8-11
பரிசுத்த ஸ்தலத்திற்கான ஜெபம்: 11:13-16

**தானியேல்:**

மறைபொருளுக்கான விளக்கம்பேட்டு ஜெபம்: 2:17-18
எதிர்த்து நிற்பதற்கான அதிகாரம் கேட்டு ஜெபம்: 6:10-15
அறிக்கை செய்தலின் ஜெபம்: 9
ஜெபமும் அதனுடைய ஆவிக்குரிய பதில்களும்: 10
ஜீவியத்தின் குறைவான நாட்களைக்குறித்து அவதான ஜெபம்: 12:8-13

**ஓசியா:**

தேவன் விண்ணப்பிக்கும் பின்மாற்றமுள்ள தேசத்திற்கான ஜெபம்.

**யோவேல்:**

அவசரமான ஜெபம்: 1:19-20
அழுகையின் ஜெபம்: 2:17

**ஆமோஸ்:**

புணரமைப்பு மற்றும் மன்னிப்பிற்கான ஜெபம்: 7:1-9

**யோனா:**

புற மதத்தைச் சார்ந்த மாலுமிகளின் ஜெபம்: 1:14-16
நரகத்திற்கு வெளியே ஒரு ஜெபம்: 2
மனந்திரும்பிய நகரின் ஜெபம்: 3
வெறுப்புற்ற தீர்க்கதரிசியின் ஜெபம்: 4

**மீகா:**

தேவனது வார்த்தை நிறைவேறுமளவும் கர்த்தருக்கு காத்திருக்கும் ஜெபம்.

**ஆபகூக்:**

தடையும் முறைபாடுமான ஜெபம்: 1:1-4,12-17
விசவாச ஜெபம்: 3

**மல்கியா:**

ஜெபம் - முதலாம் கண்டனம்: 1:2
ஜெபம - இரண்டாம் கண்டனம்: 1:6
ஜெபம் - மூன்றாம் கண்டனம்: 1:7,13
ஜெபம் - நான்காம் கண்டனம்: 2:17
ஜெபம் - ஐந்தாம் கண்டனம்: 3:17
ஜெபம் - ஆறாம் கண்டனம்: 3:8

**மத்தேயு:**

மன்னிப்புக்கு இன்றியமையாத ஜெபம்: 5:22-26, 6:12,14-15
மாய்மாலமான ஜெபம்: 6:5-7
ஜெபம்பற்றி கிறிஸ்துவினால் கற்பிக்கப்பட்டவை: 6:8-13
கிறிஸ்துவின் விஷேடமான ஜெபம்: 7:7-11
தொழு நோயாளிக்கான ஜெபம்: 8:1-4
நூற்றுக்கதிபதியின் ஜெபம்: 8:5-13
இடறின்போது ஜெபம்: 8:23-27
பிசாசுபிடித்தவர்களுக்காக ஜெபம்: 8:28-34
யவீருவின் ஜெபம்: 9:18-19
நோயுற்ற பெண்ணின் ஜெபம்: 9:20-22
இரண்டு குருடர்களின் ஜெபம்: 9:27-31
வேலையாட்களுக்கான ஜெபம்: 9:37-39
தேவனுக்கு நன்றி செலுத்தி கிறிஸ்துவின் ஜெபம்: 11:25-27
மலையின் மேல் ஜெபம்: 14:23
பேதுருவின் துயரவேளையில் ஜெபம்: 14:28-30
தீரு சீதோன் பெண்ணின் ஜெபம்: 15:21-28
சந்திரரோகியான மகனுக்கான ஜெபம்: 17:14-21
ஐக்கியத்திற்கான ஜெபம்: 18:19-20
உவமையில் ஜெபம்: 18:23-25
சலுகையைப் பெறுவதற்கான ஜெபம்: 20:20-18

குருட்டுத்தன்மையிலிருந்து சுகம்பெற ஜெபம்: 20:29-34
விசுவாசமுள்ள ஜெபம்: 21:18-22
மாய்மால ஜெபம்: 23:14,25
உக்கிராணத்துவ ஜெபம்: 25:20,22,24
பொறுத்துக் கொள்ளும் ஜெபம்: 26:26, 36-46
கல்வாரியில் ஜெபம்: 27:46,50

**மாற்கு:**

பிசாசுக்கான ஜெபம்: 1:23-28, 32-34
கிறிஸ்துவின் வழக்கமான ஜெபம்: 1:35, 6:41,46
செவிடு மற்றும் உமைக்கான ஜெபம்: 7:31-37
உபவாசமும் ஜெபமும்: 2:18, 9:29
வாலிப ஆட்சியாளனுக்கான ஜெபம்: 10:17-22

**லூக்கா:**

சகரியாவின் ஜெபம்: 1:8,13,67-80
ஜெபம் துதியாக: 1:46-55
சாஷ்டாங்கமாக ஜெபம்: 2:10-20,25-38
ஊழியத்தின் ஆரம்பத்தில் ஜெபம்: 3:21-22
பிரசித்தமாவதிலிருந்து தப்பிக்க ஜெபம்: 5:16
பன்னிருவருக்கான ஜெபம்: 6:12-13,20,28
ஜெபமும் மறுரூபமடைதலும்: 9:28-29
ஜெபம் உவமை வடிவத்தில்: 11:5-13
ஊதாரித்தனத்திற்காக ஜெபம்:15:11-24,29-30
நரகத்திற்கு வெளியே ஜெபம்: 16:22-31
பத்து குஷ்டரோகிகளுக்கான ஜெபம்: 17:12-19
ஜெபம் உவமை வடிவத்தில்: 18:1-8
பரிசேயன் மற்றும் ஆயக்காரனின் ஜெபம்: 18:9-14
பேதுருவின் பாதுகாப்பிற்கான ஜெபம்: 22:31
வேதனைக்காக ஜெபம்: 22:39-46
ஜெபமும் உயிர்த்த கர்த்தரும்: 24:30, 50-53

**யோவான்:**

ஆவிக்கான ஜெபம்: 4:9, 15, 19,28, 7:37-39, 14:16
ஒரு பிரபுவின் ஜெபம்: 4:46-54
ஜீவ அப்பத்திற்கான ஜெபம்: 6:34
உறுதிப்படுத்தும் ஜெபம்: 11:40-42
இரண்டு அம்சம் கொண்ட ஜெபம்: 12:27-28
ஜெபம் சிறப்புரிமையாக: 14:13-15, 15:16, 16:23-26
ஜெபம் சகல வேண்டுதலாக: 17

**அப்போஸ்தலரின் நடபடிக்கை:**

மேல் அறையில் ஜெபம்: 1:13-14

வெற்றிக்கான ஜெபம்: 1:15-26
துதியும் ஆராதனையும்: 2:42-47
ஜெபத்தை அனுசரித்தல்: 3:1
தைரியத்துடன் சாட்சியிடுவதற்கான ஜெபம்: 4:23-31
வசனத்தின் ஊழியத்திற்கான ஜெபம்: 6:4-7
முதல் இரத்தசாட்சிக்கான ஜெபம்: 7:55-60
சமாரியர்களுக்காகவும் மந்திரவாதிக்குமான ஜெபம்: 8:9-25
இரட்சிக்கப்பட்டவர்களுக்கான ஜெபம்: 9:5-6,11
தொற்காளுக்கான ஜெபம்: 9:36-43
கொர்நேலியசின் ஜெபம்: 10:2-4,9,31
சிறையிலிருந்த பேதுருவின் ஜெபம்: 12:5, 12-17
திருநிலைப்படுத்தலுக்கான ஜெபம்: 13:2-3,43
உபவாசமும் ஜெபமும்: 13:2-3, 14:15, 23,26
ஆற்றங்கரையில் ஜெபம்: 16:13,16
நிலவரையில் ஜெபம்: 16:25,34
பிரியாவிடை ஜெபம்: 20:36
கப்பல் விபத்திலம் ஜெபம்: 27:33,35
ஜுரத்தினால் வாதிக்கப்பட்டவனுக்காக ஜெபம்: 28:8, 15, 28

**ரோமர்:**

வளமான பிரயாணத்திற்கான ஜெபம்: 1:8-15
ஆவி ஊற்றப்பட்ட ஜெபம்: 8:15, 23, 26 , 27
இஸ்ரவேலுக்கான ஜெபம்: 10:1, 11:26
ஊழியத்திற்காக தொடர்ந்து ஜெபித்தல்: 12:12
ஒருமனமான ஜெபம்: 15:5-6, 30-33
சாத்தானை ஜெயிக்க ஜெபம்: 16:20, 24-27

**இரண்டு கொரிந்தியர்:**

ஆசீர்வாத ஜெபம்: 1:2-4
முள் நீங்குவதற்கான ஜெபம்: 12:7-10

**எபேசியர்:**

ஜெபமும் விசுவாசிகளின் நிலையும்: 1:1-11
வல்லமை மற்றும் உணர்வுபூர்வமான ஜெபம்: 1:15-20
தேவனை அணுக ஜெபம்: 2:18,3:12
உள்ளான மனுஷனில் பலப்பட ஜெபம்: 3:13-21
ஜெபமும் உள்ளான துதியும்: 5:19-20
ஒரு வீரனின் இருப்பும் ஜெபமும்: 6:18-19

**பிலிப்பியர்:**

மகிழ்வோடு இருக்கும்படியான வேண்டுதலோடு ஜெபம்: 1:2-7
சமாதானமுள்ள இருதயத்தோடு ஜெபம்: 4:6-7, 19-23

**கொலோசெயர்:**

விசுவாத்தை பாராட்டடிய ஜெபம்: 1:1-8
ஏழு மடங்கு ஆசீர்வாதங்களை பெற ஜெபம்: 1:9-14
ஜெப ஐக்கியம்: 4:2-4,12,17

**1 தெசலோனிக்கேயர்:**

நினைவு கூரும் ஜெபம் : 1:1-3
மீண்டும் பிரயாணம் செய்வதற்கான ஜெபம்: 3:9:13
ஜெபம், துதி, பரிபூரணம்: 5:17-18,23-24,28

**2 தெசலோனிக்கேயர்:**

அழைப்பின் உயர்வைக்குறித்த ஜெபம்: 1:3,11-12
வசதியாகவும், ஸ்திரத்தன்மையாகவும் இருக்க ஜெபம்: 2:13,16-17
வசனத்திற்காகவம் பாதுகாப்புக்காகவும் ஜெபம்: 3:1-5

**2 தீமோத்தேயு:**

தீமோத்தேயுவின் ஊழியத்திற்கான ஜெபம்: 1:2-7
ஒநேசிப்போருவின் வீட்டாருக்கான ஜெபம்: 1:6-18
கள்ள நண்பர்களுக்கான ஜெபம்: 4:14-18

**எபிரெயர்:**

சிருஷ்டிப்பிற்காக துதியும் ஜெபமும்: 1:10-12
இரக்கமும் சகாயமும் பெற ஜெபம்: 4:16
கிறிஸ்துவின் ஊழியத்திற்காக ஜெபம்: 5:7-8, 7:24-25
தேவனுடைய சித்தத்தின்படியான இந்த வெளியரங்கமான ஊழியத்திற்காக ஜெபம்: 12:9. 12, 15
பரிபூரணத்துவத்திற்கான ஜெபம்: 13:20-21

**யாக்கோபு:**

ஞானத்திற்கான ஜெபம்: 1:5-8,17
இலக்கு தவறியமைக்காக ஜெபம்: 4:2-3
ஜெபத்தில் நிலைத்திருக்க: 5:13-18

**1 பேதுரு:**

மரபுரிமை பேற்றுக்காக ஜெபம்: 1:3-4
திருமணமான நிலைமைக்காக ஜெபம்: 3:7-12
விழிப்புடன் ஜெபம்: 4:7
கிறிஸ்தவ ஸ்திரத்தன்மைக்காக ஜெபம்: 5:10-11

**2 பேதுரு:**

இரக்கமும் சமாதானமும் பெருகுவதற்கான ஜெபம்: 1:2

**3 யோவான்:**

நற்பெரின் பின்னணிக்காக ஜெபம்: 1-4,12

**யூதா:**

ஆவியில் ஜெபம்: 20

**வெளிப்படுத்தல்:**

ஆட்டுக்குட்டியானவர் விடுவித்தமைக்காக துதியும் ஆராதனையும்: 5:9
பொன்தூபகலசமாக ஜெபம்: 5:8; 8:3
இரத்தசாட்சிகளின் கூட்டத்தாரின் ஜெபம்: 6:10
புறஜாதியாரின் ஜெபம்: 7:9-12
மூப்பர்களின் ஜெபம்: 11:15-19
மோசேயின் ஜெபம்: 15:3-4
மகிமையடைந்த பரிசுத்தவான்களின் ஜெபம்: 19:1-10
வேதாகமம் ஜெபத்துடன் முடிவடைகின்றது: 22:17,20

# வல்லமையின் கொள்கை எட்டு: வசனத்தின் வல்லமை

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ வசனத்தின் வல்லமையின் ஆதாரத்தை அடையாளம் காணவும்,
- ☐ தேவனுடைய வசனமாகிய “ரேமா” மற்றும் “லோகோஸ்”சை விபரிக்கவும்,
- ☐ வசனத்தின் வல்லமையால் இயேசு கிறிஸ்து சாத்தானின் சவால்களுக்கு முகங்கொடுத்ததை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய வார்த்தையின் வல்லமைக்கு உங்களது பிரதியுத்தரத்தை விபரிக்கவும்,
- ☐ தேவனுடைய வசனத்தின் வல்லமையின் நோக்கத்தை சுருக்கமாக விபரிக்கவும்,
- ☐ உங்களுடைய சொந்த வார்த்தையில் ஏன் ஆன்மீக வல்லமை முக்கியமானது என்பதை விபரிக்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

> **தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கனுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரெயர் 4:12)**

## அறிமுகம்

பரிசுத்த வேதாகமம் மெய்யான ஒரே ஜீவனுள்ள தேவனின் எழுதப்பட்ட வார்த்தையாகும். இந்த தேவனுடைய வார்த்தைகளில் விஷேட வல்லமை இருக்கிறது:

> **தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கனுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரெயர் 4:12)**

> **அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும். அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசாயா 55:11)**

நீங்கள் தேவனுடைய வார்த்தையின் வல்லமையை அனுபவிக்கும் வரை அவரது வல்லமையை முற்றாக அனுபவிக்க முடியாது:

## வேத வசனத்தின் ஆதாரம்

அவரது எழுதப்பட்ட வார்த்தை வல்லமையின் மூலாதாரமாக இருக்கிறது. இந்த தேவனுடைய வார்த்தை வல்லமையுள்ளது:

**ஆண்டவர் வசனம் தந்தார், அதைப் பிரசித்தப்படுத்துகிறவர்களின் கூட்டம் மிகுதி. (சங்கீதம் 68:11)**

**ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது. (1 தெசலோனிக்கேயர் 2:13)**

தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் உலகை சிருஷ்டித்தார்:

**விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்ட தென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை யென்றும் அறிந்திருக்கிறோம். (எபிரெயர் 11:3)**

தேவன் தம்முடைய வார்த்தையின் மூலம் வானங்களை சிருஷ்டித்தார்:

**கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது. (சங்கீதம் 33:6)**

தேவன் அவருடைய வார்த்தையின் வல்லமையினால் பூமியையும் அதன் சகல காரியங்களையும் தொடர்ந்தும் தாங்கி வருகின்றார்:

**இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும்தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார். (எபிரெயர் 1:3)**

## "ரேமா" மற்றும் "லோகோஸ்"

தேவனுடைய வார்த்தைக்கு வேதாகமத்தில் கிரேக்க பாஷையில் வித்தியாசமான இரண்டு வார்த்தைக்ள பாவிக்கபட்டுள்ளன. ஒரு கிரேக்க வசனம் "லோகோஸ்", அது தேவனது வாயிலிருந்து புறப்பட்ட வார்ததையை குறிக்கும். தேவன் பேசியவற்றின் முற்றுப்பெற்ற வெளிப்படுத்தலாக இருக்கின்றது.

இரண்டாவது வார்த்தை "ரேமா" என்பதாகும், இது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தேவனால் விஷேடமாக கூறப்பட்ட வார்த்தையை குறிக்கும். தேவனால் வெளிப்படுத்தப்பட்ட "லோகோஸ்" ஆகிய முழு வார்த்தையும் வல்லமையுள்ளது, ஆனால் தேவனால் திடீரென ஏவப்பட்டு எழுதப்பட்ட அவரது வார்த்தையிலிருந்து விஷேடமாக வருவது இன்னும் வல்லமையுள்ளதாக இருக்கின்றது. பலமுறை அதே வசனத்தை வாசித்திருக்கின்றபோதும் திடீரென ஞாபகமூட்டப்படுகின்ற ரோமாவாகிய வசனம் புதிய

அர்த்தத்தை தரும். நீங்கள் முகங்கொடுக்கின்ற ஒரு குறிப்பிட்ட சூழ்நிலைக்கு பொருந்தக் கூடிய வசனமாக அது இருக்கும். “ரேமாவாகிய” அந்த வார்த்தை அவசியமான நேரத்திற்கேற்ற பதிலையும், வெளிப்படுத்தலையும், ஆறுதலையும் கொடுக்கின்றது.

## இயேசுவின் சோதனை

தேவனுடைய வார்த்தையின் வல்லமையின் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இயேசு கிறிஸ்து இருக்கின்ற போதும், பெலனை அதிகரிக்கும்படியாக அவ்வல்லமை சோதிக்கப்பட வேண்டியதாக இருக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் வல்லமைக்கும், சாத்தானின் வல்லமைக்கும் இடையில் பெரிதான மோதல் இயேசு கிறிஸ்துவின் பூவுல ஊழியத்தின் ஆரம்பத்தில் வந்தது. மேலதிகமாக இப்பாடத்தை கற்றுக் கொள்ளும் முன்னர் இம் மோதலைப்பற்றி மத்தேயு 4:1-11, மாற்கு 1:12-13, மற்றும் லூக்கா 4:1-13 வாசிக்கவும்.

முதலாவதாக, இயேசு கிறிஸ்து கற்களை அப்பமக மாற்றும்படி செய்ய முயற்சித்தான். இயேசுவின் வல்லமையின் நிமித்தம் அவர் உடனடியாகவே தண்ணீரை திராட்சைரசமாக மாற்ற முடியுமானால் அவரால் நிச்சயமாகவே கற்களை அப்பமாக்கவும் முடியும். ஆனால் அந்த சூழ்நிலையில், தேவன் அவரது அதிகாரத்தை தனிப்பட்ட நலனுக்காக சுதந்திரமாக பாவிக்க விரும்பவில்லை.

அடுத்ததாக சாத்தான் தேவாலயத்தின் உப்பரிகையின் மேலிருந்து கீழே குதித்து அவரது வல்லமையை நிரூபிக்கட்டும் என முயன்றான். வேத எழுத்துக்களின்படி அது சரியான காரியமாக இருந்தபோதும், வசத்தை தவறாக பாவிக்க அவர் சம்மதிக்கவில்லை.

மூன்றாவதாக சாத்தானாவன், உலக வல்லமையில் ஆசை காட்டி இயேசுவை சோதித்தான். சாத்தான், இயேசுவிடம் உலக ராஜ்ஜியங்கள் அனைத்தையும் அவனை வணங்கினால் தருவதாக கூறினான்.

இந்த ஒவ்வொரு வல்லமையின் போராட்டத்திலும் இயேசுகிறிஸ்து தேவனுடைய வார்த்தையிலிருந்தே சவாலை எதிர்கொண்டார். உடனடியாகவே இயேசு கிறிஸ்து அச்சூழ்நிலைக்கு பொருந்தும் வகையில் வேதவசனத்தை பாவித்தார். அவர் தேவவசனத்திலிருந்து “ரேமா”வாகிய வார்த்தையையே பயன்படுத்தினார்.

## வல்லமையுள்ள வார்த்தையை பயன்படுத்துதல்

தேவனுடைய வார்த்தையில வல்லமை இருக்கின்றது என்பதை அறிந்திருந்தால் மட்டும்போதாது. இயேசு கிறிஸ்துவைப்போல திறம்பட அதை பயன்படுத்த வேண்டும். அவர் தமது சொந்த வார்த்தைகளை பேசாமல் தெளிவாக வேதவசனத்தை பேசினார். அவைகள் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. (யோவான் 3:34, 14:10,24, 17:8,14)

இயேசு கிறிஸ்து தேவனுடைய வார்த்தையை அதிகாரத்தோடு பேசினார்:

> **அவருடைய வசனம் அதிகாரமுள்ளதாயிருந்தபடியால் அவருடைய போதகத்தைக்குறித்து அவர்கள் ஆச்சரியப்பட்டார்கள். (லூக்கா 4:32)**
>
> **எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன வார்த்தையோ! அதிகாரத்தோடும் வல்லமையோடும் அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் புறப்பட்டுப் போகிறதே என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள். (லூக்கா 4:36)**

இயேசு கிறிஸ்து சூம்பிய கைகளைக் கொண்ட மனிதனிடம் வார்த்தையை பேசியபோது அது குணமாகியது. ஒரு குஷ்டரோகியிடம் அவர் பேசியபோது அவன் சுத்தமானான். (மத்தேயு 8:2-3) அவர் கூறினார்...

-குளத்தண்டையிருந்த மனிதனைப்பார்த்து "எழுந்திரு" என்றார் ( யோவான் 5:8)
-குருடர்கள் "பார்வை"யடைந்தனர் (லூக்கா 7:21)
-பிசாசுகள் "வெளி"யேறின ( மத்தேயு 9:32-33)
-செவிடர் "கேட்டனர்" ( மாற்கு 7:32-35)
-மரித்தவன் "வெளியே" வந்தான் ( யோவான் 11:44)

தேவனுடைய வார்த்தையில் வல்லமை உண்டு என்பதை இயேசு அறிந்திருந்தார், ஆனாலும் அவ்வார்த்தை பயனளிக்கம்படிக்கு மனிதர்கள் அதை கவனித்து கேட்க வேண்டும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். இயேசுவின் வார்த்தைகள் தேவனுடைய வார்த்தைகளாக இருக்கின்றமையால், தூரத்திலும் கிரியை செய்ய அவை வல்லமையுள்ளவைகளாக இருக்கின்றது. பிரச்சனை நடைபெறுகின்ற இடத்தில் இயேசு இருக்க வேண்டும் என்றில்லை. ஒரு மனிதனின் வேலைக்காரன் சரீர சுகமுற்றிருந்தான்....

**நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்.**

**பின்பு இயேசு நூற்றுக்கு அதிபதியை நோக்கி: நீ போகலாம், நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது என்றார். அந்த நாழிகையிலே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான். (மத்தேயு 8:8,13)**

அந்த மனிதன் தேவனுடைய வாத்தையின் வல்லமையை விசுவாசித்தான். அது வல்லமையுள்ளதாக இருக்கின்றமையால் மனிதனால் மட்டுப்படுத்தப்பட்டுள்ள நேரம், இடம், மற்றும் வேறு வரம்புகளையும் தாண்டி கிரியை செய்யும் என்றும் அறிந்திருந்தான். ஆனால் அது திறம்பட செயலாற்ற சொந்த வாழ்க்கை, சூழ்நிலை என்பவற்றை சாதகமாக்கிக் கொண்டான். தேவ வார்த்தையின் அதிகாரத்தை, பிரயோகித்து அதன் வல்லமையை பெற்றுக் கொண்டான்.

ஆதி சபையும் தேவனுடைய வார்த்தையின் வல்லமையை பயன்படுத்தியது. பவுல் கூறினான்...

**உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**

**என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. (1 கொரிந்தியர் 2:4,5)**

**ஆகிலும் கர்த்தருக்குச் சித்தமானால் நான் சீக்கிரமாய் உங்களிடத்திற்கு வந்து, இறுமாப் படைந்திருக்கிறவர்களுடைய பேச்சையல்ல, அவர்களுடைய பெலத்தையே அறிந்து கொள்வேன். (1 கொரிந்தியர் 4:19)**

## வார்த்தையின் வல்லமை

தேவனது வல்லமை அவரது வார்த்தையின் பின்னால் இருக்கின்றது:

**அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்ளூ அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். (ஏசாயா 55:11)**

**அப்பொழுது கர்த்தர்: நீ கண்டது சரியே. என் வார்த்தையைத் தீவிரமாய் நிறைவேற்றுவேன் என்றார். (எரேமியா 1:12)**

தேவனுடைய வார்த்தை பெரிதான ஆவிக்குரிய வல்லமையை கொடுக்கின்றது :

**தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரெயர் 4:12)**

தேவன் தமது நாமத்தினிமித்தம் தமது வார்த்தையை கனப்படுத்துகிறார்:

**உமது பரிசுத்த ஆலயத்திற்கு நேராக நான் பணிந்து, உமது கிருபையினிமித்தமும் உமது உண்மையினிமித்தமும் உமது நாமத்தைத் துதிப்பேன். உமது சகல பிரஸ்தாபத்தைப் பார்க்கிலும் உமது வார்த்தையை நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர். (சங்கீதம் 138:2)**

தேவனுடைய வார்த்தையிலுள்ள வல்லமையான நோக்கங்கள் யாவை? பின்வரும் வசனங்களை வாசியுங்கள். தேவனுடைய வார்த்தையானது:

-தேவனுடைய வார்த்தை உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் படிப்பித்தலுக்கும் பிரயோசனமுள்ளது: 2 தீமோத்தேயு 3:16-17
-சுவிசேஷசெய்தியில் விசுவாசித்தைக் கொண்டு வரும்: அப்போஸ்தலர் 4:4
-சுத்திகரிக்கும்: யோவான் 15:3, எபேசியர் 5:26
-நாம் கேட்டு அதை விசுவாசிக்கிறபோது நித்திய ஜீவனைக் கொடுக்கும்: யோவான் 5:24
-நித்திய நியாயத்தீர்ப்பு அதனடிப்படையில் இருக்கும்: யோவான் 12:48
-அசுத்த ஆவிகளை துரத்த பயன்படுகின்றது: மத்தேயு 8:16, லூக்கா 4:36
-மக்கள் சுவிசேத்தின் சத்தியத்தை அறிந்து கொண்ட பின்னர் அற்புத அடையாளங்களோடு அதை உறுதிப்படுத்துகிறது: மாற்கு 16:20
-இரட்சிப்புக்கு உத்தரவாதத்தை தருகின்றது: 1 யோவான் 1:2-6
-மீண்டும் பிறக்கும் அனுபவத்தை கொண்டு வருகின்றது: 1 பேதுரு 1:23, சங்கீதம் 119:41
-சுவிசேஷத்தின் சத்தியத்தின்படி பதிவுகளை கொண்டு வருகின்றது: 1 யோவான் 5:7
-விசுவாசிகளை சுத்திகரிக்கின்றது: 1 தீமோத்தேயு 4:5
-நம்பிக்கையை தருகின்றது: சங்கீதம் 130:5, 119:49,81
-சுகத்தை கொண்டு வருகின்றது: சங்கீதம் 107:20
-அழிவின் பாதையிலிருந்து நம்மை பாதுகாக்கிறது: சங்கீதம் 17:4
-ஆவியும் ஜீவனுமாயிருக்கிறது: யோவான் 6:63
-சந்தோஷத்தையும், களிகூருதலையும் கொண்டு வரும்: எரேமியா 15:16
-விசுவாசத்தை அதிகரிக்கும்: ரோமர் 10:17
-தேற்றும்: 1 தெசலோனிக்கேயர் 4:18, சங்கீதம் 119:50,52
-ஆவிக்குரிய போஜனத்தை கொண்டு வரும்: 1 தீமோத்தேயு 4:6
-ஜெபத்திற்கு பதிலைக் கொண்டு வரும்: யோவான் 15:7
-வெற்றியின் திறவுகோலாக இருக்கின்றது: யோசுவா 1:8
-அதை கேட்டு அதன்படி செய்தால் ஆசீர்வாதம் வரும்: லூக்கா 11:28
-கேட்டு அதன்படி செய்தால் ஆசீர்வாதமும், அல்லாதுபோனால் சாபமும் வரும்: உபாகமம் 28
-சோதனையின்போது ஆயதமாக இருக்கிறது: மத்தேயு 4

-ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது: சங்கீதம் 19:7
-ஞானவான்களாக்குகிறது: சங்கீதம் 19:7
-தெளிவாக்குகிறது: சங்கீதம் 19:8
-எச்சரிக்கிறது: சங்கீதம் 19:11
-கைகொள்ளும்போது வெகுமதியைக் கொண்டுவரும்: சங்கீதம் 19:11
-பரலோகம் செல்ல அனுமதிக்கிறது: வெளிப்படுத்தல் 22:14
-நீதியின் பாதையில் நடக்கும்போது ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்: சங்கீதம் 119:1-3
-எமது எதிரிகள், ஆசிரியர்கள், பழங்காலத்தினரைவிட நம்மை ஞானவான்களாக்கும்: சங்கீதம் 119:98-104
-உயிர்ப்பிக்கும்: சங்கீதம் 119:25
-பெலப்படுத்தும்: சங்கீதம் 119:28
-இரக்கத்தின் அடித்தளமாக இருக்கிறது: சங்கீதம் 119:58
-மகிழ்ச்சியை கொண்டு வரும்: சங்கீதம் 119:92
-புரிந்துணர்வைக் கொடுக்கும்: சங்கீதம் 119:130,104, 169
-விடுவிக்கும்: சங்கீதம் 119:170

## வசனத்திற்கான பொறுப்பு

தேவனுடைய வார்த்தை மிகவும் வல்லமையுள்ளதாக இருக்கின்றமையால், விசுவாசிகள் அதை உலகிற்கு அறிவிக்க வேண்டும் என்ற உத்தரவாதத்தைக் கொண்டுள்ளார்கள். ஆதி சபையினர் தேவனுடைய வார்த்தையின் இவ்வுத்தரவாதத்தை ஏற்று நடந்தனர். எல்லா இடங்களுக்கும் சென்று அதை பிரசங்கித்தார்கள் (அப்போஸ்தலர் 8:4, 12:24, 13:49). தைரியமாக அவ்வசனத்தை பேசும்படிக்கு தேவனிடம் தைரியத்தைக் கேட்டனர் (அப்போஸ்தலர் 4:29,31). அவர்களது உண்மைத்துவத்தின் காரணமாக தேவனுடைய வசனம் வளர்ந்து பெருகினது (அப்போஸ்தலர் 6:7;19:20).

அதைத்தொடர்ந்து தேவன் தமது வசனத்தை அடையாளங்களோடு உறுதிப்படுத்தினார் வார்த்தைக்கு முன்னதாக அடையாளங்களுக்காக ஒருவர் காத்திருக்க முடியாது. இவ்வுலகத்திற்கு இவ்வல்லமையுள்ள வார்த்தையை பரப்புவது உங்களது உத்தரவாதமாயிருக்கின்றது. பின்வரும் வசனங்களை வாசித்து உங்களது உத்தரவாதத்தை கற்றுக் கொள்ளுங்கள்.

-தேவன் உங்களுக்கு வசனத்தைதரும் போது அதை நீங்கள் மற்றவர்களிடத்தில் பேசலாம்: உபாகமம் 18:18-19, ஏசாயா 51:16, எரேமியா 1:9, 3:12, 5:14, 26:12, எசேக்கியேல் 2:7-8

-நீங்கள் தேவனுடைய வசனத்தை கற்கும்போது, மற்றவர்களுக்கு அதை கற்பிக்கும் உத்தரவாதம் உங்களுக்குண்டு: கலாத்தியர் 6:6

-நீங்கள் உலகம் முழுவதும் சென்று தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்க வேண்டும்: லூக்கா 24:47, மாற்கு 16:15, 2 தீமோத்தேயு 4:2

-நீங்கள் உங்களுடைய சொந்த வாாத்தைகளை பேசாமல் அவரது வார்த்தையை பேச வேண்டும்: ஏசாயா 58:13

-தேவனுடைய வார்த்தைக்காக வெட்கப்பட வேண்டியதில்லை: மாற்கு 8:38

-உங்கள் பிள்ளைகளுக்கு நீங்களே கற்றுக் கொடுக்க வேண்டும்: உபாகமம் 6:6-9

## உங்களது சொந்த வார்த்தைகள்

பரிசுத்த வேதவாக்கியங்கள் தெய்வீக வல்லமையைக் கொண்டிருக்கக் காரணம் அவைகள் மெய்யான ஜீவனுள்ள தேவனுடைய வார்த்களாயிருப்பதேயாகும். ஆனாலும் உங்களது சொந்த வார்த்தைகளும்

வல்லமையுள்ளவைகளாகும், நீங்கள் தேவனுடைய வார்த்தையை பேசும்போது மாத்திரமே. நீங்களும் வசனங்களின் மூலம் சாத்தானை மேற்கொள்ளலாம்:

**மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள். (வெளிப்படுத்தல் 12:11)**

உங்கள் இரட்சிப்பை உங்கள் வாயினால் அறிக்கை செய்யுங்கள்:

**இந்த வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலும் இருக்கிறது என்றும் சொல்லுகிறது. இந்த வார்த்தை நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையே.**

**என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.**

**நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும். (ரோமர் 10:8-10)**

நீங்கள் மற்றவர்களை உங்களது நாவின் வல்லமையின் மூலம் ஆவிக்குரிய மரணத்திலிருந்து ஜீவனுக்குள் கொண்டுவர முடியும்:

**மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்... (நீதிமொழிகள் 18:21)**

நீங்கள் உங்கள் சொந்த வார்த்தையை பகிர்ந்து கொள்ளலாம். நீங்கள் கூறின வார்த்தையினாலேயே பிரச்சனைகளை எதிர் கொள்ளவும் வேண்டிவரலாம்:

**நீ உன் வாய்மொழிகளால் சிக்குண்டாய், உன் வாயின் வார்த்தைகளால் பிடிபட்டாய். (நீதிமொழிகள் 6:2)**

உங்களது வாத்தைகள் தேவனது வல்லமையை ஏற்றுக் கொள்ளுவதை தடுக்கலாம்:

**எங்கள் நாவுகளால் மேற்கொள்ளுவோம், எங்கள் உதடுகள் எங்களுடையது. யார் எங்களுக்கு ஆண்டவன் என்று சொல்லுகிறார்கள். (சங்கீதம் 12:4)**

நீங்கள் சொல்லுகிற காரியத்தை சாத்தான் பாவித்து உங்கள் ஆவியில் பிளவை ஏற்படுத்துவான். இப்பிளவின் மூலமாக அவனால் நுழைய முடியும்:

**ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம். நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும். (நீதிமொழிகள் 15:4)**

நீங்கள் சொல்வது உங்கள் ஆத்துமாவையும் தாக்குகிறது:

**மூடனுடைய வாய் அவனுக்குக் கேடு, அவன் உதடுகள் அவன் ஆத்துமாவுக்குக் கண்ணி. (நீதிமொழிகள் 18:7)**

**தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான். (நீதிமொழிகள் 21:23)**

உங்களது வார்த்தைகள் உங்கள் முழு சரீரத்தையும் பாதிக்கும்:

**நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம். நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! (யாக்கோபு 3:6)**

உங்களது வார்த்தைகள் உங்கள் முழு வாழ்க்கையையும் பாதிக்கும்:

**தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான். தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ கலக்கமடைவான். (நீதிமொழிகள் 13:3)**

விசுவாசிகள் தமது சொந்த வார்த்தைகளின் மூலமாகவே தேவனுடைய வல்லமையை அவர்களது வாழ்வில் ஊற்றப்படுவதை தடுத்து நிறுத்துகின்றனர். அவர்கள் பேராசை, விக்கிரகம், முட்டாள்தனமான வார்த்தைகளை பேசுகின்றனர். அவர்கள் மக்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திலிருந்து திரும்பும்படியான அதிகமான கட்டளைகளைக் கொண்டிருந்து வாதாடுகின்றனர். அவர்கள் மற்றவர்களைக்குறித்து தீய வார்த்தைகள், முறுமுறுப்பு, முறைபாடு, பெருமை மற்றும் பொய்களை பேசுகின்றனர். அவர்கள் பேசுகின்ற வார்த்தைகள் பிரிவினை, கசப்பு மற்றும் சாப வார்த்தைகளாக இருக்கின்றன.

அவர்கள் ஏன் வல்லமையற்று இருக்கிறார்கள் என்று அவர்கள் தெரியாதிருக்கின்றனர்.

ஞாபத்தில் வையுங்கள்:- உங்களுடைய வாழ்வில் தேவனுடைய வார்த்தையின் வல்லமை மட்டுமல்ல, உங்கள் சொந்த வார்த்தைகளின் வல்லமையும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. வல்லமையுள்ள வார்த்தையின் மூலாதாரம் என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. தேவனுடைய வார்த்தையான “ரேமா” என்பது என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. தேவனுடைய வார்த்தையான “லோகோஸ்” என்பது என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. சாத்தானில் சவால்களை இயேசு எவ்வாறு சந்தித்தார்?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. இந்த பாடத்தில் நீங்கள் கற்றுக்கொண்ட தேவனுடைய வார்த்தையின் வல்லமையைக்குறித்து உங்களது உத்தரவாதம் என்ன என்பதை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

7. தேவனுடைய வார்த்தையின் வல்லமையுள்ள நோக்கங்கள் என்ன என்பதை கற்றுக் கொண்டபடி சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

8. எஇக்கூற்று சரியானதா அல்லது தவறானதா? “உங்களுடைய சொந்த வார்த்தைகள் ஆவிக்குரிய வல்லமையை பாதிக்காது.”

இக்கூற்று: ..................................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தை வாசிக்கவும். தேவனுடைய வார்த்தையிலுள்ள சிருஷ்டிப்பின் வல்லமையை கவனியுங்கள். “தேவன் சொன்னார்” என்ற கூற்றுக்களின் கீழ் கோடிடுக.

2. “ஆவிக்குரிய வியூகங்கள்: ஆவிக்குரிய போராட்ட கையேடு” என்று சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடப் புத்தகத்திலுள்ள உங்கள் நாவை கட்டுப்படுத்தும் வியூகங்கள் என்ற பகுதியை வாசித்து அதிகமாய் அறிந்து கொள்ளவும்.

3. உண்மையில் இயேசு மனித உருவில் வந்த தேவனுடைய வார்த்தை என்று அழைக்கப்படுகின்றார் யோவான் 20:1-17.

4. தேவனுடைய வார்த்தையில் இரண்டு பெரும் பிரிவுகள் உண்டு. வார்த்தையாகிய பால் மற்றும் இறைச்சியாகிய வசனம். பாலாகிய வார்த்தையானது இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடிய சத்தியமாகும். இறைச்சியாகிய வார்த்தை ஆழமான போதனையை ஆவிக்குரிய முதிர்ச்சியோடு கொண்டு வரும். இப்பிரிவுகளைக் குறித்து எபிரெயர் 5:13-14 மற்றும் 1 பேதுரு 2:2ல் வாசிக்கவும்.

அதிகாரம் பதினைந்து

# வல்லமையின் கொள்கை ஒன்பது: அதிகாரத்தின் வல்லமை

### குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ நீங்கள் ஏன் அதிகாரத்தின் கீழ் இருக்க வேண்டும் எனவும், அதிகாரத்தை ஏன் பயிற்சி செய்ய வேண்டும் என்பதை விளக்கவும்,
- ☐ இயேசு கிறிஸ்து ஒரு மனிதனாக எவ்வாறு அதிகாரத்தின்கீழ் இருந்தார் என்பதை விளக்கவும்,
- ☐ தேவன் சபையில் ஸ்தாபித்துள்ள அதிகாரத்தின் கட்டமைப்பை அடையாளம் காணவும்,
- ☐ தேவன் வீட்டில் ஸ்தாபித்துள்ள அதிகாரத்தின் கட்டமைப்பை அடையாளம் காணவும்,
- ☐ வேலைத்தள உறவுகளில் தேவன் ஸ்தாபித்துள்ள அதிகார கட்டமைப்பை விபரிக்கவும்,
- ☐ அரசாங்கத்தின் அதிகாரங்களுக்கு விசுவாசிகள் கொண்டுள்ள உறவை விபரிக்கும் வேத வசனத்தை கொடுக்கவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

**எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 13:1)**

## அறிமுகம்

தேவன் உலகத்தை சிருஷ்டித்தது முதல், அவர் எந்தவொரு குழப்பமின்றியே கிரியை செய்தார். இந்த வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் அதிகார கட்டமைப்பை ஏற்படுத்தி காரியமாற்றியுள்ளார். மிகப் பெரியதும் உயர்ந்ததுமான கட்டமைப்பின் அதிகாரிகளாக பிதாவும், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் இருக்கின்றார்கள்.

உங்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்திலும் தேவன் கட்டமைப்புகளை நிறுவியுள்ளார். ஆவிக்குரிய வல்லமையை நீங்கள் விரும்புவீர்களென்றால் இந்த அதிகாரிகளும் முக்கியமானவர்களே. நீங்கள் இந்த அதிகாரத்தின் கீழ் ஒழுங்காக இருக்காவிட்டால் உங்களால் அதிகாரத்தை நடைமுறைப் படுத்த முடியாது.

## அதிகாரத்தின் கீழ் ஒரு மனிதன்

ஒரு நாள் இயேசு கிறிஸ்துவுக்கு, கப்பர்நகூமில் ஒரு இராணுவ தலைவருடன் ஒரு சுவாரஸ்யமான மோதல் ஏற்பட்டது. இத்தலைவரின் பெயரை நாங்கள் கொடுக்கவில்லை. அவர் ஒரு நூற்றுக்கதிபதி, அவருக்கு ஒரு வேலைக்காரன் இருந்தான்,அவன் சுகயீனமுற்றம் இருந்தான் என்பதை மட்டுமே நாங்கள் அறியத்தருகின்றோம். இப்பாடத்தை கற்றுக் கொள்ளும் முன்னர் இந்த நூற்றுக்கதிபதியின் கதையை மத்தேயு 8:5-13, மற்றும் லூக்கா 7:1-10லும் வாசியுங்கள்.

இந்த நூற்றுக்கதிபதி ரோமரது அதிகாரத்திற்கு கீழ்ப்பட்ட மனிதன். அவன் அதிகாரத்தோடு செயல்பட்டான். நூறு இராணுவத்தினருக்கு தலைவனாக இருந்தான். இதனால் இயேசு கிரியை செய்வது, கிறிஸ்துவுக்கும் பிதாவிற்குமிடையில் இருந்த உறவின் நிமித்தம் என்பதை அவன் உடனடியாகவே புரிந்து கொண்டான். பௌதீக உலகில் அவனுக்கும் அவனது படைத்தளபதிக்கும் உள்ள உறவைப்போன்றது என் விளங்கிக் கொண்டான்.

இயேசுவும்அதிகாரம் கொண்ட ஒரு மனிதன்தான். அவர் பாவங்களை மன்னித்தார், வியாதியஸ்தரை குணமாக்கினார், பிசாசுகளைத்துரத்தினார், அற்புதங்களைச் செய்தார். ஆனாலும் இயேசு கிறிஸ்து ஒரு அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டவராகவே இருந்தார். அவர் பிதாவின் அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டவராக இருந்தார்:

> **அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார். அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். (யோவான் 5:19)**
>
> **ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார்.**
>
> **அவர் மனுஷகுமாரனாயிருக்கிறபடியால், நியாயத்தீர்ப்புச் செய்யும்படிக்கு அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார். (யோவான் 5:26-27)**
>
> **என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன். (யோவான் 6:38)**
>
> **என் உபதேசம் என்னுடையதாயிராமல், என்னை அனுப்பினவருடையதாயிருக்கிறது. (யோவான் 7:16)**
>
> **என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார். (யோவான் 8:29)**

நூற்றுக்கதிபதி இந்த அதிகார அமைப்பின் வல்லமையை அங்கீகரித்தது மாத்திரமல்ல, இயேசு தனது வேலைக்காரனை குணமாக்க தமது வீட்டுக்கு வரவேண்டியதில்லை என்பதையும் அறிந்து கொண்டான். இயேசு ஒரு வார்த்தை சொன்னால், அவ்வார்த்தையின் வல்லமை குணமாக்குதலைக் கொண்டு வரும் என்பதையும் அறிந்திருந்தான். இயேசு நூற்றுக்கதிபதியின் விசுவாசத்தை பாராட்டி அவனது வேலைக்காரனை குணமாக்கினார்.

எங்கெல்லாம் அதிகாரம் வெளிப்படுகின்றதோ, அங்கெல்லாம் (சரியான) ஒழுங்கு முறை இருக்கும். இதனாலேயே வேதபாரகர்களும் பரிசேயரும் இயேசுவிடம் “எந்த அதிகாரத்தினிமித்தம் இவைகளை யெல்லாம் செய்கிறீர்?” என்று கேள்வி கேட்டனர். (மத்தேயு 21:23)

## அதிகாரத்தின் கீழ் இயேசு

அவரது அதிகாரத்தைக் குறித்து யாராவது கேட்கு முன்னதாகவே தேவன் கூறிவிட்டார்:

> **யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டேன். (ஏசாயா 6:8)**

பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் தமது அதிகாரத்தில் ஓரளவை ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுத்திருந்தார், ஆனாலும் அவரது முழுமையான அதிகாரத்தின் வெளிப்பாடாக இயேசு கிறிஸ்து இருக்கின்றார். இவ்திகாரம் தன்னிடம் இருக்கின்றது என்பதை இயேசு அறிந்திருந்தார்:

> **அப்பொழுது இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 28:18)**

தன்னிடமுள்ள இவ்வதிகாரத்தை இயேசு நிரூபித்தார்:

> **பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்றார். (மத்தேயு 9:6)**

இயேசு கிறிஸ்து இவ்திகாரத்தை பிதாவிடமிருந்து பெற்றுக் கொண்டார், எதிரியின் சகல வல்லமைகளையும் மேற்கொண்டு வெற்றி பெற்றார்

இயேசுவே சகல துரைதனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் தலைவர் (கொலோசெயர் 2:10) ஏனென்றால்.....

> **துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றிசிறந்தார். (கொலோசெயர் 2:15)**

இயேசு தேவனது அதிகாரத்திற்கு கீழப்பட்டவராக இருந்தபோதும், அவர் சகலவற்றின் மேலும் சகல வல்லமைகளையும் அதிகாரங்களையும் கொண்டவராக இருக்கின்றார். நீங்கள் முன்னர் கற்றதுபோல இயேசுவால் உங்களுக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது:

> **ஒரு மனுஷன் தன் வீட்டைவிட்டு, புறத்தேசத்துக்குப் பிரயாணம்போக எத்தனிக்கும்போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங்கொடுத்து, அவனவனுக்குத் தன் தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும்படிக்குக் காவல்காக்கிறவனுக்குக் கற்பிப்பான். (மாற்கு 13:34)**

நீங்கள் இயேசுவின் அதிகாரத்திற்கு கீழ்வந்து கிரியை செய்யும்போது, நீங்களும் பிதாவின் அதிகாரத்திற்கு கீழ் வருகின்றீர்கள். விசுவாசிகளும் ஆவிக்குரிய அதிகாரத்தை, அவர் அமைத்த அதிகாரத்தின் கீழ் பெறுகின்றார்கள்.

## அதிகாரிகளை தேவனே ஏற்படுத்தினார்

வல்லமையின் மூலாதாரம் தேவன் என்று ஏற்கனவே நீங்கள் கற்றுள்ளீர்கள்:

> **ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும்**

**பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், அதிகாரங் களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. (கொலோசெயர் 1:16)**

தேவன் உலகில் நிறுவியுள்ள அனைத்து அதிகார கட்டமைக்குள்ளும் தனது வல்லமையை கொண்டுள்ளார்:

**எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 13:1)**

தேவன், சகல கட்டமைப்புக்குள்ளும் உச்ச நிலையிலான அதிகாரத்தை கொண்டிருக்கின்றார், விசுவாசிகளும் அவர் அமைத்துள்ள அந்த அதிகார கட்டமைப்புக்கு கீழ்ப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். வீட்டிலும், சபையிலும், வேலைத்தளங்களிலும், அரசாங்கத்திலும் இவ்வதிகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நபரினதும் சூழ்நிலைகள் மற்றவர்களிலும் பார்க்க வேறுபட்டவைகள். சில பெண்களுக்கு கணவர்கள் இல்லை. சில மக்களுக்கு வேலை இல்லாதபடியால் அவர்களுக்கு எஜமான்களோ அல்லது வேலைகொள்வோரோ இல்லை. அப்படிப்பட்டவர்கள் இவ்வதிகாரத்திற்குட்டவர்கள் அல்ல. ஆனாலும் தேவன் இக்கட்டமைப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றமையால் அவைகள் மிக முக்கியமானவைகள் என்று அங்கீகரியுங்கள். நீங்கள் இந்த அதிகாரிகளுக்கு கீழ்ப்பட்டவராகவே இருந்து செயல்படவேண்டும். நியாயமான அதிகாரங்கள் எப்போதுமே மூலாதாரங்களிலிருந்து ஒப்படைக்கப்படுகின்றது.

நீங்கள் ஒரு அதிகாரத்தின் கீழ் இருக்கும் போது, நீங்கள் உங்களது சொந்த ஆதாரத்தில் தங்கியிராமல், அவ்வதிகாரத்தை வேறொருவரிடத்திலிருந்தே பெற்றுள்ளீர்கள். உதாரணத்திற்கு, ஒரு மனைவி தனது வீட்டில் அதிகாரத்தை கணவனிடமிருந்தே பெறுகிறாள். ஒரு சபையில் மூப்பர் அல்லது உதவி ஊழியர்கள் தமது அதிகாரத்தை தமக்கு மேலாக தேவன் நியமித்திருக்கின்ற ஆவிக்குரிய தலைவர்களிடமிருந்தே பெறுகிறார்கள். ஒரு தொழிலாளி அவரது எல்லையை, அதிகார அமைப்பிலுள்ள முதலாளியிடமிருந்தே பெறுகிறான். ஆனால் இவ்வதிகார கட்டமைப்புகள் யாவும் சங்கிலியைப்போல சகல அதிகாரங்கள்கும் மூலாதாரமான தேவனிடமே இறுதியில் செல்கிறது.

அனைத்து அதிகாரங்களும் தேவனால் நிறுவப்பட்டுள்ளது. நாம் மூலாதாரத்தை தேடும்போது, அது எப்போதுமே தேவினடமே முடிவடைகிறது. இதன்காரணமாகவே் அதிகாரத்திற்கு எதிராக நீங்கள் கிளர்ச்சி செய்யும்போது, தேவனது வல்லமை உங்கள் வாழ்க்கையில் தடைபடுகின்றது. உங்களுக்கு மேலாக அதிகாரத்திற்கு எதிராக நீங்கள் கிளாச்சி செய்யும்போது தேவனுக்கு எதிராகவே செயல்படுகின்றீர்கள்:

**எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்துநிற்கிறான். அப்படி எதிர்த்துநிற்கிறவர்கள் தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள். (ரோமர் 13:1-2)**

நீங்கள் அதிகாரத்திலிருக்கின்ற ஒரு நபரால், நீங்கள் தேவனால் நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரத்திற்கு, கீழ்ப்பட்டிருக்க வேண்டும். தேவனால் உருவாக்கப்பட்டுள்ள அதிகார கட்டமைப்புகளில் சில:

## வீட்டில் அதிகார கட்டமைப்பு:

தேவன் உருவாக்கிய முதல் அதிகார கட்டமைப்பு வீட்டிலேயே இருக்கின்றது. (ஆதியாகமம் 1-3) தேவனுடைய கட்டமைப்பு வீட்டில்:

**கணவன்:**

கணவனே வீட்டிற்கு தலைவர் என்று வேதாகமம் போதிக்கின்றது. கணவனின் அந்த அதிகாரக் கட்டமைப்பின் அடித்தளம் அன்பாகும்:

> **கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.**
>
> **புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, (எபேசியர் 5:23,25)**

**மனைவி:**

மனைவி கணவனின் அன்பின் அதிகாரத்தின் கீழ் இருக்க வேண்டும்:

> **மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். (எபேசியர் 5:22)**

**பெற்றோர்:**

கணவனும், மனைவியும் பிள்ளைகளின்மேல் அதிகாரங்கள் கொண்டவர்கள்:

> **பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்.**
>
> **உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்..**
>
> **உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. (எபேசியர் 6:1-3)**

ஆனால் பெற்றோர் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்:

> **பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக. (எபேசியர் 6:4)**

அனைத்து அதிகாரமும் உத்தரவாதத்தைக் கொண்டுள்ளது. பெற்றோர்கள் தமது தேவனுடைய அதிகாரத்தை அன்புடன் செயல்படுத்த வேண்டும். கணவர்கள் தமது தலைமைத்துவத்தை, கிறிஸ்து சபையில் அன்பு கூர்ந்ததுபோல பயன்படுத்த வேண்டும். அவர்கள் கொடூரமான எஜமான்களைப்போல மனைவி மற்றும் குழந்தைகளை அடிமைகளாக நடத்தக் கூடாது. கிறிஸ்து சபைக்காக

செய்ததைப்போல தங்களது குடும்பத்தாருடன் தொடர்புபட வேண்டும்.

கணவர்கள் தங்களது மனைவிகளை தேவன் தந்த வெகுமதி என்று கணித்து, “துணையாக” இருப்பவர் என்று எண்ண வேண்டும். எப்போதும் தனது கருத்தையும், தன்னையும் அசட்டை செய்கின்ற கணவனுக்கு எவ்வாறு மனைவியால் உதவ முடியும்? வேதாகமத்திலே தேவனால் மனைவிக்கு (ஆபிரகாம்) செவிகொடுக்கச் சொன்னமையும், கணவனிடம் (மனோவா) பேசும் முன்னதாகவே மனைவியிடம் பேசியமையும் பதிவு செய்ப்பட்டுள்ளது. கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் முக்கியமானவர்கள் என்பதற்கான காரணம் இதுவேயாகும். தேவன் ஆபிரகாமை அழைத்து பெரிதான ஊழிய உத்தரவாத்தை கொடுத்தமைக்கான காரணம், அவனது வீடு சரியான ஒழுங்கு முறையில் இருந்தமை என்பது சுவாரஸ்யமான குறிப்பாகும்.

சகல அதிகார கட்டமைப்புகளும் நியாயமானவைகளாகவும் நேசிக்கத்தக்கவைகளுமாக இருக்கின்றன. துரதிஷ்டவசமாக நியாயமானவைகளாகவும் நேசிக்கத்தக்கவைகளுமாக இருந்த இந்த சகல கட்டமைப்புகளையும் அதிகாரங்களையும் மக்கள் தவறாக பாவித்துவிட்டார்கள். வீட்டில் தேவன் நிறுவியுள்ள இந்த அதிகார கட்டமைப்பை சரியானபடி பாவிக்காதபோது அது ஊழியத்தையும் பாதிக்கின்றது. வீட்டில் ஒழுங்கான தலைமைத்துவம் இல்லாவிட்டால், மிகவும் பொறுப்பு வாய்ந்த உத்தரவாதத்தை ஊழியத்தில் நிறைவேற்ற முடியாது. இதனாலேயே தேவன் முதலாவதாக வீட்டில் தலைமைத்துவ பயிற்சியை கட்டளையிட்டு, பின்பு சபையின் தலைமைத்துவத்தை நிறுவினார்:

> **ஆகையால் கண்காணியானவன்.... தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமா யிருக்க வேண்டும்.**
>
> **ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? (1 தீமோத்தேயு 3:2,4-5)**
>
> **குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியையுடைய புருஷனும், துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம். (தீத்து 1:6)**

கணவன் மனைவிக்கிடையே விரோதம் இருக்குமானால் அது ஜெபத்திற்கு தடையென்று வேதாகம் பேசுகின்றது.

## சபையில் அதிகார கட்டமைப்பு:

நாம் சபையின் அதிகார கட்டமைப்பைப்பற்றி பேசும்போது, மனிதனாலாக்கப்பட்ட நிறுவனங்களைப்பற்றி பேசவில்லை. நாம் சபை நிறுவனங்களைப்பற்றியும், அதன் ஆட்சி முறை, தலைவர்களை வாக்களிப்பினால் தேர்ந்தெடுக்கும் முறை என்பனபற்றியும் பேசவில்லை. நாம் தேவனால் நிறுவப்பட்டதும், வேதாகமத்தில் திருச்சபைபற்றியதான கட்டடைப்பற்றியே பேசுகிறோம்.

திருச்சபையின் தலைவர் இயேசு கிறிஸ்து மற்றும் விசுவாசிகள்...

> **நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். (1 கொரிந்தியர் 12:27)**

தேவன் திருச்சபையை விஷேட தலைமைத்துவ வரங்களோடு நிறுவியுள்ளார்:

**அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:13)**

இத்தலைமைத்துவ வரங்கள் தேவனால் திருச்சபையில் நிறுவப்பட்டுள்ளது. நீங்கள் உள்ளூர் திருச்சபையின் அங்கத்தவராக மாறும்போது, தேவனால் நியமிக்கபட்ட அதிகாரமுள்ள தலைவர்களுக்கும் குறிப்பிட்ட ஐக்கியத்திற்கும் கீழ்வருகின்றீர்கள். இந்த விஷேடமான தலைவர்கள் உங்களது உள்ளூர் சபைகளில் மூப்பர்களாக அல்லது உதவி ஊழியர்களாக இருந்து உங்களை வழிநடத்துவார்கள். இம்மனிதர்களின் கடமைகள் மற்றும் தகுதிகளைக் குறித்து 1 தீமோத்தேயு 3, மற்றும் தீத்து 1லும் உங்களால் வாசிக்க முடியும்.

ஆவியில் நிறைந்த விசுவாசிகளையும் தேவன் சபைக்கு ஆவிக்குரிய வரமாக கொடுத்துள்ளார். இவ்வரங்கள் திருச்சபையில், தலைமைத்துவ அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டவர்களாக ஊழியத்தின் வளர்ச்சியை நோக்காக கொண்டு செயல்படுவார்கள். இவ்வரத்தைக் குறித்து மேலதிகமாக நீங்கள் பின்வரும் வேதபகுதிகளில் வாசிக்கலாம்: ரோமர் 12:1-8, 1 கொரிந்தியர் 12:1-31, எபேசியர் 4:1-16. 1 பேதுரு 4:7-11. இவ்வரங்களைக் கறித்து விபரமாக. சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடவிதானமான “பரிசுத்த ஆவியின் ஊழியங்கள்” என்ற பாடத்தில் கற்கலாம்.

திருச்சபையானது இயேசு கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாக இருக்கின்றது. சரீரத்தின் பாகங்களைப்போன்று, சபையின் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் வித்தியாசமான உத்தரவாதம் இருக்கின்றது. திருச்சபையின் தலைவராகிய இயேசுகிறிஸ்துவின் வழிநடத்தலின் கீழ் சகல பாகங்களும் வருகின்றது.

மனித உடலிலுள்ள சகல பாகங்களும் தலையிடமிருந்தே வழிகாட்டலைப் பெறுகின்றன. ஆவிக்குரிய சரீரமாகிய சபையிலும் இதே உண்மைதான் இருக்கின்றது. சரீரத்தில் ஒற்றுமையிராவிட்டால் தலையாகிய இயேசுகிறிஸ்துவின் அதிகாரமும் அங்கிராது.

சரீரத்தின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று ஒப்புக்கொடுத்திருப்பதுபோல, திருச்சபையின் அங்கத்தவர்களும் தங்களை ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுத்திருக்க வேண்டும். உதாரணமாக நாம் வாசிக்கின்றபோது கண்கள் அதிகாரத்தை எடுத்துக் கொள்கின்றன. நடக்கும்போது கால்கள் அதிகாரத்தை எடுத்துக் கொள்கின்றன. இதைப்போன்றே ஆவிக்குரிய சரீரத்தில் அங்கத்தவர்களாக இருப்போரும் ஊழியம் திறம்பட செயல்பட தம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

## வேலையில் அதிகார கட்டமைப்பு:

வேலை செய்வோருக்கும் (தொழிலாளி) மற்றும் வேலை கொள்வோருக்குமாக (முதலாளி) வேதாகமம் அதிகார கட்டமைப்பை நிறுவியுள்ளது. வேலை கொள்வோர் எஜமானாக அல்லது முதலாளியாக அல்லது தொழிலாளருக்கும் பொறுப்பானவராக இருப்பார். பணியாளர் ஒரு வேலையாள் மாத்திரமல்ல குறிப்பிட்ட வேலையை செய்வதற்கான உத்தரவாதத்தையும் கொண்டவர்.

வேதாகமம் போதிக்கிறது:

**வேலைக்காரரே, நீங்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, சரீரத்தின்படி உங்கள்**

**எஜமான்களாயிருக்கிறவர்களுக்கும் பயத்தோடும் நடுக்கத்தோடும் கபடற்ற மனதோடும் கீழ்ப்படிந்து,**

**மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.**

**அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின் படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து,**

**மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள். (எபேசியர் 6:5-8)**

அனைத்து அதிகாரத்திற்கும் மூலாதாரம் தேவனாக இருக்கின்றபடியால் வேலைக்காரன் அல்லது பணியாளர் தேவனுக்கு பயந்து அவ்வேலையைச் செய்ய வேண்டும். வேலைக்கொள்வோன் அல்லது முதலாளிகளுக்கும் தேவன் அறிவுறுத்தல்களைக் கொடுத்துள்ளார். கட்டமைப்பின் அதிகாரம் திரும்பவும் தெளிவாக இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது:

**எஜமான்களே, அப்படியே நீங்களும், வேலைக்காரருக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்து, அவர்களுக்கும் உங்களுக்கும் எஜமானானவர் பரலோகத்தில் இருக்கிறாரென்றும், அவரிடத்தில் பட்சபாதம் இல்லையென்றும் அறிந்து, கடுஞ்சொல்லை விட்டுவிடுங்கள். (எபேசியர் 6:9)**

முதலாளிகள் தங்களுடைய வேலைக்காரரை நன்றாக நடத்த வேண்டும், அப்படி அவர்களை நடத்துவதற்கு தேவனால் கொடுக்கபட்ட அதிகாரத்திலிருந்தே, அதிகாரத்தை பெறுகின்றார்கள்.

## அரச அதிகாரிகள்:

மத்தேயு 20:25-28ன் படி உலகின் வல்லமையான கட்டமைப்புகள் தேவனுடைய ராஜ்ஜியத்தைப் போன்றதல்ல. ஆனாலும் விசுவாசிகளாகிய நாங்கள் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குரியவர்களாக இருககின்றபோதும், தற்போது நாம் உலகிலேயே வாழ்கின்றோம். நாம் ஒவ்வொருவரும் பெரிய கண்டங்களில், மாகாணங்களில், மாநிலங்களில், அல்லது பெரிய நாடுகளிலுள்ள கிராமங்களில் அல்லது நகரங்களில் வாழலாம். நாம் ஒவ்வொருவரும் எங்கு வாழ்ந்தாலும் உள்ளூர் மற்றும் தேசிய அரசாங்கத்தின் கீழ், அரச தலைவர்களின் சட்டத்திட்டங்களுக்கும் எமக்கு மேலாக இருக்கின்ற அதிகரிரிகளுக்கும் கட்டுப்பட்டே வாழ்கின்றோம்.

சகல அதிகாரங்களினதும் மூலாதாரம் தேவனே என்று வேதாகமம் போதிப்பதை முன்னர் கற்றுள்ளீர்கள். ரோமர் 13ம் அதிகாரம் அரச அதிகாரிகளை தொடர்புபடுத்தி விளக்குகின்றது. இப்பகுதியை உங்கள் வேதாகமத்தில் திருப்பிக் கொள்ளுங்கள்.

**வசனம் 1** தேவனே அனைத்து அதிகாரமும் கொண்டவர், அவ்வதிகாரத்திற்குட்பட்டு நீங்கள் இருக்க வேண்டும் என போதிக்கிறது.

**வசனம் 2** நீங்கள் இந்த அதிகாரங்களுக்கு எதிர்த்து நிற்கும்போது, தேவனுக்கே எதிர்த்து நிற்கின்றீர்கள்

என குறிப்பிடப்பட்டுள்ளது.

**வசனம் 3-4** தலைவர்கள் பயங்கரவாதிகளாக இருந்தால், அப்போது மட்டுமே நீங்கள் அவர்களுக்கு கீழ்ப்படிய வேண்டியதில்லை. தலைவர்கள்  உண்மையில் தேவனுடைய ஊழியக்காரர்கள்.

தேவனால் அரச தலைவர்களை அதிகாரத்திற்கு கொண்டு வரவும், புறம்பே தள்ளவும் முடியும்:

> **அவர் காலங்களையும் சமயங்களையும் மாற்றுகிறவர். ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிறவர். ஞானிகளுக்கு ஞானத்தையும், அறிவாளிகளுக்கு அறிவையும் கொடுக்கிறவர். (தானியேல் 2:21)**
>
> **உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து தமக்குச் சித்தமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார்... (தானியேல் 4:17)**

அரசனாகிய நேபுகாத்நேச்சரின் கதையை தானியேல் கூறுகிறபோது, அவரது மண்ணுலக அதிகாரத்தின் மூலாதாரத்தை அவர் அறிந்து கொள்ளவில்லை என குறிப்பிடுகின்றார்:

> **அவருடைய இருதயம் மேட்டிமையாகி, அவருடைய ஆவி கர்வத்தினாலே கடினப்பட்டபோது, அவர் தமது சிங்காசனத்திலிருந்து தள்ளப்பட்டார். அவருடைய மகிமை அவரைவிட்டு அகன்றுபோயிற்று.**
>
> **உன்னதமான தேவன் மனுஷரின் ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமானவனை அ தின்மேல் அதிகாரியாக்குகிறார் என்று அவர் உணர்ந்துகொள்ளுமட்டும்.. (தானியேல் 5:20-21)**

தேவன் அரசனிடம், அமாசியா என்ற தீர்க்கதரிசியை போருக்கு செல்லும்போது வழிகாட்டும்படியாக அனுப்பினார்:

> **தேவனுடைய மனுஷன் ஒருவன் அவனிடத்தில் வந்து: ராஜாவே, இஸ்ரவேலின் சேனை உம்முடனே வரலாகாது. கர்த்தர் எப்பிராயீமின் சகல புத்திரராகிய இஸ்ரவேலோடும் இருக்கவில்லை.**
>
> **போக மனதானால் நீர் போம், காரியத்தை நடத்தும். யுத்தத்திற்குத் திடன்கொண்டு நில்லும். தேவன் உம்மைச் சத்துருவுக்கு முன்பாக விழப்பண்ணுவார். ஒத்தாசை செய்யவும் விழப்பண்ணவும் தேவனாலே கூடும் என்றான். (2 நாளாகமம் 25:7-8)**

இவ்வசனங்கள் தேவனே அரசாங்கத்தின் தலைவர்களை நியமிக்கின்றார் என்பதை தெளிவாக காட்டுகின்றது. அவர் இவ்வுலகின் போராட்டங்களிலும் கிரியை செய்கின்றார், ஒருவனை உயர்த்தி ஒருவரைத் துரத்திவிடுகின்றார். துரதிஷ்டவசமாக சிலவேளைகளில் அதிகார கட்டமைப்புகள் வீடுகளிலும், திருச்சபைகளிலும், இரசாங்கங்களிலும் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது. துன்மாக்கமும், இரக்கமுமற்ற தலைவர்கள் பல தேசங்களில் அதிகாரத்தை கைப்பற்றியுள்ளார்கள். அவர்கள தேவனைப்பற்றியும்,  அதிகாரத்தின் மூலாதாரம் தேவன் என்பதையும், மறுதலித்து விசுவாசிகளை துன்புறுத்துகின்றனர். எந்த அரசாங்கமும் கட்டுப்பாடுகளும், தேவனுடைய வார்த்தை

கற்றுத்தரும் சத்தியத்திற்கு நேர்மாறானதாக இருப்பின் அதற்கு கீழ்ப்படிய வேண்டியதில்லை, ஏனெனில் மனிதனைவிட தேவனுக்கெ நீங்கள் கீழ்ப்படிய வேண்டும். சீடர்களுக்கு இயேசு என்ற நாமத்தை போதிக்க கூடாது என்ற கட்டளை வந்த போது அவர்கள்....

**அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்குக் கீழ்ப்படிவதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறதே அவசியமாயிருக்கிறது. (அப்போஸ்தலர் 5:29)**

அவர்கள் இக்கோரிக்கைக்கு மாறாக உலகமெங்கும் சென்று நற்செய்தியை பிரசங்கியுங்கள் என்ற இயேசுவின் கட்டளைக்கே கீழ்ப்படிந்தார்கள். அதையே நீங்களும்...

**ஆகையால், நீங்கள் கோபாக்கினையினிமித்தம் மாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படியவேண்டும்.**

**இதற்காகவே நீங்கள் வரியையும் கொடுக்கிறீர்கள். அவர்கள் இந்த வேலையைப் பார்த்துவருகிற தேவஊழியக்காரராயிருக்கிறார்களே.**

**ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள். எவனுக்கு வரியைச் செலுத்தவேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்த வேண்டியதோ அவனுக்குத் தீர்வையையும் செலுத்துங்கள். எவனுக்குப் பயப்பட வேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள். எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள். (ரோமர் 13:5-7)**

அவர்கள் இப்பாரிய பொறுப்பையும் அதன் பயன்பாடுகளையும் துஷ்பிரயோகம் செய்யாதிருக்க நீங்கள் ஜெபிக்க வேண்டும்.

**நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். (1 தீமோத்தேயு 2:2)**

## சகல வல்லமைகளும் தேவனுடைய வல்லமையாகும்:

பௌதீக உலகிலும், ஆவிக்குரிய உலகிலும் சகல வல்லமைகளுக்கும் மூலாதாரம் தேவனாகவே இருக்கின்றார். சகல அதிகாரமும் அவரிடமிருந்தே வழங்கப்பட்டுள்ளது. அவர் இவ்வதிகார கட்டமைபை வீட்டிலும், சபையிலும், சந்தை வெளிகளிலும், சமுதாயத்திலும், தேசத்திலும் நிறுவியுள்ளார். ஆனால் எதிர்காலத்தில் அவரால் வழங்கப்பட்ட அனைத்து அதிகாரங்களும் அவரது அதிகாரமாக மாறும்:

**அதன்பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது அவர் (இயேசு) சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். (1கொரிந்தியர் 15:24)**

**சகலமும் (இயேசு) அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். (1கொரிந்தியர் 15:28)**

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

---

---

2. ஏன் நீங்கள் அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டு, அதிகாரத்தை பயிற்சி செய்ய வேண்டும்?

---

3. இயேசு அதிகாரம் கொண்ட மனிதனாக இருந்தபோதும் அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டிருந்தார் என்பதை விளக்குக.

---

4. நீங்கள் கற்றுக் கொண்டதின்படி தேவன் திருச்சபையில் நிறுவியுள்ள அதிகாரத்தின் கட்டமைப்பை சுருக்கமாக தருக.

---

5. நீங்கள் கற்றுக் கொண்டதின்படி தேவன் வீட்டில் நிறுவியுள்ள அதிகாரத்தின் கட்டமைப்பை சுருக்கமாக தருக.

---

6. தேவன் வேலை ஸ்தலத்தில் நிறுவியுள்ள அதிகாரத்தின் கட்டமைப்பை விபரமாக தருக.

---

7. அரசாங்கத்தின் அதிகாரங்களுக்கு விசுவாசிகள் கொண்டுள்ள உறவை விபரிக்கும் வேதவசனங்களைத் தருக.

---

8. உங்களுக்கு மேலாக இருக்கின்ற அதிகாரத்திற்கெதிராக நீங்கள் கலகம் செய்யும்போது உண்மையில் யாருக்கெதிராக கலகம் செய்கின்றீர்கள்.

---

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. திருச்சபை என்ற நிறுவனத்தில் அதிகாரம் செயல்படுவதற்கு எடுத்துக்காட்டாக இருக்கும் அப்போஸ்தலர் 6:1-6 வசனங்களை வாசிக்கவும். இப்பகுதியிலிருந்து அதிகாரத்தைக் குறித்து நீங்கள் கற்றவற்றை சுருக்கமாக தருக.

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

2. பிலிப்பியர் 4:2ல் பவுல், எயோதியாள் மற்றும் சிந்திகேயாள் ஆகியோருக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்தும்படி வேண்டுகின்றார். நாம் இப்போராடத்தின் தன்மையைப்பற்றி பேசவரவில்லை, ஆனாலும் பிரச்சனைகள் வருகின்றபோதெல்லாம் யாரோ ஒருவர் அதிகாரத்திற்கு சரியானபடி ஒப்புக்கொடுக்கவில்லை என்பதை காண்கின்றோம்.

3. சாமுவேல் 13ம் அதிகாரத்தை வாசிக்கவும். அவர் அதிகாரத்தை கைபற்றியது ராஜாவாக இருக்கின்ற போதல்ல. தேவனுடைய தீர்க்கதரிசி மாத்திரம் பலியிட வேண்டியதை அவன் செய்கின்றான்.

   1 சாமுவேல் 15ஐ வாசிக்கவும். அரசனாகிய சவுல் தேவனுடைய கட்டளைக்கு எதிர்த்து நின்று அமலேக்கியருடன் போரிட்டு கெடுத்துக்கொள்ள செல்கின்றான்.

   அரசனான சவுலின் கலகத்தின் பிரதிபலன் என்ன? (1 சாமுவேல் 13:13-14 மற்றம் 15:26 ஐயும் கவனியுங்கள்).

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

4. யோவான் 19:10-11 வாசியுங்கள். இயேசுவுக்கு மேலாகவும் அதிகாரம் உண்டு என பிலாத்து நினைத்தான். இது உண்மைதானா?

------------------------------------------------------------------------------------------------

5. கொரிந்தியர் 7ல் கணவன் மனைவி யாகியோருக்கு கொடுக்கபட்டுள்ள அறிவுறுத்தல்களை சுருக்கமாக தருக.

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

6. அப்போஸ்தலர் 23ல் பவுல் தன்னை அதிகாரத்திற்குட்படுத்திக் கொண்டு, தேவனுடைய பிரதான ஆசாரியனுக்கு உத்தரவளித்தார். எவ்வாறு அவர் பிரதியுத்தரவை காண்பித்தா?

------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------

# வல்லமையின் கொள்கை பத்து: அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை

### குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ உயிர்த்தெழுதலை விபரிக்கவும்,
- ☐ இயேசுவின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை விபரிக்கவும்,
- ☐ இன்றைய விசுவாசிகளின் வாழ்வில் உயிர்த்தெழுதலின் வல்லமை கிரியை செய்வதை சுருக்கமாக தரவும்,
- ☐ உயிர்த்தெழுதலின் வல்லமையின் ஆதாரத்தை அடையாளம் காணவும் முடியும்.

### திறவுகோல் வசனம்:

> **இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்... (பிலிப்பியர் 3:10)**

### அறிமுகம்

ஆவிக்குரிய வல்லமை இயேசுவுக்கூடாக இரண்டு வழிகளில் அனுபவமாகின்றது என பவுல் கூறியுள்ளார்:

> **இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்... (பிலிப்பியர் 3:10)**

இவ்வதிகாரம் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமை விசுவாசிகளின் வாழ்வில் வாசம் செய்வதில் கவனம் செலுத்தும். இதைத்தொடர்ந்து வரும் அதிகாரம் அவரது பாடுகளின் ஐக்கியத்தை அறியத்தரும். இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைவிட வேறெந்த படிப்பினையும் சாத்தானை வெறுப்படையச்செய்யாது, இயேசு அவனை தோற்கடித்ததைவிட வேறெந்த சம்பவமும் அவனது இயலாமையை காட்டாது என்பதை வேதாகமம் கோடிட்டு காட்டுகிறது.

### உயிர்த்தெழுதலின் வரைவிலக்கணம்

“உயிர்த்தெழுதல்” என்ற வார்த்தையின் அர்த்தம் மரணத்திலிருந்து ஜீவனுக்கு மீண்டும் உயிர்ப்பிக்கப்படுதல் அல்லது உயிரோடு எழுதல் என்பதாகும்.

### இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

மனுக்குலத்தின் பாவத்திற்காக இயேசு மரித்த பின்னர் பிதாவினால் அவர் மரணத்தினின்றும் உயிர்ப்பிக்கப்பட்டார்:

**ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள். அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார். அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம். (அப்போஸ்தலர் 3:15)**

**ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். (கொலோசெயர் 2:12)**

**உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார். (1 பேதுரு 1:21)**

இயேசு உயிர்த்த கதையை மத்தேயு 28, மாற்கு 16, லூக்கா 24, யோவான் 20 ஆகிய அதிகாரங்களில் உங்களால் வாசிக்க முடியும்.

## இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம்

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மிக வல்லமையுள்ள சத்தியமாக இருக்கிறது, ஏனென்றால் இதுவே எமது விசுவாசத்தின் அடிப்படை:

**மரித்தோரின் உயிர்த்தெழுதலில்லாவிட்டால், கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லையே.**

**கிறிஸ்து எழுந்திருக்கவில்லையென்றால், எங்கள் பிரசங்கமும் விருதா, உங்கள் விசுவாசமும் விருதா. (1 கொரிந்தியர் 15:13-14)**

இரட்சிப்பு இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை விசுவாசிப்பது அத்தியாவசியமானது:

**என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். (ரோமர் 10:9)**

இயேசுவின் உயிர்த்தெழுதல் விசுவாசிகள் நீதிமான்களாகியதை உறுதிப்படுத்துகிறது:

**அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப் படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார். (ரோமர் 4:25)**

உயிர்த்தெழுதல் என்பதன் அர்த்தம் மரணம் தோல்வியடைந்து விட்டது என்பதாகும்:

**ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். மரணத்துக்கு அதிகா ரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்.... (எபிரெயர் 2:14)**

சகல சிருஷ்டிகளின் மீதும் இயேசுவுக்குள்ள அதிகாரத்தை அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை உறுதிப்படுத்துகிறது:

**எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும்,**

**இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக,**

**அவரை உன்னதங்களில் தம்முடைய வலதுபாரிசத்தில் உட்காரும்படி செய்து,**

**எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி,**

**எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார். (எபேசியர் 1:20-23)**

உயிர்த்தெழுதல் இயேசு தேவகுமாரன் என்பதை உறுதிசெய்கின்றது:

**மாம்சத்தின்படி தாவீதின் சந்ததியில் பிறந்தவரும், பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார். (ரோமர் 1:5)**

## எதிர்காலத்தின் உயிர்த்தெழுதல்

வேதாகமம் கூறுகின்றபடி எதிர்காலத்தில் இவ்வுலகமானது முடிவுக்கு வரும் என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். அவ்வேளையில் மரித்தவர்கள் யாவரும் உயிர்த்தெழுவார்கள். விசுவாசிகளாயிருந்து மரித்தவர்கள் நித்தியஜீவனுக்காக எழுந்திருப்பார்கள். யாரெல்லாம் அவிவிசுவாசிகளாக மரித்தார்களோ அவர்களும் நியாயந்தீர்க்கப்பட்டு நித்திய ஆக்கினையை அடையும் படிக்கு எழுந்திருப்பார்கள்.

எதிர்கால உயிர்த்தெழுதலைக் குறித்து நீங்கள் 1 கொரிந்தியர் 6:14; 15:1-58; 1 தெசலோனிக்கேயர் 4:13-18; யோவான் 5:28-29; 2 கொரிந்தியர் 4:14; வெளிப்படுத்தல் 20:4-6 ஆகிய பகுதிகளில் வாசிக்கலாம். எதிர்காலத்தில் உயிர்த்தெழுதலைக்குறித்து நீங்கள் விரிவாக சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் “விசுவாசத்தின் அஸ்திபாரங்கள்” என்ற பாடத்தில் கற்கலாம்:

## உயிர்த்தெழுதலின் தற்போதைய வல்லமை

நாம் என்றாவது ஒருநாள் மரித்து உயிர்த்தெழுதலை அனுபவிப்போம் என்பது உண்மைத்தான், ஆனாலும் உயிர்த்தெழுதலின் வல்லமை எதிர்காலத்திற்காக ஒதுக்கி வைக்கப்பட்டதல்ல. அதன் வல்லமையை தற்போதும் விசுவாசிகளால் அனுபவிக்க முடியும். இப்போது உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வல்லமைக்கு அடித்தளம் உயிர்த்தெழுதல் தான்:

### புதிய நம்பிக்கை:

உங்களுடைய விசுவாசத்தின் படி உயிர்த்தெழுதலின் வல்லமையை பெறுவீர்கள். கல்லறையுடன் உங்கள் வாழ்வு முடிந்து விடாது. உங்களுக்கு நித்திய ஜீவனுண்டு:

**நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார். (1 பேதுரு 1:3-4)**

நம்பிக்கையானது வல்லமையுள்ள சக்தியாகும். விசுவாசமின்றி மக்கள் அதைரியத்துடனும், கவலையுடனும் வளருகிறார்கள். உயிர்த்தெழுதலின் வல்லமை விசுவாசத்தை உயிர்ப்பிக்கும்.

### ஒரு புதிய வாழ்க்கை:

இயேசுவை நீங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது ஆவிக்குரிய ரீதியில் பாவத்தில் மரித்த நீங்கள் ஆவிக்குரிய ஜீவனுக்காக உயிர்ப்பிக்கப்பட்டீர்கள்:

> **உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து... (கொலோசெயர் 2:13)**

பாவத்திற்கு மரிப்பதில் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலின் பலன் இருக்கிறது. உயிர்த்தெழுதலின் வல்லமையால் உங்களுக்கு புதிய வாழ்வை வாழ முடியும். ஜீவிக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் வாழ வேண்டியதில்லை. உலகில் தீய காரியங்களுக்கு மரித்து இயேசுவில் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளீர்கள்.

இப்புதிய வாழ்வை சுயமாக அனுபவிக்க முடியாது. உங்களுடைய சொந்த வல்லமையாலும் ஜீவிக்க முடியாது. உயிர்த்தெழுதலின் வல்லமையால் மட்டுமே உங்களால் வாழ முடியும்:

> **அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்.**
>
> **ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.**
>
> **நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.**
>
> **நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது. (ரோமர் 6:11-14)**

ஆவிக்குரிய மரணத்திற்கும், ஜீவனுக்குமான போராட்டத்திற்கு நீங்கள் உங்களுக்குள்ளே முகங்கொடுப்பீர்கள். உயிர்த்தெழுதலின் வல்லமையானது பாவத்தின் சட்டங்கள் தோல்வியடையச் செய்து ஆவிக்குரிய கட்டுக்களிலிருந்து விடுவிக்கும். இயேசு சொன்னார்:

> **திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)**

உயிர்த்தெழுதலின் வல்லமையின் நிமித்தமாக எதிர்காலத்தில் நித்திய ஜீவன் மாத்திரமல்ல, நிகழ்காலத்திலும் உங்களுக்கு செழிப்பான வாழ்வுண்டு.

## புதிய எஜமான்:

ஆவிக்குரிய உயிர்த்தெழுதல், உங்கள் வாழ்வில் இயேசுவை எஜமானாக்குகிறது. நீங்கள் உங்களுக்காக மட்டும் வாழாமல் அவரை சேவிக்கவே வாழ்கிறீர்கள்:

> **பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். (2 கொரிந்தியர் 5:15)**

உயிர்த்தெழுதலின் வல்லமை வருகின்றபோது உங்களது நிலைமையும் புரிந்து கொள்வீர்கள். நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய வேலையாட்கள். சாத்தானுக்கு அடிமையாக இருக்க வேண்டியதில்லை.

## புதிய வாழ்வின் நோக்கம்:

புதிய வாழ்வின் நோக்கத்தின் பலாபலன் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலிலேயே இருக்கிறது. உலகத்தின் தற்காலிக பொருள்களின் ஆதாயத்திற்காகவும், புகழுக்காகவும், கவனம் செலுத்தாமல், உங்களது அவதானம் எல்லாம் நித்திய காரியங்களுக்காகவே இருக்க வேண்டும்:

> **நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. (கொலோசெயர் 3:1-3)**

உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவித்த ஒரு விசுவாசியை உலகக்காரியங்கள் நீண்ட காலத்திற்கு கட்டுப்படுத்தாது. உலகின் சூழ்நிலைகள் நீண்ட காலத்திற்கு அவனை தோற்கடிக்காது. உயிர்த்தெழுதலின் வல்லமையை அவன் அனுபவித்தபடியால், அது அவனுக்கு புதிய பார்வையையும் நோக்கத்தையும் கொடுக்கும்.

## புதிய உயிர்ப்பித்தல்:

> **அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோமர் 8:11)**

“உயிர்ப்பித்தல்” என்ற சொல்லின் அர்த்தம் உயிருடன் எழும்புதல் என்பதாகும். தேவன் உங்கள் பாவங்களில் இருந்து உயிர்ப்பித்துள்ளார்:

> **அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார். (எபேசியர் 2:1)**

ஆனால் அவர் உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிக்க விரும்புகின்றார். அவர் உங்கள் சரீரங்களை உயிர்த்தெழுதலின் வல்லமையால் உயிர்ப்பிக்க விரும்புகிறார்:

> **இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால்**

**உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். (2 கொரிந்தியர் 4:7)**

நீங்கள் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொண்டதும், பரிசுத்த அவியானவரால் நிரப்பப்படுவீர்கள், அதே ஆவியின் வல்லமையே இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பி உங்களுக்குள் வாசம் செய்கிறது. எனவே அந்த வாழ்வின் ஓட்டத்தை உயிர்த்தெழுந்த வல்லமையுடன் தொடருங்கள்.

## உயிர்த்தெழுதலின் வல்லமையின் ஆதாரம்

விசுவாசிகளின் வாழ்வில் உயிர்த்தெழுதலின் வல்லமைக்கு ஆதாரம் இயேசுவேயாகும். அவர் சொன்னார்:

**நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.... (யோவான் 11:25)**

இயற்கையான வாழ்வில் இரத்தம் இருப்பதுபோல, ஆவிக்குரிய வாழ்க்கை இயேசுவின் இரத்தத்தின் ஊடாக இருக்கிறது. இயற்கையான இரத்தம் உங்களது நரம்புகள் வழியாக பாய்கிறது. உயிர்த்தெழுதலின் வாழ்க்கை உங்கள் ஆவிக்கூடாக பாய்கின்றது. நீங்கள் இன்று உயிர்த்தெழுதலின் வல்லமையுடன் நடக்கிறீர்களா? நாளாந்த கிறிஸ்தவ வாழ்வு எவ்விதமுள்ளது? உங்கள் ஊழியம் எவ்வாறானது? இன்று அந்த வாழ்க்கை ஓட்டத்தை தட்டியெழுப்புங்கள்!

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

2. "உயிர்தெழுதலை" வரைவிலக்கணப்படுத்துக.

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

3. இயேசு மரணத்திலிருந்து உயிரோடெழும்பியதின் முக்கியத்தை சுருக்கமாக தருக.

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

4. பின்வரும் கூற்று சரியானதா? பிழையானதா? "எதிர்காலத்தில் ஒரு விசுவாசி மரித்து உயிர்த்த பின்னரே உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவிக்க முடியும்." இக்கூற்றானது.......................................

5. ஒரு விசுவாசியின் வாழ்வில் உயிர்த்தெழுதலின் வல்லமையின் தற்போதைய நோக்கங்களை சுருக்கமாக தருக.

------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------

6. ஒரு விசுவாசியின் வாழ்வில் உயிர்த்தெழுதலின் வல்லமையின் மூலாதாரம் யார்?

------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இயேசு கிறிஸ்து ஒருபோதும் மரண ஆராதனைக்கு சமூகமளிக்கவில்லை.... அவர் உயிர்த்தெழுதலிலேயே பங்கு கொண்டார்...

    -நாயினூர் விதவையின் மகன்: லூக்கா 7:11-17

    -யவீருவின் மகள்: மாற்கு 5:35-43

    -லாசரு: யோவான் 11:1-46

    -அவரது: மத்தேயு 28, மாற்கு 16, லூக்கா 24, யோவான் 20

2. சுவிசேஷ செய்தியை பிரசங்கிக்கிற போது முக்கிய பகுதியாக இருப்பது உயிர்தெழுதலாகும். கவனியுங்கள் அப்போஸ்தலர் 4:2; 17:18,32; 1 கொரிந்தியர் 15:1-8,14,19-22

3. இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுவதற்கு பல வருடங்களுக்கு முன்னரே ஆபிரகாம் வாழ்ந்தார், எனினும் அவர் உயிர்த்தெழுதலின் வல்லமையை அனுபவித்தார். இதை ரோமர் 4:16-24ல் வாசிக்கவும்.

4. மரித்து அடக்கம்பண்ணப்பட்ட ஒருவன் பல வருடங்களுக்கு பின்னர், எலிசாவின் எலும்புகளை வைத்தபோது புத்துயிர் பெற்றான்! அவன் அதிகமான வல்லமையை தனது எலும்புகளுக்குள் வைத்திருந்தான் நாம் செய்வதை போன்று (2 ராஜாக்கள் 13:20-21).

# வல்லமையின் கொள்கை பதினொன்று: பாடுகளின் வல்லமை

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,

☐ பாடுகளின் ஆதாரத்தை அடையாளம் கண்டு கொள்ளவும்,

☐ பாடுகள் வரும் ஐந்து வழிமுறைகளை பட்டியலிடவும்,

☐ விசுவாசிகளின் வாழ்வில் பாடுகளின் குறிக்கோளை சுருக்கமாக தரவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார். அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம். (2 கொரிந்தியர் 13:4)**

## அறிமுகம்

பிலிப்பியர் 3:10ல் உள்ள இரண்டு வல்லமையின் கொள்கைகளை நாம் கடந்த அதிகாரத்தின் ஆரம்பத்தில் கலந்துரையாடினோம்:

**இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்.... (பிலிப்பியர் 3:10)**

விசுவாசிகளின் வாழ்வில் உயிர்த்தெழுதலின் வல்லமை இருப்பதைக் குறித்து பதினாறாம் அதிகாரத்தில் அவதானித்தோம். இவ்வதிகாரம் பாடுகளின் ஐக்கியத்தின் வல்லமையைக் குறித்து கவனம் செலுத்தும் இயேசுவைப்பற்றி பவுல் கூறியதாவது:

**ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்ளூ அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம். (2 கொரிந்தியர் 13:4)**

மனிதன் என்ற காரணத்தினாலேயே பாடுபடுகின்றோம். ஒவ்வொரு நிலையிலும் மனிதன் என்ற காரணத்தின் நிமித்தமாகவே இயேசுவின் சிலுவை அவரது உன்னத வாழ்வை இழக்கச் செய்தது. ஆனாலும் தேவனின் பார்வையில் அது மிகப்பெரிதான அவரது ஆளுகையின் வல்லமையாகும். அதன் பலனாக மனிதன் இரட்சிப்படைகின்றான்.

இந்த ஆவிக்குரிய வல்லமையின் கொள்ளையை பவுல் நன்றாக புரிந்து கொண்டார். தேவனுடைய வல்லமை பலவீனத்தில் வெளிப்படையாக தெரிகின்றது. அதனாலேயே அவர் கூறினார்:

**கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.**

**அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன். (2 கொரிந்தியர் 12:9-10)**

பலவீனம் அல்லது தோல்வியில் நாம் ஒருபோதும் வல்லமையை காண முடியாது. சிலுவையை மையமாக வைத்து விசுவாசத்தைக் கொண்டுள்ள மக்களனிள் வித்தியாசமான அணுகுமுறை இதுதான். இயேசு பாடுபட்டதின் பின்னதாக உயிர்த்தெழுதலை அனுபவித்தார். உயிர்த்தெழுதலின் வல்லமை அவரது பாடுகளின் ஐக்கியத்திற்கூடாகவே வரும்.

உண்மையான ஆவிக்குரிய வல்லமை, துன்பங்கள், பிரச்சனைகள், மற்றும் நெருக்கடிகள் இல்லாதபோது நிருபித்துக் காண்பிக்கப்பட மாட்டாது. ஆனால் அவைகளின் மத்தியிலேயே காணப்படும். தேவனுடைய வல்லமை நிருபித்து காண்பிக்கும்படியாக, சோதனைகள் வாய்ப்பாக பயன்படுத்தப்படும்.

## பாடுகளின் மூலாதாரம்

தேவன் பாடுகளை சிருஷ்டிக்கவில்லை. சாத்தானின் வஞ்சகத்தினால் மனிதனுடைய பாவத்தினூடாகவே உலகத்திற்குள் பாவம் பிரவேசித்தது. (ஆதியாகமம் 3) எப்போது மனிதன் சாத்தானுடைய சோதனைக்கு அடிபணிந்து பாவம் செய்தானோ அப்போதே பாவம் உலகத்திற்குள் பிரவேசித்தது. பாவமே எல்லா கஷ்டங்களுக்கும் காரணமாகியது, அதன் ஆரம்ப காரணன் சாத்தானாவான். உங்கள் வாழ்க்கையில் வெவ்வேறு காரணங்களுக்காக பாடுகள் வருகின்றபோதும், பாடுகளை இந்த மூலத்திலிருந்தே காணலாம்.

மகிழ்ச்சியுடன் இருக்கின்ற விசுவாசியின் வாழ்க்கையில், தேவன் தனது நோக்கத்தை நிறைவேற்றும்படியாக. சாத்தானின் தீயவல்லமையினால் வருகின்ற துன்பங்களை, பாடுகளை அகற்றிவிட முடியும். இது உண்மையாகவே தேவனுடைய வல்லமையை உங்கள் வாழ்வில் நிரூபிக்க வாய்ப்பாக முடியும்.

## பாடுகளுக்கான காரணங்கள்

வேதாகமம் பாடுகள், பிரச்சனைகள், மற்றம் துன்பங்களுக்கான காரணங்களை அதிகமாக சொல்லுகின்றது. விசுவாசிகளின் வாழ்வில் பாடுகள் ஐந்து விதமாக காரணங்களால் வருகின்றதை நாம் கண்டறிந்துள்ளோம். உங்கள் வாழ்வில் சந்திக்கும் சகல பாடுகளும் இவ்வழியாகவே வருகின்றது.

### உங்களைச் சுற்றியுள்ளவர்களால்:

உங்கள் வாழ்க்கயில் பாடுகள் மற்றும் பிரச்சனைகளின் சூழ்நிலைகள் உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களால் வரலாம்.

இவ்விதமான பாடுகளுக்கு யோசேப்பு சிறந்த உதாரணமாயிருக்கின்றான். யோசேப்பின் சொந்த

தவறினால், அவனது சகோதரரால் எகிப்தியருக்கு விற்கப்படவில்லை, சிறையிலிருக்கின்றபோது அவன் உதவி செய்ததையும் மறந்து, போர்த்திபாரின் மனைவியின் பொய்யான குற்றச்சாட்டினால் சிறையிலிடப்பட்டான். ஆனாலும் அவன் கூறுவதைக் கேளுங்கள். யோசேப்பு கூறினான்:

> **என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம். அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம். ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார்.... ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி..... (ஆதியாகமம் 45:5,8)**

## வாழ்வின் சூழ்நிலைகளால்:

உங்கள் வாழ்வில், இரண்டாவது விதமான இப்பாடுகள் வாழ்வின் சூழ்நிலைகளால் வருகின்றன. வேதாகமத்திலுள்ள ரூத்தின் புத்தகத்தின் கதாநாயகியாகிய நகோமியின் வாழ்வின் அனுபவ பதிவுகளிலிருந்து இதை விளங்கிக் கொள்ளலாம். அவளது கணவனும், மகன்மாரும் மரித்தமையால் கசப்பான துக்கத்தைக் கொண்டிருந்தாள்.

இயேசு மறுபடியும் வந்து கடைசி எதிரியாகிய மரணத்தை வெல்லும்வரை, எமது வாழ்வில் மரணம் ஒரு பகுதிாகவே இருக்கும். மரணம் மனிதனின் பாவத்தினாலே வந்தது, அது நாம் முகங்கொடுக்க வேண்டிய இயற்கையான சூழ்நிலையாக இருக்கின்றது. “ஒரே தரம் மரிப்பது மனுஷனுக்கு நியமிக்கப்பட்டிருக்கின்றது.” ( எபிரெயர் 9:27)

இவ்விதமான கடினமான சூழ்நிலைக்கு நகோமி முகங்கொடுத்தபோது அவள் “என்னை நகோமி (ஆசீர்வதிக்கப்பட்டவள்) என்றழைக்காமல் மாராள் என்று அழையுங்கள்” என்றாள். மாராள் என்பதன் அர்த்தம் “கசப்பு” என்பதாகும்.

## உங்கள் ஊழியத்தினால் :

மூன்றாவது வழியாக பாடுகள் உங்கள் வாழ்வில் நீங்கள் கர்த்தருக்காக செய்கின்ற ஊழியத்தினிமித்தம் வருகின்றது.

அவருடைய நாமத்தினிமித்தம் உபத்திரவப்படுவதைப்பற்றி புதிய ஏற்பாடு (அப்போஸ்தலர் 9:16), கிறிஸ்துவுக்காக (பிலிப்பியர் 1:29), தேவனுடைய ராஜ்ஜியத்திற்காக (2தெசலோனிக்கேயர் 1:5), சுவிசேஷத்திற்காக (2 தீமோத்டதேயு 1:11-12), நன்மை செய்தமைக்காக (1 பேதுரு 2:19-20, 3:17), நீதியின் நிமித்தம் (1 பேதுரு 3:14), கிறிஸ்தவனாக இருப்பதால் (1பேதுரு 4:15-16), தேவனுடைய சித்தத்தின்படி (1 பேதுரு 4:19)ல் பேசுகின்றது.

ஊழியத்தினிமித்தம் பாடுபட்டமைக்கு சிறந்த உதாரணமாக அப்போஸ்தலனாகிய பவுல் இருக்கின்றார். சிலர் விசுவாசக் குறைவினாலும், அடையாளங்கள் நடைபெறாதபடியாலும் பாடுபடுவதாக கருதுகின்றனர். அது உண்மையாக இருப்பின் அப்போஸ்தலனாகிய பவுல் திருச்சபை வரலாற்றில் மிகப்பெரிய தோல்வியை தழுவுகின்றார்.

அவர் ஆசியாவிலே நெருக்கத்துடன் வாழ்ந்தபோது, ஜீவியத்தைக் குறிது நம்பிக்கையை இழந்ததாக பவுல் கூறினார் (2 கொரிந்தியர் 1:8). களிப்பான சுவிசேஷகராகிய அவர் தற்போது வித்தியாசமான

படத்தை காண்பிக்கின்றார், மாத்திரமல்ல அவா விசுவாசிகளுக்கு சமாதானத்தைப்பற்றியும் செழிப்பைபற்றியும் வாக்குத்தத்தங்களைக் கூறியவர்.

தேவனால் பவுல் முதன் முறையாக தேவனுடைய ஊழியத்திற்காக அழைக்கப்பட்டபோது, தேவனுக்காக பாடுபடவேண்டிவரும் என்றே கூறப்பட்டது. (அப்போஸ்தலா் 9:6) “கிறிஸ்துவுக்காக சிலரை ஆதாயப்படுத்துவதற்காக எல்லாவற்றையும் இழக்க தயாா்” என்றே அவா் பாடுகளின்போது கூறினாா். “என்னோடு கூட பாடுபடவும் உங்களுக்கு அருளப்பட்டுள்ளது” எனவும் அவா விசுவாசிகளுக்கு எழுதியுள்ளாா் (பிலிப்பியா் 1:29).

பவுல் ஊழியத்தினிமித்தம் தனியாக வேதனைப்படவில்லை. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் முழுத்திருச்சபையும் பாடுபட்டது (அப்போஸ்தவா் 8). தமது வாழ்வின் முடிவில் எவ்வளவு கொடூரமாக வேதனைப்பட்டாா்கள் என்பதை எபிரெயா் பதினோராம் அதிகாரத்தின் கதைகள் எமக்கு அறியத் தருகின்றது. விசுவாசமுள்ள ஏராளமான ஆண்களும் பெண்களும் தேவனுடைய வல்லமையால் விடுவிக்கபட்டுமுள்ளாா்கள். சிறைச்சாலையின் கதவுகள் அவா்கள வெளியே நடமாடும்படிக்கு திறந்துள்ளன. அவா்கள் உலைகளில் போடப்பட்டும் மரணமடைந்து, எரியாமல் வெளியேறினாா்கள். ஆனாலும் விசுவாசிகள் என்றழைக்கப்பட்ட அநேக ஆண்களும். பெண்களும் விடுதலை பெறாமலும் இருந்துள்ளாா்கள். அவா்கள சுவிஷேசத்தினிமித்தமாக சிறைகளிலிருந்தனா், நோயால் பாதிக்கப்பட்டனா், சித்திவதையடைந்தனா், கடைசியாக இரத்தசாட்சியாகவும் மரித்தாா்கள். (எபிரெயா் 11:36-40) நாம் ஜீவிக்கின்ற விசுவாசத்தைக் குறித்து கவனம் செலுத்துகின்றோம், தேவனோ அவரது வல்லமையை மரிக்கும் விசவாசத்தில் வெளிப்படுத்துகின்றாா். மிக மோசமான நேரங்களிலும் இவ்விசுவாசம் நிலைத்திருக்கும் என்பது உண்மையாக இருக்கின்றது, நல்ல வேளைகளிலும் வலிமைமிக்க விடுதலை வெளிப்படுத்தப்படும் என்பது இதன் அா்த்தமாகாது.

### சாத்தானின் நேரடியான செயல்பாட்டால்:

சாத்தானின் நேரடியான கிரியைகளின் மூலமாகவும் பாடுகள் உங்கள் வாழிவிற்குள் பிரவேசிக்கலாம்.

இதற்கு சான்றாக யோபுவின் கதை இருக்கின்றது. இப்புத்தகம் “ஏன் நீதிமானும் பாடுபடுகின்றான்” என்ற போராட்டமான ஓா் கேள்வியுடன் ஆரம்பமாகின்றது. தேவன் யோபுவைக் குறித்து நீதிமான் என்று சாட்சிபகா்ந்தாா் (யோபு 1-2). யோபு பாடுபட்டதினாலே அவனது நண்பா்கள் அவனிடம் பாவம் இருப்பதால் பாடுபடுகின்றான் என்றனா். யோபு மனந்திரும்பினால் அச்சூழ்நிலை மாறும் என்றும் அவா்கள் நம்பினாா்கள்.

இந்த நண்பா்கள் உலகளாவிய பயன்பாட்டை, தனிப்பட்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்க முயற்சிக்கின்றாா்கள். தேவன் பேதுருவை சிறைச்சாலையில் இருந்து விடுதலைச் செய்ததைப்போல உங்களுக்கும் செய்வாா் என்பதை நீங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என சாதாரணமாக கூறக்கூடும். ஆனால் இது உண்மையில்லை. அநேகா் பாவமற்ற வாழ்க்கை வாழ்ந்தபோதும் சிறையிலே தங்களுடைய பெரிதான விசுவாசத்திற்காக இரத்தசாட்சிகளாக மரித்துள்ளாா்கள்.

மற்றவா்களின் பாடுகளை பாா்க்கின்றபோது அது அவா்களின் பாவத்தால், உண்மையற்ற தன்மையால், அவநம்பிக்கையால் வந்தது என்று குற்றஞ்சாட்டுவதைக் குறித்து கவனமாயிருக்க வேண்டும். பாவமுள்ள மனிதன் மாம்சத்திற்கென்று விதைத்த கசப்பான அழிவையே அறுவடை செய்வான் என வேதாகமம்

போதிக்கின்றது (கலாத்தியர் 6:8). விதைப்பதையும் அறுவடை செய்வதையும் அப்பாவிகளின் பாடுகளின்போது பாவிக்க முடியாது.

யோபு அவன் செய்த காரியங்களினால் பாடுபடவில்லை. யோபு ஒரு நீதிமான். இதுவே யோபுவைக் குறித்து தேவனின் சாட்சி. யோபு நற்சாட்சி பெற்றவனாக மனிதரால் மதிக்கப்பட்டவனாக இருந்தான். ஆவிக்குரிய உலகில் திரைக்கு பின்னால் நடந்தவைதான் யோபுவின் பிரச்சனைக்கான காரணம். யோபுவின் இருதயத்திலும், மனதிலும், விசுவாசப்பிரமாணத்திற்கான ஆவிக்குரிய போராட்டம் இருந்தது.

உங்கள் மீதும் ஆவிக்குரிய உலகில் போராட்டம் நடைபெறுகிறது. அந்த போராட்டம் பௌதீக உலகில் நீங்கள் கடினமான சூழ்நிலைகளை அனுபவிக்கின்றபோது வெளிப்படும்.

யோபுவினுடைய பாடுகளில் இருந்து நாம் தெளிவாக கற்றுக் கொள்கின்ற இன்னுமொரு உண்மை என்னவெனில் விசுவாசிகளின் வாழ்வில் தேவனுக்கு தெரியாமல் ஒன்றும் நடைபெறாது என்பதாகும். உங்கள பாடுகளுக்க தேவன் காரணர் அல்ல. அது சாத்தானின் மூலம் வருகின்றபோதும் தேவன் விதித்துள்ள எல்லைக்குள்ளேயே அது அமைந்திருக்கும். சாத்தானைப் பார்க்கிலும் தேவனது வல்லமை பெரியது, நீங்கள் அவரை நம்பும்போது தொடர்ந்தும் வெற்றியை அனுபவிப்பீர்கள்.

### உங்களது சொந்த பாவத்தினால்:

ஐந்தாவது வழியாக, உங்கள் வாழ்வில் உங்களது சொந்த பாவத்தின்காரணமாக பாடுகள் நுழைகின்றது.

இவ்விதமான வேதனைக்கு யோனா சிறந்த உதாரணம். நினிவேவுக்கு சென்று பிரசங்கிக்கும்படி கட்டளை பெற்றிருந்த யோனா தேவனுக்கு கீழப்படியாமல், நினிவேவுக்கு எதிர் திசையில் பிரயாணம் பண்ணினான். கடலில் மிகப்பெரிய புயல் காற்றுக்கு முகங்கொடுத்து, பெரியமீன் வயிற்றுக்குள் நுழைநத்து அவரது சொந்த பாவத்தினாலேயாகும் (யோனா 1-2).

பிரச்சனைகள் எப்போதும் உங்கள் வழிகளையும் உங்களையும் தேவனுக்கு முன்பதாக இருதயத்தை ஆராய்ந்து பார்க்கவும் வழிசமைக்கும். உங்கள சொந்த பாவத்தினிமித்தம் நீங்கள் பாடுபடலாம். தேவன் தமது வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, வாழாதவர்களை தண்டித்து திருத்துகின்றார் என்று வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. தண்டித்து திருத்துதல் என்பதின் அர்த்தம், ஒழுங்கு நடவடிக்கை, கடிந்துரைத்தல், சீர்செய்தல் என்பதாகும்:

> **எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். (எபிரெயர் 12:11)**

உங்கள் வாழ்வை அவரது சித்தத்திற்கமைவாக கொண்டு வருவதற்காகவே பாடுகளை தேவன் பயன்படுத்துகின்றார்.

> **நான் உபத்திரவப்படுவதற்கு முன் வழி தப்பி நடந்தேன்... இப்பொழுதோ உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன்...**
>
> **நான் உபத்திரவப்பட்டது எனக்கு நல்லது: அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக்கொள்ளுகிறேன்...**

**கர்த்தாவே, உமது நியாயத்தீர்ப்புகள் நீதியுள்ளதென்றும், உண்மையின்படி என்னை உபத்திரவப்படுத்தினீரென்றும் அறிவேன். (சங்கீதம் 119:67,71,75)**

## பாடுகளைக் குறித்த சரியாக மனோபாவம்

பாடுகள் எப்போதுமே பாவத்திற்கு காரணமாக இருப்பதில்லை. வேதாகமம் “நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்” (சங்கீதம் 34:19) என அறிவிக்கின்றது.

நீங்கள் காரணமின்றி வேதனைப்படும்போது, அது உங்களின் பாவத்தினால் அல்ல என்ற சரியான மனோபாவத்தை பராமரிக்க வேண்டும். ஆவிக்குரிய உண்மையான சோதனையின் நாட்களின்போது உங்களது பதில் எவ்வாறு இருக்கும்:

**ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது. (நீதிமொழிகள் 24:10)**

நீங்கள் ஒரு விசுவாசி எனின் நீங்கள் பாடுபடுவது, தேவனுடைய சித்தப்படிதான் என வேதாகமம் வர்ணிக்கின்றது.

அதற்காக நீங்கள் வெட்கப்படக்கூடாது:

**ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்... (1 பேதுரு 4:16)**

நீங்கள் உங்கள் ஆத்துமாவை (வேதனைகளை) தேவனிடம் ஒப்புக்கொடுங்கள். அவர் உங்கள் நன்மைக்காகவே சகல காரியங்களையும் செய்கின்றார் என்பதை அறிந்து கொள்ளுங்கள்:

**ஆகையால் தேவனுடைய சித்தத்தின்படி பாடநுபவிக்கிறவர்கள் நன்மைசெய்கிறவர்களாய்த் தங்கள் ஆத்துமாக்களை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவாகிய அவருக்கு ஒப்புக் கொடுக்கக்கடவர்கள். (1 பேதுரு 4:19)**

நீங்கள் தேவனுடைய சித்தப்படி பாடுபட்டால் சந்தோஷப்படுங்கள்:

**அவருடைய நாமத்துக்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினால், சந்தோஷமாய் ஆலோசனைச் சங்கத்தைவிட்டுப் புறப்பட்டுப்போய்... (அப்போஸ்தலர் 5:41)**

பவுல் கூறியிருப்பதாவது:

**நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள். உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள். ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள். (ரோமர் 12:12)**

**எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம். வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம். துன்பப்பட்டு, சகிக்கிறோம். (1 கொரிந்தியர் 4:12)**

**மிகுந்த பொறுமையிலும், உபத்திரவங்களிலும், நெருக்கங்களிலும், இடுக்கண்களிலும்... (2 கொரிந்தியர் 6:4)**

**ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. (2 தீமோத்தேயு 1:8)**

**இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே. (1 தெசலோனிக்கேயர் 3:3)**

**நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. (2 தீமோத்தேயு 4:5)**

நீங்கள் பாடுபடும்போது அது விசித்திரமானது என எண்ண வேண்டாம்:

**பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து, ஏதோ புதுமையென்று திகையாமல், கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். (1 பேதுரு 4:12-13)**

பவுல் பாடுகளைக் குறித்த சரியான மனோபாவத்தை சுருக்கமாக விளக்குகின்றார்....

**எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது.**

**மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**

**ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரிந்தியர் 4:16-18)**

பவுல் பாடுகளை ஒரு வேலைக்காரனைப்போல் கருதுகின்றார். அது எமக்கான வேலை என்றே அவர் கூறுகிறார்.

### பாடுகளுக்கூடாக வல்லமை

நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், பாடுகளுக்கான காரணர் தேவன் அல்ல. பாவத்தின் காரணமாகவே உலகத்தில் பாடுகள் இருக்கின்றது. ஆனாலும் தேவன் தமது வல்லமையை நிரூபிப்பதற்கு பாடுகளை ஒரு வாய்ப்பாக பயன்படுத்துகின்றார். அவர் அதனை பயன்படுத்துவது.....

## மோசமானதிலிருந்து நன்மைக்கு திருப்ப:

தேவன் மோசமான உள்நோக்கங்கள் கொண்டவற்றை நன்மைக்காக மாற்றம் செய்ய எடுக்கின்றார். அவர் தனது நோக்கங்களை நிறைவேற்றும்படியாக அவற்றை பாவிக்கிறார். யோசேப்பு தனது சகோதரரிடம் அவர்கள் தன்னை அடிமையாக விற்றுப்போட்டது பற்றி கூறியதாவது:

**என்னை இவ்விடத்தில் வரும்படி விற்றுப்போட்டதினால், நீங்கள் சஞ்சலப்படவேண்டாம். அது உங்களுக்கு விசனமாயிருக்கவும் வேண்டாம். ஜீவரட்சணை செய்யும்படிக்குத் தேவன் என்னை உங்களுக்கு முன்னே அனுப்பினார். ஆதலால் நீங்கள் அல்ல, தேவனே என்னை இவ்விடத்துக்கு அனுப்பி.... (ஆதியாகமம் 45:5,8)**

யோசேப்பை பாடுகளுக்குட்படுத்த சாத்தான் அவனது சகோதரர்களை ஏற்படத்துகிறான், ஆனால் தேவன் அதை நன்மைக்காக மாற்றினார். சூழ்நிலைகள் எதிர்மாறானவைகளாக இருந்தாலும், தேவனுடைய வேலைகள் திரைக்குப்பின்னால் நடைபெற்றது. இயேசுவை கொல்லும்படியாக சாத்தான் மனிதர்களை ஏவியபோதும் தேவன் அதை நன்மைக்காக மாற்றினார். அவரது மரணத்தின் காரணமாக இரட்சிபபும், நித்திய ஜீவனும் கிடைக்கிறது

உங்களுக்கு பாடுகள் வரும்போது அவர் அதை தனது வல்லமையை நிரூபிப்பதற்காகவும், தனது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும் பயன்படுத்துகின்றார். விசுவாசிகளான மனிதர்களுடைய வாழ்வில் எக்காரியங்கள் நடைபெற்றாலும் தேவனே அதற்கு காரணர்:

**மேலும் கிறிஸ்துவின்மேல் முன்னே நம்பிக்கையாயிருந்த நாங்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாயிருக்கும்படிக்கு... (எபேசியர் 1:11)**

## தோல்விகளிலிருந்து வெற்றிகளுக்கு திரும்ப:

தேவன் இயற்கையான தோல்விகளை ஆவிக்குரிய நலன்களுக்காக மாற்றுகின்றார். பௌதீக உலகிலுள்ள இவ்விழப்புகள் பற்றி பவுல் எழுதியதாவது:

**ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். (பிலிப்பியர் 3:7-8)**

## பெலவீனத்திலிருந்து பெலனுக்குள் திரும்ப:

பவுல் அறிந்திருந்ததாவது....

**தேவனுடைய பலவீனம் என்னப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 1:25)**

தேவன் பவுலுக்கு கூறினார்:

**என் கிருபை உனக்குப்போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். (2 கொரிந்தியர் 12:9)**

அதனாலேயே பவுல் கூறினார்:

**கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்.**

**அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன். (2 கொரிந்தியர் 12:9-10)**

உங்களுடைய மனுஷீக பலவீனங்கள் தேவனுடைய வல்லமை நிரூபிக்கப்பட வாய்ப்பை வழங்குகின்றது.

## உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட:

ஆவிக்குரிய உலகில் சகல காரியங்களும் விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டவை. இதன் காரணமாகவே உங்கள் விசுவாசம் சோதிக்கபட்டு பெலனடைகின்றது:

**அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும். அதைப்பார்க்கிலும் அதிக வேலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும். (1 பேதுரு 1:7)**

விசுவாசப்பரீட்சையில் இயேசு செய்ததுபோல நீங்களும் ஜெபிக்கலாம், ஆனாலும் கசப்பான பாத்திரம் என்னைவிட்டு நீங்கிவிடட்டும் என அவர் ஜெபித்தபோதும் அது அவரைவிட்டு நீங்கிப்போகவில்லை. அதற்கு பதிலாக அதன் பாடுகளை ஆழ்ந்து குடிக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறீர்கள். எமது ஜெபத்திற்கு பதில் கிடைக்காவிட்டால், நாம் நினைக்கின்றதுதான் பதிலல்ல என்பதை விசுவாசத்துடன் நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

மற்றவர்களை ஆறுதல்படுத்தும்படியாக உங்களுக்கு கொடுக்கப்படுகிறது:

**நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனும், இரக்கங்களின் பிதாவும், சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம்.**

**தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப் படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல்செய்கிறவர். (2 கொரிந்தியர் 1:3-4)**

நீங்கள் மற்றவர்களுடன் தேவனது ஆறுதலைப் பகிர்ந்து கொள்ளும்போது...

**நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி,**

**முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள். (எபிரெயர் 12:12-13)**

## உங்களை நம்ப வேண்டாம் என உங்களுக்கு கற்றுக் கொடுக்க:

பவுல் ஆசியாவிலே தான்பட்ட பாடுகளின் நோக்கத்தை பற்றி பேசுகிறார்:

**ஆசியாவில் பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு**

**மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று.**

**நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். (2 கொரிந்தியர் 1:8-9)**

நீங்கள் அதை அங்கீகரியுங்கள்:

**இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். (2 கொரிந்தியர் 4:7)**

## சாதகமான ஆவிக்குரிய பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கு:

**உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும, உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். (ரோமர் 5:3-4)**

**கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவராக... (1 பேதுரு 5:10)**

இக்குணாதிசயங்கள் உங்களை கிறிஸ்துவைபோலாக்கும், இதுவே உங்களைக் குறித்து தேவனுடைய திட்டமாக இருக்கின்றது (ரோமர் 8:28-29, எபிரெயர் 2:10,1).

## தேவனுடைய கிரியைகளை வெளிப்படுத்த:

குருடனாய் பிறந்திருந்த ஒருவனை சீடர்கள் பார்த்தபோது, இயேசுவிடம் அவனது இந்நிலைமைக்கு யார் காரணம் என வினவினார்கள். அவனுடைய பெற்றோரின் பாவம் காரணமா? அல்லது அவனது பாவம் காரணமா? இயேசு பதிளித்தார்:

**அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும் பொருட்டு இப்படிப் பிறந்தான். (யோவான் 9:3)**

## வல்லமை முழுமைப்பெற:

**அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். (2 கொரிந்தியர் 12:9)**

## நிலையற்றதை நீக்கிவிட:

பாடுகள் நிலையற்ற யாவற்றையும் உங்கள் வாழ்விலிருந்து அகற்றிவிடும். நீங்கள் நம்பியிருக்கின்ற மக்கள், திட்டங்கள், அல்லது பொருட்கள், யாவும் அவசியமான நேரத்தில் உங்களைத் தோல்வி காணச்செய்யும். ஆனால் தேவன் இதை அனுமதிக்கின்றார்.....

**இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையாதவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள்போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது. (எபிரெயர் 12:27)**

வாழ்க்கையில் புயல் ஏற்படும்போது, தேவனிலும் தேவனுது வார்த்தையிலும் கட்டப்படாத யாவும் நொறுங்கிவிடும். (சங்கீதம் 11:89, மத்தேயு 7:24-27).

## உங்கள் கவனத்தை மாற்ற:

நீங்கள் பாடுகளை அனுபவிக்கின்றபோது உங்கள் கவனத்தை அடிக்கடி விளைவுகளின் மீதே செலுத்துவீர்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கடினமான சூழ்நிலைகளில் ஏற்படும் பயங்கர விளைவுகளிலேயே அவதானத்தை வைத்திருப்பீர்கள். ஆனால் தேவன் நித்திய நன்மைகளை அங்கீகரித்து உங்கள் தற்காலிக நிலைமையிலுள்ள அவதானம் மாற்றமடைய வேண்டாம் என விரும்புகிறார்.

**மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**

**ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள். (2 கொரிந்தியர் 4:17-18)**

**பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,**

**கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது நீங்கள் களிகூர்ந்து மகிழும்படியாக அவருடைய பாடுகளுக்கு நீங்கள் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள். (4:12-13)**

**அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். (2 தீமோத்தேயு 2:12)**

## பழைய சுபாவத்தை மாற்றுவதற்கு:

மோவாப் தேசத்தவருக்கு தேவன் கூறினதாவது:

**மோவாப் தன் சிறுவயதுமுதல் சுகமாய் வாழ்ந்தது. அது ஒரு பாத்திரத்திலிருந்து மறு பாத்திரத்தில் வார்க்கப்படாமலும், அதின் வண்டல்களின்மேல் அசையாமலும் இருந்தது. அது சிறையிருப்புக்குப் போனதில்லை. ஆதலால் அதின் ருசி அதில் நிலைத்திருந்தது. அதின் வாசனை வேறுபடவில்லை. (எரேமியா 48:11)**

மோவாப் தொல்லையளிக்கின்ற அனுபவத்தை பெற்றிருக்கவில்லை, அவசியமான நல்ல திராட்சை ரசத்தை உருவாக்கவுமில்லை, அதேபோல தேசம் மாற்றமடையவுமில்லை. அது தொல்லையின்றி நிம்மதியாக இருக்கக்காரணம் செழிப்பாக இருந்தமையாகும். அதனால் அபிவிருத்தி செய்ய

முன்வரவுமில்லை, ஆவிக்குரிய முதிர்ச்சியைப் பெறவுமில்லை மாற்றத்தை பெறவுமில்லை. "சொந்த வாசனை"யில் தங்கியிருந்தது.

பாடுகள் உங்கள் பழைய சுபாவத்தை அகற்றிவிடும். நீங்கள் சிறைபட்டு, வேதனையுடன் பதற்றமாய் இருப்பீர்களானால், வெளியே கொட்டிவிடுங்கள், அப்போது ஆவிக்குரிய வாசனை வீசும், மாம்சத்திற்குரியது ஆவிக்குரியதாகும்.

### ஊழியத்திற்கு ஆயத்தம் செய்ய:

தேவன் உங்களைப்பயன்படுத்தும்படி கேளுங்கள். இயேசுவைப் போலாகும் ஆசையுடன் அவர் பயன்படுத்தும் பாத்திரமாக இருக்க ஜெபியுங்கள். இதற்கான பதில் பாடுபடுதலின் மூலமாக வரும்:

> **கர்த்தருடைய வேலையை அசதியாய்ச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன். இரத்தம் சிந்தாத படிக்குத் தன்பட்டயத்தை அடக்கிக்கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன். (எரேமியா 48:10)**

நீங்கள் பாடுகளுக்கூடாக செல்லவே, தேவனுடைய பிள்ளையாக, அவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவராக அழைக்கப்பட்டவராக இருக்கின்றீர்கள். பௌதீக உலகில் உலோகங்கள் உலைக்குள் சென்று தூய்மையாக்கப்படுவதுபோல, தேவனுடைய சித்தப்படி நீங்கள் பாடுபடும்போது நீங்களும் சுத்திகரிக்கப்படுகின்றீர்கள்.

### கிறிஸ்துவோடுகூட ஆளுகை செய்ய ஆயத்தம்பண்ணும்படிக்கு:

> **அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். (2 தீமோத்தேயு 2:12)**

### ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொடுப்பதற்கு:

இயேசு கூறினார்:

> **நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள். பரலோகராஜ்யம் அவர்களுடையது.**
>
> **என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.**
>
> **சந்தோஷப்பட்டு, களிகூருங்கள். பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே. (மத்தேயு 5:10-12)**

### கீழ்ப்படிதலை கற்றுக் கொடுக்க:

> **அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு.... (எபிரெயர் 5:8)**

### உங்களிலிருக்கின்ற தேவனுடைய வார்த்தையை பரீட்சிக்க:

> **கர்த்தருடைய சொற்கள் மண் குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது. (சங்கீதம் 12:6)**

### நீங்கள் தாழ்மை படுவதற்கு:

> **உன்னுடைய பின்நாட்களில் உனக்கு நன்மை செய்யும்பொருட்டு, உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னைச் சோதித்து, கொள்ளிவாய்ச் சர்ப்பங்களும் தேள்களும், தண்ணீரில்லாத வறட்சியுமுள்ள பயங்கரமான பெரிய வனாந்தரவழியாய் உன்னை அழைத்துவந்தவரும், உனக்காகப் பாறையான கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினவரும்,**
>
> **உன் பிதாக்கள் அறியாத மன்னாவினால் வனாந்தரத்திலே உன்னைப் போஷித்து வந்தவருமான உன் தேவனாகிய கர்த்தரை நீ மறவாமலும்... (உபாகமம் 8:15-16)**

### ஆவிக்குரிய வளர்ச்சிக்கு:

இதன் அர்த்தம் ஆவிக்குரிய விதத்தில நீங்கள் வளருகின்றீர்கள் என்பதாகும்.

> **நெருக்கத்தில் இருந்த எனக்கு விசால முண்டாக்கினீர்... (சங்கீதம் 4:1)**

### தேவனை நெருக்கமாக அறிந்து கொள்ள உதவுவதற்கு:

பாடுகளுக்கூடாக தேவனை இன்னும் அதிகமாக, நெருக்கமாக அறிந்து கொள்ள உங்களால் முடியும். யோபு அதிகமாக வேதனையடைந்து இச்சத்தியத்தை கற்றுக் கொண்டமையால் கூறினார்....

> **என் காதினால் உம்மைக்குறித்துக் கேள்விப்பட்டேன். இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது.**
>
> **ஆகையால் நான் என்னை அருவருத்து, தூளிலும் சாம்பலிலும் இருந்து மனஸ்தாபப்படுகிறேன் என்றான். (யோபு 42:5-6)**

எம்மில் சிலருக்கு தேவனை இரண்டாம்பட்சமாகவே தெரியும். வாழ்க்கையில் நாம் ஆசீர்வாதங்களை அனுபவிக்கின்றபோது, தேவனை ஆடம்பரப்பொருளாகவே நினைக்கின்றோம். ஆனால் உங்களுக்கு உண்மையான தேவை இருக்கின்றபோது அவர் தேவைப்படுகின்றார்.

யோபு பாடுகளின்போது தேவனை நெருக்கமாக அறிந்து கொண்டார். முன்பு யோபு பாடுபட்டபோது தேவனை இறையியலாகவே அறிந்திருந்தார். அதன் பின்னர் அனுபவ்தில்அவர் அறிந்து கொண்டார். இதனாலேயே பவுல் கூறுகிறார்:

> **இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்... (பிலிப்பியர் 3:10)**

தேவனது உயிர்த்தெழுதலின் வல்லமையால் பாடுகளின் ஐக்கியம் ஏற்படுகின்றது என்பது உங்களுக்கு தெரியவரும்.

யோபு, அவரது பாடுகளின்போது அதற்கான காரணம் என்ன என்று கேள்வி கேட்டார். அவர் கேள்வி

கேட்டது தவறல்ல. இயேசு கிறிஸ்துவும் தான் உலகத்திற்கு வந்த நோக்கத்தையும், மனிதருடைய பாவங்களுக்காக மரிக்க போவதையும் அறிந்திருந்தார். ஆனாலும் அவரது பாடுகளின் நேரத்தில் "என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்" எனக் கதறினார்.

இக்கேள்விக்கு பின்வரும் வார்த்தைகள் மிக முக்கியமானவை. கர்த்தருடைய அடுத்த வார்த்தைகள் "உமது கரத்தில் எனது ஆவியை ஒப்புவிக்கின்றேன்" என்பதாகும். கேள்வியில் ஏளனம் இருந்தபோதும் யோபுவின் பதில்......

**அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன். (யோபு 13:15)**

**என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன்.**

**இந்த என் தோல்முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். (யோபு 19:25-26)**

அனைத்து கேள்விகளும் முடிவடைந்த பின்னர், சொல்லின் அழுத்தம் "எனது" என்பதிலிருந்து "உமது" என்று மாறிவிட்டது. நீங்கள் உங்கள் பாடுகளை ஒப்புக்கொடுத்தால், பதிலற்ற கேள்விகள் யாவும் தேவனின் கரத்திலிருக்கும்.

**உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து... (நீதிமொழிகள் 3:5)**

உங்களின் பாடுகளின் நோக்கத்தை தேவனால் வெளிப்படுத்த முடியும், ஆனாலும் உங்களால் ஒருபோதும் முழுமையாக அதை விளங்கிக் கொள்வதற்கு சாத்தியமில்லை:

**காரியத்தை மறைப்பது தேவனுக்கு மேன்மை. (நீதிமொழிகள் 25:2)**

**மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப் பட்டவைகளோ நமக்கு என்றென்றைக்கும் உரியவைகள்.... (உபாகமம் 29:29)**

சில இரகசியமாக காரியங்கள் தேவனுக்கு மட்டுமே உரியவை. யோபுவைப்போல உங்கள் பாடுகளின் நோக்கங்களை உங்களால் ஒருபோதும் விளங்கிக் கொள்ள முடியாது:

**கர்த்தராலே மனுஷருடைய நடைகள் வாய்க்கும். ஆகையால் மனுஷன் தன் வழியை அறிந்துகொள்வதெப்படி? (நீதிமொழிகள் 20:24)**

கடைசியாக தேவன் யோபுவிடம் பேசினார், அவர் இயற்கையிலிருந்து பல உதாரணங்களை பயன்படுத்தினார் எனினும் யோபுவிற்கு அது விளங்கவில்லை. ஆன்மீக உலகில் நடப்பதையும் பௌதீக உலகில் தான் காண்பித்ததை யோபுவால் விளங்கிக் கொள்ள முடியவில்லை என்று தேவன் கண்டார்.

யோபு தேவனை எதிர் கொண்டபோது, பாடுகளுக்கான காரணம் என்ன, என்ற தனது கேள்விக்கான பதிலையும் பெறவில்லை. அவன் தேவனுடைய நேரடி பிரசன்னத்திலிருந்தான், ஆனாலும் அந்த அனுபவமின்றி வெளியேறினான். மனிதனின் காரணமாக கட்டுப்படுத்தப்பட்ட பாடுகளில் அதிக

நாட்களாக இருக்கவில்லை. பதில் பெறாமலே விசுவாத்துடன், அவன் கேள்வி கேட்பதை நிறுத்திவிட்டான்.

உங்கள் பாடுகளை தேவன் அனுமதித்துள்ளார் என்பதை நீங்கள் அறியும்போது, நீங்கள் யார் என்பதை கண்டு கொள்வீர்கள். தேவன் இரண்டாம் பட்சமானவர் அல்ல என்பதையும் அறிந்து கொள்வீர்கள். தேவனை முகமுகமாய் பார்க்கின்றபோது வாதங்களையோ மற்றம் விவாதங்களையோ செய்ய முடியாது.

யோபு தேவனுக்கு முன்பாக நின்றபோது அவனிடம் புதிய கேள்விகள் இருக்கவில்லை. அவனது பாடுகளுக்கான புதிய உண்மைகளம் வழங்கப்படவில்லை. ஆனாலும் அவன் கேள்விகளை விசுவாசத்துடன் மாற்றிக் கொண்டான். அவன் நேரடியாகவே தேவனுடைய பிரசன்னத்தில் இருந்தமையால் கேள்விகளும் சந்தேகங்களுமற்றிருந்தான்.

## நீங்கள் தனிமையாக இருப்பதில்லை

நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி பாடுகளை அனுபவிப்பீர்களால், நீங்கள் தனிமையாக இருக்கப்போவதில்லை என்பதை விளங்கிக் கொள்ளங்கள். இவ்விதமான போராட்டங்களை அநேக விசுவாசிகளும் தமது அனுபவமாக்கிக் கொண்டுள்ளனர்.

> **உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. (1 பேதுரு 5:9)**

மத்தேயு 7:24-27 வரையுள்ள உவமைகள் சித்தரிப்பதுபோல வாழ்க்கையில் புயல்களை தவிர்க்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. தேவனுடைய வார்த்தையின்படி தங்கள் வாழ்வை கட்டினவர்களும், கட்டாதவர்களுக்கும் புயல்கள் வரும். மனித வாழ்வின் அத்திவாரம் எவ்வளவு உறுதியானது என்பதை புயல் தீர்மானிக்கும்.

பாடுகள் தேவனது சித்தத்தின் ஒரு பகுதியாக எதிர்பாக்கப்பட வேண்டும்:

> **அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். (2 பேதுரு 3:12)**

> **ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது. (பிலிப்பியர் 1:29)**

> **நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க, அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு... (2 தெசலோனிக்கேயர் 1:5)**

> **மேலும், நாங்கள் கட்டளையிடுகிறவைகளை நீங்கள் செய்துவருகிறீர்களென்றும், இனிமேலும் செய்வீர்களென்றும், உங்களைக்குறித்துக் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம். (1 தெசலோனிக்கேயர் 3:4)**

> **அப்பொழுது, உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள். என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள். (மத்தேயு 24:9)**

**இவைகளெல்லாம் நடப்பதற்கு முன்னே என் நாமத்தினிமித்தம், அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெபஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள். (லூக்கா 21:12)**

**ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தின துண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள். (யோவான் 15:20)**

நீங்கள் உங்களுக்காக பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு, பாடுபடுவதினால் தேவனை பிரியப்படுத்த முடியும் என்பது இதன் அர்த்தமாகாது. மனிதர்கள் பாடுபடும்போது தேவன் மகிழ்ச்சியடைபவர் அல்ல. ஒரு நோக்கோடு உங்களை நீங்கள் வருத்திக் கொண்டால் (துறவறம் இருந்து) அது பாவம்.

தேவனுடைய கோபத்தை குறைத்து அவரை சமாதானப்படுத்துவதற்காக இன்ற அநேகர் இதையே செய்கின்றார்கள், அல்லது மனிதர்களுக்கு முன்பாக பரிசுத்தவான்களாக காண்பிக்கவும், சமயவாதிகளாக இருக்கவும் விரும்புகின்றனர். ஆனால் தேவனை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மாத்திரமே சமாதானப்படுத்த முடியும். எப்படியாயினும், தேவன் வேதனைப்பட்டது உங்கள் வாழ்க்கையை தொட்டு நன்மைக்காக உங்களை மீட்டுக் கொள்ளும்.

ஆரம்ப திருச்சபையானது தங்களது விசுவாசிகளுக்கு, சபைகளை ஸ்தாபிக்கின்றபோது ஏற்படும் பாடுகளின் அனுபவத்தைக் கற்றுக் கொடுத்திருந்தது. இன்றைய திருச்சபைகளில் அதைக் காண முடிவதில்லை.

**சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள். (அப்போஸ்தலர் 14:22)**

இயேசு தமது சீடர்களை அழைத்தபோது பாடுகளை நிராகரிக்கவில்லை.

**சீ38.தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. (மத்தேயு 10:38)**

**அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். (மத்தேயு 16:24)**

**ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். (மாற்கு 8:34)**

**சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றிவா... (மாற்கு10:21)**

**பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன்**

**தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். (லூக்கா 9:23)**

**தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். (லூக்கா 14:27)**

இயேசு கிறிஸ்து விசுவாசிகளை மறுதலிக்காத, பாடுகள் நிறைந்த, சிலுவை சுமக்கும் வாழ்க்கைக்கே அழைக்கின்றார், ஏனெனில் வல்லமையுள்ள ஆற்றல் பாடுகளின் ஐக்கியத்திலேயே சாத்தியமாகும்.

உயிர்த்தெழுதலின் வல்லமையும், பாடுகளின் வல்லமையும், இன்றைய சமுதாயத்தினர் உபயோகின்ற நேர்மறை மற்றும் எதிர்மறையான மின்னாற்றலைப்போன்று இருக்கின்றன. நேர்மறையும், எதிர்மறையும் சேர்ந்தாலே மின்சாரம் உண்டாகும்.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. சகல பாவங்களுக்கும், பாடுகளுக்கும் மூலாதாரம் யார்?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. பாடுகள் எவ்விதமாக எமது வாழ்விற்குள் நுழைகின்றது? இவ்வதிகாரத்தில் நாம் கலந்துரையாடிய ஐந்து வழிகளையும் பட்டியலிடுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. ஒரு விசுவாசி வல்லமையுள்ள நோக்கங்களுக்காக பாடுகளுக்கூடாக கடந்து செல்கின்றார் என்பதை சுருக்கமாக விபரியுங்கள்.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. உங்கள் வாழ்வில் என்ன பகுதிகளில் துன்பங்களை அனுபவித்து வருகின்றீர்கள்?

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. உங்கள் வாழ்வில் பாடுகள் எப்பகுதிகளுக்கூடாக நுழைகின்றது?

    -உங்களைச் சுற்றியுள்ளவர்களால்
    -வாழ்வின் சூழ்நிலைகளால்
    -உங்களது சொந்த பாவத்தினால்
    -உங்கள் ஊழியத்தினால்
    -சாத்தானின் நேரடியான செயல்பாட்டால்

3. இப்பாடுகளுக்கான உங்கள் பதிலென்ன?

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

தேவன் தமது வல்லமையை பாடுகளுக்கூடாக நிரூபிக்கின்றார், நீங்கள் அதற்கு சரியான பதிலளித்து, அனுபவிக்க வேண்டும். நீங்கள் முறுமுறுக்கவோ, முறையிடவோ கூடாது. இஸ்ரவேலர் பாடுபட அதுவே காரணமாக இருந்தது. அவர்கள் மோசேக்கு எதிராக முறுமுறுத்தார்கள். (யாத்திராகமம் 15:24) ஆனால் சகலவிதமான முறுமுறுப்புகளும் தேவனுக்கு எதிரானவைகளாகவும், கிறிஸ்துவைப்போலாக்கும் அவரது திட்டத்தை எதிர்ப்பதாகவும் இருக்கின்றது. சகலமும் ஒன்றாக இணங்கினால்தான் அவரது சாயலைப் பெற முடியும். பாடுகளின்போது முறையிடுவீர்களானால் நீங்கள் அவரது செயல்முறை திட்டத்திற்கு எதிராகவே முறையிடுகின்றீர்கள். ரோமர் 8:28-29ஐ வாசியுங்கள்.

பாடுகளை அனுபவிக்கின்றபோது கசப்பான மனோபாவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டாம். கசப்பான மனோபாவம் பாடுகளுக்கான தவறான அணுகு முறையாகும். அது வெறுப்பு, பழி சுமத்தல், முறையிடுதல், பழிக்கு பழிவாங்கும் மனோபாவத்தை கொண்டது. நீங்கள் கசப்புக்கு இடங்கொடுத்தால் அது உங்களுக்கு பிரச்சனைகளையும் மற்றும் களங்கத்தையும் (எபிரெயர் 12:16), தேவசத்தத்திற்கு செவி கொடுக்காமையையும் (யாத்திராகமம் 6:9), பழிவாங்கும் ஆவியையும், (1 சாமுவேல் 30:6) மனவழுத்தத்தை மற்றும் அதைரியத்தையும் (புலம்பல் 3:18-20) ஆவிக்குரிய விஷத்தையும் (அப்போஸ்தலர் 8:23) உண்டாக்கும்.

4. ஆவிக்குரிய வழிகளில் அதிகமான கடினவேளைகளில் உங்களுடைய பிரதிபலிப்பு என்ன?

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------------------------------------------

அதிகாரம் பதினெட்டு

# தேவனுடைய வல்லமையை அனுபவமாக்கிக் கொள்வது எவ்வாறு?

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ உங்களுடைய வாழ்விலும், ஊழியத்திலும் தேவனுடைய வல்லமையை அனுபவிப்பது எவ்வாறு என்பதை விளக்கவும்,
- ☐ ஆவிக்குரிய வல்லமையொடு தொடர்புடைய திருச்சபையின் நோக்கத்தை அடையாளம் காணவும்,
- ☐ ஆவிக்குரிய வல்லமையை எவ்வாறு அதிகரிக்கலாம் என்பதை விளக்கவும்,
- ☐ உங்களுடைய ஜீவியத்திலும் ஊழியத்திலும் ஆவிக்குரிய வல்லமையை அனுபவிக்கவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

> **அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென். (மாற்கு 16:20)**

## அறிமுகம்

இப்பாடவிதானத்திலே ஏராளமான ஆவிக்குரிய வல்லமையைக் குறித்து கற்றீர்கள். நீங்கள் படித்த அந்த ஆவிக்குரிய வல்லமைகளை அனுபவித்து செயல்படுத்துவதற்காக இவ்வதிகாரத்தில் இக்கொள்கைகள்யாவும் சுருக்கமாகவும் வழிகாட்டலாகவும் கொடுக்கப்படும்.

## ஆவிக்குரிய வல்லமையை பெறுதல்

ஆவிக்குரிய வல்லமை உணர்வுபூர்வமானதல்ல. வேதவாக்கியங்களை கற்றுக்கொள்வதால் அதை உருவாக்கிக் கொளள் முடியாது. வேதாகமத்தின் வல்லமையின் கொள்கைகள் அதை பெற்றுக் கொள்வதற்கான உத்தரவாதத்தையும் தராது.

ஆவிக்குரிய வல்லமை அதன் மூலாதாரத்திலிருந்தே ஊற்றப்படுகிறது. இயேசு அதை திராட்சை செடிக்கு ஒப்பிட்டார். நீங்கள் ஆவிக்குரிய கிளைகளாக இருக்கிறீர்கள். உங்கள் வல்லமையை உற்பததி செய்ய முடியாது. அவர் வாழ்க்கையிலிருந்தால் அவரிலிருந்து வல்லமை பாய்ந்தோடும். உங்கள் மூலமாகவே வல்லமை பாந்தோட முடியும்:

> **நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. (மாற்கு 15:5)**

இவ்வல்லமையை அனுபவிக்க வேதாகம வழிகாட்டல்கள் சில:

## 1. உபவாசித்து ஜெபியுங்கள்:

உபவாசம் மற்றும் ஜெபத்தின் மூலம் தேவ சமுகத்திற்குள் தாழ்மையுடன் வாருங்கள்.

> **என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு.... (2 நாளாகமம் 7:14)**

வல்லமை தன்னைத் தொடராது. உபவாசம் மற்றும் ஜெபத்திற்கூடாகவே தேவனுடைய வல்லமை உங்களுக்கூடாக ஊற்றும்.

## 2. பரிசுத்த ஆவியின் வரத்தை பெற்றுக் கொள்ளுங்கள்:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து... (அப்போஸ்தலர் 1:8)**

## 3. பரிசுத்த ஆவியின் வரத்தை பெற்றுக் கொள்ளுங்கள்:

விசுவாத்துடன் அவரது வாக்குத்தத்தத்தை ஏற்றக் கொள்ளுங்கள்:

> **சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்... (லூக்கா 10:19)**

> **விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமா யிருக்கிறது. (எபிரெயர் 11:1)**

இரட்சிப்பை விசுவாத்தினாலேயே பெற்றீர்கள். இப்போது தேவனுடைய வல்லமையையும் விசுவாத்துடனேயே பெற்றுக் கொள்ளுங்கள். விசவாசத்தினால் இரட்சிப்பை பெற்றக் கொள்வது இலகுவாக இருக்கின்றபோதும், தேவனை நமபி அவரது, அற்புதமாக குணப்படுத்துவதற்கும், பேய்களை விரட்டுவதற்குமான வல்லமையை பெற்றுக் கொள்வது ஏன் கடினமான காரியமாக இருக்கின்றது?

## 4. வேதாகமத்தின் வல்லமையின் கொள்கைகளை பிரயோகியுங்கள்:

இப்பாடத்தில் நீங்கள் கற்றுக் கொண்ட வேதாகம வல்லமையின் கொள்கைகளை விசுவாசத்துடன் பிரயோகியுங்கள். அதில் அடங்கியிருப்பவை:

**சுவிசேஷத்தின் வல்லமை:** முதலாவதாக உஙடகளட வாழ்க்கை சுவிசேஷத்தின் வல்லமைக்கூடாகவே மாற்றமடைந்தது. மனந்திரும்புதலே உண்மையான ஆவிக்குரிய வல்லமையின் அடித்தளம்.

**பரிசுத்தாவியின் வல்லமை:** பரிசுத்தாவியானவர் உங்கள்மேல் வந்ததின் பின்னா் வல்லமையை பெற்றக் கொண்டீர்கள்.

**அன்பின் வல்லமை:** அன்பு இல்லாத எந்த ஆவிக்குரிய வரமும் வெளிப்பாடுகளும், வல்லமையற்றது.

**அபிஷேகத்தின் வல்லமை:** அபிஷேகம் நுகத்தை முறிக்கும். இதை உங்களது சொந்த வல்லமையாலும் பெலத்தாலும் செய்ய முடியாது.

**வல்லமை, விசுவாசம், மற்றும் கிரியைகள்:** இவைகளை பிரிக்க முடியாது. இவைகள் ஒன்றாகவே உங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் கிரியை செய்யும்.

**இயேசுவின் நாமம்:** நீங்கள் அவரது அதிகாரத்திற்குள் வந்தவர். வல்லமை அவரது நாமத்திலேயே உள்ளது.

**ஜெபத்தின் வல்லமை:** ஜெபம் மற்றம் உபவாசத்தின் பதில் ஆவிக்குரிய வல்லமையாகும்

**வேதவசனத்தின் வல்லமை:** உங்களது வசனததை பேசாமல் அவரது வசனத்தை பேசுங்கள். அவரது வார்த்தை வெறுமையாக திரும்பாது. அனுப்பிய நோக்கத்தை அது நிறைவேற்றும்.

**அதிகாரத்தின் வல்லமை:** நீங்கள் அதிகாரத்தின் கீழ் இருந்தால் மாத்திரமே அதிகாரத்துடன் செயல்பட முடியும்.

**அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை:** உங்கள் அழிவுள்ள சரீரத்தில் இப்போதே அனுபவியுங்கள்.

**பாடுகளின் வல்லமை:** பாடுகளின் வல்லமை அதிகளவான பாடுகளிலேயே இருக்கின்றது. சிருஷ்டிப்பின் அழுத்தம் சிருஷ்டிப்பின் வல்லமையில் இருக்கின்றது. பாடுகளை தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தும்படிக்கு பயன்படுத்துங்கள்.

## இணைக்கப்பட்ட வல்லமை

ஆவிக்குரிய வல்லமை விசுவாசிகளின் தனிப்பட்ட அனுபவமாக இருக்கின்றபோதும், அது கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தனித்தே இயங்குவதில்லை. திருச்சபையில் ஆவிக்குரிய வல்லமை இணைந்தே செயல்படவேண்டும் என்பது தேவனுடைய திட்டம். திருச்சபையே அவரது வல்லமை நிரூபிக்கப்பட மத்தியஸ்தானமாக இருக்க வேண்டும்.

ஒருநாள் இயேசு எருசலேம் தேவாலயத்திற்கு சென்றபோது அங்கிருந்த தலைவர்கள் கழுதை, ஆடு, மற்றும் புறாக்களை விற்பனை செய்வதைக் கண்டார். மக்களின் தேவையான பலியிடும் மிருகங்களை விற்று வளமான வர்த்தகத்தையே அவர்கள் மேற்கொண்டனர். இவ்வர்த்தகத்திற்கு தேவாலயத்தையே மத்தியஸ்தானமாக பயன்படுத்தினார்கள்.

இயேசு சவுக்கை உண்டுபண்ணி இம்மக்களை தேவாலயத்திலிருந்து வெளியேற்றினார். அவர் பணத்தை கொட்டி மேசைகளை கவிழ்த்துப்போட்டார். அவர் கூறினார்....

> **என்னுடைய வீடு ஜெபவீடாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறது. நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள் என்றார். (லூக்கா 19:46)**

இன்று திருச்சபைகள் பல நேரங்களில் சமூக சேவை மையங்களாகவும், ஐக்கியத்திற்கும் பொழுதுபோக்குக்குமான இடமாகவும் மாறிவிட்டது. அது உணவுகளை விநியோகிக்கும் மையமாகவும், களியாட்டக்கூடமாகவும் மாறிவிட்டது.

இந்நடவடிக்கைகளில் சில அவர்களுடைய இடத்தில் இருக்கின்றபோதும், திருச்சபையைக் குறித்து, தேவனுடைய உண்மையான நோக்கம் இதுவல்ல. திருச்சபையானது ஜெபமும், வேதபடிப்புகளும், கொண்ட மையமாகமாற வேண்டும் மாத்திரமன்றி மனிதர்களுடைய தேவைகளை சந்தித்து தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிற இடமாக இருக்க வேண்டும்.

இயேசு தூய்மையாக்கிய அத்தேவாலயம் வர்த்தகம் மற்றம் வணிக மையமாக விளங்கியது. ஆனால் திருச்சபையின் உண்மையான நோக்கத்தை லூக்கா 14:16-24ல் உள்ள உவமையில் இயேசு விளக்கியுள்ளார். இவ்வுவமையில் வீட்டின் எஜமான் அவரது வேலைக்காரரிடம் கூறினார்:

> **நீ பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் சீக்கிரமாய்ப் போய், ஏழைகளையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே கூட்டிக்கொண்டுவா என்றான்....**
>
> **நீ பெருவழிகளிலும் வேலிகளருகிலும் போய், என் வீடு நிறையும்படியாக ஜனங்களை உள்ளே வரும்படி வருந்திக் கூட்டிக்கொண்டுவா.... (லூக்கா 14:21-23)**

சபையானது ஏராளமான தேவைகளைக்கொண்ட மக்களால் நிரப்பபப்ட வேண்டும். விசுவாசிகள் சமூகத்தின் பலநிலைகளிலுமுள்ள மக்களிடமும் சென்று சபைக்குள் வரும்படி பலவந்தம் பண்ண வேண்டும். சபை ஏராளமான விசுவாசிகளான மக்கள் தொகையையும், ஆவிக்குரிய வல்லமையையும் கொண்டவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் இணைக்கப்பட்ட சூழ்நிலையிலிருக்கும்போது தேவன் தன்னை வெளிப்படுத்துவார். அப்போது முடவர்கள் குணமடைவார்கள், குருடர் பார்வையடைவார்கள், செவிட்டு காதுகள் கேட்கும், சுவிசேஷத்தின் வல்லமை ஜீவியத்தை மாற்றும்.

எருசலேம் தேவாலயத்தின் வாசலில் உட்கார்ந்திருந்த முடவனின் ஞாகமுண்டா? (அப்போஸ்தலா் 3) சமய சட்ங்காச்சாரங்கள் தேவாலயத்திற்குள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அழங்காரமான விழாக்களும், நுட்பமான ஜெபங்களும், அருமையான பாடல்களும், உள்ளே இருக்கின்றபோதும் வாசலண்டையில் இருந்த ஏழை முடவனும் அவனது தேவைகளும் கவனிக்கப்படாமையே இருந்தது. கடைசியாக தேவனை விசுவாசிக்கின்ற இரண்டுபேர், ஆவிக்குரிய வல்லமையை அனுபவித்தவர்கள், அவ்வழியே சென்றனர். பேதுரு அவனைப்பார்த்து “என்னிடத்திலிருப்பதை உனக்கு தருவேன்” என்றான். உடனடியாகவே அவனது பாதங்களும் கணுக்காலும் பெலனடைந்தது, தேவனுடைய வல்லமையால் சுகமடைந்தான். தேவையுள்ள உலகம் எம்மைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. பாடுபடுகின்ற மனுக்குலம் இயேசு கிறிஸ்துவின் சபையை திரும்பிப் பார்த்துக் கெர்ண்டிருக்கின்றது. எம்மிடம் கொடுப்பதற்கு ஏதோவொன்று இருக்கின்றது.

## பயன்படுத்தவும் அதிகரிக்கவுமான சட்டம்

ஆவிக்குரிய வல்லமையை பாதிக்கும், “பயன்படுத்தவும் அதிகரிக்கவுமான சட்டம்” என்றழைக்கப்படும் வேதாகம கொள்கை இருக்கின்றது. உங்களுடைய ஆவிக்குரிய வல்லமை இக்கொள்கையினால் சரியானபடி அதிகரிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். இயேசு கூறிய உவமையை லூக்கா 19:12-26ல் வாசியுங்கள். பணம் கொடுக்கப்பட்டபோது பெற்றுக் கொண்ட ஊழியர்கள் அதை பயன்படுத்தி இன்னும் அதிகமாய் பெற்றுக் கொண்டார்கள். பணம்பெற்ற ஒருவன் அதைக் கொண்டு ஒன்றும் செய்யாதபடியால் அதை இழந்து போனான். “பயன்படுத்தவும் அதிகரிக்கவுமான சட்டம்” இதுதான். உனக்கு கொடுக்கப்பட்டதை அதிகரித்துக் கொள். இல்லாவிட்டால் அதை இழந்துபோவாய். தேவன் உங்களுக்கு ஆவிக்குரிய வல்லமையை பயன்படுத்தும்படியாகவே கொடுத்துள்ளார் புதைத்து

வைப்பதற்காக அல்ல. (மத்தேயு 20:25-28) நீங்கள் ஆவிக்குரிய வல்லமையை சரியானபடி பாவிக்கின்றபோது அது உங்களுக்குள் அதிகரிக்கப்படும். அது உங்களது ஊழியத்திலும், வாழ்விலும் வெளிப்படுவதை காண்பீர்கள். நீங்கள் அதை பாவிக்காவிட்டால் அதை இழந்துபோவீர்கள்.

> **அதற்கு அவன்: உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். (லூக்கா 19:26)**

**சுய பரீட்சை:**

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

2. தேவனுடைய வல்லமையை எவ்வாறு அனுபவிக்கலாம் என்பது தொடர்பாக இப்பாடத்தில் கொடுக்கப்பட்ட வழிமுறைகளை சுருக்கமாக தருக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. ஆவிக்குரிய வல்லமை தொடர்பாக திருச்சபையின் நோக்கம் என்ன?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. ஆவிக்குரிய வல்லமையை எவ்வாறு அதிகரிக்கலாம்?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

அற்புதங்கள், அடையாளங்கள், மற்றும் அதிசயங்கள் மூலம தேவனுடைய வல்லமை அனுபவிக்கப் படுகின்றது. இந்த வசனங்களை வாசியுங்கள்.

யாத்திராகமம் 15:11

எண்ணாகமம் 14:22

உபாகமம் 6:22; 7:19; 11:3; 29:3; 34:11

யோசுவா 3:5

நெகேமியா 9:10

சங்கீதம் 77:11,14; 78:11,43; 88:10,12; 89:5; 96:3; 105:27; 136:4

எரேமியா 32:20

தானியேல் 4:2-3

யோவேல் 2:30

மாற்கு 16:17

யோவான் 2:11,23; 3:2; 6:2,26, 7:31; 9:16; 11:47; 12:37; 20:30

அப்போஸ்தலர் 2:22,43; 4:30; 5:12; 6:8; 8:16,13, 14:3; 15:12; 19:11

ரோமர் 15:19

1 கொரிந்தியர் 12:10,28,29

கலாத்தியர் 3:5

எபிரெயர் 2:4.

அதிகாரம் பத்தொன்பது

# வல்லமையின் தோல்வி

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- ☐ திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ☐ வல்லமையின் தோல்விக்கான ஆவிக்குரிய காரணங்களை அடையாளம் காணவும்,
- ☐ மனிதர்களால் பதில் தர முடியாத இறைவனின் இறைமைகளை உறுதிப்படுத்தும் வேத வசனங்களை தருவதற்கும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை. (மத்தேயு 13:58)**

## அறிமுகம்

பௌதீக உலகத்திலே, மனிதன் ஓர் செயலை செய்வதற்கு ஓர் இயற்கையான வல்லமையிலேயே தங்கியிருக்கின்றான். இயற்கையான வல்லமை என்பது ஓர் இரவுணவை சமைப்பதற்கான சாதாரண நெருப்பாகவும் இருக்கலாம். நெருப்பில்லாவிட்டால், அவ்வுணவிற்கான செயற்பாடானது ஸ்தம்பிதமடையும். இயற்கையான வல்லமை என்று ஒரு நகரத்தையே மிகவலுவுடன் செயற்படுத்தும் மின்சாரத்தை உருவாக்கும் மின் உற்பத்தி நிலையங்களை குறிப்பிடலாம். மின் உற்பத்தி நிலையங்கள் செயலிழந்தால், அவை உருவாக்கும் வலு செயலிழந்துவிடும். ஓர் முழு நகரமும் ஓர் இருளை அனுப விக்கும். பௌதீக உலகத்திலே வலுக்கள் செயலிழந்தால், செயற்பாடுகள் ஸ்தம்பித்தமடைந்து விடும்.

ஆவிக்குரிய உலகத்திலும் அதே உண்மைதான். எப்பொழுது வல்லமை செயலிழப்பு ஏற்படுகின்றதோ, அப்போதே ஆவிக்குரிய செயற்பாடுகளானது ஸ்தம்பிதம் அடைந்து விடும். சுவிசேஷத்தின் வல்லமைக்கூடாக வாழ்க்கையானது மாற்றமடைவதில்லை. நோயாளிகள் குணமடையார்கள். பிசாசுகள் வெளியேறுவதில்லை.

பௌதீக உலகத்திலே வலுக்களின் செயலிழப்பிற்கு காரணங்கள் உண்டு. நெருப்பு எரிவதை போல அல்லது ஒரு பௌதீக பொருளானது உடைதல் போல அது ஒரு சாதாரண காரியமாக இருக்கலாம். செயலிழப்புக்களுக்கான காரணங்களை கண்டறியும்போது அவைகள் திருத்தப்பட்டு, மீண்டும் வலுக்கள் செயல்பட தொடங்குகின்றன.

ஆவிக்குரிய உலகத்திலும் வல்லமையின் செயலிழப்புக்கான காரணங்கள் உள்ளன. இச்செயலிழப்புக் களுக்கான காரணங்களை கண்டறியும்போது அவைகள் திருத்தப்பட்டு, மீண்டும் ஆவிக்குரிய வல்லமைகள் செயல்பட தொடங்குகின்றன.

## நரகத்தில் உங்களுடைய பெயர் அறியப்பட்டிருக்கின்றதா?

ஆவிக்குரிய வல்லமையின் செயலிழப்புக்கான ஓர் மிகப்பெரிய உதாரணமானது அப்போஸ்தலர் 19:13-16 வரை பதிவு செய்யப்பட்டுள்ளது. பிரதான ஆசாரியனின் மகன் ஒரு மனிதனின் பொல்லா ஆவியை துரத்த

முயற்சித்து அதில் தோல்வியுற்ற இந்த சம்பவத்தை வாசிக்கவும். பொல்லாத ஆவியானது கூறியது....

> **பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி.... (அப்போஸ்தலர் 19:15)**

பின் இந்த பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதன், இந்த இளம்மனிதனின் மேல் பாய்ந்து, அவர்களுடைய உடைகளை கழைந்து, காயப்படுத்தியது. அவர்கள் பொல்லாத ஆவி பிடித்திருந்த மனிதனால் நிர்வாணமாக்கப்பட்டு, காயப்பட்டு ஓடினார்கள். அந்த ஆவி பவுல் என்னும் பெயரை அறிந்திருந்தது. அந்த ஆவி இயேசு என்னும் பெயரை அறிந்திருந்தது. ஆனால் அந்த இளமனிதனின் பெயரை அறியாதிருந்தது, ஏனென்றால் அவர்களுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய வல்லமை இல்லாதினாலேயாகும்.

உங்களுடைய பாவம் மன்னிக்கப்பட்டிருந்தால், உங்கள் பெயர் பரலோகத்தால் அறியப்பட்டிருக்கும். வெளிப்படுத்தல் 21:27ல் கூறியுள்ளப்படி ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்திலே அது எழுதப்பட்டிருக்கும். ஆனால் நரகத்தில் உங்கள் பெயர் அறியப்பட்டிருந்தால்? இயேசுவின் நாமத்தினால் உங்களிடமுள்ள அதிகாரத்தை தீய வல்லமைகள் விளங்கிக்கொள்ளும்படியாக உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையின் ஊற்றானது போதுமானளவு உங்களிடம் உள்ளதா?

இந்த மனிதன் இயேசுவின் நாமத்தை தீய ஆவிகளை துரத்தும்படியாக பயன்படுத்தினான், ஆனால் அவை செயற்படவில்லை. இயேசுவினுடைய பெயரானது வசீகரிக்கக்கூடிய மந்திரம் அல்ல. அந்த வல்லமையின் பின்னால் நீங்கள் செயற்பட வேண்டும். அந்த பெயரில் உள்ள அதிகாரத்தை நீங்கள் விளங்கிக் கொண்டு அதை செயற்படுத்த வேண்டும்.

உங்களுடைய பெயரை நரகம் அறியாதிருக்கும்போது, ஆபத்தான நேரங்களில் நீங்கள் தோல்விக்கும் முகம் கொடுக்கப்படுவீர்கள். இந்த மனிதன் பவுலின் அனுபவத்தை அடிப்படையாக கொண்டு சாத்தானை கட்டுப்படுத்த வில்லை ஆனால் உங்களால் முடியுமா. உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையை உங்களில் இருந்து வெளிப்படுத்தினால் மாத்திரமே உங்களால் சாத்தானை தோற்கடிக்க முடியும். நீங்கள் பலவீனர்களாக இருந்தால் உங்களுடைய பெயரை நரகம் அறியாது, நீங்கள் எதிரிகள் முன் காயப்பட்டு நிர்வாணமாக்கப்படுவீர்கள்.

## வல்லமையின் தோல்வி

ஆவிக்குரிய வல்லமையின் தோல்விக்கான சில காரணங்கள் இங்கு தரப்பட்டுள்ளன:

**பாவம்:**

பாவம் மனிதனை தேவனைவிட்டு பிரிக்கும். நீங்கள் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டால், அவருடைய வல்லமை உங்களுக்கூடாக ஊற்ற முடியாது.

ரோமர் 7ம் அதிகாரத்தில் அப்போஸ்தலனாகிய பவுலின் பாவத்தின் கட்டுக்களிலிருந்தான தன்னுடைய வேதனையை விபரிக்கும் பகுதியை வாசிக்கவும். அவருடைய விடுதலை குறித்து ரோமர் 8ம் அதிகாரத்தில் வாசிக்கவும். விசுவாசி என்ற வகையில், நீங்கள் அனுபவிக்கும் அதே பாவத்தோடுள்ள யுத்தத்தை பவுல் மேற்கொண்டார், ஆனால் அவருடைய மாம்சத்தின் கிரியைகளால் அப்பாவத்திலிருந்து மேற்கொள்வதைக்குறித்து கற்றுக்கொண்டார். இதனால், அவருடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையானது ஊற்றியது.

சீமோன் என்னும் பெயருடைய பாவமுள்ள மனிதன் ஆவிக்குரிய வல்லமைகளை பணம் மூலம் பெற முயன்றபோது, பேதுரு பதிலளித்ததாவது:

> **உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை.**
>
> **ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள். ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்.**
>
> **நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். (அப்போஸ்தலர் 8:21-23)**

பாவத்திலிருந்து மனந்திரும்பி இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் மன்னிப்பை பெறுதவதே இந்த பிரிவினையை நிரப்பும் பாலமான ஒரே வழியாகும். பாவமானது தேவனுடைய வல்லமையிலிருந்து பிரிக்கும். இயேசு மீண்டும் வரும் போது....

> **கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். (2 தெசலோனிக்கேயர் 1:8)**

பாவத்திலிருப்பவர்கள்....

> **அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்.... (2 தெசலோனிக்கேயர் 1:8-10)**

தேவனுடைய வல்லமையிலிருந்து நித்தியமாக பிரிக்கும் இறுதி விளைவானது பாவமேயாகும்.

### கட்டுக்கள்:

ஆவிக்குரிய கட்டுக்களானது உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமை ஊற்றப்படுவதிலிருந்து தடுக்கின்றது. கட்டுக்களானது அவைகளுக்குள் பாவமானது அல்ல. அவைகள் பொருட்களாகவோ அல்லது உங்களுக்கு முக்கியமான அவைகளின் கட்டுப்பாட்டுக்குள் உங்களை கொண்டு வந்த காரியங்களாகவோ இருக்கலாம். பவுல் எழுதியுள்ளார்:

> **எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது. எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன். (1 கொரிந்தியர் 6:12)**

உங்கள் வாழ்க்கையில் உங்களுடைய எண்ணங்களையும், விருப்பங்களையும் ஆக்கிரமிக்கும் எந்தவொரு காரியங்களும் கட்டுக்கள் எனப்படும். நீங்கள் அதன் வல்லமைக்கு கீழ் கொண்டு வரப்பட்டுள்ளீர்கள்.

இது ஒரு பொழுதுபோக்காகவோ அல்லது பழக்கவழக்கமாகவோ இருக்கலாம். இது குறித்த நேரத்தில் தொடர்ந்து செய்யும் காரியமாகவோ அல்லது விசுவாசம் மற்றும் நம்பிக்கை ஆகிய செயற்பாடுகளிலிருந்து தடுத்து நிறுத்தும் பயமாகவோ காணப்படலாம். இந்த கட்டுக்களின் விளைவு

வல்லமையின் செயலிழப்பாகும் ஏனென்றால் நீங்கள் பரிசுத்தாவியின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதற்கு பதிலாக அதன் வல்லமையின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளீர்கள்.

## வல்லமையின் கொள்கைகளை அவமதித்தல்:

இந்த பாடத்தில் நீங்கள் அநேக வேதாக வல்லமையின் கொள்கைகளை கற்றீர்கள். இக்கொள்கைகளை அவமதித்தலின் விளைவு வல்லமையின் செயலிழப்பாகும். வல்லமையின் செயலிழப்பை நீங்கள் அனுபவிக்கும் நேரம் தவிர்ந்து, இக்கொள்கைகளின் தொடர்புகளை உங்கள் ஊழியத்திலும், வாழ்க்கையிலும் தொடர்ந்து பரீட்சித்து பாருங்கள்.

## ஆளுவதற்கல்ல ஊழியம் செய்வதற்கே:

ஆவிக்குரிய வல்லமையானது ஊழியம் செய்வதற்கன்றி, ஆளுகை செய்யும் போதான விளைவு வல்லமையின் செயலிழப்பு ஆகும். நீங்கள் மத்தேயு 20:25-28ல் தேவனுடைய வல்லமையின் கட்டமைப்பானது உலகத்தை போன்றதல்ல என கற்றீர்கள். உலகப்பிரகாரமான வல்லமையின் கொள்கை என்பது மற்றவர்கள் மேல் ஆளுகை செலுத்தி அவர்களை கட்டுப்படுத்துவது ஆகும்.

சிறுவயதிலிருந்தே நாங்கள் உலக வல்லமைக்காக பிரயாசப்பட்டிருப்போம். நாம் எம் உறவினர்களை கட்டுப்பத்தி அவர்களை இயக்க முயற்சித்திருப்போம். சமூகத்திலும் சுற்றுசூழலிலும் வல்லமை இருப்பதை நாம் காண்கின்றோம், எதிர்காலத்தை முன்னறிந்து இயற்கையின் வல்லமைகளை கட்டுப்படுத்துகின்றோம். எம்மை கட்டுப்படுத்தும் உலகத்தின் வல்லமையானது கடவுளாக மாற்றமடையலாம்.

வேதாக வல்லமையின் கட்டமைப்பானது ஊழியம் செய்ய அழைப்பதோடு, தேவனுடைய வல்லமையை வெளிக்காட்டுவதினூடாக மனித தேவைகளை சந்திப்பதாகும். இதை குறித்து பவுல் கொரிந்திய விசுவாசிகளுக்கு எழுதியுள்ளார். சபையின் மிகப்பெரிதான அப்போஸ்தலர் என்ற வகையில், இந்த விசுவாசிகளின் குழுவின் மேல் பவுலுக்கு அதிகாரம் இருந்தது. ஆனால் இந்த வல்லமையை அவர் துஷ்பிரயோகம் செய்யவில்லை. அவர் அவர்களுக்கு சொன்னார்:

> **மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகாதபடிக்கு, நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப் பாடும்படுகிறோம். (1 கொரிந்தியர் 9:12)**

பவுல் தன்னுடைய ஆவிக்குரிய நிலையை துஷ்பிரயோகம் செய்யவில்லை. அவர் கொரிந்தியர் மேல் ஆளுகை செய்யவில்லை, மாற்றாக அவர் அவர்களுக்கு ஊழியம் செய்தார்:

> **உங்கள்மேல் பாரத்தை வைப்பதற்கான அதிகாரம் எங்களுக்கு இல்லையென்பதினாலே அப்படிச்செய்யாமல், நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு நாங்கள் உங்களுக்கு மாதிரியாயிருக்கவேண்டுமென்றே அப்படிச் செய்தோம். (2 தெசலோனிக்கேயர் 3:9)**

## தனிப்பட்ட ஆதாயம்:

வல்லமையின் தனிப்பட்ட இலாபம் குறித்து பவுல் கொரிந்தியருக்கு எழுதியுள்ளார். அவர் சொன்னார்:

**நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? (1 கொரிந்தியர் 9:11)**

பவுல் கொரிந்தியர்களுக்கு ஊழியம் செய்து, ஆவிக்குரிய விதைகளை விதைத்தார். நிதி ஆதரவு என்ற வகையில் அவர்களுடைய "சரீர பொருட்களை" அவர்களிடமிருந்து பெறும் உரிமை அவருக்கு இருந்தது. ஆனால் அவர் இந்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யவில்லை. தேவனுடைய வேலையை தடங்கலாகமலிருக்கவும், ஆவிக்குரிய வல்லமையை துஷ்பிரயோகம் செய்யாமலிருக்கவும் அவர் பாடுபடுகின்றார் (1 கொரிந்தியர் 9:12).

இயேசு சாத்தானால் அவருடைய வல்லமையை சொந்த லாபத்திற்கு பயன்படுத்தும்படி சோதித்தான். சாத்தான் அவரை கற்களை அப்பங்களாக மாற்றும்படிக்கும் தேவாலயத்தின் உச்சியிலிருந்து குதித்து மக்களுக்கு தம்முடைய வல்லமையை நிருபித்து காட்டும்படியாகவும் சோதித்தான். இயேசு அதை மறுத்தார்.

அனைத்து மனித குலத்திற்கான பாவத்திற்காக இயேசு சிலுவையில் கடினமாக வேதனையடைந்து கொண்டிருக்கும் போது, அவர் 10,000 தேவதூதர்களை அழைத்து தம்மை காப்பாற்றும்படி வேண்டியிருக்கலாம் (மத்தேயு 26:53). தேவனுடைய உயர்ந்த குறிக்கோளை நிறைவேற்றும் பொருட்டு அவர் இந்த வல்லமையை நிராகரித்தார்.

## போட்டி மனப்பான்மை:

முன்னைய பாடத்தில் மாம்சத்தின் கிரியைகளாகிய பாவத்தில் விரோதங்களைக் குறித்து கற்றுக் கொள்டீர்கள். இது மற்றவர்னைப்போல தானும் பிரதிபலிப்பு செய்ய வேண்டும் போக்காகும் (கலாத்தியர் 5:20). ஆதித்திருச்சபையில் வல்லமையை இழந்து போனதிற்கான காரணமான ஒரு பிரச்சனையிருந்தது. பவுலைப்போன்று பிசாசுகளைத் துரத்த சிலர் முன்வந்த கதையை அப்போஸ்தலர் 19:13 கூறுகின்றது. மற்ற ஊழியக்காரர்களைப்போல நீங்கள் நடிக்க முற்படும்போது, இம்மனிதர்களைப்போலவே தீவரமான வல்லமையிழப்பை அனுபவிப்பீர்கள்.

## தவறான நோக்கங்கள்:

சில சமயங்களில் தீய காரியங்களில் ஆவிக்குரிய வல்லமையை பாவிப்பது தவறு என்று முடிவு செய்ய வேண்டாம். ஆவிக்குரிய வல்லமைகள் நல்லவராகிய தேவனிடமிருந்தே பாய்கின்றது, ஆனாலும் அவைகள் தவறான நோக்கங்களுக்காகவும், காரணங்களுக்காகவும் பாவிக்கப்படலாம்.

பிழையான நோக்கத்துடன் வல்லமையை தேடியதாலேயே சாத்தான், பாவத்தின் காரணனான். மனிதனைப் பொருத்தளவிலும் இதுதான் உண்மை, அறிவினால் வல்லமைகிடைக்கும் என்றெண்ணி தன்னை பாவத்திற்கு ஒப்புக் கொடுத்தான்.

இயேசு கிறிஸ்துவை எதிர்த்தவர்களை அழைத்துப்போட வான்திலிருந்து அக்கினி இறங்க வேண்டும் என யாக்போபும் யோவானும் விரும்பினார்கள். என்ன ஒரு அதிசயமான வல்லமையின் ஆளுகை! ஆனால் அவர்களது நோக்கங்கள தவறானவை. அவர்களது நோக்கம் எதிரிகளை பழிவாங்குவதாக அமைந்திருந்தது. இவ்விதமான காரியங்களும் வல்லமையை இழக்கச்செய்யும். இயேசு சொன்னார்.....

**அவர் திரும்பிப்பார்த்து: நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள் என்று அதட்டி,**

**மனுஷகுமாரன் மனுஷருடைய ஜீவனை அழிக்கிறதற்கு அல்ல, இரட்சிக்கிறதற்கே வந்தார் என்றார். (லூக்கா 9:55-56)**

முறையற்ற நோக்கங்கள் வல்லமைக்கு அழுத்தங்களை ஏற்படுத்தும். இயேசு தனது சீடர்களை எச்சரித்தார்:

**இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தமாட்டாது.**

**ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார். (லூக்கா 10:19-20)**

## அவ நம்பிக்கை:

ஆவிக்குரிய வல்லமையின் தோல்விக்கு முக்கிய காரணம் அவிவிசுவாசமாகும். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைக் கூட அவிவிசுவாசம் பாதித்தது.

**அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை. (மத்தேயு 13:58)**

நீங்கள் ஊழியம செய்கின்ற சபர்களின் அவிவிசுவாசத்தினிமித்தமும் தேவனுடைய வல்லமை நிருபிக்கப்படுதலில் பாதிப்பு ஏற்படுகின்றது. உங்களுடைய சொந்த அவிவிசுவாசத்தினிமித்தமும் அது பாதிக்கப்படலாம் (மத்தேயு 17:14-21).

## தேவனை மட்டுப்படுத்துதல்:

தேவனுடைய வல்லமையை கட்டுப்படுத்த முடியாது, ஆனால் அது எமக்குள்ளும், எமக்கூடாகவும் கிரியை செய்வதை மட்டுப்படுத்தக்கூடும். எமக்குள் கிரியை செய்யும் வல்லமையின்படி நாம் கேட்பதை எல்லாம் செய்ய தேவனால் முடியும் என பவுல் கூறுகின்றார்:

**நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு.... (எபேசியர் 3:20)**

நாம் நினைக்கின்றபடியும், கேட்கின்றபடியும் சிலவேளைகளில் தேவன் கிரியை செய்வதில்லை, ஏனென்றால் நாம் அவரது வல்லமையை எமக்குள் கிரியை செய்ய அனுமதிப்பதில்லை.

# அற்புதம் இல்லாதிருக்கும்போது

ஒரு விசுவாசி ஆவிக்குரிய வல்லமையின் தோல்வியை அனுபவிக்கின்றபோது, நாம் சம்பாஷித்த சகல பகுகளிலும் தற்பரிசோதனை செய்ய வேண்டும். மீறல்கள் கண்டு பிடிக்கப்படும்போது தை திருத்திக் கொள்ளல் வேண்டும். அப்போதே தேவனுடைய வல்லமை பாய்ந்தோட ஆரம்பிக்கும்.

இப்பாகங்கள் யாவற்றையும் ஆராந்த பின்னரும் இன்னும் அற்புதங்கள் நடைபெறவில்லையா? ஏன் ஒரு

நபர் எமது ஜெபத்திற்கு பதிலாக விடுதலையை பெறுகிறார் மற்றவர் பெறாதிருப்பதின் காரணம் என்ன? இதோ சில உண்மைக்கதைகள்...

-ஒரு கிறிஸ்தவ தம்பதியினருக்கு ஆணும் பெண்ணுமாக இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். இருவரும் காய்ச்சலால் மிக மோசமாக பாதிக்கப்பட்டார்கள். இருவருக்கும் ஒரே குழுவைச் சேர்ந்தவர்களே ஜெபித்தார்கள், பெற்றோரும் அதே குழுவைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள்தான். ஒருவர் குணமாக்கப்பட்டு சுவிசேஷத்தை பிரசங்கிப்பவராக இன்றிருக்கின்றார். மற்றவர் குணமாக்கப்படவில்லை. அவள் பலவருடங்களாக பலவீனமான நிலையிலிருந்துவிட்டு இறுதியாக மரித்தாள்.

-ஒரு சர்வதேசமும் அறிந்துள்ள வல்லமையுள்ள ஊழியக்காரன் ஒருவர் இருக்கின்றார். அவர் ஜெபித்தால் பத்து சகவீதமானவர்களே சுகம் பெறுவதாக கூறியுள்ளார்.

-விசுவாசிகள் ஜெபித்ததின் மூலமாக சிறையிலிருந்து வெளியேறிய பேதுரு பின்னர் சுவிசேஷத்திற்காக இரத்தசாட்சியாக மரித்தார்

-எலியாவின் நாட்களில் ஏராளமான குஷ்டரோகிகள் இஸ்ரவேலிலே இருந்தபோதும், தேவனால் ஒருவன் மாத்திரமே குணமானான். (லூக்கா 4:27)

இவ்விதமான கேள்விகளுக்கு எம்மிடம் பதிலில்லை. எமக்கு சகல பதிலும், அறிவும் இருந்திருந்தால் நாம் தேவனாகியிருப்போம்.

நாம் எப்போதும் ஆவிக்குரிய வல்லமையின் சகல பகுதிகளிலும் தேவனுடைய இறைமையை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் எமக்கு ஒப்புவிக்கப்பட்ட வல்லமையினாலே செயல்படுகிறோம். அது பயனுள்ள வல்லமை. அது செயல்படும் வல்லமை. ஆனாலும் அது இன்னுமொரு அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டதாகவே இருக்கின்றது.

எனவே இக்கேள்விகளுக்கெல்லாம் விடைகாண எம்மால் முடியாது, அதை வேதாகமும் தெளிவுபடுத்துகின்றது....

> **மறைவானவைகள் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள். வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்த நியாயப்பிரமாணத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படிக்கு, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள். (உபாகமம் 29:29)**

சில சமயங்களில் தேவன் அதிசயங்களை வெளிப்படுத்தாமல் இருக்க காரணம் என்ன? சிலவேளைகளில் பதிலை நாமே கண்டு கொள்ள முடியாமல் இருக்கிறோம். இரகசியமான சகலவற்றையும் தேவனே அறிந்துள்ளார். நாம் வெளிப்பாட்டின் அடிப்படையில்தான் செயல்படுகின்றோம், இறையான்மை அறிவு எம்மிடமில்லை. ஆனாலும் இத்தடைகளை உங்கள் வாழ்விற்குள் அனுமதிக்காமல் தேவனுடைய வல்லமை ஆளுகை செய்யப்பார்த்துக் கொள்ளுங்கள். வெளிப்படுத்தப் பட்டவைகளின்படி நடவுங்கள். பதிலளிக்கப்படாத கேள்விகளையும், ரகசியமான காரியங்களையும், தேவனது இறையான்மைக்குள் விட்டுவிடுங்கள்.

தேவனுடைய வல்லமை சாவிலும் , ஜீவியத்திலும் வெளிப்படுகின்றது. அது அறியாமையிலும், அறியப்படக் கூடியவற்றிலும் வெளிப்படுகின்றது. பலவீனத்திலும் பெலத்திலும் நிரூபிக்கப்படுகின்றது.

**சுய பரீட்சை:**

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. மனிதனால் பதிலைக் கண்டு பிடிக்க முடியாத சூழ்நிலையில், தேவனது இறைமையை உறுதிப்படுத்தும் வசனங்களைத் தருக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. இப்பாடத்தில் கற்றுக் கொண்டபடி ஆவிக்குரிய வல்லமை இழப்பிற்கான காரணங்களை சுருக்கமாக தருக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இரண்டாம் சாமுவேல் 11ம் அதிகாரத்தில் தாவீதும் பத்சேபாளினதும் கதையை வாசியுங்கள். தேவன் கொடுத்த வல்லமையை தாவீது தவறாக பாவித்து அரசனான அவன் விபச்சாரத்தில் விழுந்தான், மற்றொரு மனிதனின் மனைவியை எடுத்துக் கொண்டான், அவளது கணவனையும் கொலை செய்தான். தேவனுடைய தீர்க்கதரிசி தவறாக வல்லமையை பயன்படுத்தியமைக்காக கடிந்து கொண்டதை 2 சாமுவேல் 12:1-14 வரை காணலாம்.

2. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியாகிய பிலேயாம் தேவன் கொடுத்த ஆவிக்குரிய வல்லமையை தவறாக பாவித்த கதை எண்ணாகமம் 22-24 அதிகாரங்களிலுள்ளது, அதை வாசிக்கவும்.

3. அப்போஸ்தலா் 8:9-11 வரையிலான பகுதி தேவனுடைய உண்மையான வல்லமையை அறிந்து கொள்வதின் முக்கியத்துவத்தை விளக்குகின்றது. ஆவிக்குரிய வல்லமையை துஷ்பிரயோகம் செய்தல் கூடாது.

4. யோவாகாஸின் கதையை 2 இராஜாக்கள் 13:18-19ல் வாசியுங்கள். தேவனும் தீர்க்கதரிசியும், தேவன் அவனுக்கு கொடுத்த வல்லமையை சரியாக பாவிக்கவில்லை என்பதற்காக ஏமாற்றமடைந்தனர். தேவனிடமிருந்து அதை பெற்றுக் கொண்டான், ஆனாலும் அவன் விசுவாசித்ததை மட்டும் செயல்படுத்தினான். அவன் தனது சொந்த மனித வரம்புகளை திணித்து தேவன் கொடுத்து செய்ய சொன்னதை செய்யவில்லை.

அதிகாரம் இருபது

# எதிர்ப்புக்கு முகங் கொடுத்தல்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

- திறவுகோல் வசனத்தை மனப்பாடமாக எழுதவும்,
- ஆவிக்குரிய வல்லமைக்கும், அதிகாரத்திற்கும் பின்புலமாக உள்ள அனைத்து ஆதாரங்களையும் இனம்காணவும்,
- ஆவிக்குரிய அதிகாரமானது ஏன் சவாலாக உள்ளது என்பதற்கான காரணத்தை இனம்காணவும்,
- எதிர்ப்புக்கு முகங்கொடுத்தலுக்கான வழிகாட்டிகளை பட்டியலிடவும் முடியும்.

## திறவுகோல் வசனம்:

**கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி... (சங்கீதம் 2:2)**

## அறிமுகம்

இயேசுவின் வல்லமையும் அதிகாரமும் அவருடைய உலக ஊழியத்தின் போதும் கூட சவாலாக காணப்பட்டது. இயேசு நீரினால் ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அவர் மேல் வந்த பின், அவருடைய வல்லமையானது சாத்தானின் மூன்று சோதனைகளுக்கூடாக பரீட்சிக்கப்பட்டது. (மத்தேயு 4:1-11)

சாத்தானானவன் இயேசுவை அவரது சொந்த பிரயோஜனத்திற்காக கற்களை அப்பங்களாக மாற்றுவதற்கு அவருடைய சொந்த வல்லமையை உபயோகிக்கும் படி சோதித்தான். அவன் இயேசுவை உயர்ந்த தேவாலயத்திலிருந்து குதித்து அவருடைய வல்லமையை காட்டும்படி சோதித்தான். இயேசு அவனை மட்டும் வணங்கினால் உலகத்தின் ராஜ்யங்கள் அனைத்தையும் அருளுவதாக கூறினான்.

இயேசுவின் அதிகாரமானது இன்றுள்ள மத தலைவர்களால் பரிசோதித்து பார்க்கப்படுகின்றது. அவருடைய கொள்கைகளையும், போதித்த விதங்களையும் அவர்கள் சவாலிட்டு, அவருடைய வாழ்க்கையிலும், ஊழியத்திலும் தேவனுடைய வல்லமையை பரிசோதிக்கின்றனர்.

## சவாலுக்கான பின்புலம்

இப்பாடத்தின் மூன்றாம் அதிகாரத்தில் நீங்கள் “போலித்தனமான சவால்கள்” என்பதைக் குறித்து கற்றீர்கள். உண்மையான ஆவிக்குரிய வல்லமையை சவாலிடும் அனைத்து வல்லமைக்கு பின்புலமாக சாத்தானே உள்ளான் என்பதை எப்போதும் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையின் நிலையிற்கூடாகவே ஆவிக்குரிய வல்லமையில் சில எதிரான நிலைகள் வரும். “உலகத்திற்கான கவனிப்பு” அதிகமாகவும், மிகவாகவும் வரலாம். உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையின் ஊற்றுக்கு தடங்கலாக இருக்கும் நிலைக்கு சாத்தானே பின்புலத்தில் உள்ளான்.

அநேக எதிர்ப்புக்களானது உங்களை சுற்றியுள்ள மற்ற மக்களுக்கூடாக வருகின்றது, ஆனால் நீங்கள் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டியது உங்களை எதிர்க்கும் மக்களுடைய எதிர்ப்பானது அவர்களிலிருந்து வருவதல்ல. அவர்கள் தங்களுடைய சிந்தைகளையும், நடத்தைகளையும் சாத்தானின் சக்திக்குள் அனுமதிக்கின்றார்கள். உங்களுடைய ஆவிக்குரிய வல்லமைக்கும், அதிகாரத்திற்கும் எதிராக சாத்தானே வல்லமையை பிரயோகிக்கின்றான்.

## சவாலுக்கான காரணங்கள்

இயேசுவினுடைய அதிகாரங்களானது ஏன் சவாலுக்குட்படுகின்றது என்பதற்கு அநேக காரணங்களுண்டு. உங்களுடைய ஆவிக்குரிய வல்லமைக்கு சாத்தான் ஏன் சவாலிடுகின்றான் என்பதற்கு அவைகளே அதே காரணங்களாகும்:

### அவிவிசுவாசம்:

லூக்கா 8:49-56ல் யவீருவின் மகளை மரணத்திலிருந்து எழுப்பிய சம்பவத்தை வாசிக்கவும். இயேசு மிகப்பெரிதான அற்புதத்தை செய்தார், ஆனால் அதை செய்யும் முன் நீங்கள் முகங்கொடுக்கும் சவாலைப்போன்று அவரும் எதிர்கொண்டார்.

இயேசு யவீருவின் வீட்டிற்குள் நுழைந்த போது, அவர் அவிவிசுவாசத்தை சந்தித்தார். நீங்கள் தேவனிடத்தில் அவருடைய வல்லமையான வெளிப்படுத்தலை விசுவாசிக்கும் போது, அவிவிசுவாசியான மக்கள் அது ஏன் நடைபெறாது எனவும், அது ஏன் நடக்கக்கூடாது எனவும், அது நடப்பதற்கு ஏன் தேவனுக்கு சித்தமில்லை எனவும் கூறுவார்கள்.

### செல்வாக்குடைய கருத்து:

தேவனுடைய வல்லமைக்குள் நீங்கள் இருப்பதால் நீங்கள் அனைவராலும் அன்புகூறப்படுவீர்கள் என நினைத்து தவறிழைத்துக் கொள்ளாதீர்கள். செல்வாக்குடைய கருத்து தேவனுடைய அதிகாரத்தை சவாலுக்குட்படுத்துகின்றது. மாற்கு 5:5-15ல் உள்ள சம்பவத்தை வாசிக்கவும். இயேசு மிகப்பெரிதான அற்புதத்தை செய்தார், ஆனால் செல்வாக்குடைய கருத்தோ அவருக்கு எதிராக காணப்பட்டது:

> **அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள். (மாற்கு 5:17)**

இன்னொரு சந்தர்ப்பத்தில், மக்கள் இயேசுவை பார்த்து நகைத்தார்கள் (மாற்கு 5:40). நீங்கள் தனியாக நிற்பதற்கு, உங்களுக்கு தேவைப்பட்டால், நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். எல்லோரும் உங்களுடைய ஊழியத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். செல்வாக்குடைய ஊழிக்காரர்கள் மக்கள் எதை விரும்புகின்றார்களோ அதை கூறுவதேயொழிய, தேவன் கொடுக்க வேண்டிய செய்தியை கூறமாட்டார்கள்.

### கலாச்சாரம்:

வேதபாரகர் மற்றும் பரிசேயர் இயேசுவுடைய அதிகாரத்தை எதிர்த்தனர், ஏனெனில் அது அவர்களுடைய சமய கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ளாதபடியாலாகும். இயேசுவும் கூட கூறினார் "நீங்கள் கேள்விப்பட்டுள்ளீர்கள்", இது சமய தலைவர்களின் கலாச்சாரத்தை குறித்து குறிப்பிடுகின்றது. அதன் பின் அவர் கூறினார் "ஆனாலும் நான் உங்களுக்கு சொல்லுகின்றேன்", இது தேவனிடமிருந்து

வல்லமையான உண்மைகளை பகிர்வதற்காக கூறினார். இயேசு எதிர்ப்புகளை அனுபவித்தார் ஏனென்றால் அவருடைய வல்லமையுள்ளதும், அதிகாரமுள்ளதுமான போதனைகள் மனிதனால் உருவாக்கப்பட்ட கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

தேவனுடைய வல்லமையின் நிரூபணமானது உங்களுடைய கலாச்சாரம் அல்லது இனத்தின் படி ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கலாம். இது உண்மையானால், இயேசு சந்தித்த அதே எதிர்ப்பின் காரணங்களை நீங்கள் அனுபவிக்கலாம்.

## நற்சாட்சிப் பத்திரம்:

இயேசுவினுடைய அதிகாரமானது எதிர்க்கப்பட்டது, ஏனென்றால் அவர் சமய தலைவராக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அவர் வேதபாரகர் மற்றும் பரிசேயருக்கான நற்சாட்சிப் பத்திரங்களை வைத்திருக்கவில்லை. அவர்கள் அவருடைய அதிகாரத்தை குறித்து கேள்வியெழுப்பினர், ஏனென்றால் அவர் நாசரேத் என்னும் ஏழை ஊரிலிருந்து வந்த ஒரு தச்சரின் மகனாயிருந்தார்:

> **இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா?**
>
> **இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? இப்படியிருக்க, இதெல்லாம் இவனுக்கு எப்படி வந்தது?(மத்தேயு 13:55-56)**

சீஷனாக இருக்க வேண்டிய ஒரு மனிதன் கூட கேட்டான்:

> **நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா?(யோவான் 1:46)**

மக்கள் கேள்வி கேட்டனர்:

> **எந்த அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தவர் யார்? (மத்தேயு 21:23)**

உங்களுடைய வல்லமையும், அதிகாரமும் கூட நீங்கள் ஒழுங்கான இனம், ஜாதி அல்லது சமூக நிலை இல்லை என்று கூறுவோர்களால் சவாலுக்குட்படலாம். உங்களிடம் முறையான வேதாகம கல்லூரி படிப்போ அல்லது நல்ல நற்சாட்சிப்பத்திரமுடைய பட்டமோ இல்லாமையைக்குறித்து நீங்கள் சவாலுக்குட்படலாம்.

மனிதன் கொண்டிருக்கும் ஜாதியைவிட அவிக்குரிய வல்லமையின் நற்சாட்சிப்பத்திரத்தை வைத்திருப்பதே மிகவும் முக்கியமானதாகும். மனிதனோ அல்லது மனுஷியோ தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்க வேண்டியதே முக்கியமான காரியமாகும் (அப்போஸ்தலர் 2:22).

## கோட்பாடுகள்:

இயேசு அவருடைய கோட்பாடுகளால் எதிர்ப்பிற்குள்ளானார்:

> **எல்லாரும் ஆச்சரியப்பட்டு: இது என்ன? இந்தப் புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள். (மாற்கு 1:27)**

இயேசுவினுடைய வல்லமையின் நிரூபித்தலானது மதத்தலைவர்களின் காலத்தில் கோட்பாடுகளால் உறுதிசெய்யப்படவில்லை. அவருடைய போதனைகளானது தத்துவங்களையும், அவர்களால் வளர்க்கப்பட்ட நம்பிக்கைகளையும், கோட்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளவில்லை.

## போதிக்கும் முறை:

இயேசு போதித்த முறைகளை சிலர் எதிர்த்தார்கள். வேதபாரகரால் உபயோகிக்கப்பட்ட ஊக்கமளிக்காத மழுங்கிய போதனையையல்லாமல், அவர் அதிகாரமுடையவராய் போதித்தார். நீங்கள் முன்வைக்கும் விதத்தை சிலர் எதிர்க்கலாம். அவர்கள் நீங்கள் அதிகம் உணர்ச்சிப்பட்டவர்கள் எனவும் அல்லது நீங்கள் அளவுக்கதிகமாக அதிகாரத்தோடு போதிக்கின்றீர்கள் எனவும் கூறுவார்கள்.

இயேசுவினுடைய போதனையானது சாதாரணமானது, ஆனால் வல்லமையுள்ளது. சிலர் உங்களிடம் ஆழமாகவும், வேதாகம போதனைகளை குறைந்த நிரூபித்தல்களோடும், குறைந்த உணர்ச்சியூட்டு வதோடும் போதிக்கும்படி கூறுவார்கள். ஆனால் பவுல் கூறியதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்:

> **உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**
>
> **என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. (1 கொரிந்தியர் 2:4-5)**

## ஆவிக்குரிய தவறுகள்:

ஆவிக்குரிய தவறுகளை கொண்டோர்களால் வல்லமையின் நிரூபித்தலானது சவாலுக்குட்படுகின்றது:

> **இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங்கொள்ளுகிறீர்கள். (மத்தேயு 22:29)**

நீங்கள் ஆவிக்குரிய தவறுகளை கொண்டோர்களால் சவாலுக்குட்படலாம், ஏனென்றால் அவர்கள் தேவனுடைய வல்லமையை மறுதலிக்கின்றமையாலாகும்.

## துஷ்பிரயோகம்:

ஆவிக்குரிய வல்லமையை துஷ்பிரயோகம் செய்ய முயற்சிப்போர்களால் நீங்கள் சவாலுக்குட்படலாம். இக்காரியத்திலேயே சாத்தான் இயேசுவை சவாலிட்டான். அவன் இயேசுவின் வல்லமையை அவருடைய சொந்த உபயோகத்திற்கும், அவருடைய நிலையை உறுதிப்படுத்துவதற்கும் பயன்படுத்தும் படி சோதித்தான்.

சாத்தான் இந்த வித்திலும் உங்களை சோதிப்பான். அவன் உங்களுடைய அதிகாரத்தை கொண்டு ஓர் உயர்ந்த நிலையை அடையும்படிக்கு உங்களை சோதிப்பான். அவன் தனிப்பட்ட உபயோகத்திற்கு வல்லமையை பயன்படுத்தும்படி வழிகாட்டுவான். இது நீங்கள் முகங்கொடுக்கும் மிகப்பெரிதான சவால்களில் ஒன்றாகும்.

## உங்களுடைய வாழ்வின் நடத்தையில்:

நீங்கள் உங்கள் வாழ்க்கையில் விசுவாசத்தோடும் வல்லமையோடும் நடக்கும் போது நீங்கள் சவாலுக்குட்படலாம். இயற்கையை சார்ந்து நடப்பவர்களுக்கு விசுவாசத்தோடு நடப்பவர்கள் எரிச்சலை மூட்டுவதாயிருக்கும்.

ஸ்தேவான் விசுவாசம் மற்றும் வல்லமையை கொண்ட மனிதனாயிருந்தான் (அப்போஸ்தலர் 6:8). அவனுடைய வாழ்க்கை நடத்தையும், சாட்சியும் அந்நேரத்திலிருந்த மதத்தலைவகளை மிகவும் எரிச்சலடைய செய்ய, அவர்கள் மிகவும் “மூர்க்கமடைந்தார்கள்” (அப்போஸ்தலர் 7:54) பின்பு அவனை கல்லெறிந்து கொன்றார்கள்.

## சவால்களை சந்தித்தல்

ஆவிக்குரிய ஆசீர்வாதம் என்னும் பகுதியிலிருந்து நீங்கள் வல்லமையும் அதிகாரமும் என்னும் பகுதிக்கும் மாற்றமடைவீர்களானால், நீங்களும் கூட சவாலுக்குட்படுவீர்கள். சாத்தான் உங்களுடைய அதிகாரத்தை சவாலிடும் போது நீங்கள் செய்ய வேண்டிய காரியம் இதுதான்:

## ஆதாரத்தை அறிந்து கொள்ளுங்கள்:

உண்மையான ஆவிக்குரிய வல்லமையை சவாலிடும் அனைத்தும் சாத்தானிலிருந்தே வருகின்றது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இது சாவாலிடும் மக்களிலிருந்தோ அல்லது சந்தர்ப்பங்களினாலோ அல்ல. நீங்கள் உண்மையான சாவாலிடும் ஆதாரத்தை அதனோடு அணுகும்படியாக அறிந்து கொள்ள வேண்டும்:

> **ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)**

## விவாதங்களோடு நேரத்தை கழிக்க வேண்டாம்:

மனிதர்களோடு விவாதத்தோடும், எதிர்தர்க்கத்தோடும் உங்கள் நேரத்தை கழிக்க வேண்டாம், ஏனென்றால் உங்களுடைய யுத்தம் மாம்சத்தோடும், இரத்தத்தோடுமல்ல. சாத்தானை கோட்பாடுகள், அறிவு மற்றும் இறையியல் விவாதங்களின் மூலம் அசைக்க முடியாது.

இயேசு தம்முடைய ஆவிக்குரிய அதிகாரங்களில் விவாதம் மூலமாகவோ, தர்க்கங்களின் மூலமாகவோ நேரத்தை செலவிடவில்லை. அவருடைய சவாலுக்குட்படுத்துவோர்களின் ஆவிக்குரிய நிலைகளை குறிப்பதற்கு அவர் சில கேள்விகளை கேட்டார், பின் அவர் கூறியது....

> **நானும் இன்ன அதிகாரத்தினால் இவைகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன் என்றார். (மத்தேயு 21:27)**

## சவாலுக்கு முகங்கொடுங்கள்:

சவாலுக்கு முன்பாக ஓடிக்போகாதீர்கள். தேவைப்படும் மக்களுக்கான தேவனுடைய வல்லமையின் ஊற்றை தடுக்காதீர்கள். சவால்களை தேவனுடைய வல்லமையோடு எதிர்கொள்ளுங்கள்.

இயேசு யவீருவின் மகளை எழுப்பும் பொருட்டு அவருடைய வீட்டில் நுழைந்த போது அவர் அவிவிசுவாசம் என்னும் வல்லமைக்கு முகங்கொடுத்தார். இது அவரை நிறுத்தும் படியாக செய்யவில்லை. அவர் வீட்டை விட்டு கோபத்தோடு செல்லவில்லை. அவர் எதிர்ப்புக்கு முகங்கொடுத்து, அவர் வந்த நோக்கத்தை நிறைவேற்றினார்.

## அதிகாரத்தை எடுத்துக் கொள்ளுங்கள்:

இயேசுவால் உங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை ஞாபகத்தில் கொள்ளுங்கள். அவர் சொன்னார் “சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங் கொடுக்கிறேன்.”

அவர் அதை உங்களுக்கு கொடுத்துள்ளார், ஆனால் நீங்கள் அதை பாவிக்க வேண்டும். சாத்தானுடைய சவால்களுக்கு முகங்கொடுக்கும் போது, அச்சாவாலின் மேல் ஆவிக்குரிய அதிகாரத்தை எடுங்கள். இயேசுவின் நாமத்தில் அதிகாரத்தை எடுங்கள். தேவனுடைய அடிப்படை வசனங்களிலிருந்து ஆவிக்குரிய அதிகாரத்தை எடுங்கள். இப்பாடத்தில் நீங்கள் படித்த வல்லமையின் கொள்கைகளை பிரயோகப்படுத்துங்கள்.

உங்களுக்கு சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளும் படியாக உங்களுக்கு அதிகாரங் கொடுக்கப்பட்டுள்ளது. அவிவிசுவாசம் என்னும் எதிர்மறையான வல்லமையை மேற்கொள்ளுங்கள். தேவனுடைய அதிகாரத்திலிருந்து உங்களுக்கென சிறந்த இடத்தை எடுத்து கொள்ளுங்கள்.

.

## சுய பரீட்சை:

1. திறவுகோல் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. உண்மையான ஆவிக்குரிய வல்லமையின் பின்புலமாக உள்ள அனைத்து சவால்களுக்கும் ஆதாரம் யார்?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. வல்லமையும் அதிகாரங்களும் சவால்மிக்கது என்பதற்கான காரணங்களை இப்பாடத்தில் நீங்கள் படித்ததிலிருந்து சுருக்கமாக தருக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. ஆவிக்குரிய வல்லமையின் சவால்களுக்கு முகங்கொடுத்தலுக்கான இப்பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிக்காட்டல்களை பட்டியலிடுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. தேவனுடைய அபிஷேகத்தின் வல்லமைக்கெதிரான சவாலானது இயேசுவிலிருந்து ஆரம்பமாகவில்லை. தாவீது இதைக்குறித்து 2ம் சங்கீதத்தில் பேசுகின்றார். இந்த சங்கீதம் எப்பொருளை போதிக்கின்றது என்பதை குறித்து சுருக்கமாக தருக:

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. தேவனுடைய வல்லமையில் நிலைத்திருந்து சவால்களுக்கு முகங்கொடுத்த மனுஷரையும், மனுஷிகளையும் பழைய ஏற்பாட்டை வாசிப்பதனூடாக இனங் கண்டுக்கொள்ளுங்கள். அவர்கள் எவ்வழிகளில் அதை சந்தித்தார்கள் எனவும், சாத்தானுடைய சவால்களுக்கு எவ்வாறு முகங்கொடுத்தார்கள் எனவும் விளங்கி, அந்த உண்மைகளை உங்கள் சொந்த வாழ்க்கையிலும், ஊழியங்களிலும் பிரயோகப்படுத்திக்கொள்ளுங்கள். கீழுள்ள பட்டியலை பயன்படுத்துங்கள்:

| மேற்கோள் | நபர் | அவர்கள் சந்தித்த சவால் | அதற்கு அவர்கள் எவ்வாறு முகங் கொடுத்தார்கள் | இதை நான் என் வாழ்க்கையில் எவ்வாறு பிரயோகப்படுத்துவது |
|---|---|---|---|---|

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

# சுய பரீட்சைக்கான விடைகள்

## அதிகாரம் ஒன்று:

1. தேவனே, நீர் என்னுடைய தேவன்: அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்: வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது, என் மாம்சமானது உம்மை வாஞ்சிக்கிறது. இப்படியே பரிசுத்த ஸ்தலத்தில் உம்மைப்பார்க்க ஆசையாயிருந்து, உமது வல்லமையையும் உமது மகிமையையும் கண்டேன். (சங்கீதம் 63:1-2)

2. தேவனை அறிந்துக் கொள்ள மதம் மனிதனால் தத்தெடுக்கப்பட்டுள்ளது. அது சடங்காச்சாரம், கட்டுப்பாடுகள், கிரியைகள் மற்றும் வாக்கியங்கள் என்பனவற்றை கொண்டிருக்கின்றபோதும் அதற்குள் வல்லமையில்லை. மதம் ஆவிக்குரிய மரணத்தைக் கொண்டு வருகின்றது.

   தேவனுடைய வல்லமையானது தம்முடைய விருப்பமானவர்களுக்கு செய்முறை காட்சிப்படுத்துவதோடு மனிதனுக்கு தம்மைத்தாம் வெளிப்படுத்துகின்றது. தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆவிக்குரிய வல்லமை நடைமுறையிலுள்ளது. அது ஆவிக்குரிய வாழ்வை கொண்டு வரும்.

3. அரசியல், அறிவாற்றல், உடல் வலிமை, நிதி, இராணுவம், மின்சார சக்தி, சமயம்சார் வல்லமை.

4. மத்தேயு 20:25-28

5. வேதாகமம் குறிப்பிடும் ஆவிக்குரிய வல்லமையைக் குறித்தே பேசுகின்றோம். “வல்லமை” என்ற சொல்லுக்கு ஆவிக்குரிய வலிமை, திறமை, ஆற்றல், பெலன் என்ற வேதாகம அர்த்தங்களுண்டு. இது இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆளுகையின் விளைவாக நடைபெறும் அற்புத அடையா ளங்களாக இருக்கின்றது. இதைப்போன்றே “அதிகாரம்” என்ற சொல்லையும் இப்பாடத்தில் உபயோகிக்கின்றோம். வேதாகமத்தில் வல்லமை என்ற சொல்லுடன் மிகவும் நெருக்கமாக பாவிக்கப்படுகின்ற சொல்லாக இது இருக்கிறது. மற்றவர் சார்பாக சட்டரீதியாக செயல்பட அல்லது நடவடிக்கை எடுக்க இது விளக்குகின்றது. செயலில் நிரூபித்துக் காட்டுவதற்கு இவ்வதிகாரம் பயன்படும்.

6. வேதாகமத்தின் மூல ஆதாரமாயுள்ள ஆவிக்குரிய வல்லமை வேதாகமம் வெளிப்படுத்தும் திரித்துவ தேவனாக பிதாவாகிய தேவன், தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவாக இருக்கின்றது. தீய சக்தியின் மூல ஆதாரம் சாத்தான் ஆகும்.

7. வாக்குத்தத்தம் மற்றும் வாக்குதத்தத்தை உரித்தாக்குதல்.

8. நீங்கள் வாக்குத்தத்தை தெர்ந்தெடுக்க வேண்டும், நீங்கள் கொள்கைகளை விளங்கிக் கொள்ள வேண்டும், அக்கொள்கைகளை பிரயோகிக்க வேண்டும்.

9. மனந்திரும்ப வேண்டும்.

## அதிகாரம் இரண்டு:

1. தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன். வல்லமை தேவனுடையது என்பதே. (சங்கீதம் 62:11)

2. மூலாதாரத்தின் பிறப்பிடம் ஆரம்பத்தில் அல்லது இடத்திலிருக்கிறது.

3. மெய்யான மற்றும் ஜீவனுள்ள தேவன் பரிசுத்த வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படுகின்றார்.

4. தேவன் பின்வரும் வழிகளில் பூமியில் அவரது வல்லமையை வெளிப்படுத்துகிறார்:

| | |
|---|---|
| இயற்கை | இயேசு கிறிஸ்து |
| நியாயத்தீர்ப்பு | பரிசுத்த ஆவியானவர் |
| மீட்பு | இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள் |
| எழுதப்பட்ட வார்த்தை | விசுவாசிகள் |

5. தவறானது. தேவன் பெரிதான வல்லமையின் ஆதாரமாக இருப்பதோடு, மற்றை வல்லமைகளையும் ஸ்தாபித்துள்ளார்.

6. எபேசியர் 1:9-10 மற்றும் 3:11

**அதிகாரம் மூன்று:**

1. அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே. ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும், நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே.. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும். (2 கொரிந்தியர் 11:14-15)

2. பவுல் "ஆவிக்குரிய உயர் இடங்களிலுள்ள துன்மார்க்கத்தை" பற்றி பேசுகிறார், துன்மார்க்கமான ஆவிகள் உலகிலுள்ள மதகட்டமைப்புகளில் ஊடுருவி இருப்பதாக அவர் குறிப்பிடுகிறார். மெய்யான தேவனுடைய சபையின் அமைப்பை சாத்தான் தனது தீய சக்திகளுடன் இணைந்து ஸ்தாபித்து பின்பற்றுகிறான். அவைகள் உண்மையான தேவனைப்போன்று பாசாங்கு செய்கின்றன.

3. அத்தியாயம் மூன்றுடன் உங்களது சுருக்கமான குறிப்புகளை ஒப்பிடுக.

4. அத்தியாயம் மூன்றில் கொடுக்கப்பட்டுள்ள வியூகங்களை உங்களது சுருக்கமான குறிப்புகளுடன் ஒப்பிடுக.

**அதிகாரம் நான்கு:**

1. இயேசு சமீபத்தில் வந்து, அவர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. (மத்தேயு 28:18)

2. கிறிஸ்துவின் வல்லமைக்கு எல்லை கிடையாது. வானத்திலும் பூமியிலும் சகல வல்லமையும் அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்தேயு 28:18

3. பிதாவாகிய தேவன்.

4. அத்தியாயம் நான்குடன் உங்களது சுருக்கமான குறிப்புகளை ஒப்பிடுக

## அதிகாரம் ஐந்து:

1. இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன். ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது. (லூக்கா 10:19)

2. விசுவாசியின் ஆவிக்குரிய அதிகாரம் இயேசுவினால் கொடுக்கப்பட்டுள்ளது.

3. யாராவதொருவர் எதாவதொரு காரியத்தை செய்யும்படிக்கு பொறுப்பு கொடுப்பாரேயானால், அதை செய்யும்படியான அதிகாரமும் அவராலேயே வழங்கப்படுகிறது.

4. சுவிசேஷத்தினால் உலகத்தை சந்திக்க.

5. "exousia" என்ற கிரேக்க சொல்லின் அர்த்தம் வல்லமையை அல்லது அதிகாரத்தை ஒப்படைத்தல் என்பதாகும். "dunamis" என்ற வார்த்தை இயல்பான, உள்ளார்ந்த அதிகாரத்தைக் குறிக்கிறது.

6. கூற்று தவறானது.

## அதிகாரம் ஆறு:

1. அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். (மாற்கு 16:20)

2. உலகத்தில் வல்லமை சுயநல நோக்கோடு பயன்படுகின்றது. ஆவிக்குரிய வல்லமை நோக்கத்தைக் கொண்டு தேவ ராஜ்ஜியத்தின் நோக்கத்திற்காக பயன்படுகின்றது.

3. மத்தேயு 20:25-27

4. இவ்வதிகாரத்தில் சம்பாஷிக்கப்பட்ட வல்லமையின் நோக்கங்களை எழுதவும்.

## அதிகாரம் ஏழு:

1. கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன். முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது. (ரோமர் 1:16)

2. சுவிசேஷம் என்பதின் உண்மையான அர்த்தம் "நற்செய்தி" என்பதாகும். நாம் இந்த நற்செய்தியை வேதாகம உணர்வுடன் பேசும்போது, தேவராஜ்ஜியத்தின் நற்செய்தியை, இயேசு கிறிஸ்து மூலம் வரும் இரட்சிப்பை மறைமுகமாக குறிப்பிடுகிறோம்.

3. சுவிசேஷத்தின் அடிப்படை கூறுகள் இயேசுகிறிஸ்துவின் வாழ்க்கை ஊழியம் என்பவற்றை முக்கியத்துவப்படுத்தும். இது பாவம் நிறைந்த அனைத்து மனுக்குலத்திற்குமான அவரது மரணம்,

அடக்கம்பண்ணப்படுதல், உயிர்த்தெழுதல் என்பவற்றை அடிப்படையாக கொண்டுள்ள வேத வசனப் பதிவை உள்ளடக்கியதாக இருக்கிறது.

4. ரோமர் 1:16-19ஐ பார்க்கவும்

-இது தேவனுடைய வல்லமையை மனிதனுக்கு வெளிப்படுத்துகிறது.
-இனம், நிறம், சமயம் சாராமல் சகல மனிதருக்கும் இரட்சிப்பைக் கொண்டு வருகிறது.
-பாவத்திற்கு எதிரான தேவனுடைய கோபத்தையும், நியாயந்தீர்ப்பையும் வெளிப்படுத்துகிறது.
-தேவனுடைய நீதியை வெளிப்படுத்துகிறது.
-விசுவாசத்தினால் எவ்வாறு நீதிமானாக மாறலாம் என்பதையும் காண்பிக்கிறது.
-நாம் வாழுவதற்கான அடிப்படை விசுவாசத்தை கொண்டுள்ளது.

5. அதிகாரம் ஏழில் சம்பாஷித்த இரதத்தின் வல்லமையைக் உமது சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

6. விசவாசம்.

7. பாவி என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்: (ரோமர் 3:23)
உங்கள் பாவங்களுக்காக இயேசு மரித்தார் என்பதை ஏற்றுக் கொள்ளுங்கள்: யோவான் 3:16,17
தேவனிடத்தில் உங்கள் பாவங்களை அறிக்கையிடுங்கள், மன்னிக்கும் படி கேளுங்கள்: (1யோவான் 1:8-9)
மாற்றமடைந்த வாழ்க்கையை அனுபவியுங்கள்: (2 கொரிந்தியர் 5:17)

8. தவறானது. இயேசு தமது ஜீவனை விருப்பத்துடனேயே சிலுவையில் கொடுத்தார்.

## அதிகாரம் எட்டு:

1. என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:49)

2. அப்போஸ்தலா் 1:8. பரிசுத்த ஆவியானவா் எம்மீது வந்த பிறகு வல்லமை கிடைக்கும்.

3. கா்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சாட்சியாக இருப்பதற்கு... அப்போஸ்தலா் 1:8.

4. கலாத்தியா் 5:22-23

5. மனந்திரும்பி ஞானஸ்நானத்தை பெற வேண்டும்
இது உங்களுக்கானது என விசுவாசியுங்கள்
அதை வாஞ்சியுங்கள்
இது ஒரு பரிசு என்று உணருங்கள்
தேவனுக்கு விட்டுக் கொடுங்கள்
மற்ற விசுவாசிகளிடமும் உங்களுக்காக ஜெபிக்கும்படி வேண்டுங்கள்

6. அதிகாரம் எட்டில் சம்பாஷித்ததை உமது சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

**அதிகாரம் ஒன்பது:**

1. இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது. (1 கொரிந்தியர் 13:13)

2. அன்பானது ஆழமான, உணர்வுபூர்வமான, கவனிக்கிற, உங்களுடைய வாழ்வை பரிசுத்தாவியானவருக்கூடாக வளப்படுத்தப்படுகின்ற ஒன்றாக இருக்கின்றது.

3. முதலாவதும், பெரியதுமான கட்டளை என்னவென்றால் நீங்கள் தேவனை அன்பு செலுத்த வேண்டும். இரண்டாவது பெரிய கட்டளை, மற்றவர்களிலும் அன்பு செலுத்துவதாகும்.

4. நாம் ஒருவரிலொருவர் வைக்கும் அன்பு. யோவான் 13:35

5. அன்பு.

6. அன்பு.

7. அதே அன்பு.

**அதிகாரம் பத்து:**

1. நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக் கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. (1 யோவான் 2:27)

2. பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படுகின்ற தெய்வீக அபிஷேகமானது மக்களை அல்லது பொருளை தேவனுக்க அர்ப்பணிக்க பயன்படுகின்றது.

3. இத்தெய்வீக அபிஷேகம் தீர்க்கதரிசிகளையும், ராஜாக்களையும், ஆசாரியர்களையும், பலிபீடங்கள், ஆசரிப்புக்கூடாரம் மற்றம் அதன் தளபாடங்களை அபிஷேகிக்க பயன் படுத்தப்பட்டது.

4. அபிஷேகிக்கப்பட்டவர்.

5. அதிகாரம் பத்தில் சம்பாஷித்ததை உமது சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

6. தேவன் யாவரையும் ஒரேவிதமான ஊழியத்திற்காக அபிஷேகிக்கவில்லை. தேவன் அபிஷேகிக்காத ஊழியத்தை நீங்கள் போலியாக செய்யும்போது தோல்வியும், குழப்பமுமே அதன் பலனாக இருக்கும்.

7. அதிகாரம் பத்தில் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளை உங்கள் பதிலோடு ஒப்பிடுக.

8. தேவன்.

## அதிகாரம் பதினொன்று:

1. ஸ்தேவான் விசுவாசத்தினாலும் வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தான். (அப்போஸ்தலர் 6:8)

2. விசுவாசம் என்பது ஒன்றை குறித்து நம்பி, அதில் நிச்சயித்திருத்தல் ஆகும். விசுவாசித்தல் என்றால் நம்பிக்கை வைத்திருத்தல் ஆகும். "விசுவாசம், நம்பிக்கை, நம்புதல்" ஆகிய அனைத்தும் ஒன்றையே வேதப்பகுதியில் குறிப்பிடுகின்றது. விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரெயர் 11:1)

3. இயேசு அவிவிசுவாசிகளாய் நமக்கு தரப்பட்ட விசுவாசத்தை பாவிக்காதவர்களை குறித்து பேசினார் (மத்தேயு 17:17). அவர் கொஞ்சம் விசுவாசமுள்ளோர்களை பற்றியும் பேசினார் (மத்தேயு 6:30; 8:26; 14:31; லூக்கா 12:28). அதிக விசுவாசமுள்ளோர்களை பற்றியும் பேசினார் (மத்தேயு 8:10; 15:28; லூக்கா 7:9).

4. இரட்சிக்கும் விசுவாசம், பரிசுத்தப்படுத்தும் விசுவாசம், தற்காப்பிற்கான விசுவாசம், விசுவாச வரம், விசுவாசத்தின் கனி.

5. தேவனுடைய வார்த்தையை கேட்பதால்.

6. அதிகாரம் பதினொன்றில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

## அதிகாரம் பன்னிரெண்டு:

1. ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். (பிலிப்பியர் 2:9-11)

2. வேதாகம காலத்தில் பெயர்களானது முக்கியத்துவம் பெற்றது, வேதாகம காலங்களில் மனிதர்களுடைய பெயர்களில் மாபெரும் அடையாளங்கள் சேர்க்கப்பட்டன. பெயரானது ஒருவர் பிறக்கும் சமயங்களில் கொடுக்கப்பட்டுள்ளது (ஆதியாகமம் 19:22). சிலவேளைகளில் பெயரானது நம்பிக்கையை அல்லது தீர்க்கதரிசனத்தை வெளிப்படுத்தும் (ஏசாயா 8:1-4; ஓசியா 1:4).

3. தேவனால் அனுப்பப்பட்ட தூதன்.

4. இயேசு.

5. இயேசு தம்முடைய பெயரை இவ்வுலகத்திற்கு மனிதர்கள் விசேடப் பெயர்களை பெறும் மூன்று வழிகளிலேயும் பெற்றார்: பிறப்பினூடாக, சாதனையூடாக, சார்தல் மூலமாக.

6. தேவனுடைய வார்த்தையை கேட்பதற்கூடாக. ரோமர் 10:17

7. அ. இரட்சிப்பு ஈ. பிரசங்கித்தல், போதித்தல்

ஆ. சுகமாகுதல் உ. பிசாசுகளை துரத்தி
இ. பரிசுத்தமாகுதல் ஊ. ஞானஸ்நானம்

8. அ. உண்மை ஆ. உண்மை இ. பொய்

## அதிகாரம் பதின்மூன்று:

1. நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது. (யாக்கோபு 5:16)

2. ஜெபமும் உபவாசமும்.

3. கேட்டல், தேடுதல், தட்டுதல்.

4. துதியும் ஆராதனையும், அர்ப்பணிப்பு, வேண்டுதல், ஏற்றுக் கொள்ளல், பரிந்து பேசுதல்.

5. அதிகாரம் பதின்மூன்றிலுள்ள பட்டியலை பார்க்கவும்.

6. ஜெபம் தேவனுடன் தொடர்பு கொள்வதாகும். அடிப்படையில் வித்தியாசமான வடிவமாக இருக்கின்றபோதும், மனிதன் தேவனுடன் பேசுகின்றபோது தேவன் மனிதனுடன் பேசுகிறார்.

7. உபவாசம் என்பது உண்ணாமல் போகுதல் என்ற சாதாரண வரைவிலக்கணத்தை கொண்டுள்ளது.

8. வேதாகமத்தின்படி இரண்டு வகையான உபவாசங்களுண்டு. முழுமையான உபவாசம் என்பது உண்ணாமலும், குடிக்காமலும் இருப்பதாகும். இதற்கான உதாரணத்தை அப்போஸ்தலர் 9:9ல் காணலாம். உணவு சாப்பிட்ட போதும் குறிப்பிட்ட உணவுகளை தவிர்த்ததை தானியேல் 10:3ல் காணலாம்.

9. உங்களை தாழ்த்த
பாவத்திலிருந்து மனந்திரும்ப
வெளிப்படுத்தலுக்காக
துன்மார்க்கத்தின் கட்டுக்கள் அவிழ்க்க, பாரங்களை அகற்ற, ஒடுக்கப்படுதலின் விடுதலையை பெற, சகல கட்டுக்களும் உடைப்பட
தரித்திரரை ஆவிக்குரிய, சரீரத்திற்குரிய விதத்தில் போஷிக்க
தேவ சத்தத்தை கேட்க

## அதிகாரம் பதினான்கு:

1. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வரையறுக்கிறதாயும் இருக்கிறது. (எபிரெயர் 4:12)

2. தேவன்

3. “ரேமா” என்ற வார்த்தை, இது ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் தேவனால் விஷேடமாக கூறப்பட்ட வார்த்தையை குறிக்கும்.

4. “லோகோஸ்” என்பது தேவனது வாயிலிருந்து புறப்பட்ட வார்ததையை குறிக்கும். தேவன் பேசியவற்றின் முற்றுப்பெற்ற வெளிப்படுத்தலாக அது இருக்கின்றது.

5. இயேசு கிறிஸ்து வேதவசனத்தை வல்லமையுடன் பாவித்தார். அவர் தேவவசனத்திலிருந்து “ரேமா”வாகிய வார்த்தையையே பயன்படுத்தினார்.

6. அதிகாரம் பதினான்கில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

7. அதிகாரம் பதினான்கில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

8. தவறு.

**அதிகாரம் பதினைந்து:**

1. எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன். ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை. உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. (ரோமர் 13:1)

2. நீங்கள் நியாயமான முறையில் உங்கள் அதிகாரத்தை பெற வேண்டும்.

3. இயேசு தேவனது அதிகாரத்திற்கு கீழப்பட்டவராக இருந்தபோதும், அவர் சகலவற்றின் மேலும் சகல வல்லமைகளையும் அதிகாரங்களையும் கொண்டவராக இருக்கின்றார். அதினாலேயே அவர் வியாதிகளின் மேலும், பிசாசுகள், பாவம், இயற்கை வல்லமைகளின் மேலும் அதிகாரம் கொண்டவராக இருந்தார்.

4. அதிகாரம் பதினைந்தில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

5. அதிகாரம் பதினைந்தில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

6. அதிகாரம் பதினைந்தில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

7. ரோமர் 13:1-7

8. தேவன்.

**அதிகாரம் பதினாறு:**

1. இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்... (பிலிப்பியர் 3:10)

2. “உயிர்த்தெழுதல்” என்ற வார்த்தையின் அர்த்தம் மரணத்திலிருந்து ஜீவனுக்கு மீண்டும் உயிர்ப்பிக்கப்படுதல் அல்லது உயிரோடு எழுதல் என்பதாகும்.

3. பாடம் பதினாறில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

4. தவறானது.

5. பாடம் பதினாறில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

6. இயேசு. யோவான் 11:25

## அதிகாரம் பதினேழு:

1. ஏனெனில் அவர் பலவீனத்தால் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார். அப்படி நாங்களும் அவருக்குள் பலவீனராயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம். (2 கொரிந்தியர் 13:4)

2. சாத்தான்.

3. எமது வாழ்வில் பாடுகள், எங்களைச் சுற்றியுள்ளவர்களால், எமது வாழ்வின் சூழ்நிலைகளால் , ஊழியத்தினால், பாவத்தினால், சாத்தானின் நேரடியான தாக்குதலினால் வரலாம்.

4. அதிகாரம் பதினேழில் பாடுகள் சம்பந்தமாக சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக

## அதிகாரம் பதினெட்டு:

1. அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென். (மாற்கு 16:20)

2. அதிகாரம் பதினெட்டில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

3. தேவனுடைய வல்லமையை நிரூபிக்கும் இடமாக திருச்சபை இருக்க வேண்டும்.

4. நீங்கள் அதை அதிகரிக்க வேண்டும். லூக்கா 19:12-26 வரையான உவமையை பார்க்கவும்.

## அதிகாரம் பத்தொன்பது:

1. அவர்களுடைய அவிசுவாசத்தினிமித்தம் அவர் அங்கே அநேக அற்புதங்களைச் செய்யவில்லை. (மத்தேயு 13:58)

2. உபாகமம் 29:29.

3. அதிகாரம் பத்தொன்பதில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

**அதிகாரம் இருபது:**

1. கர்த்தருக்கு விரோதமாகவும், அவர் அபிஷேகம்பண்ணினவருக்கு விரோதமாகவும், பூமியின் ராஜாக்கள் எழும்பிநின்று, அதிகாரிகள் ஏகமாய் ஆலோசனைபண்ணி... (சங்கீதம் 2:2)

2. சாத்தான்.

3. அதிகாரம் இருபதில் சம்பாஷித்தவற்றை உங்கள் சுருக்க குறிப்போடு ஒப்பிடுக.

4. அதிகாரம் இருபதில் பட்டியலிடப்பட்டுள்ள வழிகாட்டல்களை பார்க்கவும்.